1113.

T.N.L.A. Debates

V. 34 No. 2 1990

வெளியீடு 11-3-1991 Issued 11-3-1991

19 ஜூன் 991

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

சனிக்கிழமை, மே 12, 1990 - தொகுதி 34 - எண். 2
Saturday, the 12th May, 1990-Volume 34-No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price: Rs. 3-00

143986
600 008.

## உள்ளடக்கம்

12–5–1990


| | பக்கங்கள். |
|---|---|
| 1. இரங்கற் குறிப்பு— | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து | 185–186 |
| 2. வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 186–270 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. | 270–348 |
| 3. தகவல் கோரல்— | |
| (அ) புயல் நிவாரணப் பணிகள் குறித்தும் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு குறித்தும். | 348–351 |
| (ஆ) வனத்துறை அலுவலர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து. | 351–354 |
| (இ) சங்கம் அமைத்துக் கொள்ள உரிமை கோரும் டி.வி.எஸ். தொழிலாளர்களின் கோரிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து. | 354–355 |
| (ஈ) நீதிபதி இராமமூர்த்தி விசாரணைக் கமிஷன் அறிக்கை தொடர்பான நடவடிக்கைகள் குறித்து. | 355–359 |
| (உ) சென்னையில் பெய்துள்ள மழை தொடர்பாகக் குடிநீர் வழங்குவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்ற நிலை குறித்து. | 359–361 |


டி 2 ஏ 53-142—1

| | பக்கங்கள் |
|---|---|
| 3. தகவல் கோரல்—தொடர்ச்சி | |
| (ஊ) வீராணம் திட்டத்திற்காகச் செய்யப் பட்டக் குழாய்களையும், வாங்கப் பட்ட தளவாடங்களையும் முழுமை யாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து. | 361–362 |
| (எ) தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள நகைமுகன் தொடர்பாக வந்துள்ள செய்திகள் குறித்து. | 363–376 |
| 4. ஒழுங்குப் பிரச்சனை— | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகளை எழுப்ப அனுமதி வழங்கும் முறை. | 376 |
| 5. பேரவைக்கு மனு அளித்தல்— | |
| சுருட்டுத் தொழிலாளர்கள் கோரிக்கைகள் குறித்து. | 376–377 |
| 6. அறிவிப்புகள்— | |
| (அ) 1990-91ஆம் ஆண்டிற்கான குழுக் கள் அமைப்பு. | 377–379 |
| (ஆ) 1990 ஆம் ஆண்டு பொது வாழ்வினர் நேர்மைப் பாதுகாப்பு மன்றச் சட்ட முன்வடிவின் ஆய்வைத் தள்ளி வைத்தல் குறித்து. | 386–391 |
| (இ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள். | 465–470 |
| 7. விதி 111-இன் கீழ் அமைச்சரின் அறிக்கை— | |
| வினாவிற்களித்த விடைக்குத் திருத்தம். | 379 |
| 8. கவன ஈர்ப்பு— | |
| (அ) தஞ்சை மாவட்டம், உதயமார்த் தாண்டபுரத்தில் உள்ள ஏரியில் பறவைகள் சரணாலயம் அமைப்பது குறித்து. | 380–382 |



| | பக்கங்கள் |
|---|---|
| 8. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி | |
| (ஆ) பெரியார் மாவட்டத்தில் ஆழ் குழாய்க் கிணறுகளில் தண்ணீர் இல் லாததும், புதிய ஆழ்குழாய்க் கிணறு கள் அமைக்காததும் குறித்து. | 382–386 |
| அரசினர் தனித் தீர்மானம்— | |
| பணியிலிருந்து ஓய்வுபெறவிருக்கும் பேரவைச் செயலாளர் திரு. சி. கு. இராமசாமி அவர்களுக்குப் பாராட்டுதல்கள். | 392–418 |
| 10. மின் வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள், துணை நிதிநிலை அறிக்கைகள் மற்றும் திருத்திய மதிப்பீடுகள் மீதான விவா தம்—தொடர்ச்சி. | 419–464 |
| திரு. சா. கணேசன் .. | 419–424 |
| திரு. சி. கோவிந்தராஜன் ... | 424–428 |
| திரு. பொன். விஜயராகவன் ... | 428–432 |
| திரு. பி. எச். பாண்டியன் .. | 432–435 |
| திரு. கோ. பூவராகன் .. | 436–440 |
| திரு. சோ. அழகர்சாமி .. | 440–446 |
| திரு. எஸ். டேனியல்ராஜ் .. | 446–449 |
| திரு. கே.ஏ. செங்கோட்டையன் .. | 449–455 |
| மாண்புமிகு திரு. துரைமுருகன் .. | 455–464 |
| 11. அரசினர் தீர்மானம்— | |
| பேரவையை நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைத்தல். | 470 |
| 12. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள். | 471 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 29, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990, மே 12, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில், காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*''உதவி வரைத்தன்று உதவி உதவி*
*செய்யப்பட்டார் சால்பின் வரைத்து.''*

உதவி சிறியதா, பெரியதா என்பதை அளந்து காண முடியாது. உதவி பெற்றவர்கள் எந்த அளவுக்கு அதனைப் பெரிதாக மதித்துப் போற்றுகிறார்களோ, அந்த மதிப்பும், நன்றியும் செய்யப்பட்ட உதவிக்கு வரையறைகளாகும்.

## 1. இரங்கற் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. செ. கந்தப்பன் அவர்கள் 11—5—1990 ஆம் நாளன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. கந்தப்பன் அவர்கள், 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை, சேலம் மாவட்டம், திருச்செங்கோடு தொகுதியிலிருந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1962ஆம் ஆண்டிலிருந்து 1971ஆம் ஆண்டு வரை, நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராக, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து, அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை, இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆழ்ந்த இலக்கியச் சிந்தனையும், சிறந்த எழுத்துத் திறனும், பேச்சுத் திறனும் பெற்றவரும், உலகளாவிய தலைவர்களைப் பற்றி எடுத்துச் சொல்லவும், சிந்திக்கவும், செயலாற்றவும் ஆற்றல் மிக்கவரும் ஆகிய ஒருவர், நல்ல சிந்தனையாளராகிய திரு.செ. கந்தப்பன் அவர்கள், இயற்கையெய்தியது, உள்ளபடியே பேரிழப்பாகும்.

[1990 மே 12

இயற்கையெய்தியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித் துளி மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**அனைத்துப் பண்டங்களுக்கும் ஒருமுனை விற்பனை வரி.**

*3808—திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அனைத்துப் பண்டங்களுக்கும் ஒருமுனை விற்பனை வரி விதிக்க வேண்டும் என தமிழ்நாடு வர்த்தகர் கழகம் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள முடிவு என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1—4—1990 முதல் பலமுனை வரிக்குட்பட்ட அனைத்துப் பண்டங்களும் இனி ஒரு முனை வரிக்குட்படும் என்று கடந்த 17—3—1990 அன்று அரசு அறிவித்துள்ளது.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், விவசாயிகள் வர்த்தகர்கள் போன்றவர்கள் எல்லாம் பாதிக்கப்படுவதன் மூலமாக, நாங்கள் எதிர்க்கட்சி என்கின்ற அடிப்படையிலே கேட்கின்ற கேள்விக்கு, முதலமைச்சர் அவர்கள் ஒட்டுமொத்தமாக ஒரு முனை வரியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பரமக்குடியில் நிரந்தரமாக விசேட போலீஸ் பிரிவு.**

*5744 டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



1990 மே 1

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் நிரந்தரமாக விசேட போலீஸ் பிரிவு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் நிரந்தரமாக விசேட காவல் பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

**மதுரை காமராசர் பல்கலைக் கழக அஞ்சல் வழி கல்வித்துறை நிர்வாகச் சீர்த்திருத்தம்**

*7567 திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை, காமராசர் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழி கல்வித்துறை நிர்வாகச் சீர்திருத்தம் சம்பந்தமாக திரு. பழனி வேல்ராசன் குழு அளித்துள்ள பரிந்துரைகளை அமுல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை, காமராசர் பல்கலைக் கழகம் ஏற்கெனவே அது குறித்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆனால் அஞ்சல் வழிக் கல்வி சம்பந்தமாக பல்வேறு குறைபாடுகள் நடந்ததாகவும் ஏற்கெனவே புகார்கள் தெரிவிக்கப்பட்டன. இது சம்பந்தமாக, திரு. பழனிவேல்ராசன் குழு ஆய்வு நடத்தியதா ? அது அளித்த பரிந்துரைகள் என்ன என்பதைத் தெரிவிக்க இயலுமா எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பழனிவேல்ராசன் அவர்களுடைய தலைமையில் அமைந்த குழு, அஞ்சல் வழிக் கல்வித் துறையில் நிர்வாகச் சீர்திருத்தம் குறித்து ஆராய்ந்தது. அந்த நிர்வாக

[1990 மே 12

சீர்திருத்தம் என்பது, ஏற்கெனவே உள்ள குறைபாடுகளை, வீண் செலவுகளைத் தவிர்ப்பதற்காக என்ற முறையிலே அமைந்திருக்கிறது. அப்படிப்பட்ட முறையில் பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வித் துறையில் செலவினத்தைக் குறைக்கும் முகமாக, 31 ஆசிரியப் பணியாளர்கள் பல்கலைக் கழகத்தின் முழு நேரத் துறைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். அஞ்சல் வழிக் கல்விக்கு, துணை இயக்குநர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பாடத் துணை இயக்குநருக்கு உதவும் வகையில் பாடக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. பயிற்சிக் கட்டணம், ''செலுத்தும் சீட்டின்'' வாயிலாக, 'சலான்' வாயிலாக செலுத்துவதற்குப் பதிலாக, ''டிமாண்ட் டிராப்ட்' மூலமாகப் பதிவு செய்யப்படுகிற முறை ஏற்கப்பட்டது. 1990 ஆவது ஆண்டிலே இருந்து அஞ்சல் வழிக் கல்வித்துறை மாணவர்களின் சேர்க்கைகள் கணிப்பொறி மூலமாகப் பதிவு செய்யப்பட்டு வருகிறது. அச்சடிக்கப்பட்ட பாடங்களை வைப்பதற்காக சிமெண்டாலான அலமாரிகள் செய்யப்பட்டுள்ளன. பல்கலைக் கழகத்தின் மாலை நேரக்கல்லூரிக்கு அஞ்சல் வழிக் கல்வித்துறையின் பணியாளர்களிலிருந்து ஒரு முழு நேர, முறையான இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். 61 மலேசிய நாட்டின் மாணவர்கள் அவர்களின் தகுதிகளின் அடிப்படையில் பி.ஏ., பட்ட வகுப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து இன்னும் சில பணிகள் நிறைவேற்றப்படும்.

9-05 மணி.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, இந்த அஞ்சல் வழிக் கல்விச் சம்பந்தமாக பல முறைகேடுகள் நடந்திருப்பதாக மதுரை, காமராசர் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் பல புகார்களை அரசுக்குத் தெரிவித்ததாக நான் அறிகிறேன். அப்படிப்பட்ட புகார்கள் ஏதேனும் வந்தனவா? அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நேரடியாகப் பதில் சொல்வதற்கான விவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால், பல்கலைக் கழகத்தைப் பற்றி எந்தக் குறைபாடு, குற்றச்சாட்டு வந்தாலும், பல்கலைக் கழகத் துணை வேந்தருக்கு அனுப்பப்படும். அமைச்சருக்குக் கிடைத்தாலும் கூட, துணை வேந்தருக்குத்தான் அனுப்ப முடியும். துணை வேந்தர் அங்கே உள்ள ஆட்சிக் குழு மூலமாக உரிய ஆய்வுகளை நடத்துவார்.



1990 மே 12]

சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர்களுக்குப் போதுமான அறைகள்.

*4930 திரு. துரை. சந்திரசேகரன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்களுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கின்ற ''Law Chamber'' அறைகள் போதுமானதாக இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிதாக வளாகம் ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜெ. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிதிநிலை நெருக்கடி காரணமாகத் தற்போது புதிய கட்டிடங்கள் எதுவும் கட்டும் பணியை மேற்கொள்ள வேண்டாமென்று அரசு முடிவு செய்துள்ளது.

ரேஞ்சுகளுக்கு வயர்லஸ் வழங்குதல்.

*6374 திரு. சு. குருநாதன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழகத்தில் உள்ள ஒரு சில ரேஞ்சுகளுக்கு வழங்கப்பட்டது போன்று அனைத்து ரெகுலர் ரேஞ்சுகளுக்கும் வயர்லஸ் வசதி வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்து ரெகுலர் ரேஞ்சுகளுக்கும் தேவைக்கேற்ப, நாளடைவில் வயர்லெஸ் வசதி வழங்கப்படும்.

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''புரட்டக்ஷன் ஸ்டாஃப்''—களுக்கு ''வாக்கி-டாக்கி'' கொடுக்கப்பட்டால் மேலும் வனங்களையும், அதுபோல் தங்கங்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கு வாய்ப்பாக அமையும். அதையும் அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1990 மே 12

மாண்புமிகு திரு. கே. பி கந்தசாமி: தலைவர் அவர்களே, அனைத்துத் தேவைகளையும் பரிசீலனை செய்துதான் ஏற்கெனவே நீலகிரி, சத்தியமங்கலம் போன்ற பகுதிகளில் 37 இடங்களிலே இப்படிப்பட்ட வயர்லெஸ் வசதி செய்து தரப்பட்டிருக்கின்றன. இன்னும் இந்த ஆண்டிலே 40 வயர்லெஸ் செட்டுகள் வாங்கித் தர ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. வ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறையிலே பணியாற்றக்கூடிய காவலர்கள் பயன்படுத்தக்கூடிய துப்பாக்கிகள் மிகவும் பழமையாக, இப்போதைக்குப் பயனற்றதான நிலையில் இருக்கின்றன. அவை சந்தன மரங்களைக் கடத்தக்கூடிய கொள்ளைக்காரர்கள் பயன்படுத்துகின்ற துப்பாக்கிகளை விட மிகவும் தரம் குறைந்த துப்பாக்கிகளாக உள்ளன. எனவே, நவீனத் துப்பாக்கிகளைக் கொடுப்பதோடு, அவர்களுக்குத் கராத்தே போன்ற பயிற்சிகளை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, வனத்துறைக் காவலர்களுக்கும், தேவையான துப்பாக்கிகள் வழங்கப்படும். அந்தக் காடுகளை வளர்ப்பதற்கும், அதுபோல காடுகளைப் பாதுகாப்பதற்கும் ''எக்கலாஜிக்கல் பெட்டாலியன்'' என்று ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன், காஷ்மீர், உத்திரப் பிரதேசம், இராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருப்பதைப் போன்று இங்கேயும் அமைக்கும் அந்தக் கருத்துரு பரிசீலனையில் இருக்கிறது.

9-10 மணி

திரு கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா குறைகளையும் சேர்த்து பரிசீலித்து, தங்களுக்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். காடுகளிலே பணியாற்றக்கூடிய ரேஞ்சர்கள், தங்களுடைய பாதுகாப்பு என்பதோடு, தங்களுடைய வாழ்க்கை வசதிகள், வேலைப் பாதுகாப்பு போன்ற கோரிக்கைகளை அரசு கவனிக்க வேண்டும் என்பதற்காக, இரண்டு தினங்களுக்கு முன்னாலே கூட, இங்கே மாநில தலைநகரத்திலே அவர்கள் அந்த ட்யூட்டி உடையோடு உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் அரசுக்கு வந்திருக்கும். அவைகளையெல்லாம் பரிசீலித்து, அவர்களை அழைத்துப் பேசி, நியாயமானக் கோரிக்கைகளை ஏற்று அவர்கள் திருப்திகரமாகப் பணியாற்றுவதற்கான முறையில் அரசு வழி வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1990 மே 12]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஞ்சர்களின் கோரிக்கைகள் ஏற்கெனவே ஏற்கப்பட்டு, அவர்களுக்கு உரிய உதவிகளும் கொடுக்கப்பட்டு விட்டன. அவர்களுக்குக் கீழ் மட்டத்திலே இருக்கக் கூடிய ஃபாரஸ்டர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் இன்னும் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றன. அது முதலமைச்சர் அவர்களின் ஆய்விலே இருக்கிறது. உண்ணாவிரதத்தைத் தொடங்குவதற்கு முன்பே, அந்தச் சங்கத்தினர் என்னை வந்து சந்தித்துப் பேசியிருந்தால், கொஞ்ச நாள் பொறுத்திருந்தால், அப்பொழுதே அது முடிக்கப்பட்டிருக்கும். ஆனால் உண்ணாவிரதம் தொடங்கி, அதுவும் முடிவடையக் கூடிய காலக் கட்டத்திலே இருக்கிறது. ஆகவே, இது பற்றி பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆய்வில் இருக்கிறது என்பதை மட்டும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் க. காஞ்சனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வாக்கி-டாக்கி'', துப்பாக்கி போன்றவை எல்லாம் மனிதர்கள் விழிப்புணர்வோடு இருக்கின்றபோதுதான் பயன்படுத்தக் கூடியவை. அந்த வகையில் அல்லாமல், இந்த வனத்துறை காவலர்களுக்கு உதவுகின்ற வகையிலே, விழிப்புணர்வும், வீரமும் அதிகமாக நிறைந்துள்ள காவல் துறையினருக்கு வழங்கப்பட்டு இருப்பதைப் போல, மோப்ப சக்தி அதிகமாக உடைய நாய்களை அவர்களுக்குத் துணையாக இருக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாய்களைக் காடுகளுக்கு அனுப்பினால், அவற்றை புலிகள் பிடித்துச்சென்று விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். கே. கரீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுமலை 'ஃபாரஸ்ட்' நீலகிரியில் இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே கர்நாடகா 'ஃபாரஸ்ட்' இருக்கிறது. அங்கே இருக்கக் கூடிய 'ஃபாரஸ்டர்'களுக்குப் போதுமான வசதியும், போதுமான பாதுகாப்பும் கொடுக்க அரசிடம் உத்தேசம் ஏதாவது உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே போதுமான பாதுகாப்பு மற்றும் வசதிகள் தரப்பட்டிருக்கின்றன. இன்னும், எவையெவை தேவை என்பதையும் பார்த்து, அந்த வசதிகளையும் செய்து தர வனத்துறை முன்வரும்.

[1990 மே 12

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறை அதிகாரிகளுக்கு 'வயர்லெஸ்' வழங்குவது சக்தி வாய்ந்த துப்பாக்கிகள் வழங்குவது, ஒருபுறம் இருந்தாலும் வனத்தையே அழிக்கக் கூடிய சமூக விரோதிகளை, கண்டதும் சுடு; சுட்டுக் கொல்லு என்று சொல்லக் கூடிய அளவுக்கு, இந்தத் துறைக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறதா? அல்லது, அது போல ஒரு அதிகாரம் வழங்கக்கூடிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வனத்துறையினால் குற்றம் சுமத்தப்பட்டு, குற்றவாளிகளாக தீர்ப்பு அளிக்கப்பட்டவர்கள், மீண்டும் குற்றம் செய்தால், அவர்களைக் குண்டர் சட்டத்திலே போடக் கூடிய வசதி இருக்கிறது. வனத்துறையைப் பொறுத்த வரையில், வெளியிலே இருக்கக் கூடிய சமூக விரோதிகள் மட்டுமல்ல; வனத்துறையிலேயும் இருக்கக்கூடிய சில 'ரேஞ்சர்கள்', சில 'ஃபாரஸ்டர்கள்' இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுகிறார்கள். ஆகவே, அவர்கள் அனைவருக்கும், கண்டதும் சுடு என்று உத்தரவிட்டால், அது பொருத்தமாக இருக்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ரேஞ்சர்'களுக்கு 'வயர்லெஸ்' கொடுத்திருப்பது அது ''ஃபாரஸ்ட்'' அதிகாரிகளுடன் மட்டும் தொடர்பு கொள்ளக் கூடிய சக்தி வாய்ந்ததா, அல்லது உயர்மட்ட காவல்துறை அதிகாரிகளோடும் தொடர்பு வைத்துக் கொள்கிற சக்தி வாய்ந்ததா என்பதை அறிய விரும்புவதோடு, இந்த குண்டர் சட்டத்தை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை மட்டும் கேளுங்கள் போதும்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரியிலிருந்து இங்கே சென்னையிலே இருக்கக் கூடிய முதன்மை வனத்துறை காவலர் வரை தொடர்பு கொள்ளக் கூடிய சக்தி வாய்ந்த 'வயர்லெஸ்' செட்தான் அது என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கண்டதும் சுடு என்ற உத்தரவைப் போட வேண்டுமென்ற வேண்டுகோளை ஏற்போமேயானால், விறகு பொறுக்குகிறவர்கள்-சாதாரணமாக ஏழை எளிய மக்கள் உள்ளே செல்லும்போது, அவர்கள் தாக்கப்படலாம். அதற்குப் பதிலாக லாரி ஏதாவது உள்ளே போனால், லாரியில் ஏதாவது பொருட்களை எடுத்துக் கொண்டு வெளியே வந்தால், அவர்களைச் சுடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று



1990 மே 12]

ஒரு கேள்வியையும் கேட்டு, 'புரட்டக்டட் ஏரியா' என்று ''ஃபாரஸ்ட் ஏரியா''க்களை 'டிக்ளேர்' செய்யுமா அரசாங்கம் என்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். காரணம், 'புரட்டக்டட் ஏரியா' என்று சொல்வோமேயானால், யாரும் உள்ளே நுழைய முடியாது; எந்த வாகனமும் வர முடியாது. ஏர்போர்ட், பாலங்கள் போன்ற பெரிய பெரிய முக்கியமான இடங்களைப் பாதுகாப்பது போல.

9-15 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே 'ரிசர்வ் ஃபாரஸ்ட்' என்றுதான் இருக்கிறது. 'ரிசர்வ்' என்றாலே ஏறத்தாழ 'புரட்டக்டட்' என்றுதான் அர்த்தம். அது தவிர, வன விலங்குகள் காப்பகம், இவையெல்லாம் 'புரட்டக்டட் ஏரியா'வாகத்தான் இருக்கின்றன. ஆனால் எம்.ஜி. ஆருடைய ஆட்சியிலேதான் ஆங்காங்கே இருக்கக் கூடிய வனக் காப்பகத்தினுடைய அருகிலே இருக்கக் கூடிய தாய்மார்கள், பெண்கள் உள்ளே சென்று, காட்டுக்குள்ளே சென்று, தலைச் சுமையாக, விறகுகளை எடுத்து வருவதற்கு அனுமதி தரப் பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் எத்தனை இடங்களில் ரேஞ்சர்களுக்கு வயர்லெஸ் வழங்கப்பட்டிருக்கின்றன? அதே நேரத்தில், லாரி, மாட்டு வண்டி......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடவும்.

ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தக் கட்டிடம்

*1839 திரு. ப. சுந்தரம் :
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், ஜோலார் பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமாகப் புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஜோலார் பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடம் கட்ட சக்கனாக்குப்பம் கிராமத்தில் பணியிடம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. வருவாய்த் துறையிலிருந்து நில உரிமை மாற்றம் செய்யப்பட்டு நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டவுடன், ஜோலார்பேட்டை ஒன்றிய அலுவலகக் கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### தல சாலை மான்யம்

*4958 திரு. கே. ரவி. அருணன் :
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஊராட்சி ஒன்றியத்திற்கு அரசால் வழங்கப்பட்டு வரும் தல சாலை மான்யத்தை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், நபர் ஒன்றுக்கு எவ்வளவு உயர்த்தப்படும்?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டு வரும் தல சாலை மானியத்தை உயர்த்தும் கருத்துரு, வல்லுநர் குழு அறிக்கை பெறப்பட்டதும் ஆய்வு செய்து முடிவு செய்யப்படும்.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும் 'லோக்கல் ரோட்ஸ் கிராண்ட்ஸ்,' அங்கேயுள்ள சாலைப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்குத்தான் போதுமானதாக இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களிலே ஏறத்தாழ, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், 75 கிலோ மீட்டர், 100 கிலோ மீட்டர் என்று சாலைகள் இருக்கின்றன. ஒரு கிலோ மீட்டர் சாலையை அமைப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகிறது. ஆகவே, ஊராட்சி ஒன்றியங்களின் சாலைகளை நல்ல முறையில் அபிவிருத்தி செய்வதற்காக தல சாலை மானியத்தை உயர்த்துவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 131-வது பிரிவின்படி, ஏற்கெனவே இது அறிவிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் தொகை அடிப்படையிலேயும், சாலைகள், சாதாரணச் சாலைகள் எல்லாவற்றையும்



இணைத்து, இதற்கு ஒரு குறிப்பிட்ட தொகை வழங்குவதற்கு ஏற்கெனவே இந்த விதியின்படி ஆணை வழங்கப்பட்டு இருக்கிறது. அதன் அடிப்படையில் மக்கள் தொகை, நபர் ஒன்றிற்கு 18 பைசா வீதமும், சாதாரணச் சாலைகளுக்கு கிலோமீட்டர் ஒன்றிற்கு ரூ. 535 வீதமும், கடற்கரை மற்றும் நதிக்கரை சாலைகளுக்கு கிலோ மீட்டர் ஒன்றிற்கு ரூ. 715 வீதமும், மலைப்பாதை சாலைகளுக்கு கிலோ மீட்டர் ஒன்றிற்கு ரூ.1,340 வீதமும், ஏற்கெனவே விதிக்கப்பட்டு இருக்கிறது. அதற்குப் பிறகு, 1987-ஆம் ஆண்டு சட்டசபையில் அளித்த உறுதிமொழிக்கிணங்கவும், தலைமைப் பொறியாளர், ஊரகப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை கோரிக்கையின் பிரகாரமும். இந்த மானியத்தை அதிகரிக்கலாம் என்று பரிந்துரை செய்ததன் அடிப்படையில் பரிசீலனையில் இருக்கிறது. அப்படிப்பட்ட பரிந்துரை, அதாவது 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி நபர் ஒன்றிற்கு 50 பைசா வீதமும், சாதாரண சாலைகளுக்கு கிலோ மீட்டர் ஒன்றிற்கு ரூ. 2,275 வீதமும், கடற்கரை மற்றும் நதிக்கரை சாலைகளுக்கு கிலோ மீட்டர் ஒன்றிற்கு ரூ.2,900 வீதமும், மலைப் பாதை சாலைகளுக்கு ரூ. 5,590-ம், வழங்கலாம் என்றும் உத்தேசித்து, அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. இவைகளெல்லாம் நம்முடைய பெருமதிப்பிற்குரிய திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு, அளிக்கின்ற பரிந்துரைகளுக்குப் பிறகு பரிசீலித்து நடவடிக்கைக்கு உட்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்களில் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. புதிதாகப் போடப்படும் சாலைகள்கூட ஆறு மாதங்களுக்கே நல்ல முறையில் இருக்கின்றன. அதற்குக் காரணம், ஊராட்சி ஒன்றியங்களில் சாலகைள் அமைக்கப்படும்போது, பல முறைகேடுகள் நடைபெறுவதாகப் பல புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக அமைக்கப்படும் சாலைகளை நல்லமுறையில் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியம், பஞ்சாயத்து ஆகிய கிராமப்புறச் சாலைகள் அத்தனையையும் நாம் சீர்செய்ய வேண்டுமானால், நான் ஏற்கெனவே 24-ஆம் தேதி என்னுடைய பதிலுரையில் தெரிவித்ததைப் போல, ஏறத்தாழ 588 கோடி ரூபாய் செலவாகும். எனவேதான், இவை எல்லாம் சரி பார்க்கப்பட்டு, 3 ஆண்டுகள், 5 ஆண்டுகள் என்று திட்டமிடப்

பட்டு, தார்ச்சாலைகள் ஓரளவுக்கு மூன்று ஆண்டுக் காலத்திலும் பாக்கியிருக்கிற இதர மண் சாலைகள் கல் சாலைகள் அனைத்தையும் கல் சாலைகளாக ஆக்குவதற்கு 5 ஆண்டும், கல் சாலையை தார்ச் சாலையாக்க மூன்று ஆண்டும் என்று இப்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மத்திய மாநில அரசுகள் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற நிதியின் மூலமாகவும் ஊராட்சி ஒன்றியத்தின் நிதியின் மூலமாகவும், நம்முடைய அரசு வழங்கியிருக்கிற 10 கோடி ரூபாய் மானிய, சிறப்புத் தொகையின் மூலமாகவும், இந்தப் பணிகளை மேற்கொண்டு ஓரளவுக்கு இந்த ஆண்டு சீர்செய்யத் துவங்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-20 மணி

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பராமரிப்பது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த அடிப்படையிலே ஊராட்சி மன்றத்திலுள்ள சாலைகளையும் பராமரிப்பதற்குப் போதிய நிதி வசதி இந்தத் துறை மூலமாக வழங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பேரூராட்சி மன்றங்களும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்டதாகக் கருதப்படுகின்றன, அந்தச் சாலைகளும் இந்தச் சாலைகளோடு சேர்க்கப்படும். அதற்காக முன்னுரிமை தரவேண்டிய நிலை இருக்குமானால், அது நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப்படும். குறைந்த வழி எந்தப் பாதையோ அதைத்தான் முதற் கட்டமாக இந்த ஆண்டு எடுக்கச் சொல்லியிருக்கிறோம். அது பேரூராட்சியில் இருந்தாலும், ஊராட்சியில் இருந்தாலும் அப்படிப்பட்ட சாலைகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவுற்ற ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு விசேஷமாக ஏதாவது நிதி உதவி செய்வதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்த நிதிநிலை அறிக்கையிலும் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நானும் அன்றையதினம் தாக்கல் செய்த மானியக் கோரிக்கையிலும் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன். அநேகமாக நலிவுற்ற ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் இவற்றிற்கு ஓரளவு பரிவு காட்டத்தக்க வகையில் திட்டப் பணிகளிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.



திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாயகர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே ஒரு ராட்சி ஒன்றியத்திற்கு 15 பஞ்சாயத்திலிருந்து 65 பஞ்சாயத்து ரைக்கும் இருக்கின்றன. இங்கே திரு.பெரியண்ணன் அவர்கள் ட்கார்ந்து இருக்கிறார். நமது புதுக்கோட்டை, திருவரங்குளம் ராட்சி ஒன்றியத்தில் ஏராளமான பஞ்சாயத்துக்கள் இருக்ன்றன. அந்த ஒன்றியத்திலே அதுமாதிரி நிறைய பஞ்சாயத்துகள் இருக்கின்றன என்பது மட்டுமல்லாமல் ரோடுகள் எட்டிஎட்டி இருக்ன்றன. இப்பொழுது பஞ்சாயத்து ஜனங்களுக்கு வேண்டியத் தேவைகளுக்கெல்லாம் பஸ் விட வேண்டும். பஸ் எங்கே கேட்டாலும் அமைச்சர் விடுகிறார். விடும்போது ரோடு சரியா....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன செய்ய வேண்டுமென்று தாங்கள் வற்புறுத்த விரும்புகிறீர்கள்?

திரு. ஒய். வெங்கடஸ்வர தீட்சிதர் : இது ரொம்பக் குறைவு, தற்கு அவசரமாக, போர்க்கால முறையிலே நடவடிக்கை டுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய தமிழக அரசு நிதிநிலையை யாட்டி எந்த அளவுக்கு பரிந்துரை செய்து அனுப்ப முடியுமோ ந்த அளவுக்கு நிதிகளை வழங்கியிருக்கிறார்கள். எந்த ஆண்டும் ல்லாது இந்த ஆண்டுதான் சாலைப் பராமரிப்புக்கென 10 காடி ரூபாய் சிறப்பு நிதி வழங்கப்பட்டிருக்கிறது, இதிலிருந்து ான் அந்தப் பணி துவங்கப்படவிருக்கிறது என்பதைத் தரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ; மாண்புமிகு பேரவைத் லைவர் அவர்களே, பஞ்சாயத்துச் சாலைகள், பஞ்சாயத்து ூனியன் சாலைகள் இந்த இரண்டிலுமே பஸ் ரூட் போய் கொண்டிந்ததல்லவா, அந்த பஸ் ரூட்டுகளில் இருக்கக்கூடிய ரோடுகள் ல்லாம் ஒரு கிலோ மீட்டர் ரிப்பேர் ஆகிவிட்டால்கூட அதற்கு வ்வளவு என்று டி.யி.யை கேட்டால் ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் ஆகும் என்று சொல்கிறார்கள். அப்படி மிகவும் ழுதடைந்துள்ள பஞ்சாயத்து யூனியன் ரோடுகளுக்கு முன் னுரிமை கொடுத்து இப்பொழுது வேலைகளையெல்லாம், ரெனியூவல்' பண்ணக்கூடிய நடவடிக்கை எடுக்கப்படுமா ன்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் லைவர் அவர்களே, இந்த ஆண்டு எடுத்துக் கொள்கிற ாலைகளிலே பேருந்து சாலைகள்தான் முதல் இடம் பெறும். திலேயும் பேருந்துகள் சென்று கொண்டிருக்கிற தார்ச் சாலை ள் பாதியிலே ஏதாவது கல் சாலை, மண் சாலை வருமே ானால் அதைத் தார்ச் சாலையாக மாற்றுவதற்கு முதலிடம்

உண்டு. அதைத் தாண்டித்தான் 1,000 குடியிருப்புகள் உள்ள மக்கள் தொகை உள்ள இன்னொரு பகுதிக்குப் பேருந்துகள் செல்ல முடியும். சாலை வசதியில்லையென்று சொல்கிற இடங்களிலே அதைப் புதுப்பிக்கிற நிலை ஏற்படுத்தப்படும்.

### விவசாய உயர்மட்டக் குழு

*1497 திரு. எஸ். டி. உகம்சந்த் ; மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) விவசாயிகள் பிரச்சினை பற்றி ஆய்வு செய்ய தமிழக அரசால் நியமிக்கப்பட்ட விவசாய உயர்மட்டக் குழு அரசுக்கு அளித்துள்ள பரிந்துரைகள் என்ன ?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இது குறித்த விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை.

வேளாண்மை உயர்மட்டக் குழு 1981, 1982, 1983, 1984, 1985, 1986, 1987, 1988 ஆகிய ஆண்டுகளில் அரசுக்கு 180 பரிந்துரைகளைச் செய்தது. இப் பரிந்துரைகள், தொடர்புடைய அரசுத் துறைகளால் பரிசீலிக்கப்பட்டு பலவற்றின்மீது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதர பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :

| தொடர் எண் | பரிந்துரை | அரசு எடுத்த நடவடிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | 1981 | |
| 1. | குத்தகை விவசாயிகள் வெளியேற்றத்தைத்தடுக்க நடவடிக்கை எடுத்தல். | தற்போதுள்ள குத்தகைதாரர்கள் பற்றிய சட்டங்களால் அரசு நடவடிக்கை தேவையில்லை என அரசு முடிவு செய்துள்ளது. (வருவாய்த் துறை அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 19662/நி.சி. 3(1)/82, நாள் 15—6—1982). |





| 1) | (2) | (3) |
|---|---|---|
| 2 | 1-7-1981 முதல் கூட்டுறவுக் கடன் வசூலில் ஆறு மாதங்களுக்கு ஜப்தி நடவடிக்கையை நிறுத்தி வைத்தல். | தமிழக அரசின் 3-7-1987 நாள் பத்திரிகைக் குறிப்பின்படி ஏற்றுக் கொள்ளப் பட்டது. |
| 3 | 30-6-1981 முடிய கூட்டுறவுக் கடன்களுக்காக ஜப்தி செய்யப்பட்ட பொருட்களை விவசாயிகளுக்குச் செலுத்துதல். | உணவு மற்றும் கூட்டுறவுத் துறை இணைச் செயலர் நே.மு.க.எண் 53934/சி.ஜே. 2/81-1, நாள் 15-9-1981-ன் படி ஜப்தி செய்யப்பட்ட பொருட்களைத் திருப்பிக் கொடுக்க அனுமதி வழங்கப் பட்டது. |
| 4 | விவசாயிகளுக்கான மின் கட்டணங்களைச் சீர் திருத்தி அமைத்தல். | குழுவின் பரிந்துரையையும் பரிசீலித்து, சிறு விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு 12 காசுகள் என்றும் மற்ற விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு 15 காசுகள் என்றும் அரசு ஆணை எண் 1518,பொதுப் பணித் துறை, தேதி 11-9-1981-ல் அறிவித்தது. |
| 5 | பால் உற்பத்தியாளர் கோரிக்கைப்படி ஒரு கிலோ கொழுப்பு சத்துள்ள பாலின் விலையை ரூ. 29-ல் இருந்து ரூ. 35-க்கு உயர்த்தக் கோருதல். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 6 | விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச கூலியை உயர்த்தக் கோருதல். | அரசு ஆணை (தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை) எண் 866, நாள் 2-4-1983-ல் ஆணையிடப் பட்டது.<br>1. உழவுக் கூலி, உழவு மாடு, ஏருடன் ரூ. 18.00.<br>2. உழவுக் கூலி, உழவு மாடு ஏரின்றி ரூ. 11.00. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | | 3. நெல் அறுவடையில் பட்டுள்ள தொழிலா ரூ. 11.00 அல்லது மொ அறுவடையில் 1/8 பா இவற்றில் எது அதிகமே அதன் ரொக்க மதிப்பு. |
| | | 4. நெல் நீங்கலாக மற்ற தானிய அறுவடை ரூ. 11.00. |
| | | 5. (அ) நடவு (ஆ) களை எடுத்தல். } ரூ. 8.00 |
| | | 6. இதர விவசாய ப்வலை கள் (வரப்பு வெட்டுதல், மரம் அறுத்தல், தேன் வளர்த்தல், கோழிப் பண்ணை, மாட்டுப் பண்ணை உட்பட) ரூ. 10.00. |
| | | 7. பண்ணையாள் ரூ. 210 மாதம் ஒன்றுக்கு என உயர்த்தப்பட்டுள்ளது. |
| 7 நெல் விலையை உயர்த்தக் கோருதல். | | கீழ்க்கண்டவாறு விலை உயர்த்தப்பட்டுள்ளது :—<br>குவிண்டாலுக்கு.<br>(அ) பொது ரகம் ரூ. 137<br>(ஆ) சன்ன ரகம் ரூ. 141<br>(இ) மிகச் சன்ன ரகம் ரூ. 145 |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 8. பயிர்க்கடன் | | |
| | (அ) குறுகியகால பயிர்க் கடனுக்கு 1981-82 லிருந்து தவறாமல் திரும்பச் செலுத்தும் எல்லா விவசாயிகளுக்கும் முழு வட்டிச் சலுகை அளித்தல். | கூட்டுறவுத் துறை கடித எண் 58797/சிசி I 1/83-4, நாள் 19-3-1984-ல் இந்த யோசனையை ஏற்கஇயலாது என்று பதிலளிக்கப்பட்டது. |
| | (ஆ) இதர பயிர்க் கடன்களுக்கு ஏற்கனவே உள்ள அரசாணை எண் 584, உணவு மற்றும் கூட்டுறவு நாள் 18-7-1981ல் உள்ள சலுகைகளைத் தொடர்ந்து நீடிக்கச் செய்தல். | இத்திட்டம் மேற்கூறிய கடிதத்தின்படி 1982-83, 1983-84 மற்றும் 1984-85 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. |
| | (இ) பயிர்க் கடன்கள் அறுவடைக்குப் பிறகு இரண்டு மாதத்திற்குள் செலுத்தி விட வேண்டுமென்றிருப்பதை ஆண்டுக் கடனாக வழங்கப்பட வேண்டும். | தற்போது அமுலில் உள்ள முறையில் எந்தவித மாற்றமும் தேவையில்லை. |
| 9. நிலவள வங்கிக் கடன்கள் : | | |
| | (அ) மின்வாரியத்தின் 9 நாட்கள் தாக்கீதின் பேரில் நிலவள வங்கிக் கடன் பெற்று பம்புசெட் வாங்கிய பிறகும் மின் இணைப்பு கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறது. மேலும், வட்டியுடன் ஆண்டுத் தவணைகளைக் கட்ட வேண்டி இருக்கிறது. ஆகவே இணைப்பு கிடைக்கும் வரை நிலவள வங்கிக் கடனை வட்டியில்லாக் கடனாகவும் மேலும் இணைப்பு கிடைக்கும் நாள் முதல் தவணை துவங்க வேண்டும் | நிலவள வங்கியினால் வழங்கப்படும் கடன்கள் மீது வசூலிக்கப்படும் வட்டியை தள்ளுபடி செய்யவோ அல்லது தள்ளுபடி செய்ய அரசு மானியம் அளிக்கவோ இயலாது (கூட்டுறவுத் துறை கடித எண் 15539/சி.ஜே 1./82-3, நாள் 10-10-1986. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | என்றும் நிலவள வங்கிக்கு இதனால் ஏற்படக் கூடிய இழப்பை அரசு மானியமாக வழங்கலாம் என்றும் கோருதல். | |
| (ஆ) | கிணறு வெட்டக் கொடுக்கப்படும் கடனில் கிணறு பூர்த்தியான பிறகு கடன் தொகையில் 50 சதவீதம் மானியமாக வழங்கலாம். இதனை சிறு விவசாயிகளுக்கு மட்டுமே வழங்கலாம்: | மாநிலத்தின் எல்லா பகுதிகளிலுமே ஏதாவதொரு அமைப்பின்கீழ் சிறு/குறு விவசாயிகள் கிணறு வெட்டுவதற்கு மானியம் பெற வாய்ப்பு இருப்பதால் கூட்டுறவுத் துறையினால் வழங்கப்படும் புதிய கிணறுகள் மானியத்தை உயர்த்தும் கேள்விக்கு இடமில்லை. |
| (இ) | 1974-க்கும் முன்பிருந்த முறையைப் போல் அடுத்த 5 ஆண்டுகளுக்கு தவணை கடந்த பாக்கிகளைக் கணக்கில் இடாமல் நிலவள வங்கிகள் கடன்கள் வழங்க இக்குழு அரசுக்குப் பரிந்துரை செய்கிறது. | பரிந்துரையை ஏற்க இயலாது. |

10. நகையீட்டுக் கடன்கள் :

| | | |
|---|---|---|
| (அ) | கிராம கூட்டுறவு சங்கங்கள் தங்கள் பொருளீட்டைக் கொண்டு இரும்புப் பெட்டகம் வாங்க ஆணை கோருதல். | அரசு கூட்டுறவுத் துறை 58801/சிசி1/83-2 நாள் 4-4-1984 கடிதத்தில் தற்போது இரும்பு பெட்டகம் வாங்குவது சாத்தியமில்லை என்று பதிலளிக்கப்பட்டது. |
| (ஆ) | கூட்டுறவு வங்கிகள், சங்கங்கள் மூலம் நகையீட்டுக் கடனாக ரூ. 900 அல்லது ஒரு பவுன் மதிப்பில் 90 சதவீதம் இவற்றுள் எது குறைவோ அதனை வழங்கக் கேட்டல். | அரசு கூட்டுறவுத்துறை 19-3-1984 நாளிட்ட கடித எண் 58822/83-2ல் தற்போது சவரனுக்கு ரூ. 800 வரை கூட்டுறவு வங்கிகள் கடன் வழங்குகின்றன என பதிலளிக்கப்பட்டது. |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| (இ) | கூட்டுறவு கடனைக் கட்டுவதற்காக மட்டுமே விவசாயிகள் நகையீட்டுக் கடன் கேட்டால் தற்போதுள்ள உச்சவரம்பான ரூ.5,000 என்பது இருக்க வேண்டாம் எனக் கோரல். | கூட்டுறவுத் துறை 3-9-1984 நாளிட்ட கடித எண் 58803/சிசி1/83-6ல் ரூ. 5,000 என்பதை ரூ. 10,000 ஆக உயர்த்லாம் என பதிலளிக்கப் பட்டது. |
| (ஈ) | நகையீட்டுக் கடன் தொகை அளவை ரூ. 3,000-லிருந்து ரூ. 5,000 ஆக உயர்த்துதல். | கூட்டுறவுத் துறை என். 58804/சிசி1/83-6 நாள் 3-9-1984-ல் ரூ. 3,000-லிருந்து 5,000 ஆக உயர்த்தலாம் என முடிவு செய்யப் பட்டது. |
| (உ) | நிலவள வங்கிக் கடன்களுக்காக நகையீட்டுக் கடன்களை உச்சவரம்பின்றி மத்திய வங்கியின் கிளைக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கும் அனுமதித்து அந்தத் தொகையை நிலவள வங்கி நேரடியாக செலுத்த ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்ளுதல். | ஏற்றுக்கொள்ளப்படவில்லை. |
| (ஊ) | நகையீட்டுக் கடன் வட்டி விகிதத்தை கீழ்க் கண்டவாறு மாற்றியமைத்தல்.<br>சதவீதம்<br>மாநில வங்கி 10.75<br>மத்திய வங்கி 11.00<br>கூட்டுறவு சங்கம் 12.50 | கூட்டுறவுத்துறை கடித எண் 58802/சிசி1/நாள் 19-3-1984ல் ஏற்கெனவே அரசு வட்டி வீதத்தைக் குறைத்து உள்ளதால் மேலும் குறைப்பதற்கான வாய்ப்பு இல்லை என பதிலளிக்கப்பட்டது. |
| (எ) | ''டிமாண்டு அண்டு டைம் வையாபிலிடி'' 5 சதவீதம் என்றிருப்பதை 15 சதவீதம் ஆக உயர்த்தலாம் என ரிசர்வ் வங்கியை வற்புறுத்தலாம். | நல்ல பொருளாதார நிலையில் உள்ள மாநில கூட்டுறவு வங்கிகள்/மத்திய கூட்டுறவு வங்கிகள் 10 சதவிகிதம் மேல் நகையீட்டுக் கடன்கள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. (கூட்டுறவுத்துறை கடித எண் 4371/சிசி1/98-1, நாள் 23-2-1988.) |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 11. | தற்போதுள்ள விதி முறைகளை மாற்றி விவசாயிகளுக்குச் சாதகமான முறையில் பொய்த்துப்போன கிணறுகளுக்கான மானிய திட்டத்தை மாற்றியமைத்தல். | ''நாபார்டு'' (தேசிய வங்கி), வழங்கிய திட்டத்தைக் கருத்தில் கொண்டு அரசு ஆணை எண் 25 [நிறுவனங்கள், நிதித்துறை] 23-5-1980இல் தக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. (கூட்டுறவுத் துறை கடித எண். 3869/சி1/87-8, நாள் 16–8–1988). |
| 12 | 1981–82 பருவத்திற்குக் குறைந்த பட்ச விலை நிர்ணயித்தல். | 1981-82ல் 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானமுள்ள கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ. 175 கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. |
| 13 | காவேரி சர்க்கரை இரசாயன ஆலையை அரசே ஏற்று நடத்துதல். | தொழில் துறை அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 27385/82-3, நாள் 8–9–1982-ல் பதில் பெறப்பட்டது, உரிய சட்டம் நிறைவேற்றிய பின் இவ்வாலையை தமிழக அரசே ஏற்று நடத்தும். இதற்கிடையில் மைய அரசு காவேரி சர்க்கரை ஆலையை 1986 பிப்ரவரி வரை தம்முடைய பொறுப்பிலேயே வைத்திருப்பதற்கான ஒரு சட்டத் திருத்தத்தின் கீழ் தாமே நிர்வாகித்து வருகிறது. |
| 14 | பெரியார் மாவட்டத்தில் சர்க்கரை ஆலை நிறுவுதல். | கூட்டுறவுத் துறையில் மேலும் சர்க்கரை ஆலை அமைக்க அரசின் நிதிநிலை இடம் தராத சூழ்நிலையில், பெரியார் மாவட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க வேண்டும் என்ற பல்வேறு கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு சத்தியமங்கலம் வட்டத்தில் 1,250 டன் பிழி திறனுடைய ஒரு சர்க்கரை ஆலை அமைக்க பன்னாரியம்மன் |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| | | சுகர்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்திடம் இருந்து வந்த விண்ணப்பத்தை உரிமம் வழங்க மைய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்து மைய அரசு முன் உரிமம் வழங்கியுள்ளது. |

1982

| | | |
|---|---|---|
| 15 | விவசாயி, தன்னுடைய எல்லா கடன் தேவைகளையும் குறுகியகால, மத்திய கால, நீண்ட காலக் கடன்கள் கிராம மட்டத்தில் ஓரேஇடத்தில் பெறவும், கடன்களைத் திருப்பிச் செலுத்தவும் கிராம மட்டத்தில் உள்ள விவசாய கூட்டுறவு சங்கங்களிலேயே வழிவகைச் செய்தல். | கூட்டுறவுத் துறை 18-10-1983 நாளிட்ட கடித எண். 6834/சிஜே1/83-7-ல் இத்திட்டம் பரீட்சார்த்தமாக சேலம் மாவட்டத்தில் 2 சங்கங்களில் செயல்பட்டு வருகிறது. எல்லா விவசாய சேவை சங்கங்களும், தன்னிறைவுப் பெற்றபின் மாநிலம் முழுவதும் இத்திட்டம் செயல்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்று பதிலளிக்கப்பட்டது. |
| 16 | பயிர்க்கடன்கள் தவிர விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் வேளாண்மை சார்ந்த அனைத்து தேவைகளுக்கும் வேளாண்மை கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள் மூலம் கடன் வழங்குதல். | கூட்டுறவுத் துறை 29-8-1983 நாளிட்ட கடித எண் 881/83-ல் வேளாண்மை சார்ந்த தேவைகளுக்கான கடன்கள் அங்கீகரிக்கப்பட்ட மத்திய காலக் கடன்களாகக் கருதி தேசிய வங்கி [நாபார்டு] யின் மறுநிதி பெறத் தகுதி அற்றவை என்று தேசிய வங்கி தெரிவித்துள்ளது என பதிலளிக்கப்பட்டுள்ளது. |
| 17 | சுலபமாகவும், தங்கு தடையின்றியும், தேவைக்கு ஏற்றவாறும் தானிய ஈட்டுக் கடன் வழங்குவதில் ஏற்படுத்த வேண்டிய மாறுதல்கள். | கூட்டுறவுத் துறையின் ஆய்வில் உள்ளது. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 18 | வறட்சி, வெள்ளம் போன்றவைகளால் பாதிக்கப்பட்ட ஆண்டுகளில் கூட்டுறவு நிலவள வங்கிகளால் தவணையைத் தள்ளி போடுதல் அனுமதிக்கப்பட்ட விவசாயிகளுக்குச் சலுகை அளித்தல். | [கூட்டுறவுத்துறை கடித எண் 6834/சி.ஜே. 83-7, நாள் 18-10-1983] 1974-78ஆண்டுகளில் மாற்றி அமைக்கப்பட்டக் கடன்களைப் பொறுத்தவரை (30-6-1980இல் நிலுவையில் உள்ளவை) கடன் வழங்கும்போது நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதம் செலுத்தினால் போதும் என்றும் குழுவின் பரிந்துரையை முழுவதுமாக ஏற்றுக் கொள்வதாக இருந்தால் சங்கங்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட தணிக்கைச் சான்றிதழைத் திருத்த நேரிடும் என்றும் இது விரும்பத் தக்கதல்ல என்றும் பதில் பெறப்பட்டது. |
| 19 | நீண்ட காலக் கடன் தொகையை கெடு தவறாமல் திருப்பிச் செலுத்துவோருக்குக் குறுகியக் காலக் கடன்களுக்குக் கொடுப்பது போலவே 1982-83ஆம் ஆண்டில் 2 சதவீத வட்டிச் சலுகை அளித்தல். | ஏற்றுக் கொள்ளப்படவில்லை. (கூட்டுறவுத் துறை 1966/சிஜேஜே/89, நாள் 11-1-1989.) |
| 20 | ஈரோடு கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூலமாக ஈரோடு நகரில் ஒரு மஞ்சள் அரவை ஆலை அமைத்தல். | அரசாணை எண் 189 (உணவு மற்றும் கூட்டுறவுத் துறை) நாள் 25-3-1983இல் ஈரோடு கூட்டுறவு விற்பனைச் சங்கம் மஞ்சள் அரவை ஆலை அமைக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. |
| 21 | காய்கறி உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள்/கூட்டுறவு இணையம் அமைத்தல். | கூட்டுறவுத் துறை அரசுக் கடிதம் 6394/சி.எம்.83-12, நாள் 5-7-1984-ல் 300-க்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள் காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பதிவு |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| | | செய்யப்பட்டு உள்ளன என்றும், கோவை மாவட்டத்திலிருந்து காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைக்க அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது என்றும், அதனைப் பரிசீலித்த அரசுத் திட்ட அறிக்கை தயாரிக்க கூட்டுறவு விற்பனை இணையத்தைக் கோரி உள்ளதாகவும் திட்ட அறிக்கை பரிசீலித்த பின், மாவட்ட அளவில் காய்கறி பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைக்கலாம் என்றும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கூறியுள்ளதாகவும் பதில் அளிக்கப்பட்டது. |
| 22 | மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி/விற்பனை சாகுபடியாளர்களுக்கு ஆதாய விலை கிடைக்கவும் நுகர்வோருக்கு ஆதாய விலையில் மரவள்ளிக் கிழங்கு கிடைக்கவும், மரவள்ளிக் கிழங்கு அதிகம் பயிரிடப்படும் சேலம், கன்னியாகுமரி, தென்னாற்காடு மாவட்டங்களில் பதப்படுத்தும் நிலையங்கள் கொண்ட கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள் அமைக்கலாம். | தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்குவதற்குத் தேவையான செயற்குறிப்புகளை அரசுக்கு அனுப்புமாறு தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். (கூட்டுறவுத் துறை கடிதம் எண் 36649/சி.எம்1/86-20, நாள் 24-2-1988.) |
| 23 | மின்சாரப் பற்றாக்குறையும், உச்ச நேரங்களில் ஏற்படும் மின்பற்றாக் குறையை தீர்ப்பதற்கான வழிவகைகளும். | மின் உற்பத்தியைப் பெருக்கி மின் தட்டுப்பாட்டை நீக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மின் வாரியம் எடுத்து வருகிறது. (அரசு பொ. ப. து. கடித எண். 36065/யு. 2/83-20, நாள் 16-4-1985இல் பெறப்பட்ட பதில்.) |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 24 | எதிர்பாராமல் ஏற்படும் மின் தடங்கல்கள் அதிக நேரம் நீடிக்கும்போது உடனடியாக பகுதி முறையை ஏற்படுத்துதல். | பகுதிமுறை பற்றி சம்பந்தப்பட்ட மின்சார அதிகாரிகளால் விவசாயிகளுக்கு அறிவிக்கப்படுகிறது. (பொ.ப.து. கடித எண் 36065/யூ. 2/83-20, நாள் 16-4-1985). |
| 25 | மின் விசை ஏற்றங்களின் தரத்தை நிர்ணயம் செய்தல். | பம்பு செட்டுகள் மத்திய தர நிர்ணய கழகத்தால் (ஐ.எஸ்.ஐ.) அங்கீகரிக்கப்படுகின்றன. இக்குறியீட்டை விவசாயிகள் கவனித்து வாங்க வேண்டும். (பொ. ப. து. கடித எண் 36065/யூ. 2/83-20, நாள்16-4-1985.) |
| 26 | விவசாயிகளின் பயிற்சிதிட்டத்தில் மின்சாரம் என்ற பொருளைச் சேர்த்தல். | ஏற்றுக்கொள்ளப்பட்டுஅரசு ஆணை எண் 46, பொ.ப.து. நாள் 24-1-1986இல் அதற்கான உத்திரவிடப்பட்டுள்ளது. |
| 27 | தரமான மின்விசைஏற்றங்களை விவசாயிகளுக்கு வழங்கவும் மற்ற சில வசதிகளைச் செய்து தரவும் அரசுசிறுதொழில்கள் மூலம் முன்வந்து ஏற்பாடு செய்தல். | இந்திய தர நிர்ணயக் கழகத்தால் கணிக்கப்படுவதாலும், உபரி பாகங்கள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படுவதாலும் தனியாகத் தொழில் நுட்ப உதவிக் குழு அமைக்கத் தேவையில்லை. (பொ. ப. து. கடித எண் 36065/யூ.2/83-20, நாள்), 16-4-1985). |
| 28 | மின்சார இணைப்புகளில் பழுதடைந்த தளவாடங்களை விவசாயிகள் மாற்றும்போது ஏற்படும் செலவை மின்வாரியம் ஏற்றுக்கொள்ளுதல். | இப்பரிந்துரையை ஏற்க இயலாது. (பொ. ப. து.கடித எண். 36065/யூ. 2/83-20) நாள் 16-4-1985.) |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 29 | பழுதடைந்த மின் மாற்றிகளை மாற்றுவதற்கு வாகனச் செலவை மின் வாரியம் ஏற்றுக்கொள்ளுதல். | இப்பரிந்துரையை ஏற்க இயலாது. (பொ.ப.து. கடித எண் 36065 / யூ. 2/83-20) நாள் 16-4-1985). |
| 30 | எதிர்பாராத ஆபத்துக்களை சந்திக்கும் விவசாயிகளுக்கு அவர்களது பம்பு செட்டுகளுக்கு இணைப்பு வழங்குவதில் முன்னுரிமை வழங்குதல். | தற்பொழுதுள்ள முன்னுரிமை விதிகளில் மாற்றம் தேவையில்லை. (பொ.ப.து.36065/யூ. 2/83-20, நாள் 16-4-1985.) |
| 31 | மின் இணைப்பு/துண்டிப்பு : | |
| | (1) கால கெடுவிற்குள் மின் அளவு மதிப்பீட்டில் தவறை சுட்டிக்காட்டினால் தவறைத் திருத்த மின்வாரியம் எடுத்துக் கொள்ளும் காலவரம்பு வரை விவசாயியின் மின் இணைப்பைத் துண்டிக்கக் கூடாது. | பரிந்துரையை ஏற்பதற்கில்லை. |
| | (2) நிர்வாகத் தரப்பில் தவறான மதிப்பீட்டில் மின் இணைப்பு தவறுதலாக துண்டிக்கப்பட்டால் இணைப்புக் கட்டணம் இன்றி மின் இணைப்புத் தர வேண்டும். | பரிந்துரையை ஏற்பதற்கில்லை. |
| | (3) அட்டையில் தவறு திருத்தப்பட்ட பின் விவசாயிக்கு மின் கட்டணம் செலுத்த மூன்று நாட்கள் அவகாசம் கொடுக்க வேண்டும். | பரிந்துரை மின்வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. (பொ. ப. து. 36065/யூ. 2/83-20, நாள் 16-4-1985). |
| 32 | விவசாய மின் இணைப்புகளில் இடமாற்ற விண்ணப்பங்களை துரிதமாக வழங்க யோசனைகள். | இப்பரிந்துரையை ஏற்க இயலாது. (பொ.ப.து. 36065/யூ2/83-20, நாள் 16-4-1985). |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 33 | விவசாயிகளுக்குச் சான்று அளிக்கப்பட்ட விதைகளை முழுமையாக வழங்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல். | விவசாயத் துறை கடித எண் 1682/ஏ.பி.3-4, நாள் 16-8-1983இல் விரிவான பதில் பெறப்பட்டது. |
| | | (அ) விதைகளை விற்க கண்டிப்பாக உரிமம் பெற வேண்டும் என சட்டமியற்றுவதற்கான முடிவு மைய அரசிடம் இருந்து எதிர்ப்பார்க்கப்படுகிறது. |
| | | (ஆ) விதைச்சான்று பெற பதிவு செய்தல் என்பது விதை உற்பத்தியாளர் விருப்பத்தைப் பொறுத்தது. எனவே, இதனை திடீரென செயல்படுத்த இயலாது. படிப்படியாகத்தான் கொண்டு வர வேண்டும். |
| | | (இ) நெல், சோளம், ராகி, பழவகை, நாற்றுகள், பயறுவகை ஆகிய வித்துக்கள் சான்றுபெற்றுத்தான் விற்க வேண்டும் என்னும் நிலை விதை உற்பத்தி பெருக பெருகத்தான் ஏற்படும். |
| | | (ஈ) மாநிலங்களுக்கேற்ப விதைகள் மாநில அரசுகளே நிர்ணயிக்கும் பொறுப்பு வழங்க டில்லியில் 17-6-1982 இல் நடந்த மத்திய விதைச்சான்று வாரியம் மற்றும் விதைக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. |
| | | (உ) வேளாண்மைத் துறை மட்டுமல்லாமல் தமிழ் நாட்டிலுள்ள உர நிறுவனங்கள், வசதிபடைத்த |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| | | கூட்டுறவுச் சங்கங்களான துடியலூர் வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம், ஈ.ஐ.டி. பாரி போன்ற நிறுவனங்களும் விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. வல்லுநர் விதை மற்றும் ஆதார விதை ஆகியவற்றின் உற்பத்தி பெருகிச் சான்றுப் பெற்றால் விதை உற்பத்தியும் வினியோகமும் மேலும் அதிகரிக்கும். |

## 1983

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 34 | தற்போது அமலிலுள்ள பயிர்க்காப்பீட்டுத் திட்டம் சில திருத்தங்களுடன் செயல்படுத்துவதற்கான பல பரிந்துரைகள். | சிலவற்றை அரசு ஏற்றுள்ளது. (கூட்டுறவுத் துறை கடித எண். 30320/சிசி1/83-41, நாள் 1-3-1988). |
| 35 | ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் வர்த்தக வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு வங்கி வசதிகளை ஏற்படுத்துதல். | சாத்தியமில்லை என தெரிவிக்கப்பட்டது. (கூட்டுறவுத் துறை கடித எண். 16852/சிசி1/87-1, நாள் 1-7-1987). |
| 36 | சர்வதேச வளர்ச்சி நிறுவன உதவியுடன் செயல்பட்ட டிராக்டர் கடன் திட்டத்தின் கீழ் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு டிராக்டர் ஒதுக்கீடு செய்திருந்தும் வாங்காத விவசாயிகளின் வைப்புத் தொகையைத் திருப்பிச் செலுத்துதல். | வேளாண் துறையின் ஆய்வில் உள்ளது. |
| 37 | கிணறுகளை ஆழப்படுத்த/ஆழப்படுத்திய பிறகும் பொய்த்துப் போன கிணறுகளுக்கு கூட்டுறவு நிலவள வங்கி மூலம் வழங்கப்பட்ட கடன் | கூட்டுறவுத் துறை கடித எண் 33630/சி.ஜே. 1/83-7, நாள் 10-3-1984இல் [பொய்த்து போன கிணறுகளுக்கான மானிய ஒதுக்கீடு குறைவாக இருப்பதாலும், கிணறுகளை |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | களுக்குரிய வட்டியைத் தள்ளுபடிச் செய்தல், பொய்த்துப் போன கிணறுகளுக்கான மானியத் திட்டத்தின் கீழ் புதிய கிணறுகள் வெட்டுவதற்காக தற்போது கிடைத்துவரும் மானியச் சலுகைகளை கிணறுகளை ஆழப் படுத்த வழங்கப்படும் கடன்களுக்கும் அளிக்கச் செய்தல். | ஆழப்படுத்த புதுக்கிணறுக்கு ஆகும் செலவு ஆகாது என்பதாலும் இதனை ஏற்க இயலாது என பதிலளிக்கப்பட்டுள்ளது. |
| 38 | வெங்காயம் உற்பத்தி செய்யும் விவசாயிகளின் பிரச்சினைகளுக் கான தீர்வுகள் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வெங்காயம் உற்பத்தியாளர்களுக்கு ஆதாய விலை கிடைக்கச் செய்தல், விற்பனை ஏற்பாடுகளைச் செய்து தருதல். | அரசு கூட்டுறவுத் துறை, 10-7-1984 நாளிட்ட கடித எண் 33768 சி.எம். 1/83-10இல் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஒவ்வொரு சங்கத்திற்கும் தரம் பிரிக்கும் கருவி வாங்க ரூ. 10,000 மானியம் வழங்கப்படுவதாயும் பதிலளிக்கப்பட்டுள்ளது. |
| 39 | கூட்டுறவு நிலவள வங்கிக் கடன் பெற்று கட்டத் தவறிய விவசாயிகளிடம் கூட்டு வட்டி முறைப்படி வட்டி வசூலிக்கும் வழக்கத்தை கைவிடுதல். | கூட்டுறவுத் துறை கடித எண். 33630/சி.ஜே. 1/83-7, நாள் 10-3-1984இல் தேசீய வங்கியும் இம்முறையைக் கையாள்வதால், நிலவள வங்கி அளவில் தற்போதுள்ள முறையை மாற்ற இயலாது என பதிலளிக்கப்பட்டுள்ளது. |
| 40 | அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மழையளக்கும் கருவியை அமைத்துப் பராமரித்தல். | ஊரக வளர்ச்சித் துறை கடித எண். 49089/பி2/83-7, நாள் 10-3-1984இல் அனைத்து வேளாண்மை விரிவாக்கப் பணிகளும் வேளாண்மைத் துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டு விட்டதால் ஊராட்சி ஒன்றியம் மூலம் மழையளக்கும் கருவி அமைக்க இயலாது என பதிலளிக்கப்பட்டது. |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 41 | விவசாயிகள் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து விவாதித்து முடிவெடுப்பதற்காக வேளாண்மை உயர்மட்டக் குழு உறுப்பினர்களை அவரவர் மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களில் கலந்து கொள்ள அனுமதி வழங்கி ஆணை பிறப்பித்தல். | அரசுக் கடித எண். 74081/பி1/83-2, நாள் 10-2-1984-ல் (ஊரக வளர்ச்சித்துறை-ல் உணவு மற்றும் விவசாயத்திற்காக ஒரு நிலையான துணைக் குழு அமைத்து உயர்மட்டக் குழு உறுப்பினர்களை அக்குழுக் கூட்டங்களுக்கு அழைக்கலாம் என்று ஆணையிடப்பட்டது. |
| 42 | பொதுப்பணித் துறையின் கீழ் உள்ள பாசன ஆதாரங்களான குளம், வாய்க்கால் முதலிய பகுதிகளில் காணப்படும் நில ஆக்கிரமிப்பை அகற்றுதல். | பொதுப்பணித் துறையின் ஆய்வில் உள்ளது. |
| 43 | வறட்சி நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல். | வருவாய்த்துறை அரசுக் கடித எண். 70198 வறட்சி/83-1, நாள் 6-9-1983இல் ரூ.68.36 கோடிக்கு மைய அரசிலிருந்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் வேலை வாய்ப்புப் பணிகளின் கீழ் ஒரு கிலோ கோதுமை, கூலியில் ஒரு பகுதியாக வழங்க மைய அரசின் அனுமதி கிடைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 44 | கசிவுநீர்க் குட்டைகளை பரவலாக எல்லா மாவட்டங்களிலும் அமைப்பதன் மூலம் விவசாயிகளுக்கான பாசன வசதிகளை அபிவிருத்தி செய்தல். | வேளாண்மைத்துறை கடித எண். 38884/வே.ம.பா. /83-17, நாள் 5-4-1984இல் இயன்ற அளவில் தேவைப்படும் இடங்களில் கசிவு நீர்க் குட்டைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று பதிலளிக்கப்பட்டுள்ளது. |
| 45 | விவசாயிகளுக்கு மின்சார விநியோக நேரத்தை அதிகரிப்பதற்காக மின் வாரியத்தில் மின்வலயத்தில் நிறுவுத் திறனை அதிகரித்தல்— | |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | (அ) பல பரிந்துரைகள் | (பொ.ப. நு. கடித எண். 1255 நாள், 19-11-1984.] |
| | | பொதுப்பணித் துறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
| | (ஆ) சிறுமின் திட்டங்களுக்கு அனுமதி வழங்க மாநில அரசுக்கு நடைமுறையில் இருந்துவரும் செலவுத் தொகையின் வரம்பை ரூ. 1 கோடியிலிருந்து ரூ. 10 கோடிக்கு உயர்த்த வழி வகை செய்ய வேண்டும். | சிறுமின் திட்டங்களுக்கு அனுமதி வழங்க மாநில அரசுக்கு நடைமுறையில் இருந்துவரும் செலவுத் தொகை வரம்பை ரூ. 1 கோடியிலிருந்து 5 கோடிக்கு உயர்த்த வழி செய்யும் வகையில் இந்திய மின் வழங்கல் சட்டப்பிரிவு 28,29ஐத் திருத்த மசோதா ஒன்று நாடாளுமன்ற மக்களவையில் 8-5-1984 இல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது (மசோதா 50-1984) இது ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டம் ஆக்கப்பட்டுள்ளது. |
| 46 | விவசாயிகளுக்கு பகல் நேர மின்விநியோக நேரத்தை அதிகரிக்கச் செய்வதற்காக, பகல் நேர மின் உச்சத் தேவையின் அளவைக் குறைத்தல். | இப்பரிந்துரையை ஏற்க இயலாது. |
| 47 | விவசாயிகளுக்குத் தங்கு தடையின்றி மின்சாரம் கிடைக்க வேண்டி, கிராமப்புற மின் ஊட்டிகளில் பழுவிலக்கத்தைத் தவிர்த்தல். | பொதுவாக கிராமப்புற மின் ஊட்டிகளில் பழுவிலக்கல் செய்வது கிடையாது. தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் இதைத் தவிர்க்க இயலாது. |
| 48 | விவசாயத் துறைக்கு அதிக மின் சக்தியினை கிடைக்கச் செய்யத் தொழில் துறையில் மேற்கொள்ள வேண்டிய மின் வெட்டு முறைகள் மற்றும் மின் வாரியத்தில் மின் சேமிப்பு ஆகியவை பற்றி யோசனை கூறுதல். | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |



| 1 | 2 | 3 |
|---|---|---|
| 49 | விவசாயத் துறைக்கு அதிக மின் சக்தி வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மின்சாரத் திருட்டை தவிர்த்தல். | வாரியத்தில் மின் திருட்டுத் தடுப்பு பிரிவு விரிவாக்கப்பட்டு திறம்பட இயங்கி வருகிறது. அரசளவில் வல்லுநர் குழு அமைக்கத் தேவையில்லை. |
| 50 | அனைத்து நுகர்வோருக்கும் அதிக மின் சக்தி கிடைக்கச் செய்ய மின் வாரியத்தில் மின் இழப்பைத் தவிர்க்க நடவடிக்கை மேற்கொள்ளுதல். | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 51 | விவசாயத்திற்கு குறிப்பிட்ட காலங்களில் தொடர்ந்து மின்சாரம் வழங்கல். | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 52 | விவசாய நுகர்வோரின் நன்மை கருதி, மின் விநியோகப் பகுதியில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள வலியுறுத்துதலின் மூலம் தாழ்வழுத்த மின் வழங்கல் முறையில் அபிவிருத்திக்கான நடவடிக்கை மேற் கொள்ளுதல். | இப்பரிந்துரையை ஏற்க இயலாது. |
| 53 | தாழ்வழுத்த மின் வழங்கல் முறையில் ''வோல்டேஜில்'' அபிவிருத்தி காண்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல். | வாரியம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. |
| 54 | விவசாய மின் நுகர்வோருக்கு மின்சார வாரிய சம்பந்தமாக இருக்கும் சிரமங்களை நீக்குவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய ஏனைய நடவடிக்கைகள். | தமிழ்நாடு மின்வாரியம் தனது எல்லா மின் திட்டங்களுக்கும் தனியாக மக்கள் குறை தீர்க்கும் அதிகாரிகளை நியமித்து தனது நடவடிக்கை எண். எப்.பி.19 (நிர்வாகப் பிரிவு), (நாள் 23-3-1984) இல் உத்திரவுகளைப் பிறப்பித்துள்ளது. |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| 55 | ஈ.ஐ.டி. பாரி நிறுவனத்தாரால் நெல்லிக்குப்பத்தில் நடத்தப்பட்டு வரும் சர்க்கரை ஆலை மூடப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல். | சர்க்கரை ஆலை மூடப்படுவதைத்தடுக்க தொழில்துறை தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. |
| 56 | விளை பொருள் விற்பனைப் பணிகளைச் செய்வதில் அபிவிருத்தி காணும் நோக்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு சில யோசனைகள் தெரிவித்தல். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. (கூட்டுறவுத் துறை, கடித எண். 12738/சி.எம். 1/87-4, நாள் 20-10-1987.) |
| 57 | விவசாயிகளுக்கான விற்பனைப் பணிகளை கிராம அளவில் வழங்குவதற்காக கிராம அளவிலான சேவை கூட்டுறவு சங்கங்களில் விவசாய விளை பொருள் விற்பனைப் பிரிவு ஒன்றினை உருவாக்குதல். | ஏற்கப்பட்டது, (கூட்டுறவுத் துறை கடித எண். 12736/சி.எம். 1/87-4, நாள் 20-10-1987.) |
| 58 | விவசாய விளை பொருட்களை ஒட்டு மொத்தக் கொள்முதல் செய்தல் தனிப்பட்ட லேவாதேவிக்காரர்களின் பிடியிலிருந்து விவசாயிகளை விடுபடச் செய்யும் நோக்கத்தோடு விவசாயிகளால் விளைபொருட்கள் கொண்டு வந்து சேர்ப்பித்தவுடனேயே பணப் பட்டுவாடா செய்ய ஏற்பாடு செய்தல். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. (கூட்டுறவுத் துறை கடித எண். 12738/சி.எம். 1/87-4, நாள் 20-10-1987.) |
| 59 | நட்டம் வரும் என்ற அச்சமில்லாமல் விவசாயிகளிடமிருந்து விளை பொருட்களை ஒட்டு மொத்தக்கொள்முதல் செய்வதில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை ஊக்குவிக்கச் செய்தல். | தற்போதுள்ள சூழ்நிலையின் ஏற்பதற்கில்லை (கூட்டுறவுத் துறை கடித எண். 1273[illegible] சி.எம். 1/87-4, நா[illegible] 20-10-1987.) |
| 60 | தனியாரிடமிருந்து மின் சார வாரியம் எடுத்துக் கொண்ட சேலம், ஈரோடு பகுதிகளில் கால தாமத உபரிக் கட்டணம் வசூலிப்பதை நிறுத்துதல். | பொதுப்பணித் துறையின் ஆய்வில் உள்ளது. |
| 61 | விவசாய மின் இணைப்புகளில் நிலம் மற்றும் பாசனக் கிணறுகளில் கூட்டுச் சொந்தக்காரர்கள் அனுபவித்து வரும் சிரமங்களைக் களைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல். | பொதுப்பணித் துறையின் ஆய்வில் உள்ளது. |
| 62 | விவசாய மின் இணைப்புகளில் அளிக்கப் பெறாத மின்கூறில் மின்விளக்குகள் பொறுத்துதல் தொடர்பான பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை எடுத்தல். | பொதுப்பணித் துறையின் ஆய்வில் உள்ளது. |
| 63 | அரசு அறிவித்த 1 ப்ளஸ் 1 என்ற சலுகை முறையில் மின் கட்டண பழைய பாக்கித்தொகைகள் முழுவதையும் கட்டி முடித்த எல்லா விவசாய மின் நுகர்வோருக்கும் 1–4–1979 க்குப் பிறகும் கால தாமத உபரிக் கட்டணமோ வட்டியோ விதிக்காதிருக்கக் கோருதல். | அரசு ஆணை எண். 433, (பொ.ப.து.), நாள்: 13–5–1989 பிரகாரம் 1–4–1979 க்குப் பிறகு உள்ள நிலுவைக்கு அபராதத் தொகை தவணை முறையில் வசூலிக்கப்படுகிறது. (பொ. ப.து.கடித எண். 130850/யூ/2/86–12, நாள்: 27–4–1987.) |

| 1 | 2 | 3 |
| --- | --- | --- |
| 64 | கோக்கோ பதப்படுத்தும் மையங்கள் ஏற்படுத்துவதன் மூலம் கோக்கோ உற்பத்தி மற்றும் நிறுவன ஏற்பாடுகளில் அபிவிருத்தி காணுதல். | கன்னியாகுமரி மாவட்ட ரப்பர் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் கோக்கோ விற்பனையை ஏற்று நடத்தலாம் என கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அரசுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார். (கூட்டுறவுத் துறை கோப்பு எண். 61031/சி.எம்.1). |
| 65 | கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நெல் கொள்முதல் செய்தல். | 19617/சி.எம். 1/84-10, நாள் 29-3-1985 கூட்டுறவுத் துறை, கூட்டுறவுச் சங்கங்கள் இந்த மாநிலத்தில் நெல் கொள்முதல் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இச்சங்கங்கள் வெளி மாநிலத்தில் நெல் கொள்முதல் செய்வதற்குத் தடையேதும் விதிக்கப்படவில்லை. மேலும் கூட்டுறவுச் சங்கங்களை லெவியிலிருந்து விலக்களிக்க வேண்டும் என மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் மத்திய அரசு இதை ஏற்றுக் கொள்ளவில்லை. |
| 66 | விவசாய உற்பத்தியாளர்கள் மீது தனிப்பட்ட லாரி சொந்தக்காரர்களின் ஆக்கிரமிப்பை ஒழிப்பதற்காகப்பொருள் போக்குவரத்துக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை நிறுவுதல். | ஏற்றுக் கொள்ளப்படவில்லை (கூட்டுறவுத் துறை கடித எண். 7137 சி.எம். 1/86-3, நாள் 20-5-1986.) |
| 67 | வறட்சியால் மடிந்த தென்னைக்குப் பதில் புதிய மரங்களை வளர்ப்பதில் விவசாயிகளுக்கு உதவுதல்-மானிய விலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குத் தென்னங்கன்றுகளை வழங்குதல். | எண்ணெய் வித்துத் துறை இயக்குநரின் கடித எண். டி3. 50489/83, நாள் 15-12-1983 ல் தென்னங்கன்றுகள் ஒவ்வொன்றும் ரூ. 1 வீதம் விநியோகிக்கப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது. |



| 1 | 2 | 3 |
| --- | --- | --- |
| 68 | சேலம் மாவட்டத்தில் சில பகுதிகளில் வறண்டு போன கிணறுகளின் அடிமட்டத்தில் குழாய்க் கிணறுகள் போட்டு நீரைக் வெளிக் கொணர்வதற்கு மின்சாரத்தைப் பயன்படுத்துவது பற்றிய பிரச்சினை. | ஏற்றுக் கொள்ளப்பட்டது, (மின்வாரிய ஆணை எண். 227/ நாள் 27-12-1985.) |
| 69 | செங்கை மாவட்டம் எடர் குன்றம், பூண்டி மற்றும் இராயமங்கலம் கிராம விவசாயிகளுக்குப் பாசன வசதி கிடைப்பதற்காக எடர்குன்றம் மடுவின் குறுக்கே அணை கட்டுதல். | நீதிமன்ற தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது. (செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கடித எண். அ8/120710/82, நாள் 19-11-1987.) |
| 70 | மின் கட்டண வீதப் பட்டியலில் விவசாயத்திற்கான பிரிவில் மாற்றம் செய்ய வேளாண்மை உயர் மட்டக் குழுவின் கருத்தை அரசு கேட்டிருத்தல்-குழுவின் யோசனைகள். | அரசாணை எண். 1181, நாள் 12-6-1984-ல் உயர்வழுத்த தாழ்வழுத்த இணைப்புகளுக்கு கட்டணம் உயர்த்தியும் விவசாய இணைப்புக்கு விலக்கு அளித்தும் ஆணையிடப்பட்டுள்ளது. பின்னர் வந்த ஆணை பொதுப் பணித் துறை, எண். 1711, நாள் 20-8-1984-ல் சிறு விவசாயிகளுக்கு மின் கட்டணம் ரத்து செய்தும், ஏனைய விவசாயிகளுக்குப் பரித்திறன் ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 75 வீதம் வசூலிக்கவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 71 | மாநில மின்சார கலந்தாலோசனைக் குழுவில் விவசாய சங்கப் பிரதிநிதிகள் அங்கம் வகிக்க அரசின் அனுமதி கோருதல். | அரசு ஆணை எண். 337, பொ.ப.து., நாள் 17-2-1986-ல் வெளியிடப்பட்டுள்ள மாநில மின்சார கலந்தாலோசனைக் குழுவில் விவசாயிகள் அடங்கிய உறுப்பினர்கள் பட்டியலில் உயர் மட்டக் குழு உறுப்பினர்களுக்கு இடமளிக்கப்படவில்லை. |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| 72 | கரும்பிற்கான குறைந்த பட்ச விலையை அதிகரிக்கச் செய்தல். | ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டது. |
| 73 | விவசாய விளைபொருட்களுக்கு உத்திரவாத விலை கிடைக்கச் செய்வதற்கான திட்டத்தைச் செயல்படுத்தல். | கூட்டுறவுத் துறையின் பரிசீலனையில் உள்ளது. |
| 74 | விளைபொருள் விற்பனையோடு கூட்டுறவுக் கடன் வசதியை இணைக்கும் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுவதற்கான யோசனைகள். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. (கூட்டுறவுத் துறை கடித எண்.43208/சி.எம். 1/89–2, நாள் 22–9–1989.) |
| 75 | வேளாண்மை சார்ந்த தேவைகளுக்கு வேளாண் கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் மூலம் கடன் வழங்குதல். | ஏற்கப்படவில்லை. (கூட்டுறவுத் துறையின் எண். 36823 சிசி. 1/85–1, 20–1–1986 நாளிட்ட கடிதம்). |
| 76 | வேளாண்மை சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு ரொக்கக் கடன் வழங்கும் முறை அறிமுகப்படுத்துதல். | தற்போதைய சூழ்நிலையில், ஏற்பதற்கில்லை. (கூட்டுறவுத்துறை கடித எண். 36923 /சிசி. 1/85–1, நாள் 20–1–1986). |
| 77 | உதகமண்டலத்திலுள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலம் உருளைக்கிழங்கு விதைப் பெருக்கத் திட்டத்தை அமுல்படுத்துதல். | சாத்தியமில்லை. (கூட்டுறவுத் துறை கடித எண். 13109/ சி.எம். 1/89–1, நாள் 2–6–1987.) |

1984

| | | |
|---|---|---|
| 78 | தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, தென்னாற்காடு மாவட்டங்களில் மழை, வெள்ளம் காரணமாக தங்கள் பயிர்களையும், சொத்துக்களையும் | அரசாணை எண். 711, வேளண்துறை, நாள் 3–4–1984, அரசாணை, எண். 34, வேளாண்துறை, நாள் 7–1–1984 ல் நிவாரணமளிக்கப்பட்டுள்ளது. |



| ) | (2) | (3) |
|---|---|---|
| | இழந்துள்ள விவசாயிகளுக்காக மேற்கொள்ளப்பட வேண்டியவை. | |
| | மதுரை, இராமநாதபுரம், சேலம் மாவட்டங்களில் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கு நிவாரணம் வழங்குதல். | வெள்ள நிவாரணத்திற்கென ஏற்கெனவே நிதி அளிக்கப்பட்டுள்ளதால், நிதி நெருக்கடி காரணமாக மேலும் உதவி அளிக்க இயலாது என வேளாண்மைத் துறை கடித எண். 41803/சிசி. 84 நாள் 31–8–1984-ல் பதிலளிக்கப்பட்டுள்ளது. |
| 0 | மின் கட்டண பாக்கித் தொகைக்கு உபரிக் கட்டணம் 1–4–1979 முதல் விதிப்பதற்குப் பதில் ஜனவரி மாதம் 1981 முதல் உள்ள பாக்கித் தொகைக்கு உபரிக் கட்டணம் விதிக்கக் கோருதல். | அரசாணை எண். 433, பொ. ப.து., நாள் 13–5–1989 பிரகாரம் 1–4–1989-க்குப் பிறகு உள்ள நிலுவைக்கு அபராதத் தொகை தவணை முறையில் வசூலிக்கப்படுகிறது. (பொ.ப.து. கடித, எண் 130850/யூ. 2/ 86-12 நாள் 27–4–1987). |
| 1 | அக்குவாமீட்டர் கருவியின் உதவியால் கிணறு வெட்டத் தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து கிணறுகள் பொய்த்துப் போவதைத் தடுத்தல். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. (கூட்டுறவுத் துறை கடித எண். 24034/சி.ஜே. 1/84-2, நாள் 23–1–1986). |
| 2 | கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வரும் கடன்களில் அதிக பட்ச வரம்பை முழுமையாகத் தேவையின் அளவிற்கு உயர்த்துதல். | மிக அத்தியாவசியமான கடன்களுக்கு உச்ச வரம்பு நபார்டினால் நிர்ணயிக்கப்படுகிறது. இதரவற்றின் உச்ச வரம்பை உயர்த்துவது பற்றி பரிசீலிக்கலாம். கூட்டுறவுத் துறை கடித எண். 24084/சி.ஜே. 1/84-2 நாள் 23–1–1986). |
| 3 | நிலவள வங்கிக் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் காலத்தைத் திருப்பிச் செலுத்தும் சக்திக்கேற்ப நீட்டித்தல். | 'டிராக்டர்' வாங்குவதற்கான கடனைத் தவிர மற்றவைகளுக்கு காலத்தை நீட்டிப்பதை இயலாதென நபார்டு தெரிவித்துள்ளது. |

[1990 மே 12

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 84 | நிலவள வங்கிகளில் கடன் பெற்று அதனைத் திருப்பிச் செலுத்தியவர்களின் ஆவணங்களைத் திரும்பத் தருவதில் நிலவும் காலதாமதத்தைத் தவிர்த்தல். | கடன் பத்திரங்களைத் திரும்பப் பெறுவதில் உள்ள தாமதத்தைத் தவிர்க்க நெறிமுறைகளை தமிழ்நாடு மாநில நிலவள வங்கி வகுத்துள்ளது. (கூட்டுறவுத் துறை கடித எண். 24034/சி. ஜே. 1/84-2, நாள்: 23–1–1986.) |
| 85 | தேங்காய் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைத்தல். | வேளாண்மைத் துறை அலுவலர் சார்பற்ற குறிப்பு எண். 60894/எவி/84–5, நாள்: 19–4–1985-ல் கிடைக்கப் பெற்ற பதில். அரசு ஆணை 339, கூட்டுறவுத் துறை, நாள்: 22–7–1984-ல் தேங்காய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் இருந்து எண்ணெய் வித்துத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டுள்ளது. இது குறித்து நிலுவையிலுள்ள சங்கங்கள் ஆரம்பிக்க பிரரேணைகளை எண்ணெய் வித்து இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரிடம் கேட்டுள்ளார். மேலும் புள்ளிவிவரம் சேகரிக்கும் நடவடிக்கைகள் எண்ணெய் வித்துத் துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 86 | விவசாயிகள் வெடி மருந்து வைத்திருத்தல் மற்றும் கிணறுகள் தோண்டுதல், ஆழப்படுத்துதல் ஆகிய பணிகளுக்காக வெடி மருந்துகளைக் கொண்டு பாறைகளைத் தகர்த்தல் சம்பந்தப்பட்ட சட்ட விதிகளை மாற்றுதல். | உள்துறை கடித எண். 124955/Pol. XIV/86–12, நாள் 2–11–1987 இல் பரிசீலிக்கப்பட்டுள்ளது. |



990 மே 12]

| 1) | (2) | (3) |
|---|---|---|
| 7. | விளை நிலங்களிலிருந்து கிடைக்கும் வருவாயையே முழுமையாக நம்பியிருக்கும் சிறு விவசாயிகளைத் தவிர மற்ற விவசாயிகளுக்கு அவர்களது மின்சார மோட்டார்களின் குதிரை சக்தியின் அடிப்படையில் (1 குதிரை சக்திக்கு 1 ஆண்டுக்கு ரூ. 75 வீதம்) மின் கட்டணம் விதித்தல். | பொதுப்பணித் துறை அரசாணை எண் 1711, நாள்: 20–8–1984-ல் சிறு விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கவும் ஏனைய விவசாயிகளுக்கு ஒரு ஆண்டுக்கு ஒரு குதிரை சக்திக்கு ரூ. 75 வீதம் மின் கட்டணம் வசூலிக்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. |
| 8 | (அ) நெற்பயிரைத் தாக்கும் துங்குரோ நோயைக் கட்டுப்படுத்த தற்போது வழங்கும் பூச்சிமருந்து மானியமான 50 சதவீதத்தை 75 சதவீதமாக அதிகரிக்க வேண்டும். | பரிந்துரையை ஏற்க இயலாது. |
| | (ஆ) காலம் தாழ்த்தி பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பதால் ஏற்படும் நட்டத்தைத் தவிர்க்கும் பொருட்டும், பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளும் பொருட்டு விசைத் தெளிப்பான்களையும், தூவுவான்களையும், கைத் தெளிப்பான்களையும், எல்லா விவசாயிகளுக்கும், 50 சதம் மானிய விலையில் வழங்கப்பட வேண்டும். | பரிந்துரையை ஏற்க இயலாது வேளாண் துறை கடித எண். 9183/85–3, ஏ.பி.2, நாள்: 27–4–1985. |
| 89 | தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு கடும் வறட்சியாலும் வெள்ளத்தாலும் ஏற்பட்ட நட்டத்தை அரசு முழு | ரூ. 35 உதவித் தொகை பொருள் பகுதியாக (இரசாயன உரமாக) வழங்கப்படும் முறை தொடர்ந்து அமுலில் உள்ளது. |

| (1) | (2) | (3) |
| --- | --- | --- |
| | அளவில் ஈடு செய்யா விட்டாலும் ஓரளவாவது உதவி செய்யும் பொருட்டு சென்ற ஆண்டு உதவித் தொகை கொடுத்ததைப் போல் இந்த ஆண்டும் தஞ்சை மாவட்டத்தில் சம்பா நெல் அரசு கொள்முதல் செய்வதற்கு ஒரு குவிண்டாலுக்கு அரசு நிர்ணயித்த விலையைவிட ரூ. 35 அதிகமாக உதவித் தொகையாக தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். | |

90 கூட்டுறவுக் கடன் சலுகை :

| (1) | (2) | (3) |
| --- | --- | --- |
| | (அ) இயற்கை பாதிப்புக்குள்ளானவர்களின் மத்திய கால மாற்றுக் கடன் மற்றும் தவணை நீட்டிக்கப்பட்ட மாற்றுக் கடன்கள். | சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. (கூட்டுறவுத் துறை அரசாணை எண் 660, நாள்: 29–6–1986). |
| | (ஆ) குறுகிய காலப் பயிர்க் கடன்கள் (இயற்கை பாதிப்பிற்கு உள்ளாகாதவை). | |
| | (இ) நீண்டகாலக் கடன்கள் ஆகியவற்றிற்கு சலுகைகள் வழங்குதல். | |
| 91 | பெரும் பல நோக்கு கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களின் நிலுவையிலுள்ள கடன்களை வசூலிப்பதில் சில சலுகைகள் அளித்தல். | ஏற்கப்படவில்லை. (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கடித எண். 44783/ப.வே./89-5, நாள்: 29–11–1989). |



| (1) | (2) | (3) |
| --- | --- | --- |
| 92 | 31–3–1980-இல் நிலுவையிலுள்ள சிறு விவசாயிகளின் மத்திய கால மாற்றுக் கடன்கள் மற்றும் மத்திய கால தவணை நீடிக்கப்பட்ட மாற்றும் கடன் ஆகியவற்றை தள்ளுபடி செய்தல் மற்றும் ஏற்கெனவே 1-7-1975 முதல் 31–3–1980 வரை திரும்பச் செலுத்திய தொகைகளைத் திரும்பத் தருதல். | பரிந்துரை மீது நடவடிக்கை எடுக்க இயலாது. (கூட்டுறவுத் துறை கடித எண். 7146/சி.ச. 1/87-9, நாள : 9–3–1988). |
| 93 | தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி பகுதியில் பழங்கள் பதனிடல் மற்றும் விற்பனைக் கூட்டுறவு சங்கம் நிறுவப்படுதல். | ஏற்கப்படவில்லை. (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கடித எண். 44783/ப.வே./89-5, நாள்: 29–11–1989). |
| 94 | தருமபுரி மாவட்டத்தில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலம் புளித்தூள் தயாரிக்கும் அலகு ஒன்று நிறுவுதல். | பரிசீலிக்கப்படும் என கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் தெரிவித்துள்ளதாக அரசு கூட்டுறவுத் துறை கடித எண். 3980/சிப்பி.2./86-15, நாள் : 6–4–1987-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 95 | குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில் துவங்குவோருக்கு பெரும் பல நோக்குக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன் வசதி அளித்தல். | பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கடித எண். 44783/ப.வே./89-5, நாள் : 29–11–1989.) |
| 96 | நிலவரி நிலுவையைத் தவணைகளில் வசூலித்தல், நிலவரி நிலுவையைச் செலுத்தினால் தான் பிள்ளைகளை பள்ளியில் சேர்ப்பதற்கான சான்றிதழ் பெற முடியும் என்ற நிர்ப்பந் | ஏற்றுக்கொள்ளப்பட்டது. (வருவாய்த் துறை கடித எண். 4655/டபிள்யூ. சி 2./85-12, நாள் : 3–7–1987.) |

| (1) | (2) | (3) |
| --- | --- | --- |
| | தத்தை நீக்குதல், டிமாண்டு நோட்டீஸில் தொகை விவரம் தெளிவாக குறிப்பிடல். | |
| | **1985** | |
| 97 | மண்ணச்சநல்லூரில் புதிய விதை சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், சான்று பெற்ற விதை நெல்லுக்கு ஊக்கத் தொகையை உயர்த்துதல், இனுங்கூர் அரசு விதை சுத்திகரிப்புநிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படும் விதைகளுக்கு போக்குவரத்து செலவுக்காக ஊக்கத் தொகை வழங்கல். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. (வேளாண்துறை கடித எண். 352405/வே.உ.3/85-7, நாள் 22–8–1986 மற்றும் 35224 / வே. உ. 5/85-12, நாள் 24–3–1987 மற்றும் அரசாணை எண். 197, நாள்: 24–3–1987.) |
| 98 | மலைவாழ் மக்களுக்கான பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கெடு தவறிய காலத்திற்கு வட்டித் தள்ளுபடி சலுகை அளித்தல். | அரசு சமூக நலத்துறை ஆய்வில் உள்ளது. |
| 99 | தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டப் பிரிவு 20 இன் கீழ் வழங்கப்படும் விலக்கு அனைத்து கூட்டுறவு நிறுவனங்களுக்கும் கிடைக்க சட்டத் திருத்தம் கொண்டு வரல். | வேறு வழி வகைகள் இருப்பதால் சட்டத் திருத்தம் அவசியமில்லை. (வருவாய்த் துறை கடித எண். 63245/ஆர்.1/87-5, நாள் 23–3–1988). |
| 100 | கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஏனைய விவசாயிகள் நல சங்கங்களுக்கு விலக்கு அளிப்பதற்காக தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயம்) சட்டம் 1961 பிரிவு 73-இல் தக்க திருத்தம் கொண்டுவர பரிந்துரைத்தல். | ஏற்கப்படவில்லை. [வருவாய்த்துறை கடித எண் 47318/நி.சி. 1(1)/85-21, நாள் 21–4–1988.] |



| (1) | (2) | (3) |
| --- | --- | --- |
| 101 | குத்தகை சாகுபடியாளர்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்காக 1984 ஆம் ஆண்டில் தமிழ்நாடு (சிறப்பு சட்டத்தில்) சில திருத்தங்களைக் கோரல். | தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வருவாய்த்துறை கடித எண் 22558/நி.சீ.3 (1)/85-9, நாள் : 12–6–1987-இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 102 | பெரியாறு-வைகைப்பாசன பண்ணை மேம்பாட்டுத் திட்டப்பணிகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூ. 1,500 வீதம் செலவலகு நிர்ணயிக்கப்பட்டு எல்லா இடங்களிலும் சிறப்புத் தரத்தில் பாசனப் பணிகள் செய்தல். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. (பொதுப்பணித் துறை அரசாணை எண். 411, நாள் 26–2–1986 மற்றும் பொதுப்பணித்துறை கடிதம் எண் 75311/எம். 1/85-3, நாள் 17—3—1986). |
| 103 | பரம்பிக்குளம்—ஆழியாறு பாசனப் பகுதிகளில் விதிக்கப்படும் தண்ணீர் அபராதத் தீர்வை மற்றும் தண்டத்தீர்வையை தள்ளுபடி செய்தல். | ஏற்பதற்கில்லை. (வருவாய்த் துறை கடித எண் 47763/செ. 2/85-2, நாள் 14–1–1988.) |
| 104 | தமிழ்நாட்டில் நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்பாட்டில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்வது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. (வணிகவரித் துறை கடித எண் 49564/எக்ஸ். 2/85-3, நாள் 2–7–1986.) |
| 105 | புன்செய் பயிரிடும் விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் பயிர்க்கடன்கள் வழங்குதல். | ஏற்பதற்கில்லை. (கூட்டுறவுத் துறை கடித எண் 53182/சி.ஜி.2/88-9, நாள் 30–9–1989.) |
| 106 | கிராமப்புற கைவினைஞர்களுக்கு ‘சி’ பிரிவு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன்கள் வழங்குவதில் இலகுவான முறையைக் கையாளக்கோருதல். | பரிந்துரை மீது மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை. (கூட்டுறவுத் துறை கடித எண் 25943/சி.சி.1/86-8, நாள் 15–5–1987.) |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 107 (அ) | கூட்டுறவுத் துறை அரசாணை எண். 541, நாள் 17–10–1980-இல் அறிவிக்கப்பட்ட கடன் சலுகைகள் கிராமக் காரியங்களால் அளிக்கப்பட்ட தவறான நிலவரங்கள் காரணமாக பல சிறு விவசாயினருக்கு மறுக்கப்படுதல். | ஏற்கப்படவில்லை. |
| (ஆ) | கிராமங்களில் பராமரிக்கப்பட்டு வரும் ஆவணங்களை கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் சரி பார்ப்பதற்காக வழி வகை செய்தல். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. (கூட்டுறவுத் துறை கடித எண். 425/சி.சி.1/87-16, நாள் 9–1–1989.) |
| 108 (அ) | காப்பி சாகுபடியாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன்கள் வழங்குதல். | சாத்தியமில்லை. |
| (ஆ) | கூட்டுறவுத் துறையின் கீழ் காப்பி பதணிடும் தொழிற்சாலை நிறுவுதல். | சாத்தியமில்லை. |
| (இ) | காப்பி சாகுபடியின் கீழ் அதிக பரப்பைக் கொண்டு வருதல். | நாபார்டினால் அனுமதிக்கப்பட்ட 3,300 ஏக்கரில் காப்பி பயிரிட திட்டம் செயல்படுத்தப்படுகிறது. (கூட்டுறவுத் துறை கடித எண் 34983/சி.ப்பி.1/86-31, நாள் 25–9–1989). |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 109 | மஞ்சள் சாகுபடிக்கென வழங்கப்படும் பயிர்க் கடனில் விதைப் பகுதிக்கான கடன் தொகையை ரொக்கமாக வழங்கல். | 1987–88 ஆம் வருடத்திற்கு மட்டும் செயல்படுத்த ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. (கூட்டுறவுத் துறை கடித எண் 39162/சி.சி. 2/86-14 நாள் 3–2–1988). |
| 110 | சேலம் மாவட்டம் பச்சை மலையிலுள்ள மலைவாழ் மக்களுக்காக பெரும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் அமைத்தல். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. (சமூக நலத்துறை அரசாணை எண் 975, நாள் 31–3–1986). |

1986.

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 111 | தமிழ்நாடு வேளாண்மை உயர்மட்டக் குழுவானது மாநில வேளாண்மை விளை பொருள் நிர்ணயக் குழுவாகவும் செயல்பட அங்கீகாரம் வழங்குதல். | ஏற்பதற்கில்லை. (வேளாண் துறை, கடிதம் எண் 61459/வே.உ. 1/88-1, நாள் 9–8–1988). |
| 112 | 1985 ஆம் ஆண்டு நவம்பரில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கல். | சில மாறுதல்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (வேளாண் துறை கடித எண் 35249/எஸ்.எஸ்./86-11, நாள் 5–5–1987.) |
| 113 | பாக்கு கொள்முதலில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை ஈடுபடுத்த கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் நடவடிக்கை எடுப்பதற்கும், மத்திய விற்பனை வரியிலிருந்து காம்ப்கோ நிறுவனத்திற்கு விலக்கு அளிக்கவும் பரிந்துரை செய்தல். | கூட்டுறவுத் துறையின் ஆய்வில் உள்ளது. |

| (1) | (2) | (3) |
| --- | --- | --- |
| 114 | சுவின் பருத்தி உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்யவும், தனிப்பட்ட வர்த்தகர்களின் ஆதிக்கத்தைத் தடுக்கவும், அரசு நிறுவனங்கள் தங்கள் தேவைப் பட்டியலை 'பில்பெட்' நிறுவனத்திற்கே வழங்கும்படி கோரலாம். கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் பருத்தியை 'டான்பெட்' கொள்முதல் செய்யலாம். குறைந்த பட்சம் 10,000 பேல்கள் நீண்ட மற்றும் மிக நீண்ட இழை கொண்ட பருத்தியை ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசை அனுமதிக்கக் கோரலாம். | கூட்டுறவுத் துறையின் ஆய்வில் உள்ளது. |
| 115 | அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளும் தங்களுடைய மொத்தத் தேவையில் குறைந்த பட்சம் 50-75 சதவீதம் வரை தமிழ்நாடு கூட்டுறவு இணையத்திடமிருந்து வாங்க வேண்டும். தமிழ்நாடு கூட்டுறவு இணையத் தேவைக்கேற்ப கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் பருத்தி கொள்முதல் செய்தல் வேண்டும். இவற்றை வலியுறுத்தி திட்டவட்டமான ஒரு அரசாணை பிறப்பிக்கக் கோருதல். | கூட்டுறவுத் துறையின் ஆய்வில் உள்ளது. |



| (1) | (2) | (3) |
| --- | --- | --- |
| 116 | கூட்டுறவு கடன் சுமையிலிருந்து விவசாயத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் கிடைக்க நிலுவையிலுள்ள அசல், வட்டி, அபராத வட்டி உள்ளிட்ட கடன் தொகை முழுவதும் தள்ளுபடி செய்யவும் இதனை கூட்டுறவு சங்கங்கள் வராக் கடன்களைச் சரிக்கட்டுவதற்கான ஒதுக்கீட்டுத் தொகையைக் கொண்டும், அரசு மானியத்தாலும், சரி செய்வதற்கு அரசுக்கு பரிந்துரைத்தல். | கூட்டுறவுத் துறையின் ஆய்வில் உள்ளது. |
| 117 | நீலகிரி மாவட்டம், கூடலூர்ப் பகுதியைச் சார்ந்தவர்கள் விளைவிக்கும் காய்கறிகளுக்கு நியாயமான விலை கிடைக்க சில நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி நீலகிரி காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு தக்க அறிவுரை வழங்க கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரைக் கேட்டுக் கொள்ளல். | கூட்டுறவுத் துறையின் ஆய்வில் உள்ளது. |
| 118 | தமிழ்நாட்டில் வேளாண் விளை பொருட்களான நெல், நிலக்கடலை, பருத்தி, கரும்பு ஆகியவற்றிற்கு தகுந்த விலைகளை நிர்ணயம் செய்யக் கோருதல். | ஆதரவு விலை நிர்ணயம் செய்யும்படி மத்திய அரசுக்கு தமிழக அரசு பரிந்துரை செய்துள்ளது. குழுவின் பரிந்துரை பற்றி மறு பரிசீலனை செய்யத் தேவையில்லை. (வேளாண் துறை கடித எண். 37145/வே.உ.1/86, நான் : 7-3-1988.) |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 119 | உயர்மட்டக் குழுவின் செயல்பாட்டில்கொண்டு வரப்பட்ட இனங்களுடன் நீர்ப்பாசனத்தையும் சேர்த்தல். | (குழு 8-3-1989 முதல் கலைக்கப்பட்டு விட்டது. வேளாண்துறை ஆணை எண். 160, நாள் : 8-3-89.) |
| 120 | வேளாண்மைப் பொறியியல் துறையிலுள்ள பழைய புல்டோசர்கள், இயந்திரக் கலப்பைகள், துளையிடும் கருவிகள் ஆகியவற்றிற்குப் பதிலாக உலக வங்கி நிதி உதவியுடன் புதியன வாங்கல். | உலக வங்கியிடமிருந்தோ அல்லது ஜப்பான் அரசிடமிருந்தோ நிதி உதவி கிடைக்கவில்லை. (வேளாண் துறை கடித எண். 61491/ ஏ.ஈ. 4/88-1, நாள் : 9-8-1988). |
| 121 | இரப்பர் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் கூட்டுறவு கடனை ரூ. 850-லிருந்து ரூ. 2,500 ஆக உயர்த்துதல். | ரூ. 1,250/- வரை உயர்த்துவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. (கூட்டுறவுத்துறை கடித எண். 19873/சிசி. 1/ 86-2, நாள் : 26-6-1987.) |
| 122 | பயிர்க்கடன் அளவை நிர்ணயிக்கும் மாவட்ட அளவிலுள்ள தொழில் நுட்பக் குழுவிலும் மாநில அளவிலான குழுவிலும் வேளாண்மை உயர்மட்டக் குழு உறுப்பினர் ஒருவரைச் சேர்த்தல். | மாநில அளவிலான குழுவில் இடம் பெற ஆணையிடப்பட்டுள்ளது. (கூட்டுறவுத் துறை கடித எண் 19873/ சிசி.1/86-12, நாள் : 4-3-1988). |
| 123 | தேயிலை சாகுபடியின் கீழ் உள்ள நிலப்பரப்பை விஸ்தரித்தல். | தொழில் துறை ஆய்வில் உள்ளது. |
| 124 | பச்சை தேயிலைக்கு குறைந்த பட்ச உத்திரவாத விலை நிர்ணயித்தல். | தொழில் துறை ஆய்வில் உள்ளது. |





| (1) | (2) | (3) |
|---|---|---|
| 125 | நீலகிரி மாவட்டம் கூனூரில் உள்ள "இன்கோசெல்ஸ்" நிறுவனத்தில் அனைத்து வசதிகளும் அமையப்பெற்ற தொழில் கூடம் ஒன்றை ஏற்படுத்துதல். | தொழில் துறை ஆய்வில் உள்ளது. |
| 126 | பதப்படுத்தப்பட்ட தேயிலைக்கான விற்பனை ஏற்பாடுகள். | தொழில் துறை ஆய்வில் உள்ளது. |
| 127 | சிறு தேயிலை உற்பத்தியாளர்களுக்காக புதிய தேயிலை தொழிற்சாலைகளை உருவாக்குதல். | தொழில்துறை ஆய்வில் உள்ளது. |
| 128 | தேயிலை உற்பத்தியாளர் ஒருவருக்கும் 'இன்டகோ' தேயிலைத் தொழிற்சாலை ஒன்றுக்கும், தேயிலை வாரியத்தில் உறுப்பினர் குழுவில் பிரதிநிதித்துவம் அளித்தல். | தொழில் துறை ஆய்வில் உள்ளது. |
| 129 | தேயிலையின் தரத்தை அதிகப்படுத்துதல். | தொழில் துறை ஆய்வில் உள்ளது. |
| 130 | தேயிலைக்கான ஆயத்தீர்வை மற்றும் கூடுதல் விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல். | தொழில் துறை ஆய்வில் உள்ளது |
| 131 | தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு மின்சார வெட்டிலிருந்து விலக்களித்தல். | தொழில் துறை ஆய்வில் உள்ளது. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 132 | தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற் சாலைகளுக்கு நியாய மான விலையில் மரங் கள் கிடைக்க அவற் றுக்கு தனியான கூப்பு களை ஒதுக்கித்தரல். | தொழில் துறை ஆய்வில் உள் ளது. |
| 133 | 'இண்ட்கோ' தேயிலைத் தொழிற்சாலைகளை இலாபகரமாக இயங்கச் செய்ய யோசனை கூறு வதற்கு வல்லுநர்கள் அடங்கிய சிறு குழு ஒன்று மாநில அரசு அமைத்தல். | தொழில் துறையின் ஆய்வில் உள்ளது. |
| 134 | சேலம் மாவட்டத்தில் வறட்சியால் நீரற்ற கிணறுகளின் வெளிப் புறத்தில் ஆழ் துளை குழாய்க் கிணறு அமைத்து நீரை வெளிக் கொணர்வதற்கு மின் சாரத்தைப் பயன்படுத் துதல். | மின் வாரியம் அனுமதித்துள் ளது. (பொதுப்பணித் துறை கடித எண். 135894/யூ.2/ 85-7, நாள்: 11—8—1986). |
| 135 | சுமார் 125 கோடி ரூபாய் அளவிற்கு விவசாய கூட்டுறவுக் கடன் வட் டித் தொகையைத் தள்ளுபடி செய்து அறி விக்கப்பட்ட கடன் நிவாரண சலுகைகளுக் காக மாநில அரசுக்கு நன்றி தெரிவித்தல். | (நடவடிக்கை ஏதுமில்லை). |
| 136 | செங்கற்பட்டு மாவட்டம், மறைமலைநகர் வளர்ச் சித் திட்டத்திற்கான நில ஆர்ஜிதத்தால் பாதிக்கப்படும் விவ சாயிகளுக்கு சலுகை கள். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. (வீட்டு வசதித் துறை கடித எண். 44424/ந.வ.3(1)/ 86-1, நாள்: 21—10—1986). |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 137 | திருப்பூர் கூட்டுறவு விற் பனைச் சங்கம் பருத் தியை பகிரங்க ஏலம்/ டெண்டர் மூலம் விற்ப னை செய்வதற்கு தடையாக உள்ள அரசு ஆணை எண். 2170, வளர்ச்சித் துறை, நாள் 4-6-1946-ல் தகுந்த திருத்தம் செய்தல். | தற்போது தடை ஏதுமில்லை. (வேளாண் துறை கடித எண். 7850/AM II/86-8, நாள் 11-8-1987). |
| 138 | மதுரை மாவட்டம், பழனி வட்டத்தில் நங்காஞ்சி ஆற்றில் அணை கட்டு தல் சம்பந்தமாக. | திட்டம் அரசின் தீவிர பரிசீ லனையிலுள்ளது. (பொ. ப.து. கடிதம் எண்.99446/ பி1/86-1, நாள்: 12-9-1986) |
| 139 | விவசாய மின் கட்டண நிலுவைத் தொகைக்கு காலதாமத உபரிக் கட்டணம் 1-4-1979 முதல் விதிப்பதற்குப் பதில் 1-1-1981 முதல் பாக்கித் தொகைக்கு விதிக்கக் கோருதல். | அரசு ஆணை எண். 433, பொதுப் பணித்துறை, நாள்: 13-5-1989 பிரகாரம் 1-4-1979-க்குப் பிறகு உள்ள நிலுவைக்கு அபராதத் தொகை தவணை முறையில் வசூலிக்கப் படுகிறது (பொ. ப. து. கடித எண்: 13085(/யூ2-88-8, நாள்: 26-11-1986). |
| 140 | கருக்காய் கொள்முதல் மற்றும் விற்பனையை பெரும் பலநோக்கு கூட் டுறவு சங்கங்கள் மூலம் ''டான்பெட்'' நிறுவ னம் மேற்கொள்ளல். | கூட்டுறவுத்துறை (கடித எண். 32456/சி. எம். 1/86-7, நாள்: 9-6-1987) தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணை யம் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. |
| 141 | கொடைக்கானல் பகுதி யில் விளையும் காய்கறி கள் மற்றும் கனிவகை களை கொடைக்கானல் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூலம் விற்பனை செய்வதற்கான ஏற் பாடுகள். | கூட்டுறவுத் துறை(கடித எண். 32456/சி.எம். 1/86-20 நாள்: 23-12-1988) தக்க நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 142 | கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் புகையிலை விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகள். | விற்பனைக்கான சூழ்நிலை தற்போது அனுகூலமாக இல்லை. (கூட்டுறவுத் துறை கடித எண் 32456/சி. எம். 1/86-20, நாள் : 23-10-1988). |

1987

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 143 | சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தேவியாகுறிச்சியிலுள்ள நிலத்தை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைப்பதற்காக சிறைச்சாலை துறையிடமிருந்து சேலம் விற்பனைக் குழுவிற்கு மாற்றித் தருதல். | ''மாற்றித் தர இயலாது.'' (வேளாண். துறை அ.சா.கு எண் 42938/வே.வி. 2/86-18, நாள்: 6-11-1987). |
| 144 | சேலம் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் மஞ்சினி கிராமத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று அமைத்தல். | அனுமதிக்கப்பட்டுள்ளது. (அரசாணை எண். 278, வேளாண் துறை, நாள்: 5-3-1987 மற்றும் வேளாண்மை துறை கடித எண். 18310/எ.எச். 3/87-1, நாள் : 23-3-1987). |
| 145 | மாநிலத்தில் காய்கறி சந்தைகள் உள்ள பகுதிகளில் இயங்கி வரும் காய்கறி உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை வலுப்படுத்தல். | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (கூட்டுறவுத் துறை கடித எண். 3247/சி.எம். 1/87-12, நாள்: 27-5-1988). |
| 146 | பாலாறு படுகை விதிகளை தாராளப்படுத்துதல். | பொதுப் பணித்துறையின் ஆய்வில் உள்ளது. |
| 147 | வேலூர் வட்டம், மேலரசம்பட்டு கிராமத்திற்கு அருகிலுள்ள கோயில் மலையாறு ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல். | |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 148 | வட ஆற்காடு மாவட்டம், போளூர் வட்டம், செண்பகத் தோப்பு கிராமத்திற்கு அருகே கமண்டல ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல். | பொதுப் பணித் துறையின் ஆய்வில் உள்ளது. |
| 149 | சேலம் மாவட்டம், ஆணைமடுவு நீர்த்தேக்கத் திட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ள இரண்டாவது போக சாகுபடிக்கான பாசன வசதிக்குப் பதிலாக முற்றிலும் பாசன வசதி கிடைக்காத வேறு சில ஏரிகளுக்கு தண்ணீர் கிடைக்கச் செய்தல். | ஷை |
| 150 | சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், சொக்கலூர் அக்ரகாரம் கிராமத்திற்கு அருகே பொன்னியாற்றின் குறுக்கே ஏரி அமைத்தல். | ஷை |
| 151 | பல்வேறு மாவட்டங்களில் உள்ள பாசனக் கால்வாய்களில் மராமத்துப் பணி மேற்கொள்ளல், தூர் அகற்றல், பாசன ஆதாரங்களை தக்க முறையில் பராமரித்தல்— நில ஆக்கிரமிப்பை அகற்றுதல். | ஷை |
| 152 | பொய்த்துப் போன கிணறுகளுக்கான நிதியை அதிகப்படுத்துதலும், பொய்த்துப் போன கிணறுகளுக்கான மானியம் பெறுவோருக்கு வட்டி தள்ளுபடி சலுகை அளித்தலும் | ஏற்றுக் கொள்ளப்பட்டது. (கூட்டுறவுத் துறை அரசாணை எண். 175, நாள்: 26-3-1987 மற்றும் கடித எண். 8800/சி.ஜே. 1/87-2, நாள்: 29-5-1987.) |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 153 | சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ராம நாய்க்கன் பாளையம் கிராமத்தில் நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கம் மூலம் உண்மையிலேயே பயிர் செய்யும் விவசாயிகளுக்கு நிலங்களை மாற்றி அவர்களுக்குப் பட்டா வழங்குதல். | நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. (கூட்டுறவுத் துறையின் அ.மு.சா. குறிப்புக் கடித எண். 29935/ சி.எச்.2/87-1, நாள் : 21-9-1987.) |
| 154 | சேலம் மாவட்டத்தில் தக்காளி கொள்முதல், பதப்படுத்துதல், விற்பனை ஆகியவற்றிற்காக தக்காளி உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஒன்றை நிறுவுதல். | கூட்டுறவுத் துறையின் ஆய்வில் உள்ளது. |
| 155 | கோவை மாவட்டம் திருப்பூர் மற்றும் பல்லடம் வட்டங்களிலுள்ள சார்ந்த தொழிற்சாலைகளின் செயலாக்கம் காரணமாக நிலத்தடி நீரின் தன்மையில் மாசு ஏற்படுதலைத் தடுத்தல். | தொழில் துறையின் ஆய்வில் உள்ளது. |
| 156 | தமிழ்நாட்டிலுள்ள வறட்சி நிலையைச் சமாளிப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள். | வேளாண்மை மற்றும் வருவாய்த் துறைகளின் ஆய்விலுள்ளது. |
| 157 | விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் மின்வாரியம் அனுமதிக்கும் 90 நாட்கள் தாக்கீதிற்கான காலக்கெடுவை நீட்டித்தல். | காலக்கெடுவில் மாற்றம் எதுவும் தேவையில்லை. (பொதுப்பணித் துறை கடித எண். 131829/யூ2/87, நாள் 15-12-1987.) |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 158 | பரம்பிக்குளம் ஆழியாறு விஸ்தரிக்கப்பட்ட பகுதிக்கு பாசன வசதி அளித்தல். | நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. (பொதுப் பணித் துறை கடித எண். 103521/க்யூ.1/87-5, நாள் 3-9-1987.) |
| 159 | (அ) ஆற்றோரங்களிலிருந்து மணல் எடுத்தலை முறைப்படுத்தல் / கட்டுப்படுத்துதல். | பொதுப்பணித் துறை ஆய்விலுள்ளது. |
| | (ஆ) குடிநீர் பிரச்சனையைச் சமாளிக்கப் பாசன நீர்த்தேக்கங்களின் நீரைக் கொண்டு ஆங்காங்கே குட்டைகளை நிரப்புதல். | டி |
| | (இ) பாசன காரியங்களுக்காக பம்பு செட்டுகளைக் கொண்டு தண்ணீர் எடுப்பதை முறைப்படுத்துதல். | டி |
| 160 | கீழ் பவானி பாசன விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் கரூர் பகுதியில் உள்ள பாசன நிலங்களையும் சேர்த்தல். | [illegible] |
| 161 | ஏரிகள், குளங்கள் கால்வாய்களில் தூர் எடுத்து ஆழப்படுத்துதல் மற்றும் பாசன வசதிகளை மேம்படுத்துதல் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல். | நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (பொதுப்பணித் துறை கடித எண் 116089/எஸ்.1/87-2, நாள் 10-9-1987.) |
| 162 | புள்ளம்பாடி ஆயக் கூட்டுதாரர்கள் பாசன வசதி பெறும் வகையில் புள்ளம்பாடியில் நீர் விடுவதற்கு மேட்டூர் அணை | பொதுப்பணித் துறையின் ஆய்வில் உள்ளது. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | யின் நீர் மட்டமானது தற்போதுள்ள 94 அடியில் இருந்து 50 அடியாக குறைக்கவும், புள்ளம்பாடி வாய்க்கால் முழுவதும் மராமத்துப் பணிகள் நடைபெறவும் புள்ளம்பாடி முதன்மை வாய்க்கால் வாத்தலை பகுதி மதகுகள் பழுது பார்க்கப்படவும் பரிந்துரைத்தல். | |
| 163 | பவானிசாகர் அணை நீரையும், அதற்குமேல் உள்ள குந்தா நீர் மின் அணைகளில் தேக்கி வைக்கப்பட்டுள்ள நீரையும் ஒட்டுமொத்தமாக கணக்கிட்டு கீழ்பவானி வட்டத்தில் தெற்கு நோக்கி வரும் சித்தூர் என்ற பெரும் பள்ளத்திற்குக் குறுக்கே அணை ஒன்று கட்டவும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ள கீழ் பவானி பாசனப் பகுதிக்குச் சரியான முறையில் தண்ணீர் கிடைக்க ஒரு ஆண்டில் முதல் சுற்றுக்கு முதலில் தண்ணீர் திறந்து விட்டால் அடுத்த முறை இரண்டாம் சுற்றுக்கு முதலில் தண்ணீர் விடவும் பரிந்துரைத்தல். | பவானிசாகரிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் அளிக்கும் போது குந்தா நீர் மின் அணைகளில் உள்ள நீரும் கணக்கில் எடுத்துக்கொள்ளப் படுகிறது. அணை கட்டும் திட்டம் கைவிடப்பட்டது. தண்ணீர் திறந்து விடுவதில் புதியதாக விதி முறைகளில் மாற்றமேதும் தேவையில்லை. (பொ.ப. து. குறிப்புக்கடித எண். 63388/1. தனி. 1/88–5, நாள் 19–12–1988.) |
| 164 | வடாற்காடு மாவட்டம், குடியாத்தம் ஊராட்சி ஒன்றியம், சேம்பள்ளி கிராமத்தில் கவுண்டய்ய மகாநதி குறுக்கே தடுப்பணை ஏற்படுத்த பரிந்துரைத்தல் | பொதுப்பணித் துறையின் ஆய்வில் உள்ளது. |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 165 | வடாற்காடு மாவட்டம், குடியாத்தம் ஊராட்சி ஒன்றியம், அக்ரஹாரம் ஊராட்சி. ரங்கசமுத்திரம் கிராமத்தில் சுற்றுப்புற மலைகளிலிருந்து வரும் நீரைத் தேக்க ஏரி அமைக்க பரிந்துரைத்தல். | பொதுப்பணித்துறையின் ஆய்வில் உள்ளது. |
| 166 | வடாற்காடு மாவட்டம், மாதனூர் ஒன்றியம், ஆனை மடுவு கானாற்றில் தற்போதுள்ள கசிவு நீர் குட்டைக்கு மேலே இரண்டாவது கசிவு நீர் குட்டை அமைக்க பரிந்துரைத்தல். | ஷ்டி |
| 167 | 1–4–1979-க்குப் பின்னர் விவசாய மின் கட்டணம் 1 ப்ளஸ் 1 முறைப்படி மின் கட்டணம் செலுத்துவோர் மீது கால தாமத உபரி கட்டணம் விதிப்பதைத் தவிர்த்தல். | அரசு ஆணைஎண்433, பொதுப் பணித்துறை, நாள் 13-3-1979) பிரகாரம் அநேக விவசாயிகள் ஏற்கனவே மின் கட்டண நிலுவைத் தொகையைக் கட்டிவிட்ட நிலையில் அபராத தொகை மட்டுமே இவ்விவசாயிகளிடமிருந்து தவணை முறையில் வசூலிக்கப்படுவதால் காலதாமத கட்டணத்தைத் தள்ளுபடி செய்யும் கோரிக்கை ஏற்பதற்கில்லை. (பொ.ப.து. கடித எண். 133866/யூ.2/87–3, நாள் 4–5–1988). |
| 168 | விவசாயம் செய்யும் கிணற்றிலிருந்து பம்பு செட்டைப் பயன்படுத்தி விவசாயிகள் சொந்த உபயோகத்திற்காக செங்கல் தயாரிக்க ''தொழிற் துறை மின் கட்டணம் விதிப்பதற்குப் பதில் விவசாய மின் கட்டணம் விதிப்பதற்கு பரிந்துரைத்தல். | பொதுப்பணித்துறையின் ஆய்வில் உள்ளது. |

| (1) | (2) | (3) |
| --- | --- | --- |
| 169 | தமிழகத்தில் நிலவி வரும் வறட்சி நிலையை கருதி வெவ்வேறு இலாக்காக்கள் செய்ய வேண்டிய ஆக்கப் பணிகள் குறித்து. | பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. (வருவாய்த் துறை கடித எண். 1842 இ.ச.பி.2/88-2. நாள் 15-2-1988.) |
| 170 | பெரிய குளம் தாலூகா அல்லி நகரம் கிராமம் வீரப்பய்யனார் கோவில் நிலத்தில் புதிய அணைக்கட்டு கட்டும் திட்டத்தை மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உடனடியாக மேற்கொள்ள பரிந்துரைத்தல். | ஏற்பதற்கில்லை, (திட்ட மேம்பாட்டுத்துறை கடித எண். 2085 டி.சி. 1/88-2, நாள் 9-3-1988). |
| 171 | விவசாய சேவை கூட்டுறவுச் சங்கத்தில் கடன் பெற்றவர் தனது கடன் பாக்கியை முறையாக திருப்பி செலுத்திய பிறகு அவருக்கு ஜாமீன் கொடுத்தவரின் கடன் பாக்கி நிலுவையிலிருந்தாலும் புதிய கடன் கிடைக்க ஏற்பாடு செய்தல். | (கூட்டுறவுத்துறை கடித எண். 43097 சிசி.1/87-4, நாள் 18-2-1988) கடன் வழங்கும் சலுகை 31-3-88 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. |
| 172 | பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடுக்காய் அதிகம் விளையும் நிலங்களை குத்தகை விடுவதற்கான குறைந்த பட்ச காலம் மூன்றாண்டுகளாக நிர்ணயிக்க வேண்டல். | மூன்றாண்டுகள் என மாற்ற இயலாது. சுற்றுப்புறம் வனத் துறை கடித எண். 66149, வனம் 10/87-8, நாள் 22-12-1988) |
| 173 | நீலகிரி காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு முட்டைக்கோஸ் ஆதார விதைகள் மேற்கு ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதித்தல். | வேளாண் துறையின் ஆய்வில் உள்ளது. |



| (1) | (2) | (3) |
| --- | --- | --- |
| 174 | மின் இணைப்பு வழங்க விண்ணப்பிக்கும் போது கிணற்றில் தண்ணீர் உள்ளதென சான்றிதழை இனிமேல் மின்வாரிய பொறியாளர்கள் வழங்கலாம் என உத்திரவு பிறப்பிக்க பரிந்துரைத்தல், மின் கட்டண தவணை மீதான வட்டியை தள்ளுபடி செய்தல. | பொதுப் பணித் துறையின் ஆய்வில் உள்ளது. |
| 175 | தேனி ஊராட்சி ஒன்றியம் சீலையம்பட்டி கிராமம், அரண்மனைப் புதூர் கிராமம், ஆதி திராவிடர் விவசாய கூலிகளுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுத்தல். | சமூக நலத் துறையின் ஆய்வில் உள்ளது. |

1988

| (1) | (2) | (3) |
| --- | --- | --- |
| 176 | கோவை தாலூகா கவுண்டம்பாளையக் கிராமம் இடையார் பாளையத்தில் அண்ணா நகர் வீட்டு வசதி திட்டத்திற்கு விவசாய நிலங்களுக்குப் பதிலாக தரிசு நிலங்களை ஆர்ஜிதம் செய்ய பரிந்துரைத்தல். | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறையின் ஆய்வில் உள்ளது. |
| 177 | விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க கோவை மாவட்டம் கே. செட்டி பாளையம் பழனிச்சாமி டையிங் பேக்டரி மற்றும் கணபதிபாளையம் சிட்டி பிராசசர்ஸ் பேக்டரி ஆகியவற்றை அப்புறப்படுத்தல். | கழிவு நீரை சுத்திகரிப்பு செய்யும் பணியை மேம்படுத்துமாறு அவ்விரு தொழிற்சாலைகளும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளன. சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாடு துறை கடித எண் 9638/எ.2/87-3, நாள் 6-7-1988, |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 178 | வேளாண் பெருங்குடி மக்களின் பிரச்சினைகளை நிவர்த்திக்க வேளாண்மை உயர் மட்டக்குழு தொடர்ந்து பணியாற்ற பரிந்துரைத்தல். | (அரசாணை எண். 203, வேளாண் துறை, நாள் 25–2–1988 பிரகாரம் குழு மாற்றியமைக்கப்பட்டது). (பின்னர் அரசு ஆணை எண். 160 வேளாண் துறை, நாள் 8-3-1989 பிரகாரம் குழு கலைக்கப்பட்டது.) |
| 179 | பரம்பிக்குளம் ஆழியாறு பாசனப் பகுதிகளில் விதிக்கப்படும் நீர் வரி அபராத வரிக்காக விவசாயிகளின் உடைமைகள் ஜப்தி செய்யப்படுவதைத் தவிர்க்கும்படியும் அபராதத் தொகையை தவணை முறையில் வசூலிக்கவும் பரிந்துரைத்தல். | பொதுப்பணித்துறையின் ஆய்வில் உள்ளது. |
| 180 | குத்தகை விவசாயிகள் குத்தகை பாக்கிகளுக்காக நிலவெளியேற்ற சட்டப்படி நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஆளாகி உடைமைகள் ஜப்தி செய்யப்படுவதைத் தவிர்த்து அவர்களுக்கு பாதுகாப்பு தர வேண்டும். | வருவாய்த் துறையின் ஆய்வில் உள்ளது. |



திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாடு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களை மிக அதிகமாகக் கொண்டிருக்கின்ற ஒரு நாடு. இங்கே இருக்கின்ற அந்த விவசாய பெருமக்களுடைய குறைகளை நீக்குவதற்கு ஏற்கெனவே உயர்மட்டக் குழுவானது பல்வேறு சிபாரிசுகளை அரசுக்கு வழங்கியிருக்கின்றது. அதே போன்று அவ்வப்போது எழுகின்ற இதேபோன்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசாங்கம் நிரந்தரமான முறையிலே ஒரு அமைப்பை ஏற்படுத்துமா என்பதை அறியவிரும்புகிறேன். அதோடு மட்டுமல்லாமல் இதற்கு மின்சாரத்தைப் பொறுத்தவரையில்..

9-25 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் இதை அறியுங்கள். அதற்குப் பிறகு இரண்டாவதை அறியலாம்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை உயர்மட்டக் குழு 1981–லே ஆரம்பிக்கப்பட்டது. 179 பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். அதில் 94 பரிந்துரைகளை அரசு ஏற்று உத்தரவிட்டுள்ளது. 85 பரிந்துரைகள் தான் இன்னும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிற பல்வேறு இனங்களில்—கிணறுகளுக்கு பம்ப்செட் கனெக்ஷன் வழங்குகிற நேரத்தில் அந்த டிவிஷனுக்குள் எங்கு வேண்டுமானாலும் பம்ப் செட்களை மாற்றுவதற்கு தக்க உத்தரவு வழங்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின்சாரத்துறை அமைச்சரிடத்திலே இந்தக் கேள்வியை எழுப்பலாம்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு பரிந்துரைகள் அளித்துள்ள இந்த விவசாய உயர்மட்டக் குழு விவசாயிகளின் அனைத்துக் கடன்களையும் ரத்து செய்யவேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறதா? அப்படியானால் அரசு அதுபற்றி எடுத்திருக்கிற முடிவு என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை உயர்மட்டக் குழு 1981, 1982, 1983, 1984, 1985, 1986, 1987, 1988 ஆம்

ஆண்டு வரை இருந்தது. நான் இங்கே சொன்னதுபோல் பல்வேறு பரிந்துரைகள் அரசுக்கு அனுப்பப்பட்டதில் பெரும்பாலான பாதிக்கு மேற்பட்ட பரிந்துரைகளை அப்போது அரசு ஏற்று அமல்படுத்தி இருக்கிறது. மீதம் உள்ளவை பரிசீலனையில் இருக்கின்றன என்று சொல்லி இருக்கிறேன். அமைத்துக் கடனும் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கை அந்த பரிந்துரையில் கூட இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் துறையிலே பெர்மனன்ட் க்ராப் அல்லது லைஃப் டைம் கிராப் என்று சொல்லப்படுகிற தென்னை மரத்திற்கு இருக்கின்ற கிணற்றிலே தண்ணீர் இல்லாத ஒரு குறை ஏற்படுகிறபோது, உடனடியாக வேறு ஒரு இடத்தில் புது கிணறு தோண்டி அங்கே தண்ணீர் இருக்கிறது என்ற நிலை வரும்போது அதிலே மின் வாரியம் மின் இணைப்பைத் தர, அந்த ஆயுள் கிராப்பை அல்லது லைஃப் டைம் பயிரைக் காப்பாற்ற அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பர்ப்செட் மாற்றுவதற்கு வழி இருக்கிறது. ஆனால் ரொம்ப தூரத்தில் அதாவது 300 அடிக்கு மேலே இருந்தால் புதிதாக அதற்கு மனு செய்யவேண்டும். இந்தக் கேள்விகளை எல்லாம் நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு விவசாயிகளினுடைய நலனைக் கருதி பரிசீலிப்பார் என்று நான் நம்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''உழுவார் உலகத்தார்க்கு ஆணியஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து''.

என்று சொல்லக்கூடிய முறையில் இது முக்கியமான தொழிலாக இருக்கின்ற காரணத்தால் இந்தத் தொழிலுக்கு பல்வேறுவிதமான இடைஞ்சல்கள், சிக்கல்கள் எல்லாம் இருக்கின்ற நிலையில் அதன் வளர்ச்சிக்காக பல்வேறு உதவிகளை அரசாங்கம் செய்ய வேண்டி இருக்கிறது. ஆகவே இந்த விவசாய அமைப்புகளை எல்லாம் கொண்ட ஒரு உயர்மட்டக் குழுவை மீண்டும் அமைத்து இன்னும் அதிகமான அபிவிருத்திக்கு வேண்டிய ஆலோசனைகளை அரசுக்கு வழங்குவதற்கு அப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டுதான் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டு ஆளுநர் ஆட்சிக்





காலத்தில் அந்தக் குழுவைக் கலைத்துவிட்டார்கள். இப்போது இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு அது தேவையில்லை என்ற கருத்தை ஏற்று அமல்படுத்துகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை வருங்காலத்தில் பரிசீலிக்கலாம்.

## தஞ்சை மாவட்டத்தில் நேரடி விதைப்பு.

*7070 திரு. ஜி. பழனிச்சாமி :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தில் நேரடி விதைப்பின் காரணமாக விவசாய தொழிலாளரின் வேலையின்மைக்கு மாற்று வேலை திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நேரடி விதைப்பின் காரணமாக விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையில்லை என்ற சூழ்நிலை உருவாகாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதிநீர்ப் பிரச்சினை காரணமாக தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகள் நேரடியான விதைப்பில் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால் அந்த மாவட்டத்தில் இருக்கக் கூடிய விவசாயத் தொழிலாளர்கள் 10 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலை இழப்பு காரணமாக மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். எனவே மாற்று வேலைத் திட்டம் ஏதாவது அரசு அறிவித்து அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை அளிக்க உத்தரவாதம் அளிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

9-30 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லையென்றாலும், ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்திலே நமக்கு மேட்டூர் அணை திறந்து விடப்பட்டால்தான் தஞ்சை போன்ற நிலப் பகுதிகளில் விவசாய

உற்பத்தி செய்ய வாய்ப்பு உண்டு. ஆனால் கடந்த ஆண்டு
20–8–1989லேதான் மேட்டூர் அணை திறந்து விடப்பட்டது.
அதனாலே 71,520 ஹெக்டேர் நிலப்பரப்பில் நேரடி விதை
விதைப்பு செய்யப்பட்டது. நேரடி விதை விதைப்பு என்றால்
நிலத்தை தரிசாக உழுது மழையின் உதவியால் கிடைக்கும்
நீரைக் கொண்டு நெல்லை புழுதிக் காட்டில் விதைப்பதுதான்.
இதன் காரணமாக. விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை
யின்மை என்ற சூழ்நிலை உருவாகாது. குறுவைச் சாகுபடி
இல்லாத சூழ்நிலையில் நேரடி விதைப்பினால் விவசாயத்
தொழிலாளர்களுக்கு விதைப்பு, பயிர்களைக் கவனிப்பது, களை
எடுப்பது, மேல் உரமிடுவது மற்ற அறுவடைசெய்வது போன்ற
வேலைகள் கிடைக்கும். நேரிடை விதைப்பு இல்லாத சூழ்நிலை
யில், குறுவைச் சாகுபடி இல்லையென்றால்தான் விவசாயத்
தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காது. விவசாயத் தொழி
லாளர்களுக்கு பாதிப்பு இருக்கும். எனவே, மேட்டூர் அணை
திறப்பதற்கு ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக குறுவைப்
பயிர் தஞ்சையில் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டிருக்கும். விவ
சாயத் தொழிலாளர்களுக்கு முழு அளவு வேலையின்மை ஏற்
பட்டிருக்கும். ஆனால் இவ்விலாக்கா மேற்கொண்ட நேரடி
விதைப்பின் மூலம் 71,520 ஹெக்டேரில் விவசாயத் தொழி
லாளர்களுக்கு போதிய வேலைவாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நேரடி விதைப்பு மூலமாக விவசாயிகள் உற்பத்தி
அதிகம் எய்தினாலும் கூட விவசாயத் தொழிலாளர்களுக்கு
மிகவும் வேலை குறைவு. இதன் மூலமாக இந்த மாவட்டத்தை
விட்டு பல்வேறு மாவட்டங்களுக்கு அங்கே இருக்கக்கூடிய
விவசாயத் தொழிலாளர்கள் குடிபெயர்கிறார்கள். அதோடு
மட்டுமல்லாமல் கேரளாவிற்கு வேலைக்காக இங்கே இருக்கக்
கூடிய இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கான பேர் செல்கிறார்கள்.
அப்படிப்பட்ட ஒரு அவல நிலை தஞ்சை மாவட்டத்திலே ஏற்
பட்டிருக்கிறது. ஆகையால் மாற்று வேலைத் திட்டத்தின்
மூலமாக அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையளிப்
பதற்கு ஏதாவது ஆறு குளங்களை ஆழப்படுத்துகின்ற
திட்டத்தை, மாற்று வேலைத் திட்டத்தை அரசு
கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே
இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் வேலையில்லாத
காரணத்தினாலே வேறு மாநிலத்திற்குச் சென்றதாக அரசாங்கத்
திற்குத் தகவல் இல்லை.



மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சாகுபடி ஆரம்பிப்பதற்கு
முன்னாலேயே குடிமராமத்துப் பணிகளைத் துவங்குவதற்காக
தஞ்சை மாவட்டம் பூராவிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டி
ருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தஞ்சை
மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அதற்கான ஒத்துழைப்பைத்
தந்து அந்தப் பணியில் தொழிலாளர்கள் அத்தனை பேரையும்
ஈடுபடச்செய்து பல நாட்களுக்கு வேலை வாய்ப்பையும் உரு
வாக்கி அந்த வாய்க்கால் சீரமைப்புத் திட்டத்தினை உருவாக்க
வேண்டும்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே விதைப்பு முறை நடை
முறையிலே இருக்கிற காரணத்தினால் வேலை வாய்ப்பு இருக்கு
மென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் களை
எடுப்பு, களை களைதல் இவைகள் பூரா ஒரு 10,15 நாளைக்
குத்தான் இருக்குமே தவிர முழு மாதங்களுக்கும் இருக்காது.
அவர்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலைமை இருக்கிறது.
குடிமராமத்து வேலை கூட அந்தந்தப் பகுதியிலே வேலை
செய்வதால் ஒரு குறைந்த நாளிலே அது முடிந்துவிடும். எனவே
அவர்களுக்கு எதிர் காலத்திலே அப்படி வேலையற்ற நிலையிலே
நிவாரணம் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாத காலங்களில்
விவசாயத் தொழிலாளர்களுக்கு எப்படி வேலைவாய்ப்பு அளிக்க
லாமென்று மாண்புமிகு உறுப்பினர் தனியாக எழுதித்தருவாரே
யானால் பரிசீலிக்கப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே நான் சென்றபோது
விவசாயத் தொழிலாளர்கள் பெண்கள் வேலையின்மையைப்
பற்றிக் குறிப்பிட்டார்கள் தெளிப்பு முறை, நேரடி பாசன முறை
யினால். ஆகவே அப்படிப்பட்ட வேலையில்லாத அந்த நாட்
களில் மேற்கு வங்கத்தில் நல்ல முறையில் வரவேற்கப்படுவது
போல உணவுக்கு வேலைத் திட்டத்தைக் கொண்டு வந்து மற்ற
மராமத்து பணியை செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் ; மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில்
விவசாய உற்பத்திக்குப் போதிய தண்ணீர் மேட்டூர் தண்ணீர்
கிடைக்காத காலத்தில், நிலத்தை உழுது அதிலே நாம் விதைப்பு
செய்கிறோம். அதன் மூலம் தொடர்ந்து வேலை வாய்ப்பு

கிடைக்கக்கூடும், இன்னும் சொல்லப்போனால் விளைச்சலும் கூடுதலாக கிடைப்பதாக வேளாண்மைத் துறையிலே இருப்பவர்கள தெரிவந்திருக்கிறார்கள. அப்படி விதைத்த பிறகு அந்த நாற்று குவியலாக ஒரே இடத்தில் இருக்குமானால் அதைப் பிரித்து எடுக்கிற பணி, பிறகு களை ஒரு முறைக்கு இரு முறை எடுக்க வேண்டிய பணி அனைத்தும் அந்தத் தொழிலாளர்களுக்கு இப்பொழுது கிடைக்க வாய்ப்பிருக்கிறது. இவைகள் அனைத்தும் அந்தத் தொழிலாளர்களுக்கு இப்போது கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. ஆக வேலை வாய்ப்பு இல்லை என்ற சூழ்நிலை இப்போது இல்லை.

9-35 மணி

### ஊத்துக்குழி பள்ளத் திட்டம்.

* 456—திரு. எம். சிரங்கன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேட்டூர் வட்டம் வனவாசி மக்களுக்கு குடிநீர் கிடைக்க ஊத்துக் குழி பள்ளத் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் நிறைவேற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. எம். சிரங்கன் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வி நான் சென்ற ஆண்டே போட்டது. மேட்டூர் தொகுதியில் வனவாசிப் பகுதியில் குடிநீர் இல்லாததால் அந்த நேரத்தில் அந்த மக்கள் எல்லாம் ஊரை விட்டுப் போகும்போது, இந்தக் கேள்வியைப் போட்டேன். அந்தத் திட்டம் நிறைவேறிவிட்டது. இபபோது குடிநீரைக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைககு மக்களும் தான் வேளாண்துறை அமைச்சரவர்கள் அதைத் திறந்து வைதது விட்டு வந்தார்சள் என்று சொல்லி, மேலும் இப்படி.......



மாண்புமிகு பேரவைத் தலைவர் : ; உங்களுடைய பாராட்டோடு முடித்துக்கொள்ளலாம். வினாக் கேட்பதன் நோக்கம் திட்டங்கள் நிறைவேற வேண்டுமென்பதுதான். எனவே உங்கள் நன்றியையும் பாராட்டையும் ஏற்றுக்கொண்டு, அடுத்த வினாவிற்குப் போகிறோம்.

### செய்யாறு தொகுதிக்கு குடிநீர்

* 1142—திரு. வ. அன்பழகன்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செய்யார் மற்றும் பாலாறு ஆகிய இரண்டு ஆறுகளில் இருந்தும் தண்ணீர் எடுத்து, செய்யாறு தொகுதிக்கான குடிநீர்ப் பிரச்சினையைத தீர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

ஆம், உள்ளது.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செய்யாற்றில் இருக்கிற நீர் ஆதாரத்தைக்கொண்டு மேனல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், காழியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பாராசூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், கொருகை கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற நான்கு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும், அதைப்போல பாலாற்றில் உள்ள நீர் ஆதாரத்தைக் கொண்டு உமையாள்புரம் கூட்டுக் குடிநீர்த் திட்டமும், வட இலுப்பை கூட்டுக் குடிநீர்த் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அது தற்போது எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேனல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், காழியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பாராசூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், உமையாள்புரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய இந்த நான்கு திட்டங்கள் குறித்த மதிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்படுததுவதற்கான அதிகாரம், உரிமை வாங்குவதற்காக வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் தூசிமா மண்டூர்—கொருக்கை கூட்டுக் குடிநீர்த் திட்ட ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

[1990 மே 12

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, நான் குறிப்பிட்ட இந்த 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங் களில், இரண்டு மாதங்களுக்கு முன்பாக உமையாள்புரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு டெக்னிக்கல் சாங்ஷன் வழங்கப் பட்டிருக்கிறது. அதற்கு அட்மினிஸ்டிரேடிவ் சாங்ஷன் வழங்கி நிறைவேற்றுவதோடு, மீதமுள்ள 5 கூட்டுக் குடிநீர்த் திட்டங் களையும் இந்த ஆண்டே நிறைவேற்ற அமைச்சரவர்கள் முன் வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசினுடைய நிதி நிலையைப் பொறுத்து இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. ஏ. சி. தயாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, பாலாற்றிலிருந்து ஆரணிக்கு தண்ணீர் கொண்டுவர ஒரு திட்டம் முதலிலே படைக்கப்பட்டது. ஆனால் செய்யாற் றிலிருந்து ஆரணிக்குத் தண்ணீர் கொண்டு வந்தால் திட்டத்தின் மதிப்பீடு குறையும், வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த ஏதுவாக இருக்கும் என்று நான் மனு செய்திருந்தேன். அது பற்றி மதிப்பீடு தயாரிக்க அதிகாரிகளுக்கு அமைச்சரவர்கள் உத்தரவிட்டுள்ளார்களா ? அதை விரைவாக நிறைவேற்றித் தர அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற இது போன்ற கருத்துக்கள் குறித்து குடிநீர் வடிகால் வாரியம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

### ஆரம்ப சுகாதார நிலையம்

* 4266—திரு. ஆர். மூக்கன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வன்னாடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே,

வன்னாடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

9–40 மணி

திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலை வர் அவர்களே, உப்பிலியாபுரம் தொகுதியில் துறையூர் ஒன்றியத்தைச் சேர்ந்த பச்சைமலையில் வன்னாடு, கோம்பை



990 மே 12[

ன்ற இரு நாடுகளிலும் சுகாதார வசதி இல்லாத காரணத் னால் அங்கே உள்ள இந்து மலையாளி மக்கள் அனைவரும் தாட்டில் கட்டிக்கொண்டு தான் துறையூர் வந்து சிகிச்சை பற்றுச் சென்று கொண்டு இருக்கிறார்கள். ஆகையினால் ங்கே ஒரு சுகாதார நிலையம் அமைக்க அரசு முன் வருமா ன்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: ாண்புமிகு தலைவர் அவர்களே, துறையூர் ஊராட்சி ஒன்றி த்தின் மக்கள் தொகை சுமார் 90 ஆயிரம் ஆகும். 30 ஆயிரம் க்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படை லே வீரமச்சான்பட்டி, பெருமாள்பாளையம், செங்காட்டுப் ட்டி ஆகிய 3 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ருக்கின்றன. ஆகவே இப்போது அது குறித்து எந்தவிதமான சயற் குறிப்பும் அரசிடம் இல்லை.

திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலை ர் அவர்களே, துறையூரிலிருந்து பச்சைமலைக்குச் சென்றுவர ட்டத்தட்ட 15 அல்லது 20 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. வர்கள் பச்சைமலையிலிருந்து துறையூர் வந்துதான் கிச்சை பெற்றுக்கொண்டு சிரமப்பட்டுக்கொண்டு இருக் றார்கள். ஆகையினால் அரசு மறுபரிசீலனை செய்து ந்து மலையாளி மக்களுக்கு உதவ அங்கே சுகாதார நிலையம் மைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: ாண்புமிகு தலைவர் அவர்களே, அரசின் நிதி நிலைக்கு ஏற்ப துபோன்ற திட்டங்களைப் படிப்படியாக அரசு மேற் காள்ளும்.

### ஒட்டப்பிடாரம் அரசு மருத்துவமனை

* 6150—திரு எம். முத்தையா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட னாவுக்கு விடையளிப்பாரா :

ஒட்டப்பிடாரம் அரசு மருத்துவமனைக்கு ஆபரேஷன் யேட்டரும், எக்ஸ்-ரே எடுப்பதற்கான வசதியும் செய்து ர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: ாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எம். முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள்.
ஆனால் இந்த ஆஸ்பத்திரி இன்றைக்கு ஆரம்பிக்கப்பட்டதல்ல,
வெள்ளைக்காரன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆகை
யினால் தயவுசெய்து இப்போதாவது நம்முடைய அரசு—
அங்கே எக்ஸ்-ரே எடுப்பதற்கான வசதி செய்து தர
வேண்டும் என்று கேட்டேன்; இல்லை என்று அமைச்சரவர்கள்
சொல்லி இருக்கிறார்கள்; அதுதான் இல்லை என்று சொன்
னாலும் அங்கு கூடுதலாக படுக்கை வசதிகளை விஸ்தரிக்க
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இப்போது
6 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை செயல்பட்டு வரு
கிறது. அதை 24 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக
உயர்த்த வேண்டும் என்ற செயற் குறிப்பு அங்கே இருந்து
பெறப்பட்டு இருக்கிறது. கூடியவிரைவில் அரசினுடைய நிதி
நிலைக்கு ஏற்ப அதைச் செய்து கொடுப்பதற்கு அரசு முன்
வரும்.

திரு. எம். முத்தையா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,
அந்த படுக்கை வசதிகள் எப்போது விஸ்தரிக்கப்படும் என்ப
தைத் தெரிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பளிச்சென்று விளங்கு
கிறது.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு அந்த
மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்குப் போதுமான நிலம்
இல்லை. அந்த நில வசதியை அவர்கள் ஆர்ஜிதம் செய்து
கொடுத்த பின்னர் அதை விரிவு படுத்துவதற்கு படிப்படியாக
அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப அரசு முயற்சிகளை
மேற்கொள்ளும்.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : உங்களுடைய " ration "
முடிந்துபோய்விட்டது. (சிரிப்பு).

## மருந்தாளுநர்கள்

* 8870—திரு. சி. கோவிந்தசாமி :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா :

திருப்பூரில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனையில்
கூடுதலாக மருந்தாளுநர்களை நியமிக்க அரசு நடவடிக்கை
எடுக்குமா ?



மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே,

புதிய பணியிடங்கள் ஏற்படுத்த தடை உள்ளதால் இக்கேள்விக்கிடமில்லை.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய நியமனங்களுக்குத் தடை உள்ளதாக அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிக்கிறார்கள். என்ன தடை அதற்கு இருக்கிறது என்பதை விளக்குவதோடு, வெளியிலே இருந்து வரக்கூடிய நோயாளிகளின் எண்ணிக்கைக்கு உரிய முறையில் மருந்தாளுநர்கள் இல்லாத காரணத்தினால் அங்கே வரக்கூடிய நோயாளிகள் வைத்தியரைப் பார்த்த பின்பு அந்த மருந்துகளைப் பெறுவதற்காக இன்றைக்கு மணிக்கணக்கிலே கியூவிலே காத்து இருக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே அதைக் கவனத்திலே கொண்டு, அப்படிப்பட்ட தடை இருக்குமானால் அந்தத் தடையை நீக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து, அந்த மருந்தாளுநர்களை தேவையான அளவு நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தடையாணை வேலைப் பளுவின் அடிப்படையிலே உருவாக்கப்பட்டது தானே தவிர வேலைப் பளு கூடுகிறபோது அங்கே அந்த எண்ணிக்கையை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அங்கே தற்போது 8 மருந்தாளுநர்களும், ஒரு முதன்மை மருந்தாளுநரும், ஒரு மருந்துக் கிடங்கு காப்பாளரும் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். மேலும் மருந்தாளுநர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையும் அங்கே இருந்து வந்து இருக்கிறது. அரசினுடைய நிதி நிலைமைக்கு ஏற்ப அது பரிசீலிக்கப்படும்.

திரு. சி. கோவிந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கு இருக்கக்கூடிய எண்ணிக்கையை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அங்கே வருகிற நோயாளிகளுக்கும், அங்கே இருக்கிற மருந்தாளுநர்களின் எண்ணிக்கைக்கும் சம்பந்தம் இல்லை என்று மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்களே இதுபற்றி விரிவாக அரசுக்கு தன்னுடைய விவரங்களை எழுதி, புதிய மருந்தாளுநர்கள் அதாவது 7 மருந்தாளுநர்களும், 2 தலைமை மருந்தாளுநர்

களும் தேவைப்படுகிறது என்று சொல்லி, மருத்துவப் பணி இயக்குநர் அவர்களுக்கு கடந்த 23–3–1990-லே கடிதம் எழுதி இருக்கிறார்கள். அரசு அவைகளைக் கவனத்தில் கொண்டு மாவட்ட மருத்துவமனையாக இருக்கின்ற காரணத்தி னாலேயும், ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கிற ஒரு இடமாக இருக்கின்ற காரணத்தினாலேயும் அரசு அதற்கு உரிய சில முன்னுரிமை கொடுத்து, நிதியை ஏற்பாடு செய்து, அவர் களை உடனடியாக நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 மருந்தாளுநர்கள் கூடுதலாக நியமிப்பதற்கு இன்றைக்கு அரசினுடைய கூடுதல் செலவு, உடனடிச் செலவாக 1.9 இலட்சமும், இறுதிச் செலவாக 2.9 இலட்சமும் ஆகும். ஏறத்தாழ 5 இலட்சம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்குச் செலவாகும். ஆகவே அதைக் கருத்தில் கொண்டு அரசினுடைய நிதி நிலைமைக்கு ஏற்ப படிப்படியாக எண்ணிக்கையை உயர்த்த அரசு பரிசீலனை செய்யும்.

## அண்ணா நினைவாலயம்

* 10003—திரு. டி. கே. பழனிசாமி

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை, அண்ணா நினைவாலயத்தைப் பார்வையிடச் செல்லும் பொதுமக்கள் காலணிகளை வெளியில் கழற்றிவிட்டு செல்ல வேண்டி இருப்பதால், கடுமையான வெயில் காரணமாக அவர்கள் இன்னல்படுவதைத் தவிர்க்க அங்கு தரைவிரிப்பு வசதி செய்ய உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை அண்ணா நினைவாலயத்தில் தரை விரிப்பு வசதி செய்யப்படுமானால், நினைவாலயத் தரைப் பகுதியில் பதிக்கப்பட்டுள்ள சிறப்பு வாய்ந்த கருப்பு சலவைக்கல் மற்றும் சாகாபாத் கல் ஆகியவற்றின் தோற்றத்தைப் பொது மக்கள் கண்டுகளிக்க இயலாது. மேலும் அண்ணா நினை வாலயத்தில் பொதுமக்கள் நடைபாதைப் பகுதியில் நிழல் தரக் கூடிய கொடிப்பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளதால் வெயிலின் கொடுமை குறைகிறது. எனவே அங்கு தரை விரிப்பு அமைப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



9.45 மணி.

திரு. டி. கே. பழனிச்சாமி : தலைவரவர்களே ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை என்றால் விட்டு விட வேண்டியதுதானே ?

திரு. டி. கே. பழனிச்சாமி : பேரவைத் தலைவர் அவர் களே, இல்லை என்றால் விட்டுவிட வேண்டியதுதான். ஆனால், அங்கே மக்கள் படும் துயரத்தை நான் கண்ணால் கண்டேன். அதன் காரணமாகத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேனே யொழிய, அண்ணாவினுடைய சமாதிக்கு அப்படி ஒரு தரை விரிப்பு தேவையில்லை என்றால் ஓ.கே., ரைட்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரொம்ப மகிழ்ச்சி.

திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்ணா சதுக்கத்திற்குச் செல்லக்கூடிய பயணிகள் அல்லது பார்வையிடக்கூடிய பொதுமக்கள் அங்கே விடக்கூடிய காலணிகளுக்குக் கட்டணம் வசூலிக்காமல் இலவச மாகவிடக்கூடிய ஏற்பாடு அரசின் மூலமாகச் செய்யப்படுமா என்று கேட்க ........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படியே போய், கடை சியிலே செருப்புக் கடைக்குப் போய் விடுவோம், வேண்டாம்.

திரு. எஸ். எஸ். தென்னரசு: பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா நினைவாலயம் என்று பெயர் வந்தபிறகு அங்கே தரை விரிப்பிற்கோ அல்லது காலணியை எங்கே போடுவது என்ற பிரச்சினைக்கோ இடமில்லை என்பதை மாண்புமிகு திரு. பழனிச்சாமி அவர்களுக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அறிவித்ததே போதும் என்று அமைச்சர் கருதுகிறார்.

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா நினைவாலயம் போன்ற வழிபாட்டுத் தலங்களுக்கு — தாஜ்மகால் போன்ற இடங்களில் அங்கு செல் கின்றவர்களுக்குக் கட்டணத்துடன் கூடிய காலுறைகள்

வழங்குகிறார்கள், அதுபோல தரை விரிப்பு செய்ய வசதி இல்லாவிட்டாலும். காலுறைகளையாவது வழங்குகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காலுறைகளை வழங்குவதோ, தரை விரிப்பு அமைப்பதோ எதுவுமே அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி ஒரேயடியாக அடித்து விட்டால் பிரச்சினை கிடையாது.

## திரையரங்குகளில் தமிழக அரசு செய்திப் படங்கள்

* 10120—திரு. வ. முல்லைவேந்தன்

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரும்பாலான திரையரங்குகளில் தமிழக அரசு செய்திப் படங்கள் காண்பிக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்பதற்கேற்ப திரைப்படம் காட்டியே பொருள் சேர்ப்பவர்கள், தமிழக அரசினுடைய செய்திப் படங்களைப் பெரும்பாலான திரையரங்கு



களில் காட்டுவதில்லை என்பது முற்றிலும் உண்மை. எனவே, இப்படிப்பட்ட திரையரங்குகளின் உரிமத்தை — படம் காட்டப்படாவிட்டால் ரத்து செய்ய அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் சார்பாக ஒவ்வொரு முறையும் 146 பிரதிகள் எடுக்கப்பட்டு, அப்படி எடுக்கப் பட்ட பிரதிகளை மத்திய அரசின் சார்பாக விநியோகிக்கப்படு கின்ற பிரிவினிடம் தந்து அவர்கள்தான் மாநிலத்தில் இருக்கின்ற அத்தனை திரையரங்குகளுக்கும் விநியோகிக்கிறார்கள். இங்கிருக் கின்ற — தமிழ் நாட்டில் மொத்தம் 2,000-க்கும் மேற்பட்ட திரையரங்குகள் இருக்கின்ற காரணத்தால் 146 பிரதிகள் போதாது என்று சொல்லி, முதல்வரவர்கள் இந்த முறை மேலும் ஒரு 100 பிரதிகள் அதிகமா எடுக்க உத்தர விட்டிருக்கிறார்கள். மத்திய அரசின் விநியோகப் பிரிவிலிருந்து தரப்படுகின்ற—ஒவ்வொரு தியேட்டருக்கும் தரப்படுகின்ற பொழுது அதிகமான தியேட்டர்கள் இருக்கின்ற காரணத்தால், சரியான முறையில் விநியோகிக்க முடியவில்லை. அப்படி அவர்கள் விநியோகிப்பதற்காக ஒரு சதவீதம் தியேட்டர் காரர்களிடமிருந்து பெற்று நமது மாநிலத்திற்கு அரை சதவீதம் என்று தந்து கொண்டிருக்கிறார்கள். அப்படித் தருகின்ற தொகையே ஒரு வருஷத்திற்கு இருபது இலட்சத்திற்கு மேல் நமக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள். பிரதிகளை அதிகப் படுத்தி, அத்தனை திரையரங்குகளிலும் இது காண்பிக்கப்படு கின்ற அளவிலே இந்த வருஷம் நடை முறைப்படுத்தப்படும். மேலும் பிரதிகள் வாங்கியும் அதைத் திரையிடாத திரையரங்கு களின் மீது ஆங்காங்கு இருக்கின்ற மக்கள் தொடர்பு அதிகாரி களிடம் சொல்லி, அதைக் கண்காணித்து உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரின் மூலமாக அந்தத் திரையரங்குகள் மீது நட வடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு செய்திப் படம் திரையரங்குகளில் எவ்வளவு நேரம் காட்டப்பட வேண்டும் ? இந்த ஆண்டு எடுக்கப்பட்ட திரைப்படங்களின் எண்ணிக்கை எவ்வளவு என அறிய விரும்புகிறேன்.

[1990 மே 12

9.50 மணி·

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, ஒவ்வொரு திரையரங்கிலும் 10 நிமிடம் அது காண்பிக்கப்பட வேண்டும். இந்த ஆண்டு எடுக்கப்பட்ட படங்களின் எண்ணிக்கை பற்றி என்னிடம் விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் எத்தனை திரைப் படங்கள் என்பதைத் தெரிவிக்க இயலும்.

திரு. இளம்வழுதி : தலைவர் அவர்களே, முன்பெல்லாம் திரை அரங்கங்களில் திரைப்படம் முடிந்தவுடனே தேசியகீதம் இசைக்கப்படும். எல்லோரும் எழுந்து நிற்பார்கள். இப்போது அந்த வழக்கம் அடியோடு நின்று விட்டது. எனவே, மீண்டும் அந்த வழக்கத்தைக் கொண்டு வருவதற்கும், திரைப்படம் தொடங்குவதற்கு முன்னால் தமிழ்த்தாய் வாழ்த்து இசைப் பதற்கும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கே. என். நேரு : தலைவர் அவர்களே உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஆலோசனை செய்து, நடை முறைப் படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு செய்யும்.

திரு. என். பழனிவேல் ; தலைவர் அவர்களே, தமிழக அரசு செய்தித் துறை மூலமாக இந்த ஆண்டு டாக்டர் அம்பேத் கார் நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டிருக் கிறோம். ஒவ்வொரு தொகுதியிலும் சட்ட மன்ற உறுப்பினர் கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளை திரைப்படமாக தயாரித்து தமிழக திரையரங்குகளில் போடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, அம்பேத்கார் நூற்றாண்டு விழாவை கொண்டாட அமைக்கப் பட்ட உயர் மட்டக் குழு நேற்று முன் தினம் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் கூடி அம்பேத்கார் அவர்களின் புகழைப் பரப்புவதற்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து இருக் கிறார்கள். அது பற்றிய இன்னொரு கேள்வி கூட வர இருக் கிறது. அப்போது அது பற்றி விளக்கமாகத் தெரிவிப்பேன்.

திரு. இரா. மோகன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட் டில் 2,000 திரை அரங்குகள் இருப்பதாகக் கூறிய அமைச்சர் அவர்கள், இப்போது 146 பிரதிகள்தான் தமிழக அரசின் செய்திப் படங்கள் எடுக்கப்படுகிறது என்று அறிவித்து இருக் கிறார்கள். நிச்சயமாக இது போதாது. எனவே, காட்டிய படங்கள் திரும்பத் திரும்ப மற்ற மாவட்டங்களில், மற்ற திரை யரங்கங்களில் காட்டப்படுகிறதா அல்லது குறிப்பிட்ட காலத் தோடு அந்த 146 பிரிண்டுகள் முடிந்து, புதிய பிரிண்டுகள்.....



1990 மே 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 146-ஆல் 2,000-ஐ வகுத்து விடுங்கள். சரியாகக் கணக்கு வந்து விடும்.

தீவிரக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உறைவிந்து விநியோகம்.

* 4186— திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் ; மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, கொட்டாம்பட்டி அல்லது மேலூரில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உறைவிந்து விநியோகம் செய்ய திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவர் அவர் களே,

(அ) மற்றும் (ஆ) : இது குறித்த விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

(அ) ஆம்.

(ஆ) மதுரை கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டத் தின்கீழ் இரண்டு மண்டல செயற்கை முறை இனவிருத்தி நிலையங்கள் முறையே மதுரை மற்றும் மேலூரில் செயல்பட்டு வருகின்றது. அதில். மேலூர், மண்டல செயற்கை முறை இன விருத்தி நிலையத்தின்கீழ் 25 கிளை நிலையங்கள் செயல்படு கின்றன. இந்த 25 கிளை நிலையங்களில் 11 கிளை நிலையங் களில் மார்ச்சு 1988 முதலும், 3 கிளை நிலையங்களில் செப் டம்பர் 1988 முதலும், ஆக மொத்தம் 14 கிளை நிலையங்களில் உறை விந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணி செயல் பட்டு வருகின்றது.

டி 2 ஏ 53-142—11

அவைகள் வருமாறு:

1. சமயநல்லூர்
2. விளாங்குடி
3. பொதும்பு
4. ஊர் மெச்சிகுளம்
5. சிந்தாமணி
6. ஐராவதநல்லூர்
7. அவனியாபுரம்
8. சிலைமான்
9. செல்லூர்
10. கே. புதூர்.
11. பொன்னகரம்.

1. ஒத்தக்கடை 2. அப்பன்திருப்பதி 3. கொடிமங்கலம்

கீழ்க்கண்ட 11 கிளை நிலையங்களில் திரவ விந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்ளப்படுகிறது:—

1. மேலூர்
2. வெள்ளலூர்
3. தனியாமங்கலம்
4. அ. வெள்ளாளப்பட்டி
5. தெற்குத்தெரு
6. திருவாரூர்
7. புதுத்தாமரைப்பட்டி
8. தும்பைப்பட்டி
9. ஆண்டார்கொட்டாரம்
10. களிமங்கலம்
11. வளையங்குளம்.

கொட்டாம்பட்டி கிளை நிலையம் வாடிப்பட்டி, கால் நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் அலங்காநல்லூர் மண்டல செயற்கை முறை இன விருத்தி நிலையத்தின் கீழ் செயல் படுகின்றது. இங்கு திரவ விந்து மூலம் கருவூட்டல் பணி மேற்கொள்ளப்படுகிறது.



திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் மேலூர் பகுதியில் உறை விந்து நிலையம், செயற்கை முறை கருவூட்டல் நிலையம் அமைக்க எந்த விவரமும் தரப்படவில்லை. ஆகவே, இந்த ஆண்டாவது அந்த உறை விந்து நிலையத்தை மேலூர் பகுதியில் அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியில் இப்போது 14 நிலையங்களில் உறை விந்துத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இன்னும் 11 நிலையங்களில் மட்டும் தான் உறை விந்துத் திட்டம் தற்சமயம் செயல் படுத்தப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டும் அரசினுடைய நிதி நிலைமைக்கு ஏற்ப தமிழகத்தில் உள்ள எல்லா கால் நடை மருந்தகங்களிலும், கிளை நிலையங்களிலும் உறை விந்துத் திட்டத்தை செயல்படுத்துகிற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அது படிப்படியாக நிறைவேற்றப்படும். அரசினுடைய நிதி நிலைமைக்கேற்ப உறுப்பினர் அவர்களுடைய கருத்தை இந்த அரசு கவனத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, கொட்டாம்பட்டி கிளை நிலையம் வாடிப்பட்டி கால் நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டத்தின் கீழ் செயல் படுவதாக இங்கே அமைச்சர் அவர்கள் அறிக்கையில் தெரிவித்து இருக்கிறார்கள். வாடிப்பட்டியானது கிட்டத்தட்ட 100 கி. மீ. தூரத்தில் இருக்கிறது. ஆகவே, கொட்டாம்பட்டி பகுதியில் இந்த உறை விந்து நிலையத்தை இந்த வருடம் அரசு அமைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன். உறை விந்துத் திட்டம் படிப்படியாக ஒவ்வொரு ஆண்டும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. அரசினுடைய நிதி நிலைமைக்கேற்ப அவை கருத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கால்நடை மருந்தகம்

*6557—திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாகுடி மற்றும் பண்ணைவயல் கிராமங்களில் கால் நடை மருந்தகம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

[1990 மே 12

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம்: தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த பண்ணைவயலில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இந்த அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக தொடர்ந்து நினைவூட்டுகளும் அனுப்பப்பட்டுள்ளன. இந்த நிலையில் அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொல்கிறார்கள். அதை தயவு செய்து மீண்டும் பரிசீலனை செய்து, பட்டுக்கோட்டையிலிருந்து 15 கி. மீ. தூரத்தில் இருக்கிற பண்ணை வயலில் இந்த நிலையத்தை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் அதிராம்பட்டினம், தம்பிக்கோட்டை, மேலக்காடு போன்ற இடங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

9-55 மணி.

அதோடு ஏனாதி, தொக்காலிக்காடு, துவரங்குறிச்சி, கீழ்க்கரம்பை பள்ளிகொண்டான், ஆகிய கிராமங்களிலும் கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. பட்டுக்கோட்டையில் இருந்து 18 கிலோ மீட்டர் பண்ணைவயல் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்த வரையில் 18 கிலோ மீட்டர் அல்ல. அதற்கு அருகாமையிலே சொக்கநாதபுரத்திலே ஒரு கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. சேதுபாவாசத்திரம், இரண்டாம் பள்ளிக்காடு கிராமத்திலே கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் கால்நடைகளினுடைய எண்ணிக்கைக்கு ஏற்பவும், கால்நடை மருத்துவமனைகளுக்கு இடையே உள்ள தூரத்தினுடைய அடிப்படையிலேயும், கால்நடை மருந்தகங்கள் துவக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை ஆய்வு செய்கின்ற போது, தற்சமயம் பண்ணைவயல்கிராமத்திலோ, கோட்டாகுடி கிராமத்திலோ மருந்தகம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற போது மைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்வதை நான்



1990 மே 12]

ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் 18 கிலோ மீட்டர் தூரம் என்று நான் சொன்னதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 12 கிலோ மீட்டர் என்பது உண்மை. ஆனால் அந்தப் பண்ணைவயல் பள்ளத்தூர், பட்டுக்கோட்டை இந்த ஏரியாக்களைச் சுற்றி நீண்ட ஒரு பாலைவனச் சோலை போல அமைந்திருக்கிறது. ஆகவே அங்கிருந்து கிராமங்களுக்குச் செல்வது என்பது மிகவும் கஷ்டம். ஆகவே மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு தமிழகத்திலே கால்நடை மருந்தகம் அமைக்கின்றபோது, முழு மானியத்தோடு 1, 2, 3 என்று வரிசைப்படுத்தி, இங்கே நீங்கள் மானியம் வகுப்பதைத் தவிர்த்து, தமிழகத்தில் உள்ள எல்லாக் கால்நடை மருந்தகங்களுக்கும் முழு மானியத்தோடு அந்த கிளை மருந்தகங்களை அமைக்க அரசு முன் வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணைவயல் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்துகிறார்கள். அங்கே உள்ள கால்நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்பவும், பண்ணைவயல் கிராமத்தில் 8 கிலோ மீட்டர் தூரத்தில், சுற்றளவில் வேறு ஏதேனும் கால்நடை மருந்தகங்கள் இல்லாது இருக்குமானால், அவர்களுடைய கருத்துக்களை இந்த அரசு கவனத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் முழு அளவு மானியம் வழங்குகின்ற சூழ்நிலை தற்சமயம் அரசிடம் இல்லை என்பதை மீண்டும் வலிறுத்த விரும்புகிறேன்.

மதுரை மாநகருக்குப் பெருநகரத் திட்டம்.

* 2209 ஏ—திரு. சோ. பால்ராஜ்:
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாநகருக்கு பெருநகரத் திட்டம் தயாரிக்கும் பணி எந்த அளவில் உள்ளது?

(ஆ) எப்போது அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மதுரை உள்ளூர் திட்டப் பகுதியில் கூடுதலாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கும் சேர்த்து ''முழுமைத் திட்டம்'' திருத்தப்பட வேண்டியுள்ளதால், மதுரை மாநகர உள்ளூர் திட்டக்குழு தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

(ஆ) மேற்கூறிய முழுமைத் திட்டம் அரசால் பெறப்பட்டு நகர் ஊரமைப்புச் சட்ட விதி 28-ன்கீழ் இறுதி ஒப்புதல் வழங்கப் பட்டு, சட்ட விதி 30 (2)-ன் கீழ் தமிழ்நாடு அரசிதழில் பிரசுரிக்கப் பட்ட பின்னால் அந்தச் சட்டம் அமுலுக்கு வரும்.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் மதுரை மாநகரத்தில், பெருநகரத் திட்டத்தில், எந்தெந்த திட்டங்கள் தீட்டப்பட்டுள் ளன என்பதை அறிய விரும்புவதோடு அதில்பாதாளச் சாக்கடை, சுரங்கப் பாதை.....................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல் கேள்விக்கு விடை.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் எந்தெந்த உள்ளூர் பகுதிகள் என்ற குறிப்பு தற்போது இல்லை. அந்த முழுமைத் திட்டம் ஒருங்கிணைந்த வளர்ச்சியை மனதில் கொண்டு, அந்த உள்ளூர் திட்டத்தின் மூலமாக குடியிருப்புப் பகுதி, வணிகப் பகுதி, பொது விநியோகப் பகுதி, கல்விப் பகுதி, தொழில் பகுதி, வேளாண்மைப் பகுதி போன்ற பல்வேறு இனங்களாகப் பிரிக்கப் பட்டு, ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் உள்ளூர் திட்டக் குழுவின் மூலமாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. பால்ராஜ் : சட்டப் பேரவைத் தலைவர் அவர் களே, இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு மானிய உதவி செய்து உள்ளதா என அறிவதோடு விதி 28 மற்றும் 30 என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதன் விவ ரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், முழுமைத் திட்டம், மாஸ்டர் பிளான் என்று அறிவிக்கப்பட்டு, ஒருங்கிணைந்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தீட்டப்படுள்ளது. அதற்கு எவ்வளவு நிதியை மத்திய அரசு தருகிறது என்ற விவரம் தற் போது குறிப்பில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரம் வளர்ந்து வருகிற நகரம் என்ற நிலை இல்லாமல், வளர்ச்சி தேக்கம் அடைந்துவிட்ட நிலை இருக் கிற காரணத்தால், அந்த வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும், அதிகப்படுத்தவும், அந்த மாஸ்டர் பிளானில், மேலூர் செல்கிற வழியில் விவசாயப் பகுதி இருக்கின்ற நிலையையும் அடுத்து, அருப்புக்கோட்டை பகுதியை தொழில் பகுதியாகவும், கல்விப் பணிக்கு அனுப்பாதபடி போன்ற பகுதிகளையும் அந்த மாஸ்டர் பிளானில் சேர்ப்பதற்கு அரசு முன் வருமா?





மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே,இந்த மாஸ்டர் பிளான் திட்டம் 1974 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1980 ஆம் ஆண்டு மே திங்களில், இந்தத் திட்டத்தில் கூடுதலாக சில பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால் இதற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுவதற்கு முன்பாக பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டு மேலும் சில பகுதிகள் அந்தப் பகுதியிலே சேர்க்கப்பட்டுள்ளன. அதற்கான ஆய்வு தற்போது நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தின்படி, அரசின் மூலம் அதைச் சேர்க்க இயலுமா என்பதை பரிசீலனை செய்யலாம்.

## கைத்தறி நெசவாளர்களுக்கு கடன் நிவாரணம்

* 4045—திரு. இரெ. இராசமாணிக்கம் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கடனை தீர்க்க முடியாமல் உள்ள கைத்தறி நெசவாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் வழங்கப்பட்டதை போல் கைத்தறி நெசவாளர்களுக்கும் கடன் நிவாரணம் வழங்கப் படுமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) யாரும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

10-00 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புத லோடு வினா நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைக் கைத்தறி நெசவாளர்களுக்கு எந் தெந்த காரியங்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடன் வழங்கப்படுகிறது? ஏழைக் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக கடன் வழங்கப்பட்டுள்ளதா? ஆமெனில், எவ் வளவு தொகை நிலுவையாக உள்ளது என்பதைத் தங்கள் மூல மாக நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள நெசவாளர்களுக்கு அந்தக் கடனைப் பொறுத்த அளவில் மூலப் பொருளான நூலும், பாவும், ஊடு நூலும் வழங்கப்பட்டு, அந்தத் துணி உற்பத்தி செய்யப்பட்டதற்குப் பின்னால் அது நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வரவு வைக்கப்படுகின்றது. அப்படி வரவு வைக்கின்ற நேரத்தில் அவர்கள் கூடுதலாகப் பெற்ற தொகையைக் கழித்துக் கொள்வதால் கடனுக்கு எந்தவித வாய்ப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள நெசவாளர்களுக்கு தறியை நவீனப்படுத்துவதற்கு ரூ. 200, மற்றும் ரூ. 400 மானியமாக அவர்களுக்கு கடனாக வழங்கப்படுகிறது. மேலும் வீட்டு வசதியைப் பொறுத்த அளவில் நெசவாளர் சங்கத்திலுள்ள நெசவாளர்களுக்கு ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 15,000 வழங்கப்படுகிறது. அந்த ரூ. 15,000-ல் ரூ. 5,000 மானியமாகவும், ரூ. 10,000 நீண்ட காலக் கடனாகவும் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தில் கடன் பெற்றவர்கள் எவ்வளவு பேர் என்கின்ற குறிப்பு தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்றபோது, ரூ. 5,000 மானியமாகவும், ரூ. 10,000 கடனாகவும் வழங்குவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு இனாமாக வீடு கட்டிக் கொடுப்பதைப்போல் கைத்தறி நெசவாளர்களுக்கும் இனாமாக ஒரு குறிப்பிட்ட அளவில் வீடு கட்டிக் கொடுக்க அரசுமுன்வருமா என்பதைத் தங்கள் மூலமாகத்தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலே உள்ள நெசவாளர்களைப் பொறுத்த அளவில் இந்த நடப்பாண்டில் நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 2,000 வீடுகள் கட்டுவதாக அறிவித்திருக்கிறார்கள். முன்பெல்லாம் ஓடு போட்ட வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இந்த ஆண்டு முதல் அந்த நெசவாளர்களுக்கு கான்கிரீட் வீடுகள், கூடுதலாக இரண்டு தறியை உள்ளடக்கிக் கொள்ளக் கூடிய வசதியான வீடுகள் இன்றைய தினம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இலவசமாக வீடுகள் வழங்கப்படுகின்ற குறிப்பு தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**டாக்டர் அம்பேத்கார் வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாகத் தயாரித்தல்.**

* கு. கா. வினா 10308—**திரு. இளம்வழுதி :**

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தீண்டாமை, சாதிக் கொடுமைகள் ஆகியவற்றை எதிர்த்துப் போராடிய சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை, அவரது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில் திரைப்படமாகத் தயாரித்து அனைத்து திரையரங்குகளிலும் வெளியிடுவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

டாக்டர் அம்பேத்கார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாகத் தயாரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகளை அரசு பரிசீலிக்கும்.

**திரு. இளம்வழுதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கிடைக்கும் என்பதைப்போல்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்கு ஒலிவாங்கியைத் தட்ட வேண்டியதில்லை. (சிரிப்பு)

**திரு. இளம்வழுதி :** என்பது வேத வாக்கு. ஆனால் தட்டாமலேயே திறக்கப்படுகின்ற அற்புதம், கேட்காமலேயே கொடுக்கப்படுகின்ற அதிசயம், தேடாமலேயே கிடைக்கின்ற ஆனந்தம் எங்கள் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. டாக்டர் அம்பேத்கார் பெயரிலே மாவட்டம், அம்பேத்கார் பெயரிலே சென்னை சட்டக் கல்லூரி, அம்பேத்கார் முழு உருவச் சிலை திறந்து வைக்கப்படும் என்கின்ற அளவில் அவர்களுடைய ஆட்சிக்கு உட்பட்டதை செய்து விட்டார். அதேபோல் தபால் தலையும் ஒரு ரூபாயிலே அம்பேத்கார் உருவப் படமும் பொறித்து வெளியிட வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தி இருக்கிற நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை உரிமையோடு கேட்கிறேன். டாக்டர் அம்பேத்காருடைய நூற்றாண்டு விழாவையும், பாவேந்தர் பாரதிதாசனுடைய நூற்றாண்டு விழாவையும் முன்னிட்டு சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய பெயரையும், சென்னை எழும்பூர் ரயில் நிலையத்திற்கு பாவேந்தர் பாரதி

தாசன் அவர்களுடைய பெயரையும் இட மத்திய அரசை அமைச்சரவர்கள் வற்புறுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். இரண்டில் ஒன்று என்னுடைய தொகுதியில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

10–05 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உறுப்பினர் அவர்கள் இங்கே அவருடைய வாழ்க்கை வரலாற்றை சினிமாப் படமாக தயாரிக்கக் கூடிய சாத்தியக்கூறு இருக்கிறதா என்ற கேள்வியைக் கேட்டிருந்தார்கள். இன்றைக்கு டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பற்றிய படம் ஒன்றை தனியார் தயாரிப்பாளர் ராஜாமணி என்பவரிடமிருந்து பெற்று அது காண்பிக்கப்பட்டது. மேலும் அதை நல்லமுறையிலே எடுப்பதற்கு அரசு பரிசீலனை செய்யும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு முதலமைச்சர் அவர்களைக் கலந்து அதைப் பற்றி பிறகு பதில் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

1—

### குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு மின் இணைப்பு

வினா 369—திரு. எம். சிரங்கன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேட்டூர் வட்டம் மாதையன் குட்டையில் உள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டிக்கு மின் இணைப்பு கொடுக்கப்படாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மாதையன்குட்டை (எச்) குடிநீர்த் திட்டம் மின் இணைப்பு பெறப்பட்டு 2–3–1989 அன்று பயனுக்கு கொண்டு வரப்பட்டது. மேற்படி திட்டம் 20–3–1989 அன்று ஊராட்சி ஒன்றியத்திடம் பராமரிப்புக்காக ஒப்படைக்கப்பட்டது.



2 —

Q. 426—**Thiru M. Sundara Das** : Will the Honcurable the Minister for Health be pleased to state—

(a) Whe.h r it is a fact that the Thuthocr Primary Health centre in Kanniyakumary District is without a doctor for many years:

(b) if so the reasons thereof?

### தூத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம்

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

3—

### குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டுதல்

வினா 1209—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம, லத்தூர் ஊராட்சி ஒன்றியம், முகையூர் காலனி, கோலமஞ்சி, ஆக்கினாம்பேடு ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திட்டம் நிறைவேறும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை. மேற்படி குடியிருப்புகளில் தற்போதுள்ள குடிநீர் வசதி போதுமானதாகும்.

4—

### கைப்பம்புகள் எண்ணிக்கை

வினா 1244—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் போடப்பட்டுள்ள கைப்பம்புகள் எத்தனை ?

விடை—

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், ஜோலார் பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 273 கைப்பம்புகள் போடப் பட்டுள்ளன.

5—

வினா 1245—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத் தூர் ஊராட்சி ஒன்றியத்தில் கைப்பம்புகள் போடப்பட்ட எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) எந்தெந்த இடத்தில் போடப்பட்டுள்ளது ?

விடை—

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத் தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 206 கைப்பம்புகள் போடப் பட்டுள்ளன.

(ஆ) அச்சமங்கலம் ஒன்றியத்தில் 5 குடியிருப்புகளுக்கும், அகரம் ஒன்றியத்தில் 8 குடியிருப்புகளுக்கும் ஆண்டியப்பன் ஒன்றியத்தில் 193 குடியிருப்புகளுக்கும் கைப்பம்புகள் போடப் பட்டுள்ளன.

6—

துவக்கப்பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டுதல்

வினா 1532—திரு. ஏ. ஜி. சம்பத்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம் காணை ஒன்றியத்தில் மரத்தடியில் இயங்கும் வெங்கர் ஊராட்சிப் பள்ளி, சாலவனூர் ஊராட்சிப் பள்ளி, பனைமலை ஊராட்சியிலுள்ள உமையாள் புரம் துவக்கப்பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு கட்டிடம் கட்ட அரசு முன் வருமா ?

விடை—

தென்னாற்காடு மாவட்டம் காணை ஒன்றியத்தில் வெங்கர் ஊராட்சிப் பள்ளி, சாலவனூர் ஊராட்சிப் பள்ளி, பனைமலை ஊராட்சியிலுள்ள உமையாள்புரம் துவக்கப்பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்ட முன்மொழிவு ஏதும் இதுவரை வரப்பெறவில்லை. எனவே இப்பணிகளை தற்போது எடுத்துச் செய்ய அரசு மட்டத்தில் திட்டம் எதுவும் இல்லை.



7—

வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா 1985—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படுகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக பெறப்பட்ட எல்.ஐ.சி. கடன் எவ்வளவு ?

விடை—

(அ) ஆம். திட்டம் செயலில் உள்ளது.

(ஆ) ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட கடன் தொகை ரூ. 240.00 லட்சங்கள்.

8—

வேடசந்தூரில் மின்வாரிய நிர்வாகப் பொறியாளர் அலுவலகம்

வினா 2566—திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா:

வேடசந்தூர் தொகுதி முழுமையும் உள்ளடக்கிய பகுதி களை இணைத்து வேடசந்தூரில் ஒரு மின்வாரிய நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரி சீலனையில் உள்ளதா ? இவ்வாண்டு அமைக்கப்படுமா ?

விடை—

மின்வாரிய வேலைப் பளு மற்றும் கோட்டம் முதலானது உருவாக்க வேண்டிய அளவுகோல் படி ஒரு கோட்டம் ஏற்படுத்த 4 உபகோட்டங்கள் இருக்க வேண்டும். தற்போது திண்டுக்கல் காயிதே மில்லத் மின் பகிர்மான வட்டத்தில் 22 உபகோட்டங் களும் 5 கோட்டங்களும் உள்ளன. புதிய ஆறாவது கோட்டம் அமைப்பதற்கு 24 உபகோட்டங்கள் தேவைப்படுகின்றன. ஆனால் தற்போது கூடுதலாக 2 உபகோட்டங்கள் உருவாக்க வேலைப் பளுவின் அடிப்படையில் இன்னும் தகுதி வரவில்லை யாதலால் வேடசந்தூரில் கூடுதலாக ஒரு கோட்டம் அமைக்க வழிமுறையில்லை.

9—

## திருநாகேசுவரம் பாரதி பட்டு கூட்டுறவு சங்கம்

வினா 3145—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1985–86, 1986–87, 1987–88, 1988–89-ஆம் ஆண்டுகளில் தஞ்சை மாவட்டம் திருநாகேசுவரம் பாரதி பட்டு கூட்டுறவு சங்கத்தின் தணிக்கை குறைபாடுகள் யாவை ?

(ஆ) Suspenseல் இங்கு பட்டுப் புடவைகள் பில் போடாமல் விற்பனை செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில் எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகள் பெரும்பாலும் சங்கத்திற்கு வரவேண்டிய தொகையை வசூல் செய்யாமை போன்ற நிர்வாக முறைகேடுகளை அடிப்படையாகக் கொண்டவை. கடுங்குறைகளோ சங்கத்தின் நிதிகளை முறைகேடாக பயன்படுத்தியதாகவோ சுட்டிக்காட்டப்படவில்லை.

(ஆ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

10—

## பரமக்குடியில் அரசு ஆதிதிராவிட நல மாணவிகள் விடுதி

வினா 3619—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடியில் அரசு ஆதிதிராவிட நல மாணவிகள் விடுதி எந்த ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது ?

(ஆ) செலவு தொகை எவ்வளவு ?

(இ) தற்பொழுது மாணவிகள் தங்கி உள்ளார்களா ?



விடை—

(அ) பரமக்குடி அரசு ஆதிதிராவிட நல மாணவிகள் விடுதி 4–4–83-ல் கட்டி முடிக்கப்பட்டது.

(ஆ) செலவுத் தொகை ரூ. 4.50 இலட்சம்.

(இ) இல்லை. மாணவிகள் தற்பொழுது பரமக்குடி ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதிக் கட்டிடத்தில் தங்கி உள்ளனர்.

11—

## தாய் சேய் நலப்பணிகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை.

வினா 3621—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டத்தில் Maternity Centre எத்தனை ? Family Planning Centre எத்தனை?

விடை—

தாய் சேய் நலப்பணிகள் மற்றும் குடும்ப நலப்பணிகள் செய்து வரும் துணை நிலையங்கள் 251.

ஆரம்ப சுகாதார நிலையங்கள் 43.

12—

## மகளிர் தையல் கூட்டுறவு நிலையம் அமைத்தல்

வினா 3974—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடி தொகுதி, வேந்தோணி பஞ்சாயத்தில் மகளிர் தையல் கூட்டுறவு நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

பரமக்குடி தொகுதி, வேந்தோணி பஞ்சாயத்தில் மகளிர் தையல் கூட்டுறவு நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

13—

சென்னை நகரில் சைக்கிள் மற்றும் சைக்கிள் ரிக்ஷாக்களில் விளக்குகள் இன்றிப் பயணம் செய்ததற்காக குற்றங்களின் எண்ணிக்கை.

Question 426—**THIRU M. SUNDARA DAS**: Will the Honourable the Minister for Transport be pleased to state :

(a) Whether a large number of cases of traffic offences for no lights in cycles and cycle-rickshaws have been detected in Madras City during the last two years;

(b) If so, the steps taken in this regard?

விடை—

(அ) மற்றும் (ஆ) : கடந்த 1987 மற்றும் 1988 ஆண்டுகளில், சென்னை மாநகரில் சைக்கிள் மற்றும் சைக்கிள் ரிக்ஷாக்களில் விளக்குகள் இன்றிப் பயணம் செய்ததற்காக முறையே 6,821 மற்றும் 3,418 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது போன்ற குற்றங்களைக் கண்டு பிடிப்பதன் நோக்கம் சைக்கிள் மற்றும் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்களிடம் ஒழுங்கு முறையை ஏற்படுத்தவும் மற்றும் விபத்துக்களைத் தடுக்கும் பொருட்டே ஆகும்.

14—

சென்னை நகரில் மாருதி காருக்கு டாக்சி பெர்மிட் வழங்கும் திட்டம்.

வினா 4138—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மாநகரில் மாருதி காருக்கு டாக்சி பெர்மிட் வழங்கும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதுவரை அவ்வாறு பெர்மிட் கோரி விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) அதற்கு அரசு எடுத்துள்ள முடிவு என்ன ?

விடை—

(அ) அரசாணை (நிலை) எண் 3314, உள்துறை, நாள் 1-12-1986-ன் படி மாருதி கார்களுக்கு டாக்சி அனுமதி சீட்டு வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) மற்றும் (இ) இதுவரை சென்னை மாநகரில் மாருதி கார்களுக்கு டாக்சி அனுமதிச் சீட்டு கோரி 143 விண்ணப்பங்கள் வந்தன. அவற்றில் 9 விண்ணப்பங்களுக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டன. போதிய விவரங்கள் சமர்ப்பிக்காததால் இதர விண்ணப்பங்களுக்கு டாக்சி அனுமதிச் சீட்டு வழங்கப்படவில்லை.





15—

தமிழ்நாடு கோ-ஆப்டெக்ஸ் சார்பாக கடல் கடந்த வாணிபம்.

வினா 4370—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு கோ-ஆப்டெக்ஸ் சார்பாக கடல் கடந்த வாணிபம் நடைபெறுகிறதா ?

(ஆ) ஆம் எனில், என்ன ரகம் விற்பனையாகிறது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கோ-ஆப்டெக்ஸ் தன்னுடைய விற்பனையைப் பெருக்குவதற்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய கீழ்க்கண்ட ரகங்களை விற்பனை செய்கின்றது:

1. துவாலைகள்
2. மேஜை விரிப்புகள்
3. படுக்கை விரிப்புகள்
4. தேநீர் துவாலைகள்
5. திரைச் சீலைகள்.

16— நகர் ஊரமைப்புத் துறையில் முதுநிலைப்பட்டம் பெற்றவர்களுக்கு வேலை.

வினா 4414—திரு. கோ. வீரையன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகர் ஊரமைப்புத் துறையில் முதுநிலைப் பட்டம் பெற்றவர்கள் தமிழகத்தில் பல ஆண்டுகளாக வேலை இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முன் வருமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இது குறித்து பணி விதி திருத்தங்கள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

17—

கடையத்திற்கு புதிய பேருந்து விடுதல்.

வினா எண் 4754—திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சம்பன் குளம், கோவிந்தபேரி, மந்தியூர் வழியாக கடையத்திற்கு புதிய பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ):

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தால் 12-9-1989 தேதி முதல் தென்காசியில் இருந்து கடையம், மந்தியூர், கோவிந்தபேரி, அழகப்பபுரம் வழியாக கடையத்திற்கு ஒரு நகரப் பேருந்து 14 நடைகள் வீதம் இயக்கப்படுகின்றது.

18—

சுடுகாட்டிற்குச் செல்லும் பாதையைச் சீர் செய்தல்.

வினா எண் 4971—திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், வி. கே. புரம் பேரூராட்சி, ராமலிங்கபுரம் தெரு, பூந்தோட்டம் அருந்ததியர் தெரு, சாலை தெரு, அம்பலவாணபுரம் தெரு, கட்டபுளி தெரு, மீனாட்சிபுரம் தெரு பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் உபயோகித்து வரும் சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை குண்டும் குழியுமாக இருப்பதைச் சீர் செய்ய பல ஆண்டுகளாகக் கோரியும் சீர் செய்யப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது சீர் செய்யப்படும் ?





விடை—

(அ) மற்றும் (ஆ) :

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், வி. கே. புரம் பேரூராட்சி, ராமலிங்கபுரம் தெரு, பூந்தோட்டம் அருந்ததியர் தெரு, சாலை தெரு, அம்பலவாணபுரம் தெரு, கட்டபுளி தெரு, மீனாட்சிபுரம் தெரு பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் உபயோகித்து வரும் சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை சீர் செய்யும் வேலை ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் நலத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

19—

ஓட்டல் பண்டங்களின் எடைக் குறைவு சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட வழக்குகள்.

வினா 5256—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1987 முதல் 1988 வரை தமிழ்நாடு ஓட்டல்களில் பண்டங்களின் எடைக் குறைவு, அதிக விலையில் விற்றல் ஆகிய குற்றங்களுக்காக யார் மீதேனும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டனவா ?

(ஆ) ஆம் எனில், மாவட்ட வாரியாக விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) :

தமிழ்நாட்டிலுள்ள ஓட்டல்களில் விற்கப்படும் உணவுப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த சட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, ஓட்டல்களில் விற்கப்படும் உணவுப் பண்டங்களின் எடைக் குறைவு மற்றும் அதிக விலை தொடர்பாக வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை.

[1990 மே 12

20—

குன்னத்தூர் அருகே பெரிய ஏரி கட்டும் திட்டம்.

வினா 5519—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வடஆற்காடு – அம்பேத்கார் மாவட்டம், சோலையார் பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஏலகிரி மலை அடிவாரத்தில் உள்ள குன்னத்தூர் அருகே ஒரு பெரிய ஏரி கட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

விடை—

இத்திட்டத்தினை பொதுப்பணித்துறை ஆய்வு செய்ததில் ஆயக்கட்டுதாரர்கள் தங்கள் நிலத்தை விட்டுக் கொடுக்க மறுத்ததாலும் அவ்விடம் மலைச்சரிவில் அமைந்துள்ளதால், போதுமான நீர்ப்பிடிப்பு பரப்பு கிடைக்காததுடன் விரைவில் தூர்ந்து போகவும் வாய்ப்பு உள்ளது என்று தெரிய வந்த காரணத்தாலும் இத்திட்டம் கைவிடப்பட்டுவிட்டது.

21—

பரமக்குடி, நயினார்கோவில் ஒன்றியங்களில் ஆதிதிராவிடர் காலனிகள் கட்ட தேர்ந்தெடுத்த கிராமங்கள்.

வினா 5622—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, போகலூர், நயினார்கோவில் ஒன்றியங்களில் 1989-90 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் காலனிகள் கட்ட தேர்ந்தெடுத்த கிராமங்கள் யாவை ?



1990 மே 12]

விடை—

| ஊராட்சி ஒன்றியத்தின் பெயர். (1) | | கிராமத்தின் பெயர். (2) |
|---|---|---|
| 1. பரமக்குடி | .. | 1. மேலப்பார்த்திபனூர். |
| | | 2. பொன்னாக்கரை. |
| | | 3. நெம்மேலி. |
| | | 4. உரக்குடி. |
| 2. போகனூர் | .. | 1. எட்டிவயல். |
| | | 2. அ. புதூர். |
| | | 3. சத்திரக்குடி. |
| | | 4. மண்ணந்தி நாக்காச்சி. |
| | | 5. வேப்பங்குளம். |
| 3. நயினார் கோவில் | .. | 1. எஸ். சிறுவயல். |
| | | 2. கிளியூர். |
| | | 3. கொல்லனூர். |

22—

கடையம் ஒன்றியம், கோவிந்தபேரி கிராமத்திற்கு பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா 5771—திரு கே. ரவி அருணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், கடையம் ஒன்றியம், கோவிந்தபேரி கிராமத்திற்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

[1990 மே 12

விடை—

(அ) மற்றும் (ஆ):

இல்லை. ஏனெனில், கோவிந்தபேரி கிராமத்திற்கு 1987-ல் குறைந்தபட்ச திட்டத்தின்கீழ் கையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்பட்டுவிட்டபடியால் தற்பொழுது அது பகுதியாக குடிநீர் வசதி பெற்ற கிராமம் ஆகும். வரும் நிதியாண்டில் ஓரளவு வசதி பெற்ற கிராமங்களுக்கு முழு நிறைவு குடிநீர் வசதி செய்து தரும் திட்டத்தின்கீழ் இக்கிராமத்திற்கு திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

23—

எடப்பாடி ஒன்றியம், தாதாபுரம் நடுநிலைப் பள்ளியை அரசினர் உயர்நிலைப் பள்ளியாக மாற்றுதல்.

வினா 5914—திரு க பழனிசுவாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், தாதாபுரம் நடுநிலைப்பள்ளி, அரசினர் உயர்நிலைப் பள்ளியாக மாற்றி அமைக்கப்படுமா?

விடை—

அரசாணை (நிலை) எண். 696, கல்வி, நாள்: 21–6–1989-ல் சேலம் மாவட்டம் தாதாபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை 1989-90-ம் கல்வி ஆண்டில் அரசினர் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி, அரசு ஆணையிட்டுள்ளது.

24—

தனியாக அமுதம் அங்காடி துவங்குதல்

வினா 5942—திரு ஆர் சிங்காரம்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெற்கில்) தனியாக அமுதம் அங்காடி துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



1990 மே 12]

விடை—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெற்கில்) தனியாக அமுதம் அங்காடி துவங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லாதபோதும் பொதுமக்கள் நலன் கருதி அதம்பை (தெற்கில்) ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை திறந்து வாரத்தில் 3 நாட்கள் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

25—

தர்மபுரி மாவட்டத்தில் கட்டி முடிக்கப்பட்டு இயங்காமல் இருக்கும் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் எண்ணிக்கை.

வினா 5981—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தர்மபுரி மாவட்டத்தில் கட்டி முடிக்கப்பட்டு இயங்காமல் இருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எத்தனை?

(ஆ) விவரம் என்ன?

விடை—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் கட்டி முடிக்கப்பட்டு இயங்காமல் இருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் எண்ணிக்கை 133.

(ஆ) கீழ்க்காணும் காரணங்களால் இயங்கவில்லை:

| | | |
|---|---|---|
| 1. உபகரணங்கள் பற்றாக்குறை | ... | 78 |
| 2. பொதுமக்கள் ஆட்சேபனை | ... | 8 |
| 3. நீர்வரத்துக் குறைவு | ... | 9 |
| 4. வறண்ட ஆழ்துளைக் கிணறுகள் | .. | 32 |
| 5. நீதிமன்ற வழக்கு | .. | 1 |
| 6. மோட்டார் பொருத்துவதில் குறைபாடு | ... | 3 |
| 7. தொட்டி பழுது | ... | 1 |
| 8. தண்ணீர் பயன்படுத்த இயலாதது | ... | 1 |
| மொத்தம் | .. | 133 |

26— [1990 மே 12

**தமிழக அரசு நர்த்தகி மற்றும் அரசு கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள்.**

வினா 5997—திரு என். பழனிவேல் : மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1977 முதல் 1988 ஆம் ஆண்டு வரை தமிழக அரசு நர்த்தகி மற்றும் அரசு கலைஞர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் என்னென்ன ?

(ஆ) இதனால் அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு ?

விடை—

(அ) 1977 முதல் 1988ஆம் ஆண்டு வரை அரசு நர்த்தகி மற்றும் அரசு கலைஞர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு திங்களொன்றுக்கு மதிப்பூதியமாக ரூ. 1,000 மட்டும் வழங்கப்பட்டது.

(ஆ) இதனால் அரசுக்கு ரூ. 9,95,331 செலவாகியுள்ளது.

27—

**தர்மபுரி மாவட்டத்தின் ஏரிகளின் எண்ணிக்கை.**

வினா 6239—திரு எம். அண்ணாமலை : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தர்மபுரி மாவட்டத்திலுள்ள மொத்த ஏரிகள் எத்தனை ?

(ஆ) ஏரிகளை ஆழப்படுத்தவும், பழுது பார்க்கவும் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) தர்மபுரி மாவட்டத்திலுள்ள மொத்த ஏரிகளின் எண்ணிக்கை 2,465.



(ஆ) ஏரிகளை தூர் வாரி ஆழப்படுத்தும் பணியும், பழுது பார்க்கும் பணியும் ஆண்டு தோறும் செய்யப்படும் நிதி ஒதுக்கம் இடம் தரும் அளவுக்கு, எடுத்துச் செய்யப்பட்டு வருகின்றன. 1989–90 ஆம் ஆண்டில் தர்மபுரி மாவட்டத்தில் ஏரிகளை பழுது பார்க்கும் பணிக்கென எடுத்துக் கொள்ளப்பட்ட 27 பணிகளில், 12 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

28—

**ஒட்டப்பிடாரம் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதிகளை விரிவுபடுத்துதல்.**

வினா 6252 –திரு எம் முத்தையா ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

ஒட்டப்பிடாரம் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதிகளை விரிவுபடுத்தவும், கூடுதல் பெண் மருத்துவர்களை நியமிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை –

அரசின் நிதி ஆதாரங்களைப் பொறுத்து இது பற்றி வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கலாம் எனக் கருதப்படுகிறது.

29—

**காட்டுக் காலனியிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா**

வினா 6288—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுராந்தகம் நகராட்சி, காட்டுக் காலனியில் வசித்து வரும் ஆதி திராவிட மக்கள் தங்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க மனுச் செய்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) தற்பொழுது நிலுவையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

டி. 2 ஏ 53-142—14

30—

வெள்ளாளங்காட்டில் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் திட்டம்.

வினா 6552—திரு ஆர். சிங்காரம் ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வெள்ளாளங்காட்டில் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

ஆம். நடப்பு ஆண்டில் ஆயுள் காப்பீட்டுக் கழக கடனுதவியுடன் ரூ. 2.12 இலட்சம் மதிப்பீட்டில், 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டியும், 1.5 கி. மீ. நீளத்திற்குப் பகிர்மான குழாயும் 4 பொது குடிநீர்க் குழாய்களுடன் கூடிய மின் விசைத் திட்டம் செயல் படுத்தப் பட்டு வருகிறது. இவ்வாண்டு மார்ச் மாதத்தில் திட்டப் பணிகள் முடிவுறும்.

31—

சர்க்கரை ஆலைகளுக்குள்ள பகுதிகளில் ஈ எஸ் ஐ மருத்துவமனை வசதி.

வினா 6681—திரு. எஸ். டி. உகம்சந்த் ; மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

''தமிழகத்தில் உள்ள எல்லா சர்க்கரை ஆலைகள் உள்ள பகுதிகளில் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை வசதி செய்து தரப் படுமா ?''

விடை—

சர்க்கரை ஆலைகள் பருவ கால தொழிற்சாலைகளாகும் ( Seasonal Factories ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டம் ( Employees State Insurance Act ) பருவ கால தொழிற்சாலைகளுக்குப் பொருந்தாது. எனவே, சர்க்கரை ஆலைகள் உள்ள பகுதிகளுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவவசதி செய்து தரும் பிரச்சனைக்கு இடமில்லை.



32—

செய்யூர் மருத்துவமனையை வட்டத் தலைமை மருத்துவமனையாக மாற்றும் திட்டம்

வினா 6703—திரு. எஸ். டி. உகம்சந்த் ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செய்யூர் மருத்துவமனையை வட்ட தலைமை மருத்துவமனையாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

செய்யூரிலுள்ள மருத்துவமனை அரசு வட்டத் தலைமை மருத்துவமனையாகச் செயல் படுவதால் இக்கேள்விக்கிடமில்லை.

33—

செய்யூர் வடக்கு காலனி சமுதாய நலக் கூடம்

வினா 6787 – திரு எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) செங்கை—அண்ணா மாவட்டம் செய்யூர் வட்டம், செய்யூர் வடக்கு காலனி சமுதாய நலக் கூடம் கடந்த பத்து ஆண்டுகளாக இடிந்து பயன் படுத்த முடியாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

விடை –

(அ) ஆம்.

(ஆ) சமுதாய நலக் கூடம் ஆதி திராவிடர் நலத் துறை மூலமாக 1958-ல் திறக்கப்பட்டு, சுமார் இருபது ஆண்டுகள் உபயோகத்தில் இருந்து வந்துள்ளது. கால நிலை மாறுபாட்டில் பழுது பட்டு விட்டது. இக்கட்டிடத்தைப் பழுது பார்ப்பதை விட புதிய தொரு சமுதாய நலக் கூடம் கட்ட, அரசு பரிசீலித்து வருகிறது.

[1990 மே 12

34 —

## இலஞ்ச வழக்கில் தொடரப்பட்ட வழக்குகள்

வினா 6816—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1980 முதல் 1989 வரை லஞ்ச ஒழிப்பில் தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(ஆ) அவற்றில் தண்டனை அடைந்த வழக்குகள் எத்தனை?

விடை—

(அ) 1980 முதல் 1989 வரை ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறையினால் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகள் 220.

(ஆ) இவற்றில் தண்டனை அடைந்த வழக்குகள் 59.

(மீதமுள்ள 161 வழக்குகளில், 54 வழக்குகள் தண்டனை அளிக்காமல் கைவிடப்பட்டும், 107 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையிலும் உள்ளன.)

35—

## காடனந்தக்குடி ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின் வசதி

வினா 6922—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, நயினார்கோவில் ஒன்றியத்தில் காடனந்தகுடி ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் வசதி எப்போது கிடைக்கும் ?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி நயினார்கோவில் ஒன்றியத்தில் காடனந்தகுடி கிராமத்தில் உள்ள மூன்று ஆதி திராவிடர்கள் குடியிருப்புகளுக்கும் 1-4-1990-க்குள் மின்வசதி அளிக்கப்பட்டுவிடும்.



1990 மே 12]

36—

## ஓனம்பாக்கம் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா.

வினா 6957—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுராந்தகம் வட்டம், ஓனம்பாக்கம் ஆதி திராவிட மக்களுக்கு எஸ். நம்பர் 395, 397/2-ல் வீட்டு மனைப் பட்டா வழங்கக் கோரி அரசுக்கு மனுச் செய்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில் அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

(அ) தற்பொழுது நிலுவையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

37—

## விளையாட்டு அரங்கம் நிறுவும் செயற் குறிப்பு.

வினா 6988—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரு விளையாட்டு அரங்கம் நிறுவ அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை, எனினும் ஊராட்சி ஒன்றியங்களில் விளையாட்டு அரங்கம் கட்டும் திட்டம் நிதி வசதி பெருகுங் காலத்தில் பரிசீலிக்கப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

[1990 மே 12

38—

**1988–89-ல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் செலவு செய்யப்பட்ட தொகை.**

வினா 6992—திரு. எஸ்.டி. உகம்சந்த் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1988–89-ல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் எவ்வளவு செலவு செய்யப்பட்டுள்ளது ?

(ஆ) அதில் மத்திய, மாநில அரசுகளின் பங்கு எவ்வளவு ?

(இ) இதன் மூலம் எவ்வளவு தொகைக்கு நிலையான சொத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன ?

(ஈ) எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டியுள்ளது ?

விடை—

(அ) ரூ. 8,814.676 இலட்சமாகும்.

(ஆ) 50 : 50 ஆகும்.

(இ) ரூ. 8,473.426 இலட்சமாகும்.

(ஈ) 442.414 இலட்ச மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

39—

**பண்டைக் கால வழிபாட்டுச் சிலைகள் மற்றும் கல்வெட்டுக்கள்.**

வினா 7014—திரு. எஸ்.டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா :

(அ) 1989 ஆம் ஆண்டு தமிழக தொல் பொருள் ஆய்வுத் துறை, செங்கை—அண்ணா மாவட்டத்தில் பண்டைக் கால வழிபாட்டுச் சிலைகளும், கல்வெட்டுக்களும் கண்டு பிடித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



1990 மே 12]

விடை—

(அ) ஆம்.

(ஆ) செங்கை—அண்ணா மாவட்டப் பகுதி காலத்தால் மிகவும் பழமை வாய்ந்ததாகும். இம்மாவட்டத்தில், கற்காலக் கருவிகளும், முதுமக்கள் தாழிகளும் முன்னரே கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. 1989 ஆம் ஆண்டில் பல்லவர் காலத் துர்க்கைச் சிற்பம் ஒன்றும், விசயநகர மன்னர் கால மூன்று கல்வெட்டுக்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

40—

**கூட்டுறவுத் துறை ஊழியர்களின் சம்பளங்கள் பற்றி ஆராய தனி ஊதியக் குழு.**

வினா 7040—பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கூட்டுறவுத் துறை ஊழியர்களின் சம்பளங்கள் பற்றி ஆராய தனி ஊதியக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) கூட்டுறவுத் துறை ஊழியர்கள் அரசு ஊழியர்களாவர். அரசு ஊழியர்களின் சம்பளத்தை நிர்ணயிக்க அமைக்கப்படும் ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி ஏனைய துறை அரசு ஊழியர்களுக்கு ஊதியம் நிர்ணயம் செய்வது போல் கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கும் ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கப்படுகிறது. எனவே அவர்களது ஊதியம் பற்றி ஆராய தனி ஊதியக் குழு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

41—

**நாடங்காட்டில் நியாயவிலைக் கடை அமைக்கும் திட்டம்.**

வினா 7190—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

[1990 மே 12

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் நாடங்காட்டில் ஒரு நியாயவிலைக் கடை துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் நாடங்காடு கிராமத்தில் தனியாக ஒரு நியாய விலைக் கடை துவங்க அரசால் செயற் குறிப்புகள் ஏதும் பெறப்படவில்லை. இருப்பினும் இக்கிராம மக்கள் நலன் கருதி தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரால் பட்டுக்கோட்டை வட்டம் நாடங்காடு கிராமத்தில் பகுதி நேர அங்காடி அமைத்து வாரத்தில் மூன்று நாட்கள் பொருட்களை தட்டுப்பாடின்றி வழங்கிட ஆணைகள் வெளியிடப் பட்டுள்ளன.

42—

பட்டுக்கோட்டை, பள்ளிக்கொண்டானில் தனி டிரான்ஸ்பார்மர் அமைக்கும் திட்டம்.

வினா 7192—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிகொண்டானில் தனி டிரான்ஸ்பார்மர் வைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை, பள்ளிகொண்டான் கிராமத்திற்கு சேந்தன்கோரை டிரான்ஸ்பார்மர் 1-லிருந்து மின் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இங்கு தற்காலிகமாக நிலவிய குறைந்த மின் அழுத்தம் சீர் செய்யப்பட்டு விட்டதால் புதிதாக மின் மாற்றி அமைக்கத் தேவை இல்லை.

43-

தமிழகத்தில் அனைத்து பள்ளிகளிலும் பெற்றோர்—ஆசிரியர் சங்கங்கள்.

வினா 7234—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் பெற்றோர்—ஆசிரியர் சங்கங்கள் செயல்படுகின்றனவா ?



1990 மே 12]

(ஆ) அவை நல்ல முறையில் செயல்பட அரசு நிதியுதவி செய்து வருகின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மாநிலத்திலுள்ள மொத்தம் 38,885 பள்ளிகளில் 30,059 பள்ளிகள் மட்டுமே பெற்றோர் - ஆசிரியர் கழகம் விதிகளைப் பின்பற்றி செயல்படுகின்றன. அனைத்துப் பள்ளிகளிலும் பெற்றோர் - ஆசிரியர் கழகம் அமைத்துச் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) அரசு நிதியுதவி ஏதுமில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

44—

1988-ல் நடப்பட்ட புதிய மரங்கள்.

வினா 7338—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தேசிய நெடுஞ்சாலை நம்பர் 45-ல் சாலைகளின் இரு புறமும் எத்தனை புதிய மரங்கள் 1988 முதல் நடப்பட்டுள்ளன ?

விடை—

3,82,500 மரங்கள் நடப்பட்டுள்ளன.

45—

பரமக்குடி அருகே உள்ள சோமநாதநகர் குடியிருப்புக்கு நகரப் பேருந்து.

வினா 7533—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அருகே உள்ள சோமநாதநகர் குடியிருப்புக்கு டவுன் பஸ் விடப்படுமா ? (பரமக்குடி—பொதுவக்குடி).

[1990 மே 12

விடை—

பிரதான சாலையிலிருந்து சோமநாதபுரம் காலனி செல்லும் வழித் தடத்தில் ஆளில்லாத இரயில்வே கேட் ஒன்று அமைந்துள்ளது. இதை கடந்து பேருந்து சோமநாதபுரம் காலனிக்கு செல்ல அனுமதியில்லை. எனவே சோமநாதபுரம் காலனிக்கு நகரப் பேருந்து இயங்க இயலாது.

46—

**ஆதி திராவிட மாணவர் விடுதி கட்டும் திட்டம்.**

**வினா** 7581—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியத்தில் காமன்கோட்டையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு ஆதிதிராவிட மாணவர் விடுதி கட்டித் தரப்படுமா ?

விடை—

தற்போது இல்லை.

47—

**நன்னிலம் மேல் நிலைப் பள்ளி விளையாடும் இடம் சீர் செய்தல்.**

வினா 7657—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், நன்னிலம் மேல் நிலைப் பள்ளி விளையாடும் இடம் சீர் செய்ய அரசிற்கு வேண்டுகோள் வரப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



1990 மே 12]

48—

**ஆதி திராவிடர் வீட்டு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்.**

வினா 7672—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதி திராவிடர் வீட்டு வளர்ச்சிக் கழகம் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) தாட்கோ மூலம் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டும் திட்டம் 1989–90-ல் இல்லை. 1990–91-ல் தாட்கோ மூலம் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

49—

**ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஊராட்சிகளுக்கு அலுவலகக் கட்டிடம்**

வினா 7926—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் நடப்பு நிதி ஆண்டில் எத்தனை ஊராட்சிகளுக்கு அலுவலகக் கட்டிடம் கட்ட திட்டமிடப்பட்டது.

(ஆ) நத்தம் தொகுதியில் இவை எந்தெந்த ஊராட்சிகளுக்கு கட்டப்பட அனுமதிக்கப்பட்டு அவற்றிற்கான கட்டுமானப் பணிகள் நடக்கின்றன ?

விடை—

(அ) 29 ஊராட்சிகளில் கட்டிடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன.

(ஆ) கீழ்க்கண்ட 5 ஊராட்சிகளுக்கு அலுவலகக் கட்டிடம் கட்ட அனுமதிக்கப்பட்டு அவை அனைத்தும் முடிக்கப்பட்டு விட்டன.

1. கோட்டையூர் ஊராட்சி.
2. குட்டுப்பட்டி ஊராட்சி.
3. லிங்கவாடி ஊராட்சி.
4. சமுத்திராப்பட்டி ஊராட்சி.
5. செந்துறை ஊராட்சி.

50—

உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக மாற்றுதல்

வினா 8094—திரு. எம். முகம்மது சித்திக்—மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பூம்புகார் தொகுதியில் உள்ள திருக்களாச்சேரி தேசிய உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக மாற்ற அரசு முன் வருமா ?

விடை—

இப்பொருள் தொடர்பாக உயர் மட்டக் குழுவின் பரிந்துரைக்கேற்ப அரசால் பரிசீலிக்கப்படும்.

51—

மருத்துவமனைக்கு குடி தண்ணீர் வசதி

வினா 985—திரு. ஆலவயல் சுப்பையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பொன்னமராவதி வலையப்பட்டி பாப்பாயி மருத்துவமனையில் போதிய குடிதண்ணீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா :

விடை—

குடிதண்ணீர் வசதியை அதிகரிக்கும் பொருட்டு ஒரு போர்வெல் அமைக்கப்பட்டுள்ளது. மேல்நிலைத் தொட்டியில் தண்ணீர் நிரப்பப்பட்டு மருத்துவமனையின் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.



52—

சாலை செப்பனிடுதல்

வினா 1135—திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செய்யாறு தொகுதி, வடபூண்டிப்பட்டு கிராமத்திற்குச் செல்கிற டி. 56 நகரப் பேருந்து செல்லும் சாலை செப்பனிடப்படுமா ?

விடை—

மேற்கண்ட சாலை 1988-89 ஆம் ஆண்டில் செய்யார் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ. 9,000 செலவில் பழுது பார்க்கப்படுகின்றது.

53—

மதுராந்தகம் தாலுகா அரசு பொது மருத்துவமனை

வினா 1478—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுராந்தகம் தாலுகா அரசு பொது மருத்துவமனை Selection Grade மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படுமா ?

(ஆ) இந்த மருத்துவமனையில் உள்ளிருப்பு நோயாளிகளின் படுக்கை வசதி அதிகப்படுத்தப்படுமா ?

விடை—

(அ) மருத்துவப் பணிகள் இயக்குநர் வரம்பில் இயங்கும் அரசு மருத்துவமனை சாதாரண நிலை, தேர்வு நிலை என்று பாகுபடுத்தப்படவில்லை என்பதால் இக் கேள்விக்கு இடமில்லை.

(ஆ) மருத்துவமனைத் தேவைகளுக்கேற்பவும் அரசின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டும் தேவைப்படின் படிப்படியாக படுக்கை வசதிகள் அதிகரிக்கப்படுகின்றன.

54—

தனியார்கள் நடத்தும் சுற்றுலா இடங்கள்.

வினா 3475—திரு. சு. குருநாதன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் கோல்டன் பீச் போன்று தனியார்கள் நடத்தும் சுற்றுலா இடங்கள் எத்தனை ?

(ஆ) அவற்றை ஊக்குவிக்க அரசு திட்டம் ஏதேனும் வைத்துள்ளதா ?

விடை—

(அ) தமிழகத்தில் கோல்டன் பீச் போன்று தனியார் நடத்தும் சுற்றுலா இடங்கள் ஆறு உள்ளன. அவை பின்வருமாறு :—

1. கோல்டன் பீச்.
2. புகாரிஸ் புளு லாகூன்.
3. பிஷர்மென் கோவ்.
4. ஐடியல் பீச்.
5. கோல்டன் சன்.
6. சில்வர் சேண்ட்ஸ்.

இந்த ஆறு சுற்றுலா இடங்களும் சென்னை—மாமல்லபுரம் சாலையில் உள்ளன.

(ஆ) தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கு தனியார் துறையின் திட்டங்களும் மிக அவசியம் என்ற அடிப்படையில் இப் பிரச்சினை அணுகப்படுகிறது.

55—

பாலம் கட்டுதல்.

வினா 3519—திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலூர் பஞ்சாயத்து யூனியன் கீழ்குமாரமங்கலம்—செல்லஞ்சேரி சாலையில் உள்ள ஓடையிலும், சந்திக்குப்பம் ஓடையிலும் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?



விடை—

குமாரமங்கலம் - செல்லஞ்சேரி சாலையில் கி. மீ. 0/10-ல் உள்ள ஓடையில் தரைப் பாலம் கட்டும் பணி 1989-90 ஆம் நிதியாண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டு நடைமுறை முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணி விரைவில் முடிவுக்கு வரும்.

சந்திக்குப்பம் சாலையில் கி. மீ. 0/2-ல் குறுக்கிடும் ஓடையில் ஆறு வரிசை குழாய் தாம்போகி கட்டும் பணி கரும்பு சாலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

56—

தொண்டமுத்தூர் மருத்துவமனையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வீடுகள்.

வினா எண் 3792—திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டத்தில் தொண்டாமுத்தூர் மருத்துவமனையில் காலியிடத்தில் அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் கட்டப்படும்?

(இ) எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

(இ) இக்கேள்வி எழாது.

57—

ஏரிகள் நவீனப்படுத்தல்.

வினா எண் 3835—திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

[1990 மே 12

(அ) ஐரோப்பிய திட்டத்தில் கண்மாய் புனருத்தானம் (Tank Modernisation Scheme) திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி பொதுப்பணித் துறை கோட்டம், கமுதி தாலுகா, மேலராமநதிக் கண்மாய் மராமத்து செய்ய அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எப்பொழுது செயல்படும் ?

விடை—

(அ) ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் உதவியுடன் ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப் படும் ஏரிகள் (1) மழையினால் நிரம்பும் ஏரிகளாக இருக்க வேண்டும். (2) 100 முதல் 200 ஹெக்டேர் பாசனப் பரப்பு உள்ளவையாக இருக்க வேண்டும். இந்த மேலராமநதிக் கண்மாய் (கமுதி தாலுகா) முறைப்படுத்தப்பட்ட ஏரியின் ( System Tank) கீழ் வருவதாலும், 41.30 ஹெக்டேர் பாசனப் பரப்பளவு உள்ளதாலும் ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் உதவியுடன் கூடிய ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டத்தில் எடுத்துக்கொள்ள சாத்தியக் கூறு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

58—

வாலாங்குளத்தை ஆழப்படுத்தி கரைகளை வலுப்படுத்துதல்.

வினா 4537—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாநகரின் கிழக்குப் பகுதியில் அரசு மருத்துவமனைக்கு எதிரில் உள்ள வாலாங்குளத்தை ஆழப்படுத்தி கரைகளை வலுப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) இது போன்ற கருத்துரு பரிசீலனையில் இல்லை. மேலும் வாலாங்குளத்தை தற்சமயம் ஆழப்படுத்தவோ அல்லது கரையை (பை பாஸ் சாலை) பலப்படுத்தவோ வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. கரை மீது தார் ரோடு போடப்பட்டு கரை மேல்மட்டம் நல்ல முறையில் நெடுஞ்சாலைத் துறை



[1990 மே 12]

மூலம் பராமரிக்கப்படுகிறது. கரையின் உள் பகுதி (வாட்டர் ஸ்ப்ரெட் ஏரியா) பொதுப்பணித்துறை மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழாது.

59—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா 4652—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, பள்ளத்தூர் வடக்குப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

பள்ளத்தூர் குடியிருப்பிற்கு தற்போது முழுமையான அளவில் குடிநீர் வசதி அளிக்கப்பட்டுவிட்டது வினாவில் குறிப்பிடப் பட்டு இருக்கும் பள்ளத்தூர் வடக்கு, பள்ளத்தூர் குடியிருப்பின் ஒரு பகுதிதான். தனிக் குடியிருப்பு அல்ல. இந்த வடக்கு பகுதிக்கு பள்ளத்தூர் குடிநீர் திட்டத்திலிருந்து ஒரு பொது குடிநீர் குழாய் அமைத்து குடிநீர் வசதி அளிக்கப்பட்டு விட்டது. எனவே, தனியே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பள்ளத்தூர் வடக்குப் பகுதியில் அமைத்துத் தர விதிகளின்படி திட்டம் ஏதும் இல்லை.

D
V211,31'N90
N90.34.2

60—

மீன் எண்ணெய் காய்ச்சும் நிலையம்.

வினா 4658—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரையில் மீன் எண்ணெய் காய்ச்சும் நிலையம் மீண்டும் செயல்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

டி. 2 ஏ 53-142—16

143986

61— [1990 மே 12

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

வினா 4698—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிபுறக்கரை ஊராட்சி ஆதி திராவிடர் தெருவில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

ஏரிபுறக்கரை ஆதி திராவிடர் தெருவின் மக்கள் தொகை 300 மட்டுமே. எனவே, தற்போதுள்ள குடிநீர்த் திட்டத்திலிருந்து ஒரு குழாய் இணைப்பை நீட்டித்து இங்கு குடிநீர் வசதி செய்ய 1990-91 ஆம் ஆண்டு-வரவு செலவுத் திட்டத்தில் வகை செய்யப்படும்.

62—

### மீனவர் காலனி கட்டுதல்.

வினா 4715—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி ஏரிப்புறக்கரை மீனவர்களுக்கு மேலும் மீனவர் காலனி கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

63—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி.

வினா 4784—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, கஞ்சங்காடு ஆதி திராவிடர் காலனியில் இயங்காமலிருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை இயங்க வைக்க அரசு ஆவன செய்யுமா ?



1990 மே 12]

விடை—

கஞ்சங்காடு ஆதி திராவிடர் காலனியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மின் விசைத் திட்டம் பழுது நீக்கம் செய்யப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது. மேலும் 1983 மற்றும் 1987 ஆம் ஆண்டுகளில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் இரு கையிறைப்பான் திட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

64—

### தடுப்புச் சுவர் கட்டுதல்.

வினா 5083—திரு. சு. குருநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைச் சுற்றி தடுப்புச் சுவர் கட்டாததால் பல்வேறு தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

(அ) தவறுகள் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

(ஆ) இவ்வினா எழாது.

65—

### சுற்றுலா மையமாக்குதல்.

வினா 5099—திரு. சு. குருநாதன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கிருஷ்ணாபுரம் கிருஷ்ணன் கோயிலை சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கிருஷ்ணாபுரத்தில் கிருஷ்ணன் கோயில் என்று அழைக்கப்படும் அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோயிலை சுற்றுலா மையமாக்கும் திட்டம் ஏதும் இல்லை.

66—

## கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்.

வினா 5229—திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமப் பகுதிகளில் உள்ள ஊர்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற அதிக நிதி ஒதுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், வேடசந்தூர், வடமதுரை, குஜிலியம்பாறை ஆகிய மூன்று ஒன்றியங்களுக்கும் எவ்வளவு நிதி ஒதுக்கப்படும்?

விடை—

(அ) கிராமப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு அக்கிராமங்களின் தேவைக்கேற்பவும், நீர் ஆதாரம் கிடைப்பதற்கேற்பவும் தனிப்பட்ட திட்டங்களோ, கூட்டுக் குடிநீர்த் திட்டங்களோ அமைக்கப்படுகிறது.

(ஆ) ஒவ்வொரு பகுதிக்குத் தேவைப்படி நிதி ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கென தனி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை.

67—

## திருவள்ளுவர்—செங்குன்றம் நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்.

வினா 5359—திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூர்—செங்குன்றம் நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

விடை—

**(அ) மற்றும் (ஆ) இல்லை.**



68—

## ஆதி திராவிடர் நல விடுதி.

வினா 5481—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அந்தியூர் தொகுதியில், சென்னப்பட்டி பகுதியில் ஆதி திராவிடர் நல விடுதி ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடுதி ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) அந்தியூர் தொகுதியில், சென்னம்பட்டி பகுதியில் ஆதி திராவிடர் நல விடுதி ஆரம்பிக்க முன்மொழிவு அல்லது கோரிக்கை வரப்பெறின் அவசியம், முக்கியத்துவம் மற்றும் நிதி நிலைமையைக் கணக்கில் கொண்டு பரிசீலிக்கப்படும்.

(ஆ) எடுக்கப்படும் முடிவைப் பொருத்தது.

69—

## வேடசந்தூர் வட்டத்தில் குட்டை திட்டங்கள்.

வினா 5545—திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குட்டை திட்டங்கள் அமைக்க வேடசந்தூர் வட்டத்தில் இவ்வாண்டு எவ்வளவு தொகை ஒதுக்கப்படும் ?

விடை—

வேடசந்தூர் வட்டத்தில் சுள்ளெரும்பு கிராமம், நாவமரத்துப்பட்டியில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் ரூ. 1 லட்சம் அளவு செலவில் குட்டை அமைக்கும் பணி 1986-87 ஆம் ஆண்டுக்கான பணிகளின் கீழ் ஏற்பளிக்கப்பட்டது. இந்தக் குட்டை 1988-89-ல் ரூ. 31,000-மும் 1989-90-ல் ரூ.79,100-மும் ஆக மொத்தம் ரூ. 1,10,100 செலவு செய்து நிறைவேற்றி முடிக்கப்பட்டு விட்டது. இது தவிர குட்டை அமைக்கும் திட்டங்கள் வேறு அவ்வட்டத்தில் ஏதுமில்லை.

[1990 மே 12

70—

## 480 நாட்கள் தொடர்ந்து பணிபுரியும் தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்தல்.

வினா 5586—திரு. இளம்வழுதி : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 480 நாட்கள் தொடர்ந்து பணிபுரியும் தற்காலிக தொழிலாளர்களை நிரந்தரம் செய்யும் சட்டத்தை தனியார் துறை முதலாளிகள் ஏமாற்ற முடியாமல் திருத்தி அமைக்கும் யோசனை அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): 480 நாட்கள் தொடர்ந்து பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தரமாக்க வகை செய்யும் 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துதல்) சட்டத்தை தொழிலாளர் துறையும், தொழிலாளர் ஆய்வகத் துறையும் முழுமையாக செயல்படுத்தி வருகின்றன. அனைத்து நிறுவனங்களுக்கும் இச்சட்டம் பொருந்தும் வகையில் ஏற்கனவே பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. தேவைப்பட்டால் அவ்வப்போது மேலும் திருத்தங்கள் செய்யப்படும்.

71—

## மேம்பாலம் அல்லது சுரங்கப் பாதை.

வினா 5604—திரு. சா. கணேசன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை நகரில் எந்தெந்த இடங்களில் புதிதாக மேம்பாலம் அல்லது சுரங்கப்பாதை கட்டும் பணி அமைக்கப்பட இருக்கின்றன ?

விடை—

இந்த ஆண்டில், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னை நகரில் புதிதாக மேம்பாலம் அல்லது சுரங்கப் பாதை அமைக்கும் பணி ஏதும் இல்லை.



1990 மே 12]

72—

## வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகள்.

வினா 5642—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் எங்கெங்கு கட்டப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 120 அடுக்குமாடி வாடகைக் குடியிருப்புகள் தமிழ்நாடு அலுவலர்களுக்கு ரூ. 136.36 இலட்சம் செலவில் பரமக்குடியில் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளது.

73—

## இராமேஸ்வரம் கடற்கரை அலங்கரிக்கும் திட்டம்.

வினா 5842—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமேஸ்வரத்தில் பூங்கா அமைத்து மின் விளக்குகளால் கடற்கரை அலங்கரிக்கப்படும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): இராமேஸ்வரம் கடற்கரையில் பூங்கா அமைக்கும் திட்டம் தற்சமயம் இல்லை. ஆனால் கடற்கரையில் பத்து (10) மின் விளக்குகள் அமைக்கும் கருத்துரு மின்வாரிய செயற் பொறியாளருக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் இருந்து வருகிறது.

74—

### ஆதி திராவிடர் நலத் துறையின் கீழ் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகள்.

வினா 5833—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன ?

(ஆ) அவை யாவை ?

விடை—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் ஏதும் ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

75—

### எலி, சாரைப்பாம்பு போன்ற உயிரினங்களால் வேளாண்மைப் பயிர்கள் பாதிப்பு.

வினா 5862—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எலி, சாரைப்பாம்பு போன்ற உயிரினங்களினால் வேளாண்மைப் பயிர்கள் அழிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) எலிகளால் பயிர்கள் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. சாரைப்பாம்பினால் பயிர்கள் அழிக்கப்படுவதில்லை.



(ஆ) வேளாண்மைத் துறையினரால் எலி ஒழிப்பு டிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. மத்திய சார்பு —த்தின் கீழ் தமிழ்நாட்டில் ஒரு லட்சம் எக்டேரில் எலி ள ஒழிக்க இந்த ஆண்டிலும் எலிக்கொல்லி மருந்துகள் சத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

ர—

### நெடுஞ்சாலையை மேம்படுத்துதல்

வினா 6126—திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம். உசிலம்பட்டி தாலுக்கா, செக்கானூரணியை அடுத்த சிவன்கோவில் கே. பாரைப்பட்டி—செட்டிக்குளம்—பூச்சம்பட்டி நெடுஞ்சாலையை மேம்படுத்தும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வினாவில் காணப்படும் ஊர்களை இணைக்கும் சாலை மூன்று ஒன்றியச் சாலைகளின் தொகுப்பாகும். அதில் முதல் சாலை தற்சமயம் போக்குவரத்துக்கு ஏற்றதாக நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள இரண்டு சாலைகளின் பராமரிப்புப் பணிகள் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

77—

### பாலம் கட்டுதல்.

வினா 6299—திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காங்கேயம் தொகுதி, காங்கேயம் வட்டம், மரு துறைப் பஞ்சாயத்து குறுக்கப்பாளையத்தில் முருதுறை—திட்டுப்பாறை ரோட்டில் 3/2இல் பிரிந்து சென்னிமலை போரு ரோட்டில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனை யில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது நிறைவுபெறும்

[1990 மே 12

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

78—

மேம்பாலம் கட்டுதல்

வினா 6311—திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காங்கேயம் தொகுதி, வெள்ளோட்டிலிருந்து ஈரோடு செல்லும் சாலையில் ரங்கம்பாளையம் கலைஞர் காலனிக்கு இடையே உள்ள ரயில்வே நுழைவு பாலத்தை மாற்றி மேம் பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டப் பணிகள் எப்பொழுது துவங்கும் ?

(இ) திட்ட மதிப்பீடு என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : இக்கேள்விக்கு இடமில்லை.

79—

பாலம் அமைத்தல்.

வினா 6324—திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் கொடுமணலிலிருந்து நொய்யல் ஆற்றின் குறுக்கே தம்மரெட்டிபாளையம் செல்ல பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பாலம் கட்டும் பணிகள் எப்பொழுது முடிவடையும் ?



1990 மே 12]

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

80—

அரசுப் புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு

வினா 6349—திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை-அண்ணா மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்ளிட்ட வானகரம் ஊராட்சி, மேட்டுக்குப்பம் கிராமத்தில் அரசுப் புறம்போக்கு நிலம் (சர்வே எண். 133/1, 134/2) தனியாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இந்த ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

(அ) செங்கை அண்ணா மாவட்டம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வானகரம் ஊராட்சி, மேட்டுக்குப்பம் கிராமத்தில் அரசுப் புறம்போக்கு நிலம் புல எண் 133/1, 134/2-இல் தற்போது ஆக்கிரமணம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

81—

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

வினா 6626—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநில அரசின் நிறுவனமான அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் தனது நடவடிக்கையை மேலும் விரிவு படுத்திக்கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

85—

### ஏழை விதவைகளுக்கு நிவாரணம்.

வினா 7237—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குடும்பத் தலைவர்களை இழந்து ஏழை விதவைகளுக்கு ரூபாய் இரண்டாயிரம் வழங்கும் திட்டத்தில் இதுவரை பயன் பெற்றவர்கள் எத்தனை பேர் ?

விடை—

குடும்ப நல துயர் துடைப்பு நிவாரணத் திட்டத்தின் கீழ் 28–2–90 வரை 11,766 பேர்கள் விதவைகள் உட்பட பயன் பெற்று இருக்கிறார்கள்.

86—

### ஆதி திராவிடர் காலனியில் விநாயகர் கோயில் கட்டுதல்.

வினா 7286—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, கீழ்வாணி ஊராட்சியைச் சேர்ந்த இந்திரா நகர் ஆதி திராவிடர் காலனியில் உள்ள விநாயகர் கோயில் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ):

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி கீழ்வாணி ஊராட்சியைச் சேர்ந்த இந்திரா நகர் ஆதி திராவிடர் காலனியில் தற்போது கோயிலும், வழிபாடு செய்வதற்கான சுவாமி திருவுருவச்சிலையும் இல்லாமையினால் இந்துசமய அறநிலைய சட்டம் மற்றும் விதிகளின் கீழ் நிதிஉதவி செய்ய வழிவகை இல்லை.



87—

### நகரப் பேருந்து இயக்கும் திட்டம்.

வினா 7372—திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருமங்கலம்–ஜே. ஆலங்குளம் (வழி) உரப்பனூர் நகரப் பேருந்து இயக்கும் திட்டம் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பேருந்து எப்பொழுது விடப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ):

ஜே. ஆலங்குளம் கிராமம், திருமங்கலம்—செக்கனூரணி பிரதான சாலையிலிருந்து சுமார் 3.4 கி.மீ. தொலைவில் உள்ளது. ஜே. ஆலங்குளம் கிராமத்திற்கு நல்லவிள்ளைபட்டி கிராமம் வழியாகச் செல்லும் சாலை மிகவும் குறுகலாகவும் பேருந்து போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லாமலும் உள்ளது. எனவே, ஜே. ஆலங்குளம் கிராமத்திற்கு நகரப் பேருந்து இயக்க இயலாது.

88—

### பரிசுத் தொகை வாங்காமல் தேங்கியுள்ள தொகை.

வினா 7377—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1984 முதல் 1988 வரை பரிசுச் சீட்டு மூலம் பரிசு பெற்றவர்கள் பரிசுத்தொகை வாங்காமல் தேங்கியுள்ள தொகை எவ்வளவு ?

(ஆ) அந்தத் தொகை எந்தெந்த காரியங்களுக்கு அரசு செலவிட திட்டம் வகுத்துள்ளது.

விடை—

(அ) 1984-ஆம் ஆண்டு முதல் 1988 வரை பரிசுச்சீட்டு மூலம் பரிசு பெற்றவர்கள் பரிசுத்தொகை வாங்காமல் தேங்கியுள்ள தொகை ரூ. 7,92,48,795.00.

(ஆ) பரிசுத்தொகை வாங்காமல் தேங்கியுள்ள தொகை குறிப்பிட்ட சில திட்டத்திற்காக பயன்படுத்தப்படவில்லை. இத்தொகை அரசு கணக்கிலேயே சேர்க்கப்படுகிறது.

89—

தொழு நோயாளிகளுக்கு மருத்துவமனை கட்டுதல்.

வினா 7444—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் தொழு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவமனை கட்டிடம் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

90—

இணைப்புச் சாலை.

வினா 7487—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, நயினார்கோவில் ஒன்றியத்தில் நயினார்கோவில் தேவிபட்டணம் சாலையை உதயகுடி, நகரமங்கலம் வாதவனேரி சாலையுடன் இணைக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

விடை—

நயினார்கோவில் ஒன்றியத்தில், நயினார்கோவில்—தேவிபட்டணம் சாலையை உதயகுடி, நகரமங்கலம், வாதவனேரி சாலையுடன் இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை

91—

ஆதி திராவிடர் நலப்பள்ளி அமைக்கும் திட்டம்.

வினா 7617—திரு. க. சொ. கணேசன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :



கோடாலி, விக்கிரமங்கலம், கார்குடி, த. குடிகாடு, தேவாமங்கலம், சுண்டிப்பள்ளம் ஆதி திராவிடர் மக்களுக்கு தனியாக ஆதி திராவிடர் நலப் பள்ளி அமைக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா ?

விடை—

இல்லை.

92—

ஓடையின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

வினா 7637—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆலங்குளம் தொகுதி, ஊத்துமலை மெயின் ரோட்டில் உள்ள இரண்டு ஓடைகளின் குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

ஆலங்குளம் தொகுதி, ஊத்துமலை மெயின் ரோட்டில் உள்ள இரண்டு ஓடைகளின் குறுக்கே பாலம் அமைப்பது தொடர்பாக செயற்குறிப்புகள் தற்சமயம் எதுவுமில்லை.

93—

வீராணம் பாதை சரிசெய்தல்.

வினா 7639—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம் தொகுதி, வீராணம் பாதை மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனை சீர் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

விடை—

(அ) ஆம்.

டி. 2 ஏ 53-142—18

[1990 மே 12

(ஆ) பழுதடைந்த பகுதிகள் நிதி நிலைமைக்கேற்ப சீர் செய்யப்பட்டு போக்குவரத்துக்கு தடை ஏற்படா வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

94—

நெடுஞ்சாலையை சீர்செய்தல்.

வினா 7640—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளத்திலிருந்து ரெட்டியார்பட்டிக்குச் செல்லும் (Highways) ஹைவேஸ் ரோடு மிகவும் பழுதடைந்துள்ளது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது செப்பனிடப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

95—

ஆதி திராவிடர்களுக்கு பட்டா வழங்கல்.

வினா 7695—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஏரிப்புறக்கரை ஆதி திராவிடர்களுக்கு 50 பேருக்கு பட்டா வழங்க நில எடுப்பு நடவடிக்கை எந்நிலையில் உள்ளது ?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஏரிப்புறக்கரை கிராமத்தில் 40 ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனை வசதி அளிப்பதற்கு அக்கிராமத்தில் புல எண். 17/1, 239/1, 240/3, 246/1, 246/4-ல் 1.02.5 ஹெக்டேர் புஞ்சை நிலத்தைக் கையகப்படுத்த நில எடுப்புச் சட்டத்தின் பிரிவு 4(1)—ன் கீழான அறிவிக்கையினுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.



1990 மே 12]

96—

மாற்றுப்பாலம் கட்டும் திட்டம்.

வினா 7854—திரு. க. சொ. கணேசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செயங்கொண்டம் தொகுதியில், செயங்கொண்டம்—மதனத்தூர் சாலையில் சிந்தாமணி என்ற ஊரின் அருகில் ஓடுகின்ற ஓடையின் குறுக்கே உள்ள பாலம் ஆபத்தான நிலைமையில் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மாற்றுப்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப்பாலப்பணி அரசால் அங்கீகரிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. எனவே, இப்பணியினை எதிர்வரும் காலத்தில் எடுத்துச் செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லை.

97—

கடலங்கை ஆற்றின் மீது பாலம் கட்டும் திட்டம்.

வினா 7932—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், மருநூத்து கிராமத்திற்குச் செல்லும் சாலையின் இடையில் ஓடும் கடலங்கை ஆற்றின் மீது பாலம் கட்ட வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றி அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப்பாலப்பணி இதுவரையில் அரசின் ஒப்புதல் பெற்ற திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. அரசு ஒப்புதல் அளித்துள்ள பணித் தொகுப்புப் பட்டியலிலும் இடம் பெறாத தால், அண்மைக் காலங்களில் இப்பணியை எந்த ஒரு திட்டப் பணிகளிலும் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை.

98—

நவீன கழிப்பிட வசதிகள் செய்தல்.

வினா 7949—திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவெறும்பூர் தொகுதியில் உள்ள ஐந்து பேரூராட்சி களிலும் நவீன கழிப்பிட வசதிகள் (கட்டணமின்றி) ஏற்படுத்த் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

அரசு அளவில் நடவடிக்கை ஏதுமில்லை.

99—

கரும்பு சாலை திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட சாலைகள்.

வினா 8046—திரு. அ. இராசேந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போளூர் தொகுதியில் கரும்பு சாலைத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட சாலைகள் எத்தனை?

(ஆ) அவை எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ)

போளூர் தொகுதியில் கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சாலைப் பணிகள் ஏதும் தற்போது எடுக்கப் படவில்லை. இப்பகுதி, வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையைச் சார்ந்ததாகும். இவ்வாலைக்கு சாலைப் பணிகள் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளும்போது முன்னுரி மையின் அடிப்படையில் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையினால் பரிந்துரை செய்யப்பட்டால் இதனை பரிசீலனை செய்து நிதி வசதியைப் பொறுத்து மேற்கொள்ள இயலும்.





100—

கூட்டுறவு நிலவள வங்கி ஏற்படுத்தும் திட்டம்.

வினா 8103—திரு. எம். முகமது சித்திக்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) தரங்கம்பாடியில் கூட்டுறவு நிலவள வங்கி ஏற்படுத் தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

101—

பாலாற்று நீர் வழங்க, கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வினா 281—திரு. எஸ்.டி. உகம்சந்த்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், லத்தூர் ஒன்றியம் பரமேஸ்வர மங்கலம், கடலூர், கூவத்தூர் நெடுமரம், நெற் குணப்பட்டு, முகையூர், சிக்கனாங்குப்பம் ஆகிய கிராமங் களுக்கு பாலாற்று நீர் வழங்க கூட்டுக் குடிநீர்த் திட்டம் தயா ரிக்கப்பட்டு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அத்திட்டம் செயல்படுத்தப் படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்போது நீர் ஆதாரம் தோற்றுவிப்பதற்காக ரூ. 1,83,200-க்கு தொழில் நுட்ப ஒப்புதல்அளிக்கப்பட்டு அதன் படி நீர் ஆதாரம் அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. தேவையான நீர் ஆதாரம் ஏற்படுத்திய பின்னர் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்று 1990–91-ல் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

[1990 மே 12

102—

குடிதண்ணீர் எடுத்து விநியோகம் செய்தல்.

வினா 424—திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குமரி மாவட்டத்தில் வேர்கிளம்பி, கண்ணனூர், காட்டாத்துறை போன்ற பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளுக்கு வலியாற்றுமுகம் பொன்னூட்டாங்கயம் என்ற இடத்திலிருந்து தண்ணீர் எடுத்து விநியோகம் பண்ணுவதற்கு ஒரு கூட்டு குடி தண்ணீர் திட்டம் அமைப்பது பற்றி அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(ஆ) குடி தண்ணீருக்கு ஏப்ரல், மே மாதங்களில் இப்பகுதிகளில் மக்களுக்கு ஏற்படும் கடினமான சிரமத்தை போக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

விடை—

(அ) கண்ணனூர், காட்டாத்துறை போன்ற பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளுக்கு கூட்டுக் குடி நீர்த் திட்டம் செயலாக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால், வேர்கிளம்பி பஞ்சாயத்துப் பகுதிகளுக்கு மட்டும் பொன்விட்டால் மையத்திலிருந்து குடிநீர் வழங்க ஒரு திட்டம் ஆய்வில் உள்ளது.

(ஆ) ஏப்ரல், மே மாதங்களில் உள்ள குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க வறட்சி நிவாரணத் திட்டத்தில் வேர்கிளம்பி பேரூராட்சிக்குட்பட்ட கல்லங்குழியில் ஆழ் குழாய் கிணறு அமைக்கப்பட்டுள்ளன.

103—

செய்யூர் அரசு பொது மருத்துவமனைக் கட்டிடம் பழுது பார்த்தல்.

வினா 1513—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் அரசு பொது மருத்துவமனைக் கட்டிடம் பழுதுபட்டுள்ளதா ?



1990 மே 12]

(ஆ) ஆம் எனில், அதை சீர் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் அரசு மருத்துவமனை கருங்கற்களால் கட்டப்பட்டது. இக்கட்டிடத்தின் மூலையில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இக்கட்டிடத்தின் விரிசலைச் செப்பனிடவும் மேலும் சுவர்கள் பலப்படுத்துவதற்கும், கட்டிடத்தைச் சுற்றிலும் தண்ணீர் தேங்காவண்ணம் கான்கிரீட் மேடை அமைக்கவும் ரூ. 10,000 செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. செப்பனிடும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

104—

பாலம் புதுப்பித்தல்.

வினா 1873—திரு. பி. மாரப்பன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காங்கேயம் தொகுதி, புங்கம்பாடி ஊராட்சி, கீழ் பவானித் திட்டம், ஊஞ்சலூர் பரிமனம் வாய்க்கால் மைல் 0,4,360-ல் உள்ள பாலம் புதுப்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்தப் பணி எப்பொழுது நிறைவு பெறும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப்பணிக்கு மதிப்பீடு ரூ. 71,000-க்கு தயாரிக்கப்பட்டு பெரியார் மாவட்ட ஆட்சியருக்கு ஒத்திசைவு பெற அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் ஒத்திசைவு பெறப்பட்டு, தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் ஒப்புதல் பெறப்பட்டு மேற்படி பாலம் புதுப்பிப்பதற்கான மதிப்பீட்டுத் தொகையை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பெறப்பட்டு வைப்புப்பணியாக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1990 மே 12

105—

மேல்நிலைத் தொட்டிகள் இயங்கச் செய்ய நடவடிக்கை.

வினா 1923—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுராந்தகம் தொகுதியில் பல மேல்நிலைத் தொட்டிகள் சில மாதங்களாக இயங்காமல் இருப்பதால் அவற்றை இயங்கச் செய்ய அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

லத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 32 மேல் நிலைத்தொட்டிகள் இயங்குகின்றன. கோடைக் காலத்தில் நீர் வற்றியதால் 5 மேல் நிலைத் தொட்டிகள் இயங்கவில்லை. அதற்கு மாறாக ஆழ்துளைக் கிணறு மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. 172 கைப் பம்புகள் (ஆழ் துளை கைப் பம்புகள்) உள்ளதால் எல்லா கிராமங்களிலும் குடிதண்ணீர் கிடைக்கிறது. மேலும் ஊராட்சி தலைவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு உடனுக்குடன் பழுது நிவர்த்தி செய்து குடிநீர் கஷ்டமின்றி எல்லா ஊராட்சிகளுக்கும் வழங்கப்படுகிறது. இவ்வொன்றியத்தில் தற்போது குடிநீர் பிரச்சனை ஏதும் இல்லை.

106—

தமிழக அரசு தர வேண்டிய பாக்கித் தொகை

வினா 1945—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழக அரசு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்குத் தர வேண்டியுள்ள பாக்கி எவ்வளவு ?

விடை—

தமிழ் நாடு மின்சார வாரியம் 31–12–1989 ஆம் நாளன்று நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கு தர வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 36.39 கோடியாகும். இதில் ரூ. 19.54 கோடி 19–1–1990ல் செலுத்தப்பட்டு விட்டது. மீதம் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. 16.85 கோடியாகும்.



1990 மே 12]

இது தவிர 31–7–1989 அன்றைய தேதியில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் தர வேண்டிய தொகை ரூ. 0.61 இலட்சம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆயின் இது சர்ச்சைக்குரியதாக உள்ளது.

107—

ஊட்டி ஏரியை தூய்மைப்படுத்தல்.

வினா எண். 2786—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஊட்டி ஏரியை தூய்மைப் படுத்த திட்டம் வகுக்கப் பட்டு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) இதில் மானியம் எவ்வளவு ? கடன் எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 570 இலட்சங்கள்.

(இ) இத்திட்டத்தைப் பல பகுதிகளாக நிறைவேற்றவும், முதற் கண் அரசு மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மான்யமாக வழங்கிய ரூ. 90 இலட்சம் செலவில் முதற் பகுதியை நிறைவேற்றவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து செயற் குறிப்பு கேட்கப்பட்டுள்ளது. செயற்குறிப்பு கிடைத்தவுடன் அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் துவங்கப் படும்.

108—

விசைத் தறிகளை குறைக்க கோரிக்கை.

வினா 2832—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்ட நெசவாளர்கள் விசைத் தறிகளை குறைக்க வேண்டும் என்று 1989 மார்ச் மாதம் கோரிக்கை விட்டுள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

109—

மரத்தளவாடங்கள் வழங்குதல்.

வினா 2901—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் சௌபாக்மல் சௌக்கார் அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளியில் போதிய நாற்காலி, பெஞ்சுகள் இல்லை என்பதால் மாணவிகள் படிப்பது சிரமமாக உள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், தேவையான நாற்காலி, பெஞ்சுகள் வழங்கப்படுமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப்பள்ளியில் படிக்கும் 900 மாணவிகளில், 600 மாணவிகளுக்கு உட்கார்ந்து பயில தேவையான மரத் தளவாடங்கள் உள்ளன. மீதமுள்ள 300 மாணவிகளுக்கு தேவையான மரத் தளவாடங்கள் பெற்றோர் — ஆசிரியர் சங்கம் மூலம் ஓரிரு ஆண்டுகளில் கிடைக்க வழி வகை செய்யப்படும்.

110—

மின்சார நிர்வாக அலுவலகம் அமைத்தல்.

வினா 3034—திரு. அ. மாரிமுத்து : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வானூர் தொகுதியில் மரக்காணம் உள்ளிட்ட தொகுதிக்கு மின்சார நிர்வாக அலுவலகம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?



விடை—

(அ) ஆம்.

(ஆ) வாரிய விதிகளின்படி ஒரு புதிய பிரிவு அலுவலகம் அமைக்க குறைந்த பட்சம் 42 மின் மாற்றிகள் இருக்க வேண்டும். போதிய மின் மாற்றிகள் இல்லாத காரணத்தினால் தற்போது புதிய பிரிவு அலுவலகம் வானூரில் தனியாக அமைக்க இயலவில்லை. தற்சமயம் திருச்சிற்றம்பலத்தில் இரண்டு பிரிவு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. அவற்றுள் ஒரு பிரிவு அலுவலகம் வானூர் கிராமத்தை உள்ளடக்கியதாகும். வானூர் கிராமம், அதனை சுற்றியுள்ள மக்களின் நலனைக் கருதி, பிரிவு அலுவலகம் ஒன்றினை திருச்சிற்றம்பலத்திலிருந்து மாற்றி வானூரில் அமைத்து விரைவில் செயல்பட முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

111—

நகரப் பேருந்து விடும் திட்டம்.

வினா 3229—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி — மானாமதுரை வழி சூசையப்பர் பட்டிக்கு நகரப் பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): பரமக்குடியிலிருந்து மானாமதுரை வழியாக சூசையப்பர்பட்டி வழித் தடத்தில் தூரம் (32.6 கி.மீ.) நகரப் பேருந்து இயக்கத்திற்கான 30.0 கி. மீட்டருக்கு அதிகமாக உள்ளது. மேலும் கீழ்ப் பார்த்திபனூரிலிருந்து சூசையப்பர்பட்டிக்குச் செல்லும் சாலை 2.0 கி. மீ. தூரத்திற்கு பேருந்து செல்ல தகுதியற்ற நிலையில் உள்ளது. எனவே இத்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது.

[1990 மே 11

112—

கோவை சிந்தாமணி சிறப்பங்காடி.

வினா 4100—திரு. கே. ரமணி : மாண்புமிகு உணவு மற்றுப் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:

(அ) கோவை சிந்தாமணி சிறப்பங்காடிக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்பு சிவானந்தம் எனும் இடைத்தரகர் மூலம் புழுங்கலரிசி 15 லோடுகள் வாங்கப்பட்டதில் இரண்டு லோடுகளில் கல் கலப்படம் மிக அதிகமாயிருந்ததால் பெருத்த நட்டம் ஏற்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், கொள்முதல் குழுவின் அனுமதி இல்லாமல் அரிசி எப்படி வாங்கப்பட்டது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கோயம்புத்தூர் சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங் காடியினை நடத்தும் கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையில் 27-9-1988 முதல் 24-3-1989 முடியவுள்ள காலத்தில் ரூ. 8.89 இலட்சம் மதிப்புள்ள 1,678 குவிண்டால் அரிசி கொள்முதல் செய்யப் பட்டது. அவற்றுள் 13 லோடு அரிசி கொள்முதல் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதன் பேரிலும், மீதமுள்ள 2 லோடுகள் அரிசி, நல்ல தரமான அரிசி இருப்பில் இல்லாத நிலையில் அவசரம் கருதி அலுவலக உத்தரவின் பேரிலும் வாங்கப்பட்டது.

113—

குடிநீர் சப்ளை செய்ய போர்வெல் போடும் திட்டம்.

வினா 4843— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

சேதுபாவா சத்திரம் ஒன்றியம், கட்டயன்காடு ஊராட்சி, அம்மாள்புரத்தில் குடி தண்ணீர் சப்ளை செய்ய போர்வெல் போட அரசு திட்டமிட்டுள்ளதா ?



1990 மே 12]

விடை—

இல்லை. அம்மாள்புரம், கட்டயன்காடு உக்கடை குடியிருப்பின் ஒரு பகுதிதான். இப்பகுதியில் தற்போதைய மக்கட் தொகை 50 ஆகும். கட்டயன்காடு உக்கடை குடியிருப்பிற்கு 1980-ல் குறைந்த தேவைத் திட்டத்தின் கீழ் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மின் விசைத் திட்டமும், மற்றும் 1983, 1988-ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தில் இரு கையிறைப்பான் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு, பகுதி குடி நீர் வ்சதி பெற்ற குடியிருப்பாக வகைப்படுத்தப்பட்டுள்ளதால், தேவையான அபிவிருத்திப் பணிகளை, குடிநீரே இல்லாத குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி அளித்த பின்னர்தான் மேற் கொள்ள இயலும்.

114—

நடமாடும் மருத்துவமனை ஊர்தி சரி செய்தல்.

வினா 5075—திரு. சு. குருநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள நடமாடும் மருத்துவமனை ஊர்தி சரியாக இயங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

விடை—

திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கண் சிகிச்சை முகாம்கள் நடத்த இயங்கி வரும் மோட்டார் வாகனம் தவிர இதர நடமாடும் மருத்துவ ஊர்திகள் ஏது மில்லை. நடமாடும் கண் நோய்ப் பிரிவு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதற்கான ஊர்தி நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு ஓடிக் கொண்டிருக்கிறது.

115—

சாலை விபத்தைத் தடுக்க ரவுண்டானா கட்டும் திட்டம்.

வினா 5237—திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

திண்டுக்கல் — திருச்சி நெடுஞ்சாலையில் 45-ல் அய்யலூர் 4 ரோடு சந்திப்பில் அடிக்கடி ஏற்படும் சாலை விபத்தைத் தடுக்க அந்த இடத்தில் ஒரு ரவுண்டானா கட்ட அரசு உடன் நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

சென்னை—திருச்சி—திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை 45-ல் அய்யலூர் 4 ரோடு சந்திப்பில் ஒரு ரவுண்டானா அமைக்கும் உத்தேசம் 1983—ஆம் வருடமே பரிசீலனையில் இருந்து வந்தது. ஆனால் அந்த சமயம், அச்சந்திப்பில் சிறிய மாவட்ட சாலையில் இருந்து வந்த போக்குவரத்து மிகக் குறைவாக இருந்தமையால் பிற்காலம் போக்குவரத்து அதிகரிக்கும் காலத்தில் மேற்படி ரவுண்டானா அமைக்க ஏற்பாடுகள் செய்யலாம் என தள்ளிப் போடப்பட்டு விட்டது. தற்போது மேற்படி சாலை சந்திப்பு மேம்பாட்டுக்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. ஆய்வுக்குப்பின் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

116—

காஞ்சிபுரம்—வெங்களத்தூர் நெடுஞ்சாலையைச் சீர்செய்தல்.

வினா 5252—திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) காஞ்சிபுரம் — வெங்களத்தூர் நெடுஞ்சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அச்சாலையைச் சீர் செய்ய அரசு முன்வருமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம்—வெங்களத்தூர் நெடுஞ்சாலையை சீர் செய்ய சுமார் ரூ. 15 இலட்சம் தேவைப்படுகிறது. இந்தச் சாலைகளைச் சீரமைக்கும் பணிகளை நடப்பு நிதியாண்டில் எடுத்துச் செய்ய இயலவில்லை. எனவே, எதிர்வரும் ஆண்டுகளில், வருடாந்திர பராமரிப்பு நிதி நிலைமைக்கு ஏற்ப, இந்தச் சாலைச் சீரமைப்புப் பணிகள், கட்டம் கட்டமாக எடுத்துச் செய்யப்படும். என்னும், தற்போது இந்த இரண்டு சாலைகளையும் பழுதுகளைச் சரி பார்த்து வாகனப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாமல் பராமரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



117—

குறுகிய பாதையை அகலப் பாதையாக்குதல்.

வினா 5319—திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) கொமரப்பாளையத்திலிருந்து எடப்பாடி நகரத்திற்குள் வரும் பாதை குறுகியதாக இருப்பதால் அதை மாற்றி அகலப் பாதை அமைக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இச்சாலையிலுள்ள சிறு பாலங்கள் உட்பட அகலப்படுத்தி மேம்பாடு செய்ய தோராயமாக ரூ. 60 இலட்சங்கள் தேவைப்படுகிறது. இச்சாலையில் கி.மீ. 0/0-3/0 இல் ரூ. 12 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணி அரசு அனுமதி வழங்கப்பட்ட பணித் தொகுப்புப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. எனவே எதிர் வரும் ஆண்டுகளில் பாகம் இரண்டு திட்டத்தின்கீழ் அரசு பகுதி 2 திட்டத்திற்கென பெருமளவில் நிதி வழங்கப்படும்போது சாலை முழுவதுமாக மேம்பாடு செய்ய இப்பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

118—

மேல் நிலை நீர்த் தொட்டி சரி செய்து, மருந்தகத்திற்குத் தண்ணீர் வசதி செய்தல்.

வினா 5397—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் அரசு மருந்தகத்தில் உள்ள மேல் நிலை நீர்த் தொட்டி இயங்காததால் மருந்தகத்திற்குத் தண்ணீர் வசதியில்லாதது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பழுதடைந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கான மோட்டார் பம்புசெட் பழுது பார்க்கப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேலும் கைப் பம்பு மூலமும் தண்ணீர் பெறப்படுகிறது.

119—

காந்தி கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்தல்.

வினா 5591—திரு. டி. கே. பழனிச்சாமி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவொற்றியூர் பகுதியில் "காந்தி கூட்டுறவுச் சங்கம்" என்ற பெயரில் நடத்தப்படும் சங்கங்கள் கூட்டுறவுத் துறையில் பதிவு செய்யப்பட்டவையா?

(ஆ) ஆம் எனில், அவற்றின் பணிகள் என்ன ?

விடை—

(அ) திருவொற்றியூர் பகுதியில் "காந்தி கூட்டுறவுச் சங்கம்" என்ற பெயரில் கூட்டுறவுத் துறையில் ஏதும் பதிவு செய்யப்பட்டு இயங்கவில்லை. ஆனால் "காந்திஜி சேவா நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம்" என்ற பெயரில் ஒரு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் எக்ஸ்.என்.சி. என். 598-ல் பதிவு செய்யப்பட்டு 1964-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

(ஆ) நுகர்வோர்களுக்குக் கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற நுகர்பொருட்களை விற்பனை செய்து வருவது "காந்திஜி சேவா நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தின்" பணியாகும்.

120—

ஆதிதிராவிடர் காலனியில் ஆழ் குழாய் கிணறு அமைத்தல்.

வினா 5628—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பரமக்குடி தொகுதி, மேலாயக்குடி கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர் காலனியில் ஆழ் குழாய் கிணறு அமைக்கப்படுமா ?



விடை—

குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கட்டப்பட்டுள்ள மேல் நிலைத் தொட்டி மூலமாகவும், ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறு மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறையால் அமைக்கப்பட்டுள்ள உரைக்கிணறு ஆகியவற்றின் மூலமும் பரமக்குடி தொகுதி மேலாயக்குடி ஆதி திராவிடர் காலனி மக்கள் குடிநீர் வசதி பெறுவதால், புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைக்கும் அவசியம் ஏற்படவில்லை.

121—

காங்கேயம் காளைகளின் விந்து சேகரிக்கும் நிலையம் கட்டுதல்.

வினா 5646—திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காங்கேயம் காளைகளின் விந்து சேரிக்கும் நிலையம் கட்டப்படுமா ?

விடை—

தமிழகத்தில் ஈச்சங்கோட்டை மற்றும் அபிசேகப்பட்டி ஆகிய இடங்களில் நவீன விந்து சேகரிக்கும் நிலையம் நிறுவப்பட்டு தேவையான அயல் இன மற்றும் காங்கேயம் உறை விந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப் பட்டுள்ளது. ஊட்டி மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் நவீன உறை விந்து வங்கி நிறுவ தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

122—

டெக்ஸ்ட்ரோஸ் ஊசி மருந்து தயாரிக்கும் தொழிற்கூடம் மாவட்டந்தோறும் அமைக்கும் திட்டம்.

வினா 5670—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

Dextrose bottles for I.V. Injection Manufacturing Unit, கேரளா, வேலூர் ஆகிய இடங்களில் இருப்பது போன்று மாவட்டந்தோறும் அமைக்க அரசு முன் வருமா ?

[1990 மே 12

விடை—

டெக்ஸ்ட்ரோஸ் ஊசி மருந்திற்கான பாட்டில்கள் தயாரிக்கும் தொழிற் கூடங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் தொடங்குவதற்கான கருத்துரு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை. எனினும், இதற்கான தொழில் தொடங்குவதற்கு முன்வரும் தொழில் முனைவோருக்கு தொழில் வணிகத்துறை தேவையான ஊக்கமளித்து உதவிகளை அளிக்க தயாராக உள்ளது.

123—

பம்பு செட்டுக்கு புதிய மின்சார இணைப்பு வழங்கல்,

வினா 5764—திரு. எம். முத்தையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சிதம்பரனரர் மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கடம்பூர் பகுதியில் பம்பு செட்டுக்கு புதிய மின்சார இணைப்பு வழங்குவது ஒரு வருட காலமாக நிறுத்தப்பட்டுள்ளதற்கான காரணம் என்ன ?

விடை—

சிதம்பரனார் மாவட்டம், கோவில்பட்டி வட்டத்தைச் சேர்ந்த கடலையூர், கடம்பூர், எட்டையபுரம், எப்போதும் வென்றான், நாலாட்டின்புதூர் ஆகிய பிரிவு அலுவலகங்களுக்குட்பட்ட பெருவாரியான விவசாய மின் பயனீட்டாளர்கள் மின் கட்டண நிலுவையினைச் செலுத்தாததால், நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டு, மின்வாரியம் புதிய மின் இணைப்பு வழங்குவதை இப்பகுதிகளில் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தது. ஆனால் இப்பொழுது இத்தடை நீக்கப்பட்டு 30-10-1989 முதல் மனுக்களின் பதிவு வரிசை அடிப்படையில் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

124—

கல்லிக்குளம் ஏரியிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றல்.

வினா 5930—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலகம் ஊராட்சி கல்லிக்குளம் ஏரியிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர் எடுத்து மராமத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



1990 மே 12]

விடை—

ஆக்கிரமிப்புகளை அற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கரைகளைப் பலப்படுத்துதல், ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் செயல்படுத்துவதற்கு, பராமரிப்பு பணிக்கென ஒதுக்கப்படும் நிதி போதுமான அளவுக்கு இல்லை. எனவே உலக வங்கி நிதியுதவியுடன் பணி மேற்கொள்ள ரூ. 55 கோடி மதிப்பில் கல்லணைக் கால்வாய் பாசனம் பகுதியிலுள்ள ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டம் குறித்து ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருவதால், அம்மதிப்பீடுகளில் ஏரிகளில் ஆழப்படுத்துதல் மற்றும் கரைகளை பலப்படுத்துதல் போன்றவற்றிற்குப் போதுமான அளவிற்கு வகை செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட திட்டத்திற்கு ஒப்புதல் கிடைக்கப்பெற்று செயலுக்கு எடுத்துக்கொள்ளும்போது சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்ட குறைகள் அனைத்தும் நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

125—

மீனவர்களுக்கு காலனி வீடுகள் கட்டும் திட்டம்.

வினா 5938—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, செம்பியன்மகாதேவிப்பட்டிணம் கணேசபுரம் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தினருக்கு மீனவர் காலனி வீடுகள் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

இல்லை.

126—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம்.

வினா 5949—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை ஊராட்சியைச் சேர்ந்த தோப்புத் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

[1990 மே 12

விடை—

இல்லை. தோப்புத் தெரு குடியிருப்பின் தற்போதைய மக்கட் தொகை 550. இங்கு 1989-ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ஒரு கையிறைப்பான் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் இது தற்போதைய தேவைக்குப் போதுமானது அல்ல. எனினும், தேவைப்படும் அபிவிருத்திப் பணிகளை குடிநீரே இல்லாத குடியிருப்புகளுக்கு வசதியளித்த பின்னர்தான் மேற்கொள்ள இயலும். மேலும் விதிமுறையின்படி 750 மக்கட் தொகை கொண்ட குடியிருப்புகளுக்குத்தான் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க இயலும்.

127—

வினா 5954—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆணைக் காட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை. இக்குடியிருப்பின் தற்போதைய மக்கட் தொகை 850. இங்கு 1980 மற்றும் 1989 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் இரண்டு கையிறைப்பான் திட்டங்கள் செயலாக்கப்பட்டுள்ளன. எனினும் தற்போதைய குடிநீர் வசதி போதுமானது அல்ல. இது பகுதி குடிநீர் வசதி பெற்றது. எனவே, குடிநீரே இல்லாத குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி அளித்தப் பின்னர்தான் இக்குடியிருப்புக்கு ஒரு மின் விசைத் திட்டம் முன்னுரிமை வரிசைப்படி அமைக்க இயலும்.

128—

**புதியதாக அதியமான் கிராமப்புற வங்கிகளின் கிளைகள் திறக்கும் திட்டம்.**

வினா 5976—திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தருமபுரி மாவட்டத்தில் புதியதாக அதியமான் கிராமப்புற வங்கிகளின் கிளைகள் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.



1990 மே 12]

(ஆ) இந்திய ரிசர்வு வங்கி 1985-90 ஆம் ஆண்டிற்காக வங்கிக் கிளை விரிவாக்கத் திட்டத்தின்கீழ் தேசிய மயமாக்கப்பட்ட இந்தியன் வங்கியின் பொறுப்பில் தருமபுரி மாவட்டத்தில் இயங்கி வரும் அதியமான் கிராம வங்கிக்கு 23 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது. இதைத் தவிர பணிப்பகுதி அணுகு முறையின்படி வங்கிக் கிளை விரிவாக்கத் திட்டத்தின் கீழ் இக்கிராம வங்கிக்கு இந்திய ரிசர்வு வங்கி மேலும் ஒரு உரிமம் வழங்கியுள்ளதைத் தவிர புதியதாக அதியமான் கிராமப்புற வங்கிக் கிளைகள் திறக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

129—

**அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றல்.**

வினா 6046—திருவாளர்கள் எஸ். ஏ. தங்கராஜன், மற்றும் திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம், திண்டுக்கல்-பழனி ரோட்டில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம், திண்டுக்கல்—பழனி ரோட்டில் உள்ள அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த 1989-90-ல் கருத்துருக்கள் பெறப்பட்டன. ஆனால் மேற்படி கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசால் நியமிக்கப்பட்ட உயர் மட்டக் குழுவினால் அப்பள்ளி தேர்ந்தெடுக்கப்படவில்லை.

130—

**இராமநாதபுரம் மாவட்டத்தில் ஊருக்கு ஒரு ஆழ்குழாய் கிணறு போடும் திட்டம்.**

வினா 6109—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

குடிதண்ணீர் கிடைக்க இராமநாதபுரம் மாவட்டத்தில் ஊருக்கு ஒரு ஆழ்குழாய்க் கிணறு போடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம் 11 ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்டது. இவற்றில் ஊருக்கு ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லா விட்டாலும் இம்மாவட்டத்தில் உள்ள கிராமங்களுக்கு அந்தந்தப் பகுதிகளில் உள்ள நீர் ஆதாரத்தைப் பொறுத்து, ஆழ்துளைக் கிணறுகளோ அல்லது கூட்டுக் குடிநீர்த் திட்டங்களோ அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

131—

சத்தியமங்கலம் நகராட்சிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா 6179—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் நகராட்சிக்கு குடிநீர் வழங்க திட்டம் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன ?

விடை—

(அ) ஆம். பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் நகராட்சிக்கு குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு உத்தேச மதிப்பீடு சுமார் ரூ. 215 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு ஆய்வில் உள்ளது.

(ஆ) இத்திட்ட வரைவு நிர்வாக ஒப்புதலும், தொழில் நுட்ப ஒப்புதலும் பெறப்பட்ட பின்னர் திட்டப்பணி துவக்கப் படும்.

132—

புறம்போக்கு நிலத்தில் குடியிருப்போருக்குப் பட்டா வழங்கல்.

வினா 6308—திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா;

காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் முருங்கத்தொழுவு ஊராட்சி, மணிமலைக்கரடு வள்ளி நகரில் நீண்ட காலமாகப் புறம்போக்கில் குடியிருந்து வருவோருக்கு அதே புறம்போக்கு இடத்தைப் பட்டா செய்து கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



விடை—

பெரியார் மாவட்டம், காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் (பெருந்துறை வட்டம்), முருங்கத் தொழுவு கிராமம், மணிமலைக்கரடில் குடியிருப்பவர்களுக்கு ரீ-சர்வே எண். 793/3 இல் 2,85.0 ஹெக்டேர் பரப்பளவுள்ள பூமியினை நத்தமாக நில மாற்றம் செய்து தாழ்த்தப்பட்ட குறவர் இனத்தைச் சார்ந்த 57 நபர்களுக்கும், பிற்பட்ட இனத்தைச் சார்ந்த 35 நபர்களுக்கும், ஆக மொத்தம் 92 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் 12-12-89 அன்று வழங்கப்பட்டு விட்டன.

133—

செங்கை அண்ணா மாவட்டத்திலுள்ள நியாயவிலைக் கடைகள்.

வினா 6631—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டத்தில் எத்தனை நியாய விலைக் கடைகள் செயல்படுகின்றன ?

(ஆ) இக்கடைகளை அதிகப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

(அ) செங்கை-அண்ணா மாவட்டத்தில் மொத்தம் 2002 நியாயவிலைக் கடைகள் செயல்படுகின்றன. இதில் 13 கடைகள் 1-10-89 முதற்கொண்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

(ஆ) அண்மையில் 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாயவிலைக் கடைகளை பிரித்து புதியதாக நியாயவிலைக் கடைகள் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனை அமுல் படுத்தும்பொழுது செங்கை-அண்ணா மாவட்டத்தில் புதிய கடைகள் திறக்க வாய்ப்புள்ளது.

134—

தார் சாலை அமைத்தல்.

வினா 6661—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், லத்தூர் கே. நெல்வாய் சாலையில் இடையிடையே தார் சாலை அமைக்காமல் இருப்பது உண்மையா?

(ஆ) விடுபட்ட இடங்களுக்கு தார் சாலை அமைக்கப்படுமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப்பணியினை உடனடியாக எடுத்துச் செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும் இச்சாலையை அரசின் ஆண்டு பராமரிப்பு நிதியைக் கொண்டு கட்டம் கட்டமாக தார்த்தளமாக மாற்றிட பெருமளவில் பராமரிப்பு நிதி ஒதுக்கீடு செய்யும் சமயத்தில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

135—

புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க பெறப்பட்ட கோரிக்கைகள்.

வினா 6725—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செங்கை—அண்ணா மாவட்டத்தில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க தற்பொழுது எத்தனை கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன ?

விடை—

செங்கை—அண்ணா மாவட்டத்தில் 1989–90 ஆம் ஆண்டில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க 31 கோரிக்கைகள் ஆரம்ப சுகாதார நிலையங்களின் இயக்குநரால் பெறப்பட்டன. இம்மாவட்டத்தில் 10 கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

136—

வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரிய மனு மீது எடுத்த நடவடிக்கை.

வினா 6960—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை-அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், வீராணகுன்னம் ஊராட்சி மன்றத்தில் அடங்கிய வீராணகுன்னம் காலனி எஸ். நம்பர் 482, சக்கிலிபாளையம், எஸ். நம்பர் 113,





123, 356, கிழப்பட்டு காலனி எஸ். நம்பர் 647-ல் வசிக்கும் ஆதி திராவிட மக்கள் தங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி மனுச் செய்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அவைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) தற்பொழுது நிலுவையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

137—

தாயகம் திரும்பிய இலங்கை தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு.

வினா 6991—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சாஸ்திரி—சிரிமாவோ ஒப்பந்தப்படி தாயகம் திரும்பிய இலங்கை தமிழர்களுக்கு அரசு எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது ?

(ஆ) எத்தனை பேருக்கு நில ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டு உள்ளன ?

விடை—

(அ) சாஸ்திரி—சிரிமாவோ ஒப்பந்தத்தின்படி தாயகம் திரும்பிய 96,436 குடும்பங்களுக்கு (31—12—1989 ஆம் தேதி நிலவரப்படி) அரசு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. இது தவிர தாயகம் திரும்பியோர் குடும்பங்களிலுள்ள இதர நபர்களில், 9,968 பேர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி அலுவலகங்கள் மூலமாக வேலை வாய்ப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) 3,126 குடும்பங்களுக்கு நில ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

138—

பாலம் கட்டுதல்

வினா 7277—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

டி 2 ஏ 53-142—21

[1990 மே]12

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதிக்குட்பட்ட வண்ணாந்துறை பள்ளம் பாலம் கட்ட அரசு உடன் நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி ஆரம்பிக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

139—

அருந்ததியர் சமூகத்தினருக்கு வீட்டுமனைப் பட்டா.

வினா 7285—திரு வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, குப்பாண்டம்பாளையம் கிராமம், வேலான்குறை அருந்ததியர் சமூகத்தினருக்கு வீட்டுமனைப் பட்டா கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பட்டா வழங்கப்படும் ?

விடை—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, குப்பாண்டம்பாளையம் கிராமம் உட்கடை வேலாண்குறை அருந்ததியர் களிடமிருந்து வீட்டுமனை வழங்கக் கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. புதிதாக மனுக்களை அருந்ததியரிமிடருந்து பெற்று நில எடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பெரியார் மாவட்ட ஆதி திராவிட நல அலுவலர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

(ஆ) பெரியார் மாவட்ட ஆதி திராவிட நல அலுவலரின் செயற்குறிப்பு அரசுக்கு கிடைத்தவுடன் ஆய்வு செய்து உரிய ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

140—

மருங்காபுரியில் 1989 பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் அமைக்கப்பட்ட கைப்பம்புகள்

வினா 7310—திரு. எஸ்.டி. உகம்சந்த் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



1990 மே 12]

(அ) திருச்சி மாவட்டம், மருங்காபுரியில் 1989 பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் எத்தனை கைப் பம்புகள் அமைக்கப்பட்டன ?

(ஆ) அவைகளில் எத்தனை தற்பொழுது பயனில் உள்ளன?

விடை—

(அ) திருச்சி மாவட்டம், மருங்காபுரி தொகுதியில் 1989 பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் வெவ்வேறு திட்டங்களின் கீழ் மொத்தம் 315 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டன.

(ஆ) அவைகளில் தற்பொழுது 300 ஆழ்துளைக் கிணறுகளில் கைப் பம்புகள் பொருத்தப்பட்டு பயனில் உள்ளன. மீதமுள்ள 15 ஆழ்துளைக் கிணறுகளில் நீர் ஆதாரம் இல்லாமையால் கைப் பம்புகள் பொருத்தப்படவில்லை.

141—

தஞ்சை மாவட்டத்தில் நீர் போக்குவரத்து சரியில்லாமலுள்ள வாய்க்கால்கள்.

வினா 7661—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தில் நவீனமயம் செய்யப்பட்ட வாய்க்கால்களின் மட்டம் சரியாக இல்லாததால் நீர் போக்குவரத்து சரியில்லாமல் உள்ள வாய்க்காலின் எண்ணிக்கை என்ன?

(ஆ) எந்தெந்த ஊர்களில் உள்ளன ?

விடை—

(அ) மற்றும் (ஆ): தஞ்சை மாவட்டத்தில் நவீனமயம் செய்யப்பட்ட வாய்க்கால்களில் திருவாரூர் வட்டத்திலுள்ள ஓடம்போகியாறு பிரிவு சுக்கனாறு வாய்க்காலில் மட்டும் மட்டம் சரியில்லாததால் நீர் போக்குவரத்து சரியில்லாமல் உள்ளதாக தெரிய வந்துள்ளது. அக்குறையும் நிவர்த்தி செய்யப்பட்டுவிட்டது.

[1990 மே 12

142—

ஆதிதிராவிடர் காலனிக்கு மின் இணைப்பு வழங்கல்.

வினா 7703—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஆண்டிக்காடு ஆதி திராவிடர் காலனிக்கு மின் இணைப்பு வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆண்டிக்காடு ஆதி திராவிடர் காலனிக்கு ஒன்பது (9) தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு ஏற்கனவே மின் இணைப்பு வழங்கப்பட்டு அவைகள் நல்ல நிலையில் எரிந்து கொண்டிருக்கின்றன. இக் காலனியில் உள்ள ஐந்து (5) பெரிய வீடுகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இது தவிர இக் காலனியில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு உள்ள 35 சிறிய வீடுகளுக்கு ஒரு வீட்டிற்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் மின் இணைப்புக் கோரி 17—11—1989-ல் விண்ணப்பங்கள் வந்துள்ளன. இந்த சிறிய வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க பதிவு வரிசைப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

143—

வினா 7704—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், தென்னங்குடி ஆதி திராவிடர் காலனிக்கு மின் இணைப்பு கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

பேராவூரணி ஒன்றியத்தில் உள்ள தென்னங்குடி ஆதி திராவிடர் காலனிக்கு ஏற்கனவே ஆறு (6) தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அவைகள் நல்ல நிலையில் எரிந்து கொண்டிருக்கின்றன. மேலும் இக் காலனியில் உள்ள இரண்டு வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இக் காலனியில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 25 சிறிய வீடுகளுக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் மின் இணைப்புக் கோரி வரப்பெற்ற விண்ணப்பங்களுக்கு மதிப்பீடு தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது. இவைகளுக்கு பதிவு வரிசை அடிப்படையில் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1990 மே 12]

144—

பட்டுக்கோட்டை ஒன்றியம் ஏரிப்புறக்கரை மீனவர்களுக்கு மீனவர் காலனி வீடு கட்டுதல்

வினா 7708—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரை மீனவர்களுக்கு மீனவர் காலனி கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

இல்லை.

145—

தென்காசிக்கு ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை பேருந்து வசதிசெய்தல்.

வினா 7768—திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலியிலிருந்து கடையம் வழியாக தென்காசிக்கு ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை பேருந்து வசதி செய்து தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலியிலிருந்து (சுற்று வழியில்) சேரன்மாதேவி, அம்பாசமுத்திரம், கடையம் வழியாக தென்காசிக்கு 14 வெளியூர் பேருந்துகள் 45 நிமிட இடைவெளியில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தால் தினசரி இயக்கப்பட்டு வருகிறது. மேலும், திருநெல்வேலியிலிருந்து நேர் வழியில் முக்கூடல் வழியாக கடையத்திற்கு 7 வெளியூர் பேருந்துகள் இயங்கி வருகின்றன. மேலும், முக்கூடலிலிருந்து திருநெல்வேலி வரையிலும் மற்றும் முக்கூடலிலிருந்து கடையம் வரையிலும் தனித் தனியாக நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தென்காசியிலிருந்து

கடையத்திற்கு சுமார் 15 நிமிட இடைவெளியில் ஏராளமான வெளியூர் மற்றும் நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, தற்போது திருநெல்வேலியிலிருந்து கடையம் வழியாக தென்காசிக்கு என தனியாக ஒரு மணி நேரத்திற்கு ஒன்று வீதம் பேருந்து இயக்கத் தேவை இல்லை என கருதப்படுகிறது. ஆயினும் கடையத்திலிருந்து திருநெல்வேலி வழியாக தூத்துக்குடி அல்லது திருச்செந்தூருக்கு கூடுதல் பேருந்து விடுவது பற்றி ஆய்வு செய்யப்பட்டு அடுத்த நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

146—

**விவசாயக் கடன்கள் நிலவரி மற்றும் வீட்டுவரி ரத்து செய்தல்.**

வினா 7840—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியத்திலுள்ள வேம்பத்தி ஊராட்சியிலுள்ள அனைத்துக் கிராமங்களும், அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் மாத்தூர், இலுப்பிளி, வெள்ளித்திருப்பூர், படலூர், சென்னம்பட்டி, பாப்பாத்திக் கூட்டுப்புதூர் ஆகிய கிராமங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயக் கடன்கள், நிலவரி மற்றும் வீட்டுவரி ரத்து செய்யப்படுமா?

(ஆ) வறட்சி நிவாரணத்திற்கு என்று இப்பகுதிக்கு அதிகமான தொகை ஒதுக்கி பணிகள் விரைந்து செய்யப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ): மேற்படி கிராமங்களில் கடந்த செப்டம்பர் மற்றும் அக்டோபர் 1989-ல் பெய்த மழையினால் முதல் போகம் பயிரிடப்பட்டு மகசூல் 50 சதவீதமும் அதற்கு மேலும் இருந்துள்ளது. எனவே, நிலவரி, வீட்டுவரி முதலியவைகளை தள்ளுபடி செய்யவோ அல்லது ஒத்திவைக்கவோ வேண்டிய அவசியம் இல்லை. குடிநீர் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் புதிய குழாய்க் கிணறுகள் அமைக்கவும், அவசியமான பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யவும், விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.



147—

**பேருந்து நிலையம் கட்டும் திட்டம்.**

வினா 7993—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, சத்திரக்குடியில் பேருந்து நிலையம் எந்த ஆண்டு கட்டப்படும்?

விடை—

பரமகுடி தொகுதி, சத்திரக்குடியில் பேருந்து நிலையம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

148—

வினா 7994—டாக்டர் எஸ். சுந்தரராஜ் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, நயினார் கோவிலில் எந்த ஆண்டு பேருந்து நிலையம் கட்டப்படும்?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, நயினார் கோவிலில் பேருந்து நிலையம் கட்டும் செயற் குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

149—

வினா 7996—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, எமனேஸ்வரத்தில் பேருந்து நிலையம் கட்டப்படுமா?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி எமனேஸ்வரத்தில் பேருந்து நிலையம் கட்டும் செயற் குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

நிலவரி ரத்து செய்தல்.

150—

வினா 8192—திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

அ) சேலம் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருப்பதால் நிலவரி ரத்து செய்யப்படுமா ?

ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை. 1,399 பதலியில் மாவட்டத்தின் மொத்த நிலவரியில் 96.03 சதவீதம் ஏற்கனவே வசூல் செய்யப்பட்டு விட்டது. மாவட்டத்தில் வறட்சி நிலைமையும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

(வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.)

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 3. தகவல் கோரல்.

### (அ) புயல் நிவாரணப் பணிகள் குறித்தும், மத்திய அரசு நிதி ஒதுக்கீடு குறித்தும்

10-05 மணி

**திரு. எஸ். ஆர். இராதா :** தலைவர் அவர்களே, புயல் நிவாரணப் பணிகளைப் பொறுத்த வரையிலும் விரைந்து தொடங்கி அதற்கான திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்த வேண்டியது இந்த அரசினுடைய அத்தியாவசிய கடமைகளில் ஒன்று. அந்த வகையில் இன்றைக்கு புயல் நம்மை ஆபத்திலிருந்து காப்பாற்றி விட்டது என்றாலும் நமக்கு உதவியாக தமிழகத்தைப் பொறுத்த வரையில் நல்ல மழையைக் கொடுத்து சென்னையையும் அதைச் சுற்றி இருக்கின்ற பல்வேறு பகுதிகளையும் குளுமையாக்கி இருக்கிறது என்பது நமக்கு மகிழ்ச்சியைத் தரத்தக்க ஒன்று என்றாலும் இன்றைக்கு இந்த மழையின் காரணமாகவும் புயலின் காரணமாகவும் சென்னைப் பகுதியைச் சேர்ந்தவர்களும், செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும், தென்னாற்காடு மாவட்டத்



தைச் சேர்ந்தவர்களும், கடற்கரைப் பகுதிகளிலே இருக்கின்றவர்களும் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக மீனவர்களும் ஆதி திராவிட மக்களும் தங்களுடைய உடமைகளையும் வீடுகளையும் இழந்து அதனாலே பல்வேறு வேதனைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அதே போல மின்சாரம் தாக்கி மறைந்தவர்களும் நம்முடைய உதவியிலே வரவேண்டியவர்கள். கடலில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் காணவில்லை என்ற நிலையிலிருந்து மீனவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் நமக்கு இருக்கிறது. இந்த நிலையில் மாநில அரசினுடைய நிதியிலிருந்து பல்வேறு வகையான உதவிகளைச் செய்கின்ற இந்த நேரத்தில் மத்திய அரசின் சார்பிலும் இதற்கான நிதி உதவிகள் கிடைக்குமா என்று ஆவலோடு எதிர்பார்த்த நேரத்தில் நேற்றைக்கு அறிவிக்கப்பட்ட அறிவிப்பு மத்திய அரசானது, இருக்கின்ற அறிவிப்பையே திரும்ப ஒன்று அறிவித்து, அது மிகப் பெரிய விளம்பரமாக ஆக்கப்பட்ட காரணத்தாலே மாநிலத்திலே இருக்கின்ற மக்கள் எல்லாம் மிகப் பெரிய உதவி கிடைத்து விட்டதோ என்று மகிழத்தக்க அளவிற்கு இருந்த ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கு விளக்கம் அளித்ததன் மூலமாக அந்த உதவி கிடைத்தது மாதிரி இருந்ததே தவிர கிடைக்கவில்லை என்று தெரிந்த நேரத்தில் நமக்கு ஒரு வகையிலே மிகுந்த வேதனையாக இருந்தாலும் இன்று காலையிலே பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. துணைப் பிரதமர் புயலினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிலே இறந்தவர்களுக்கு எல்லாம் 25,000 ரூபாய் நிதி அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதி கிடைத்து, மின்சாரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், கடலிலிருந்து காப்பாற்ற முடியாமல் இறந்தவர்களுக்கும் நாம் அந்த உதவித் தொகையை வாங்கித் தர முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல இந்த பாதிப்புக்குள்ளான அத்தனை பேர்களையும் கணக்கு எடுத்து விரைவாக இந்த உதவித் தொகைகள் வழங்குகின்ற அந்தப் பணியை அரசு மேற்கொண்டு இருக்கிறதா, அதற்கான நடவடிக்கைகள் என்ன என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: :** பேரவைத் தலைவர் அவர்களே, புயல் குறித்தும் அது தவிர்க்கப்பட்டது குறித்தும், மழையின் காரணமாக ஓரளவு தமிழ்நாட்டிலே சில பகுதிகளில் குறிப்பாக சென்னையில், செங்கை—அண்ணா மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஆதி திராவிட மக்கள், மீனவ மக்கள் ஆகியோர் குறித்தும், இந்த அவையிலே 2 அல்லது 3 தடவைகளுக்கு மேலாக விளக்கங்களை அளித்து இருக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டார், ஏதோ மத்திய அரசு விளம்பரத்திற்காக ஒரு செய்தியை அறிவித்ததாக. நேற்று நான் இங்கு வைத்த விளக்கத்திற்குப் பிறகும் அதைச் சில பேர் புரிந்து கொள்ளாமல் இருப்பது விந்தையான ஒன்றாகும். ஏனென்றால்

39 கோடி ரூபாய் இதுபோன்ற நிவாரணங்களுக்காக ஒதுக்கப் பட்டிருக்கிறது என்ற செய்தியை நாடாளுமன்றத்திலே மத்திய அமைச்சர் அறிவித்திருக்கிறார். முன்பெல்லாம் என்ன நிலை என்றால் புயலோ அல்லது வெள்ளமோ ஏற்பட்டு அல்லது வறட்சி யோ ஏற்பட்டு நிவாரணம் தேவை என்றால் மாநில அரசு உடனடியாக மத்திய அரசுக்கு எழுதி நேரில் சென்று அமைச்சர் களைச் சந்தித்து, தந்தி கொடுத்து, இவ்வளவுக்கும் பிறகு அங்கிருந்து மாநில அரசையும் நம்பாமல், அவர்கள் ஒரு குழுவை அனுப்பி அந்தக் குழு மாநிலத்திலே எது வறட்சிப் பகுதி எது வெள்ளப் பகுதி, எது புயலால் பாதிக்கப்பட்ட பகுதி என்றெல் லாம் ஆராய்ந்த பிறகு, அவர்களுடைய கருணை உள்ளத்திற்குத் தகுந்தபடி இவ்வளவு கொடுக்கலாம் என்று மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து அதற்குப் பிறகு மத்திய அரசு அவர்கள் 40 கோடி ரூபாய் என்றால் 20 கோடி ரூபாய் அல்லது 10 கோடி ரூபாய் என்று வழங்கி, இதுபோன்ற ஒரு பரிதாபகரமான நிலைமை, மாநிலங்களுக்கு உரிமை அற்ற ஒரு நிலை கடந்த காலத்திலே இருந்து வந்தது.

10-10 மணி

இப்போதுள்ள நிலை அப்படி அல்ல. முதலிலேயே ஒவ் வொரு மாநிலத்திற்கும் அங்கு வறட்சி ஏற்பட்டால், வெள்ளம் ஏற்பட்டால், புயல் வந்தால் நிவாரணப் பணிகளுக்காக இவ்வளவு தொகை என்று அவர்கள் ஒதுக்கிவிடுகிறார்கள். அப்படி ஒதுக்கப்பட்ட தொகை 39 கோடி ரூபாய். இந்த வெள்ளத் திற்கு நாம் செலவு செய்தது போக மீதிப் பணம் அப்படியே இருக்கும். அடுத்து ஒரு பெரிய பாதிப்பு ஏற்படக்கூடிய அளவுக்கு வறட்சியோ, வெள்ளமோ, புயலோ வருமானால் அந்தப் பணத்தை நாம் செலவழித்துக் கொள்ளலாம். அல்லது இந்த ஆண்டு முழுவதும் அத்தகைய செலவே இல்லாமல் போனால் அடுத்த ஆண்டு இதைப்போன்ற 39 கோடி ரூபாயோ 50 கோடி ரூபாயோ தரப்படும்போது இந்த ஆண்டு மீச்சப்பட்ட தொகை அத்தோடு அன்றைக்கு ஒரு திரண்ட தொகையாக சேர்ந்து விடும். இது தான் இன்றைக்குள்ள நிலைமை. எனவே, மத்திய அரசு கேட்டு, பணம் இப்போது தரவில்லையே தவிர, கேட்காமலே ஏற்கனவே ஒதுக்கி இருக்கிறது என்ற உண்மையைத் தான் நேற்றைக்கு நான் இந்த அவையிலே எடுத்து வைத்தேன்.

மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியது போல் மற்ற எல்லா நிவாரணப் பணிகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீனவர்களுடைய கஷ்டங்கள், ஆதி திராவிட மக்களுடைய கஷ்டங்கள், குடிசை வாழ் மக்களுடைய கஷ்டங்கள் இவைகளை எல்லாம் உணர்ந்து, உடனுக்குடன், புயல் பாதிப்பு வந்து விடக்கூடாது என்று முன்னெச்சரிக்கை நட வடிக்கைகளும் எடுக்கப்பட்டன. அதற்குப் பிறகு இப்போது ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கான நிவாரணப் பணிகளும் இப்போது நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு துணைப் பிரதமர் திரு. தேவிலால் அவர்கள் ஒரு அறக்கட்டளையிலே இருந்து ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் அனுப்பியிருப்பதாக நேற்றைய தினம் தகவல் தந்துள் ளார். இந்தப் பணம் வந்து சேர்ந்ததா, அளிக்கப்பட்டு விட்டதா என்று எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். விரைவிலே அது வந்து சேரும், வந்து சேர்ந்த உடன் அந்தப் பணம் அளிக்கப்படும்.

அதைப்போலவே ஆந்திர மாநில முதலமைச்சரும் ஒரு நல்ல உள்ளத்தை, நல்ல எண்ணத்தை பரிமாறிக்கொள்ளக் கூடிய வகையிலே 10 லட்சம் ரூபாய் இங்கே நம்முடைய நிவாரண நிதிக்காக அவர்கள் நேற்றைக்கு அறிவித்து இருக்கிறார்கள். அவருக்கும், துணைப் பிரதமர் திரு. தேவிலால் அவர்களுக்கும் தமிழக அரசின் சார்பாக, இந்த அவையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) வனத் துறை அலுவலர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருப்பதால் ஏற் பட்டுள்ள நிலை குறித்து.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆம் தேதியிலிருந்து 10 ஆம் தேதி வரை தமிழ்நாடு பாரஸ்டர்கள் சங்கம் இங்கே தொடர் உண்ணா விரதம் இருந்தது. அதேபோல் தமிழ்நாடு காவியல் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் 78 பேர்—பாரஸ்ட்டு பயிற்சிக் கல்லூரியில் இருக்கிற பயிற்சியாளர்கள் 78 பேர் கடந்த ஒரு வார காலமாக சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அவர் களுடைய 6 அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அதிலே 24 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவர்களுடைய நிலைமை மோசமாக இருப்பதாக எனக்கு இன்று காலையில் கூட தந்தி வந்திருக்கிறது. அவர்களுடைய கோரிக்கையைப் பொறுத்தவரையில் மிகவும் நியாயமான கோரிக்கைகள் அதிலே அடங்கி இருப்பதாக நானும் நினைக்கிறேன். உதாரணமாக ஒரே கல்வித் தகுதி இருந்தாலும் கூட அவர்களுக்கும் ரேஞ்சர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்திலே 800 ரூபாய் வேறுபாடு இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். அதேபோல் பொதுவாக பதவி உயர்வு என்று வந்தால் யாருக்கும் 3 பதவி உயர்வுகள் ஒரு அரசுப் பணியில் இருக்கின்ற நேரத்தில் கிட்டும். இவர்களைப் பொறுத்த வரையில் பதவி உயர்வுக்கே வழி இல்லாமல் ' once a mortgage always a mortgage' என்பதைப் போல, 'once a Forester always a Forester' என்கிற நிலைமை இவர்களுக்கு இருப்ப தாக அவர்கள் சொல்கிறார்கள். அதிலே வந்தவர்களிலே சில பேர் 27 ஆண்டுக் காலம், 28 ஆண்டுக் காலம் பணியாற்றியும் கூட அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். அதே போல் ரிஸ்க் அலவன்ஸ் கேட்டிருக்கிறார்கள். வீட்டு அலவன்ஸ் கேட்டிருக்கிறார்கள். நியாயமான பல கோரிக்கைகள் இருக்கின்றன. இந்தக் கோரிக்கை களை வலியுறுத்தி அவர்கள் போராடிக்கொண்டு வருகிறார்கள்.

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1990 மே 12

சென்ற ஆண்டு கானியல் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி யாளர்களுக்கு பட்டமளிப்பு விழாவுக்குச் சென்ற அமைச்சர் அவர்கள் அங்கே உறுதிமொழி அளித்ததாகவும் அவர்கள் சொல்கிறார்கள். நிச்சயமாக வேறு சம்பள விகிதங்களில் ஏதேனும் மாற்றம் செய்யப்படுமானால்—எந்த இலாக்காவாக இருந்தாலும்—சம்பளக் கமிஷன் பரிந்துரைக்குமேல் மாற்றம் செய்யப்படுமானால் நான் உங்களுக்குப் பரிந்து பேசி நிச்சயமாக உங்களுடைய சம்பள விகிதங்களை மாற்றம் கொண்டு வந்தும் மற்ற கோரிக்கைகளைப் பரிவோடு பரிசீலித்து, அவற்றையெல்லாம் கிடைக்கும்படியும் செய்கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் உறுதிமொழி அளித்து வந்ததாகவும் சொல்கிறார்கள். அதற்குப் பின்னர் அவர்களுக்குக் கிடைக்காத காரணத்தாலே போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே, பாரஸ்டர்களின் அந்த நியாயமான கோரிக்கைகளை அரசு பரிவோடு பரிசீலித்து நீதி கிடைக்கச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு இதைக் கொண்டு வருகிறேன்.

10 15 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் எழுப்பிய பிரச்சினையைப் பொறுத்த வரையில் நான் போன ஆண்டு வைகை அணைப்பகுதியில் இருக்கக்கூடிய கல்லூரியிலே பட்டமளிப்பு விழாவிலே கலந்து கொள்வதற்காகச் சென்றிருந் தேன். மாநிலம் முழுவதுமாக உள்ள ரேஞ்சர்கள், பாரஸ்டர் கள் ஆகியோர் அங்கே கூடி—நான் மாலையிலே 5 மணி அளவிலே அங்கே சென்றேன்—அதாவது காலை 10.00 மணியில் இருந்து எந்தவிதமான முன் அறிவிப்பும் இல்லாமல் போராட்டம் நடத்தினார்கள். எங்களுக்கு சம்பள உயர்வு தந்தால்தான் விழாவை நடத்தவிடுவோம் என்ற அளவில் போராடினார்கள். அவர்கள் அரசு ஊழியர்கள். அமைச்சர் அங்கே அழைக்கப் பட்டிருக்கிறார். ஆனால் எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் காலையிலிருந்து அங்கே போராட்டம்; வனத்துறைத் தலைவரும் ஏனைய அதிகாரிகளும் ஏறத்தாழ 6 மணி நேரம் பேசிப் பார்த்தார்கள். அவர்கள் கேட்கவில்லை. நான் சென்ற உடனே எனக்குத் தகவல் கொடுத்தார்கள். நான் சொன்னேன், வேண்டுமென்றால் பட்டமளிப்பு விழாவிலே கலந்து கொள்கிறேன், அவர்கள் விரும்பாவிட்டால் நான் சென்னைக்குத் திரும்பி விடுகிறேன் என்று சொன்னபிறகுதான் ஓரளவுக்கு விழாவை நடத்துவதற்கு சம்மதித்தார்கள். நான் அந்த விழாவில் சொன்னேன், உங்களுடைய கோரிக்கைகளை, அதாவது ரேஞ்சர்கள், பாரஸ்டர்கள் ஆகியோருடைய கோரிக்கைகளை ஏற்கெனவே நான் முதலமைச்சரிடம் எடுத்துக் கூறி இருக்கிறேன், அது ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன். அதற்கிடையில் இப்படி பட்டமளிப்பு விழாவில் அனைவரும்



1990 மே 12] [திரு. கே. பி. கந்தசாமி]

சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டால் என்னால் இந்த நேரத்தில் எந்தவிதமான காரியத்தையும் செய்ய முடியாது, உறுதிமொழி தர முடியாது என்று இறுதியாக நான் சொன்னேன். அன்றைக்கு அவர்கள் சொன்னார்கள், ஏற்கெனவே ஏனைய துறையில் உள்ள சில அதிகாரிகளுக்கு சம்பள உயர்வுகூடக் கொடுத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அது உறுதி செய்யப்படவில்லை என்று நான் சொன்னேன். அப்படி வேறு இலாக்காவில் கொடுக்கப்பட்டிருந்தால் கூட நான் அந்த உறுதிமொழி அளிக்க முடியாது; நான் நிதித்துறை அமைச்சர் அல்ல; நிதித்துறை அமைச்சராக இல்லாதிருக்கும்போது எப்படி அந்த உறுதிமொழிகளை நான் அங்கே கொடுக்க முடியும்? எனவே நான் சொன்னதெல்லாம், முதலமைச்சரிடம் உங்களுக் காக சிபாரிசு செய்வேன், பரிந்துரை செய்வேன் என்ற அளவில் சொல்லிவிட்டு வந்தேன். அதற்குப் பிறகு சென்னை வந்த வுடன் மறுநாளே முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினேன். ரேஞ்சர்கள், பாரஸ்டர்கள் ஆகியோரது கோரிக்கைகள் சற்று நியாயமானவை, ஆகவே இவைகளைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அதற்குப் பிறகுதான் ரேஞ்சர்களுடைய ஊதியம் உயர்த்தித் தரப்பட்டது. இன்னும் பாரஸ்டர்களுடைய ஊதியத்தை உயர்த்தித் தரக் கூடாது, தர முடியாது என்று அறிவிப்பு வரவில்லை. அது ஆய்வில் இருக்கிறது. அதற்குள்ளாகவே அவர்கள் அங்கே பாரஸ்டில் இருக்கக்கூடிய கல்லூரியில் உண்ணாவிரதம் ஆரம்பித்து இருக்கிறார்கள். அவர்கள் அறிவிப்புக் கொடுத்தது, தொடர் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக. ஆறு அம்சக் கோரிக்கையைக் கொடுத்து அந்தக் கோரிக்கையை ஏற்கும் வரையில் தொடர் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்துவிட்டு, அதற்குப் பிறகு சாகும் வரை உண்ணாவிரதம் என்று இருந்து கொண்டிருக் கிறார்கள். எனவே கொடுத்த அறிவிப்பு ஒன்று. அங்கே நடைபெற்றுக்கொண்டு இருப்பது இன்னொன்று. அதுபோல் இங்கேயும் அதாவது சென்னையிலே அந்த சங்கத்தைச் சேர்ந்த வர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால் அவர்களுக்கு ஏற்கெனவே ஒரு அங்கீகரிக்கப்பட்ட சங்கம் இருக்கிறது. அந்த சங்கத்தின் மூலமாக இந்த உண்ணாவிரதம் நடைபெறவில்லை. அங்கீகரிக் கப்பட்ட சங்கத்திலே இருந்து பிரிந்து சென்றவர்கள் சிலர் இப்படிப்பட்ட உண்ணாவிரதம் மேற்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே இன்னும் ஆய்வில் இருக்கக்கூடிய ஒரு பிரச்சினை மீது அரசு அலுவலர்கள் இப்படிப்பட்ட உண்ணாவிரதத்தை மேற் கொண்டு இருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் இந்த உண்ணாவிரதத்தைத் தொடங்காது இருந்தால் இங்கே அதற்குள்ளாக ஏதாவது ஒரு அறிவிப்பு வந்திருக்கக்கூடும். இருந்தாலும் கூட அரசு ஊழியர்கள் என்ற முறையில் அவர் களுடைய கோரிக்கைகளை பரிவோடு முதலமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது தொடர்பாக திரு. சிங்காரம் அவர்களும் ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அவர் பெயரும் இதிலே இணைக்கப்படுகிறது. அதுபோல் நம்முடைய திரு. பொன். விஜயராகவன் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அவர்கள் பெயர்களும் இணைக்கப்படுகின்றன.

(இ) சங்கம் அமைத்துக் கொள்ள உரிமை கோரும் டி.வி.எஸ் தொழிலாளர்களின் கோரிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து.

திரு. சே. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள மிகப் பெரிய தொழில் நிறுவனங்களான டி.வி.எஸ். நிறுவனங்களில் பணியாற்றக் கூடிய தொழிலாளர்கள் அவர்கள் விரும்பக்கூடிய முறையில் சங்கம் அமைத்துக்கொள்ள மறுக்கின்ற அந்த டி.வி.எஸ். நிர்வாகத்தின் மீது அரசு உரிய நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி மே மாதம் ஒன்றாம் தேதி முதல் அந்தத் தொழிலாளர்கள் பனகல் பார்க்கிலே உண்ணாவிரதம் இருந்தார்கள். அப்படி உண்ணாவிரதம் இருந்து வந்த தொழிலாளர்களைக் கைது செய்து சிறையில் அடைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. மேற்கொண்டு 10-ஆம் தேதி அன்று காங்கிரஸ்காரரர்கள் உண்ணாவிரதம் இருக்கக்கூடிய இடம் அது என்று சொல்லி அவர்களை உண்ணாவிரதம் இருக்கவிடாமல் தடுத்து கைது செய்திருக்கிறார்கள். ஆகவே அது சம்பந்தமாக அவர்கள் நேற்று ஊர்வலமாக வந்து தொழிலாளர் நலத்துறை அமைச்சருக்கு ஒரு மனு அளித்திருக்கிறார்கள். இந்த நிறுவனம் தமிழகத்தில் மிகப் பெரிய தொழில் நிறுவனம்.

10.20 மணி

அதிலே நியாயமாக தாங்கள் விரும்பிய ஒரு சங்கத்தை அமைக்கக் கூடாது என்று தொடர்ந்து அவர்கள் அந்தத் தொழிலாளர்கள் மீது மிகப் பெரிய அளவுக்குப் பழி வாங்க பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். அவர்களை மாநிலம் விட்டு மாநிலம் மாற்றுவது, வேலையை விட்டு நீக்குவது போன்ற நிர்பந்தங்களைச் செய்கிறார்கள். அரசு அவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும். இரகசிய ஓட்டளிப்பு முறையிலே அவர்கள் விரும்பும் சங்கத்தைத் தேர்ந்தெடுக்கும் ஒரு ஏற்பாட்டுக்கு வழி வகுத்துள்ளார்களா, அதற்குரிய பாதுகாப்பு அளிப்பார்களா என்று அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் ஒரு மணி அளவிலே டி. வி. எஸ். தொழிலாளர்கள் ஒன்பது பேர் கொண்ட குழு என்னைச் சந்தித்து, தங்கள் மனுவைத் தந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அந்தத் தொழிலாளர்களை இடம் விட்டு இடம் மாற்றி, கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களுக்கு மாற்றி இருப்பதாகவும், நியாயமான கோரிக்கைகளையும் அவர்கள் நிறைவேற்றித் தரவில்லை என்றும் பல்வேறு கோரிக்கைகளை அளித்திருக்கிறார்கள். உடனடியாகத் தொழிலாளர் நல ஆணையரை அழைத்து, இது பற்றி விசாரிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. விரைவாக இது பற்றி முடிவு செய்யப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) நீதிபதி இராமமூர்த்தி விசாரணைக் கமிஷன் அறிக்கை தொடர்பான நடவடிக்கைகள் குறித்து.

திரு செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 6—9—1989 அன்று விசாரணைக் கைதியாக இருந்த கோபி என்னும் இளைஞர் மரணம் குறித்து நான் இதே மன்றத்தில் எழுப்பியபோது மாண்புமிகு முதல்வரவர்கள அந்த மரணம் குறித்து மாவட்ட நீதிபதியாக இருந்த திரு. ஏ. இராமமூர்த்தி அவர்கள் மூலமாக விசாரணை நடத்தி அந்த விசாரணை மூலம் உண்மையைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படுமென்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின் அடிப்படையில் நீதிபதி திரு. ஏ. இராமமூர்த்தி அவர்கள் விசாரணை அதிகாரியாக, கமிஷனாக அறிவிக்கப்பட்டு, இன்றைக்கு அவர்களுடைய அறிக்கையும் அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. சமர்ப்பிக்கப்பட்ட அந்த அறிக்கை நேற்றையதினம் நம்முடைய அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. விசாரணைக் கமிஷன் நடத்திய அந்த ஆய்வுகளில் அவர்கள் சில முடிவுகளைத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஒன்று திரு. கோபி ரிமாண்டில் 24 மணி நேரத்திற்கும் அதிகமாக, சட்ட விரோதமான முறையில் வைக்கப்பட்டிருக்கிறார் என்றும், அவர் 31-8-1989 அன்றே காவல் துறையினரால் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார் என்றும், 2-ஆம் தேதி தான் அவர் அழைத்துச் செல்லப்பட்டார் என்று காவல் துறையினர் சொல்வது உண்மைக்கு மாறானது என்றும், அவர் சட்ட விரோதமாகக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு, கோபி மரணம் பற்றி மேலும் சொல்லப்பட்டிருப்பது, அவருக்கு உரிய சிகிச்சை சரியான முறையில் கொடுக்கப்படவில்லை என்பதால் அவர் மரணம் அடைந்திருக்கிறார் என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு சில அதிகாரிகளுடைய தவறுகளினால் இன்றைக்குத் தமிழக அரசுக்கும், மாண்புமிகு முதல்வரவர்களுக்கும் கூட இது அவப் பெயரை ஏற்படுத்தும் என்பதாலே திரு. கோபி என்ற இளைஞர் இறந்த துயரச் சம்பவம் நடந்திருக்கிறது. இந்த விசாரணைக் கமிஷன் சில சிபாரிசுகளை சொல்லியிருக்கிறது. அப்படி சட்ட விரோதமான முறையில் கோபியைக் கைது செய்து வைத்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது. கோபி மரணத்திற்குக் காரணமான, தகுந்த சிகிச்சை அளிக்காத மருத்துவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறது. எதிர் காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்காமல் இருக்க, சில சிபாரிசுகளையும் சொல்லி இருக்கிறது. விசாரணைக் கைதி என்று அழைத்துச் சென்று விசாரிப்பது தவறு என்றும், அப்படி விசாரணைக்காக அழைத்துச் செல்வதாக இருந்தால், வீட்டில் இருப்பவர்களிடம் ரசீது கொடுத்து அழைத்துச் செல்ல வேண்டுமென்றும் அதிலே சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறைய நிகழ்ச்சிகள் இருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால் போதும். விடை தானே வேண்டும்?

**திரு. செ. நூர்முகமது :** ஆகவே இப்படிப்பட்ட சிபாரிசுகளின் அடிப்படையில், இப்படி சட்ட விரோதமான முறையில் கைது செய்து அழைத்துச் செல்லப்படாமல் இருக்க என்ன நடவடிக்கை அரசு எடுத்திருக்கிறதென்பதை அறிய விரும்புகிறேன். கடைசியாக, இறந்துவிட்ட கோபியின் குடும்பத்திற்குப் போதுமான இழப்பீடு கொடுப்பது அரசின் கடமை என்றும் சொல்லியிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு முதல்வரவர்கள் அந்தப் பரிந்துரையை ஏற்று அந்தக் குடும்பத்திற்கு தகுந்த இழப்பீட்டுத் தொகையை அளிக்க வேண்டுமென்று கேட்டு, இது சம்பந்தமாக அரசு எடுத்த நடவடிக்கைகளைத் தெரிவிக்கக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு. எஸ். டி. உகம்சந்த், ஓரிரு வரிகள்.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இதைப் பற்றி நேற்றையதினம் எழுப்பி, இதற்காக நேரத்தை ஒதுக்க வேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். ஆனால் திடீரென்று இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. இதில் விரிவாக விவாதிக்க வேண்டியிருக்கிறது, இது போன்று பல கமிஷன்கள் போட்டிருக்கிறோம். அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு கமிஷனிலும் அதே சிபாரிசுகள்தான் வருகின்றன. இது போன்ற பரிந்துரைகளை அவை செய்திருக்கின்றன, அரசாங்கம் உத்தரவு போடும் என்று சொல்லி இருக்கிறார்கள். எனவே, எல்லாவற்றையும் பேச வேண்டும் என்ற முறையிலே இந்த அவையிலே அதற்காக நீங்கள் ஒரு நேரத்தைக் குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அறிக்கையிலே சொல்லப்பட்டு இருக்கின்ற சிபாரிசுகளை உடனடியாக அமல்படுத்த வேண்டும். அடுத்த கமிஷனிலும் அதே சிபாரிசு தான் வரும் என்ற நிலை ஏற்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.



10-25 மணி

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவையிலே வைக்கப்பட்ட அறிக்கையின் மீது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் என்னிடத்திலே சில தகவல்களைக் கேட்டு இருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் எந்த ஒரு நிகழ்விலும்—அது காவல் துறை அதிகாரிகளால் நடைபெற்ற நிகழ்வாக இருந்தாலும்சரி அல்லது அரசுத் துறையைச் சார்ந்த மருத்துவர்கள் போன்ற யாராக இருந்தாலும் சரி, அவர்கள் இந்த நாட்டினுடைய குடிமக்களில் யாருக்காவது எந்தத் தீங்கும் சட்ட விரோதமாக அல்லது அலட்சியத்தின் காரணமாக செய்து இருப்பார்களேயானால் அவர்களுக்காக வக்காலத்து வாங்குகின்ற அரசு இது அல்ல என்பதற்கு, இந்த நீதி விசாரணைக்கு உடனடியாக ஏற்பாடு செய்ததும், அந்த விசாரணை அறிக்கையை அவையிலே வைத்ததும் பெரிய சான்றாகும். இதே மாமன்றத்திலே எத்தனையோ அறிக்கைகள் வராமல் போய் இருக்கின்றன. பால் கமிஷன் அறிக்கை வராத காரணத்தால் அதை எடுத்து நான் வெளியிட்ட காரணத்துக்காக என் மீது திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு, என்னுடைய உற்றார், உறவினர் எல்லாம் கைது செய்யப்பட்டு— அவர்கள் எல்லாம் பால் கமிஷன் அறிக்கையைத் திருடினார்கள் என்று அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டு, என்னுடைய உதவியாளர் சண்முகநாதனும் வேலை இழந்து நடுத்தெருவிலே நிற்கக்கூடிய சூழ்நிலை எல்லாம் ஏற்பட்டது, வெளியிடப்படாத அறிக்கையை ஜனநாயக ரீதியிலே எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நான் வெளியிட்டதற்காக அவ்வளவும் நடைபெற்றது. அப்படியெல்லாம் இல்லாமல் இன்றைக்கு நீதிபதி என்ன சொன்னாரோ அதை அப்படியே இந்த மன்றத்திலே வைத்து, அதிலே அரசுக்கு வேறு கருத்து உண்டு என்று பால் கமிஷன் அறிக்கையிலே சொன்னது போலச் சொல்லாமல், அரசு அவர் சொன்ன அந்தக் கருத்துக்களை எல்லாம் ஏற்றுக் கொள்கிறது; நடவடிக்கை எடுக்கின்றது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 மே 12

இந்த மன்றத்திலே அரசு அதை வைத்துள்ளது. இந்த கமிஷ
னுக்கு, இஸ்மாயில் கமிஷன் அறிக்கைக்கு நேர்ந்த கதியோ, பால்
கமிஷன் அறிக்கைக்கு நேர்ந்த கதியோ, நிச்சயமாக நேராது
என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தக் கமிஷன்
ஏன் போடப்பட்டது என்பதை நேரத்தைக் கருதி ஒரு
வரிகளிலே நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தொழிலாளி
கோபி என்பவர் 30-8-1989 அன்று அருமனை காவல் நிலை
யத்தைச் சேர்ந்த காவலர்களால் கைது செய்யப்பட்டார். இவர்
காவல் கைதியாக இருக்கும்போது நோய்வாய்ப்பட்டு மருத்துவ
மனையில் சேர்க்கப்பட்டு, பின்பு அங்கிருந்து நாகர்கோவில் அரசு
மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, செப்டம்பர் 6-ஆம்
தேதி அன்று இறந்து விட்டார். அதையொட்டி 7-10-1989
அன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தமிழ்நாடு
மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் நல்லசிவம் அவர்கள்
என்னிடத்திலே ஒரு மனுவைக் கொடுத்து இதிலே இவ்வளவு
அநியாயங்கள் நடைபெற்று இருக்கின்றன. எனவே இப்போது
நடைபெறுகின்ற ஆர்.டி.ஓ. விசாரணையை மாற்றிவிட்டு மாவட்ட
நீதிபதி ஒருவரைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டும்
என்கின்ற கோரிக்கை விடுத்து, அது உடனடியாக என்னால்
ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆணைப் பிறப்பிக்கப்பட்டது. அவர்
அந்த நீதி விசாரணையை நடத்தி முடித்து இப்போது
அறிக்கையைத் தந்து இருக்கிறார். அது அவையிலே வைக்கப்
பட்டு இருக்கிறது எந்த ஒரு அறிக்கையும் அவையிலே வைக்கப்
பட்ட பிறகுதான் அந்த அறிக்கையிலே காணப்பட்டுள்ள அல்லது
பரிந்துரைக்கப்பட்டுள்ளதைப் பற்றி நடவடிக்கைகள் எடுக்க
முடியும். எனவே, முதல் நடவடிக்கையாக அது அவையிலே
வைக்கப்பட்டு ஆகிவிட்டது. நீதிபதி மிகத் தெளிவாகக்
குறிப்பிட்டு இருக்கிறார். அதிலே காவல் கைதியாக கோபி
இருந்தபோது, போலீசார் அடித்துத் துன்புறுத்தவில்லை என்று
திட்டவட்டமாகக் கூறிவிட்டு, இருந்தாலும் 24 மணி நேரத்துக்கு
மேலாக காவல் நிலையத்தில் கைதியாக வைக்கப்பட்டது, 'Illegal
Detention" என்று ஒரு குற்றச்சாட்டை அவர் குறிப்பிட்டு
இருக்கிறார். அதைவிட மோசமானது, கோபிக்கு நீரிழிவு வியாதி
இருந்ததாகவும், அதை டாக்டர்கள் சரியாக கவனிக்காமல்,
குறிப்பாக குழித் துறையைச் சேர்ந்த டாக்டர் ஸ்ரீகுமார் கவனக்
குறைவாக இருந்த காரணத்தால் கோபி இறந்தார் என்றும்
நீதிபதி விசாரணையிலே அவர் தெளிவாகக் கூறி இருக்கிறார்.
அது மாத்திரமல்ல, பிறகு அவர் அங்கிருந்து நாகர்கோவில் அரசு
மருத்துவமனைக்கு மாற்றப்பட்டபோது கூட அங்கே அவர்
மயக்க நிலையை அடைந்து விட்டார் என்றும், நிலைமை
மோசமாக ஆகிவிட்டது என்றும், அங்குள்ள மருத்துவர்களும்
போதுமான கவனம் செலுத்தவில்லை என்றும் இந்த அறிக்கை
யிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. எனவே ஒரு அரசு



1990 மே 12] [டாக்டர். மு. கருணாநிதி]

10-30 மணி

—ஏறத்தாழ ஐந்து கோடி மக்களைப் பரிபாலிக்கின்ற ஒரு அரசு—எவ்வளவு பெரிய நிலப்பரப்பிலே அமைந்துள்ள ஒரு மாநில அரசாக இருந்தாலும் கூட, ஆங்காங்கு அரசின் கவனத்திற்கு வராமல் இதுபோன்ற குறைபாடுகளை—அதிகாரிகள், மருத்துவர்கள், அரசுக்குப் பொறுப்பாகப் பணியாற்ற வேண்டியவர்கள், தங்களுடைய கடமையை மறந்து கவனக் குறைவால், அலட்சியப் போக்கால் அல்லது ஆணவத்தால் அல்லது அதிகாரத் திமிரால் இதுபோன்ற காரியங்களிலே ஈடுபட்டு விடுகிறார்கள் என்பதை இந்த நீதி விசாரணை நமக்கு நல்லமுறையிலே விளக்குகின்றது. வருங்காலத்திலே இதுபோன்ற நிகழ்ச்சிகள் நிகழாமல் இருக்க—நீதிபதி அவர்கள் சொன்ன பரிந்துரைகளையெல்லாம் நம்முடைய நூர்முகமது அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். அவைகளையெல்லாம் அரசு மனத்திலே நிறுத்தி ஆவன செய்யும்; எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையெல்லாம் இந்த அவையிலே இந்த அறிக்கையை வைத்து பிற்பாடு எடுக்க வேண்டுமென்ற முறைப்படி நிச்சயமாக எடுக்கப்படும். தயவு தாட்சண்யமே இதிலே நிச்சயமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொண்டு—"Gopi was the bread-winner of the family. It is the duty of the State to protect the life and property of every individual and when the doctors employed by the Government have failed to discharge their duty, there is a duty cast on the Government to compensate adequately the family of the deceased Gopi." என்றும் நீதிபதி தெரிவித்திருக்கிறார். அவர்களுடைய குடும்ப நிலவரங்களெல்லாம் எத்தகையது, என்ன என்பவைகளைப் பற்றியெல்லாம் கூட நான் காலையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களிடத்திலே கேட்டேன். அவர்கள் என்னிடத்திலே தெளிவாகக் கூறவில்லை. இருந்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அதைக் குறித்து விவரங்களை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இப்பொழுது இந்த நேரத்தில் அரசின் சார்பாக அந்தக் குடும்பத்திற்கு 25,000 ரூபாய் பாதுகாப்பு நிதியாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) சென்னையில் பெய்துள்ள மழை தொடர்பாகக் குடிநீர் வழங்குவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்ற நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே பிரச்சினை குறித்து திரு. மு.க. ஸ்டாலின், திரு. கணபதி.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் சென்னை, சென்னையைச் சுற்றி பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து ஐந்தாறு நாட்களாக மழை பெய்திருக்கிறது. அதனால் சென்னை நகருக்குத் தண்ணீர்

[திரு. மு. க. ஸ்டாலின்] [1990 மே 12

வழங்கிக் கொண்டு இருக்கிற பல்வேறு ஏரிகளில் தண்ணீரின் அளவு உயர்ந்திருக்கிறதா? சென்னையில் அப்படி உயர்ந்திருந்தால் அதனுடைய அளவையும் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். சென்னையில் குடிநீர்த் தட்டுப்பாடு தீர்கின்ற வாய்ப்பு இதனால் ஏற்பட்டிருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். கணபதி : மாண்புமிகு தலைவரவர்களே, எங்கள் இளைஞர் தளபதி முன்மொழிந்த அந்தக் கருத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 8–5–1990-இல் சென்னைக்குக் குடிநீர் வழங்குகின்ற மூன்று ஏரிகளின் மொத்த நீர் அளவு 996 மில்லியன் கன அடியாக இருந்தது. அது கடந்த நர்ன்கு நாட்களில் படிப்படியாக உயர்ந்து 9–5–1990-இல் 1,100 மில்லியன் கன அடியாகவும், 10–5–1990-இல் 1,113 கன அடியாகவும், 11–5–1990-இல் 1,332 கன அடியாகவும், இன்று காலையில் 1,544 கன அடியாகவும் உயர்ந்திருக்கிறது. இன்னும் ஏரிகளுக்கு நீர் வந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக புழலேரிக்கும், சோழவரம் ஏரிக்கும் நீர் வரத்து இருந்துகொண்டு இருக்கிறது. இந்த நீர் அளவு சென்ற ஆண்டு இதே நாளில் இருந்த நீர் அளவைவிட 297 மில்லியன் கன அடி அதிகமாக இருக்கிறது. சென்ற ஆண்டில் இதே நாளில் 1,247 மில்லியன் கன அடி நீர் தான் இருந்தது; இந்த ஆண்டு 1,544 மில்லியன் கன அடி நீர் இருக்கிறது.

இருந்தாலும், இப்பொழுது கொடுத்து வருகிற 'ஆல்டர்நேட்டிவ் டேஸ்'—இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நீர் வழங்குகிற முறையைத்தான் பின்பற்ற முடியும். ஏனென்றால் இந்த மூன்று ஏரிகளினுடைய மொத்தக் கொள்ளளவு 6.4 டி.எம்.சி., அதாவது ஏறத்தாழ 6,400 மில்லியன் கன அடி நீர். அதிலே பாதி அளவிற்காவது இருந்தால்தான் தினந்தோறும் குடிநீர் சென்னைக்கு வழங்க முடியும். 3.2 டி.எம்.சி.—3,200 மில்லியன் கன அடி நீர் இருந்தால்தான் சென்னைக்கு தினந்தோறும் வழங்குகின்ற நிலைமை சாத்தியம் ஆகும். ஆனால் இப்பொழுது இருக்கிற நீர் அளவு 1.55 டி.எம்.சி. அதாவது 1,550 மில்லியன் கன அடி தான் இருக்கிற காரணத்தினால் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நீர் வழங்குகிற முறையே தொடர்ந்து பின்பற்றப்படும்.

இப்படிப் பின்பற்றுகின்ற முறையின் காரணமாக அக்டோபர் இறுதி வரை சென்னை நகரத்திற்கு எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



1990 மே 12] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி

மேலும், நிலத்தடி நீர் இப்பொழுது ஆறு இடங்களிலேயிருந்து எடுக்கப்பட்டு வருகிறது. அங்கேயும் ஓரளவுக்கு நிலத்தடி நீரினுடைய நிலைமை அதிகரித்து இருக்கிற காரணத்தினால் இந்த நிலைமை பயப்படுகின்ற அளவிற்கு இல்லை. நிச்சயமாக இந்த மழையின் காரணமாக சென்னை நகர மக்களுக்குக் குடிநீர்ப் பிரச்சினை ஏற்படாது, இப்பொழுது வழங்குகின்ற அளவிலே வழங்கப்பட்டு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஊ) வீராணம் திட்டத்திற்காகச் செய்யப்பட்ட குழாய்களையும் வாங்கப்பட்ட தளவாடங்களையும் முழுமையாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து.

10-35 மணி

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்திலே வீராணம் திட்டம் துவங்கப்பட்டு அதற்குத் தயாரிக்கப்பட்ட சிமெண்ட் குழாய்கள், அதற்கு வாங்கப்பட்ட அதிகசக்தி வாய்ந்த மோட்டார்கள், இரும்புச் சாமான்கள், இதர தளவாடங்கள், அப்படியே பல ஆண்டுகளாக இருக்கின்றன. இந்த ஆண்டு நெய்வேலியிலே அந்தச் சிமெண்ட் குழாய்களில் ஒரு 100 குழாய்களைப் பெற்றுத் தண்ணீரை மாற்றுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசாங்கம் இந்த சிமெண்ட் குழாய்களையும், அங்கே இருக்கிற அதிக சக்தி வாய்ந்த மோட்டார்களையும், அதற்கென வாங்கப்பட்ட இதர தளவாட சாமான்களையும் எந்த அளவிற்குப் பயன்படுத்தி இருக்கிறார்கள்? பொதுவாக இந்த சிமெண்ட் குழாய்களைத் தரைப்பாலம் அமைப்பதற்கு உபயோகிக்கலாம் என்று சொல்லப்படுகிறது. அதோடு, தண்ணீரை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு கூட அந்த பைப்புகளை பயன்படுத்தலாம். அதிக சக்தி வாய்ந்த மோட்டார்களை விற்பதன் மூலம் கோடிக் கணக்கான ரூபாய் நம்முடைய அரசாங்கத்திற்கு வரும் என்று சொல்லப்படுகிறது. இதையெல்லாம் விரைந்து செயல்படுத்த, அவற்றை முழுமையாகப் பயன்படுத்த பொதுப்பணித் துறை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, வீராணம் திட்டத்திற்காக மொத்தம் தயாரிக்கப்பட்ட பைப்புகள், 10,320. அதிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக புதைக்கப்பட்ட

பைப்புகளுடைய எண்ணிக்கை 4,293. மேலும் இப்
போது 6,027 பைப்புகள் இருக்கின்றன. பல்வேறு நிலைகளில்
இந்த பைப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று,
அதைச் சார்ந்திருக்கிற அதிகாரிகள் அரசாங்கத்திற்கு எழுதிய
போதிலும், கடந்த 13 ஆண்டுகளாக அரசு மெத்தனமாக
இருந்த காரணத்தால் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்
படவில்லை. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு வெளியே
இருக்கிற பைப்புகளை உடனடியாகப் பயன்படுத்திக் கொள்ள
வேண்டுமென்று முயற்சிகளை மேற்கொண்டு அதற்காக ஒரு
உயர்மட்டக் குழுவையும் நியமித்து இருக்கிறார்கள். சீப்
செகரட்டரி—தலைமைச் செயலாளர் தலைமையில், பி.டபிள்யூ.
டி. செகரட்டரி, மாஸ் செகரட்டரி, வீட்டு வசதி வாரிய
செயலாளர், நிதித்துறை செயலாளர். குடிநீர் வடிகால் வாரி
யத்தினுடைய இயக்குநர், மெட்ரோ வாட்டர் இயக்குநர்,
மாநகராட்சியின் கமிஷனர், நெடுஞ்சாலைத் துறையின் தலை
மைப் பொறியாளர், எம்.எம்.டி.ஏ. அதிகாரி போன்றவர்கள்
அனைவரும் அடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

தென்னாற்காடு மாவட்டத்தில் வடக்குப் பகுதியில் தரைப்
பாலம் அமைப்பதற்கு அங்கேயிருக்கிற சி.ஈ., 2,682 பைப்பு
களைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்பதை எழுதி இருக்
கிறார்கள். அதைப்போல கடலூர் பகுதியில் அந்த டிவிஷனில்
3,198 பைப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.
5,870 பைப்புகளைத் தரைப்பாலம் அமைப்பதற்கு மட்டும்
தென்னாற்காடு மாவட்டத்தில் பயன்படுத்திக் கொள்ள முடி
யும் என்ற குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே,
உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற கருத்துக்களுக்கு ஏற்ப, ஆகவே,
மீதமிருக்கிற பைப்புகளை அதற்காகப் பயன்படுத்திக்கொள்ளக்
கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இவை எப்போதோ
செய்திருக்க வேண்டிய பணிகள், இவைகள் தடைப்பட்டு விட்ட
காரணத்தால், சாலையோரமாக இவைகள் இருக்க வேண்டு
மென்று அப்போது இருந்தவர்கள் கருதிய காரணத்தால், இவை
கள் அப்படியே இருந்து கொண்டிருக்கின்றன.

மூன்று மாதத்திற்குள் தலைமைச் செயலாளர் தலைமை
யில் இருக்கிற குழு அறிக்கை சமர்ப்பித்து, பிறகு இதனுடைய
நஷ்டத்தை ஈடுகட்டுகிற அளவிற்கு இந்தப் பணிகள் தொடரும்.
நெய்வேலியில் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, 30
பைப்புகளை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். அவர்கள்
ஸ்டார்ம் வாட்டர்—மழை நீரை வெளியேற்றுவதற்குப் பயன்
படுத்துகிறார்கள். மேலும் அவர்கள் கோரினால் அந்த பைப்பு
களைக் கொடுப்பதற்கான முயற்சிகளையும் அரசு மேற்
கொள்ளும்.





(எ) தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள நகைமுகன் தொடர்பாக வந்துள்ள செய்திகள் குறித்து.

திரு. பி. வி. இராஜேந்திரன் : தலைவர் அவர்களே, கடந்த 29-3-1990 அன்று டெல்லி குருத்துவாரா பிரபந்தசாகிபில் தமிழ் நாட்டைச் சேர்ந்த நகைமுகன் என்பவர் லால்டங்கா அவர்களுடனும், சிம்ரஞ்சிங்மான், எம்.பி. (எலக்ட்) அவர்களுடனும் பேசியதாக பத்திரிகைகளில் குறிப்பாக இந்து பத்திரிகையிலும், தினமணி தலையங்கம் போன்றவற்றிலும் வந்ததை நாம் முன்னரே பேசியிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு அவையில், 'தமிழ் ஈழ விடுதலைப்புலி இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சார்பிலே நகைமுகன் என்பவர் கூட்டத்தில் பேசினாராம். இந்திய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து சீக்கியர்கள் விடுதலை பெற விடுதலைப் புலிகள் ஆதரவு உண்டு என்று அவர் குறிப்பிட்டாராம். சீக்கியர்களும் தமிழர்களும் மறவர் குலத்தினர் என்றும், இந்துக்களுடைய பாசிசத்தை எதிர்ப்பவர்கள் என்றும் பேசியதாகவும், முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தச் செய்தி உண்மையிலேயே எங்களை எல்லாம் மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாக்கியது. நாட்டினுடைய ஒருமைப் பாட்டிற்கு உலை வைக்கிறவர்கள் இங்கேயும் வந்துவிட்டார்களா, புலிகள் இதிலே தலையிடுகிறார்களா என்றெல்லாம் அச்சம் எங்களுக்கு எழுந்தது. உடனடியாக முதலமைச்சர் அவர்கள் அந்த அச்சத்தைத் தீர்க்கிற வகையில் இங்கே சொன்னார்கள்.

10-40 மணி

'நாட்டிற்குள்ளே இருக்கிற ஒற்றுமையை ஊனப்படுத்துகிறவராகவோ, அமைதியைக் குலைப்பவராகவோ, பிரிவினையைத் தூண்டுபவராகவோ யார் இருந்தாலும், அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள், என்று சொல்லி, நேஷனல் செக்யூரிட்டி ஆக்ட்டின் கீழ் தமிழகப் போலீசாரை டெல்லிக்கு அனுப்பி, நகைமுகன் அவர்களைப் பிடித்து வரச் செய்து, சென்னை கோர்ட்டிலே ஆஜர் செய்து, 15 நாள் ரிமாண்ட் என்று வைத்து, என்.எஸ்.ஐ. மூலமாக இன்றைக்கு சிறையில் தள்ளி இருக்கிறார்கள். இதற்குப் பின்னர் நான் கடந்த 7-4-1990 அன்று இந்து பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். வெஸ்ட் பெங்காலுடைய கோவாப்பரேஷன் மினிஸ்டர் திரு. பி.பி. மண்டல் அவர்கள் ஒரு அறிக்கையைச் சொல்லி இருக்கிறார்கள். நகைமுகன் அவர்கள் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உள்ளே பிடித்துப் போட்டப்பட்டதற்கு முகாந்திரம் இடையாது. பிரைமா பேசி கிடையாது. உடனடியாக தமிழக முதல்வர் அவர்கள், அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி இருந்தார். எனக்கு இது மிகுந்த

ஆச்சிரியத்தைத் தந்தது. காரணம் இன்றைக்கு தேசியவாதி,
மாபெரும் வீரன் சுபாஷ் சந்திர போஸினுடைய தலைமையை
ஏற்பவர், அதோடு மட்டுமல்லாமல், இடது சாரிக் கட்சியைச்
சேர்ந்தவர், தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாட்டின் மீது
வலுவான நம்பிக்கையை வைத்திருக்கிற மண்டல் அவர்கள்,
முதல்வர் அவர்கள் செய்த நடவடிக்கையை மறுத்துப் பேசி
யிருக்கிறாரே என்ற எண்ணத்தோடு நேற்று மத்திய சிறைச்
சாலைக்கு நான் சென்றிருந்தேன். திரு. நகைமுகன் அவர்
களை நான் நேற்று மத்திய சிறைச்சாலையிலே சந்தித்துப்
பேசினேன். அவர்களிடம் நடந்தவற்றைக் கேட்டால், ஒரு
நிரபராதி தண்டிக்கப்பட்டதாகவே நான் கருதுகிறேன்.'
பத்திரிகைச் செய்திகள் பலவற்றை முதல்வர் அவர்கள் குறிப்
பிட்டு இருக்கிறார்கள். ''டைம்ஸ் ஆப் இந்தியாவைப்''
பற்றிக்கூட கடந்த வாரம் அவர்கள் குறிப்பிட்டார்கள்
புனைந்து எழுதுகிறது என்று. இந்து பத்திரிகையை
யும், தினமணி பத்திரிகையையும் குறைத்துப் பேசவோ,
தவறாக மதிப்பிடவோ கூட இன்றைக்கு நான் முன்வரவில்லை.
அதேநேரத்தில், தவறான கருத்துக்கள் வந்துவிட்டதோ,—
மொழிப் பிரச்சினையால், நகைமுகன் அவர்கள், அங்கே
ஆங்கிலத்திலே பேசியதை பஞ்சாபியிலே மொழி பெயர்க்கப்
பட்டு அங்கேயிருக்கிற மக்களுக்கு சொல்லப்பட்டு இருக்கிறது.
இரண்டாவது அவர் அறிமுகப்படுத்தப்பட்டதே, அங்கே
பஞ்சாபியிலே அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறார். சிம்ரஞ்சிங்
மான் அவர்களிடமும், லால்டெங்கா அவர்களிடமும்
பஞ்சாபி மொழியிலேதான் மைக்கிலே அறிமுகப்படுத்தப்பட்டு
இருக்கிறார். அவர்களை அங்கே எல்.டி.டி.இ. என்று சொல்லி
யிருக்கிறார்கள். அவர்கள் நேற்றுகூட என்னிடம் பேசும்
போது, ஒரு லெட்டர் பேப்பரைக் காண்பித்தார். திரு. பிரபா
கரன் பாஸ்டியன் என்றுதான் அதில் இருக்கிறது. அவர்களுடைய
ரசிகர்மன்றம் என்று தான் இருக்கிறது. மேலும் அவர்கள்
இன்றைக்கு திட்டமாக மறுத்திருக்கிறார்கள் தான் ஈழம் என்ற
வார்த்தையையோ, காலிஸ்தான் என்ற வார்த்தையையோ,
அதற்கு நாங்கள் ஆதரவு தருவோம் என்ற வார்த்தை
யையோ சொல்லவில்லை. நான் யார், எல்.டி.டி.இ.
யினுடைய ரெப்ரசென்டேடிவா என்று கூடக் கேட்டார்கள்.
இரண்டாவதாக அடுத்த நாளே எல்.டி.டி.இ. மறுத்திருக்
கிறது, அவர்கள் எங்களுடைய ரெப்ரசென்டேடிவே கிடை
யாது என்று, அவர்களும் இல்லை என்று மறுநாளே தந்தி மூல
மாக இந்துவிற்கும், தினமணிக்கும் சொல்லியிருக்கிறேன் என்று
சொல்லியிருக்கிறார்கள். இப்படி எல்.டி.டி.இ-யினுடைய ரெப்ர
சென்டேடிவ் தான் இல்லை என்று சொல்கிறபோது, பாஸ்டி
யன், அதனுடைய ரசிகன் என்ற சார்பிலே பேசியிருக்கிறேன்.
அதுவும் இப்படிச் சொல்லவில்லை, ''இந்தியன் இம்ப்பீரியலிசம்''
என்ற வார்த்தை என் வாயிலிருந்து வந்து இருந்தால், நீங்கள்
சொல்வதை ஏற்கிறேன், என்னைத் தண்டியுங்கள் என்று





சொல்லியிருக்கிறார். நான் ''இந்து பாசிசம்'' என்ற வார்த்தையை
உபயோகித்தேன் என்று சொல்லியிருக்கிறார். இன்றைக்கு
நாம் பாரத ரத்னா டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய
நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறோம். அவர்கள் பல
நேரங்களிலே உபயோகித்த வார்த்தைதான் இந்து பாசிசம்,
தந்தை பெரியார் அவர்கள் உபயோகித்த வார்த்தைதான்
இந்து பாசிசம். அதைச் சொன்னதால்தான் இன்றைக்குத் தமிழ்
நாட்டில் கூட நாம் எல்லாம், பிற்படுத்தப்பட்ட சமுதாயம்,
ஓரளவிற்குத் தலை நிமிர்ந்து நிற்கிறோம். நேற்றுகூட நான்
பல புத்தகங்களைப் புரட்டிக் கொண்டு இருந்தேன். இன்றைக்கு
சிவகங்கையில், இதே நகைமுகனுடைய பாட்டனார் ராமச்
சந்திரன் அவர்கள் ஒரு அட்வகேட், சிவகங்கையினுடைய
தாலுக்கா போர்டினுடைய சேர்மன், அவர்களுடைய நட
வடிக்கைகளைப் பற்றி "A book on the Freedom Move-
ment in the 1930-s'—அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.
நகைமுகன் அவர்களுடைய பாட்டனார் ராமச்சந்திரன்
அவர்களுடைய சேவைகளைப் பற்றி எல்லாம் குறிப்பிட்டு
இருக்கிறார்கள். இப்படி எல்லாம் அன்றைக்குப் பாடுபட்ட
வர்கள் கூட இந்து பாசிசத்தைப் பற்றி எல்லாம் பேசி இருக்
கிறார்கள். அவர்கள், அந்த அடிப்படையிலேதான் பேசினேனே
தவிர, இந்திய ஒருமைப்பாட்டுக்கு, நான் எதிரானவன்
கிடையாது. மண்டல் கமிஷன் அறிக்கையை நடைமுறைப்
படுத்தவில்லை என்று சொல்லி, நான் போராட்டத்திற்குச்
சென்று, சிறை சென்று இருக்கிறேன், ஒரு தேசிய கட்சியாக
இருந்த ஜன்சிராமினுடைய லலித்முகத் வெகுஜன சமாஜக்
கட்சியில் அன்றைக்கு நான் மாநிலத் தலைவராகக்
கூட இருந்து இருக்கிறேன், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்
அவர்களுடைய தலைமையை ஏற்பவன், நான் எப்படி இன்
றைக்கு நாட்டுக்குத் துரோகம் செய்யமுடியும் என்றெல்லாம்
கேட்டிருக்கிறார். எனவே நான் உங்களிடமிருந்து பெற
விரும்புவது எல்லாம், இந்த மண்ணின் மீது இருக்கிற ஏனைய
சட்டங்கள், அவர்கள் மீது 'inflammatory speeches' இருந்தால்
நடவடிக்கை எடுங்கள். 'Inflammatory speech or speeches against
the secularism and sovereignty of India இதெல்லாம் இருந்தால்
நிச்சயமாக நடவடிக்கை எடுங்கள். ஆனால் என்.எஸ்.ஏ.
நிச்சயமாக அட்ராக்ட் ஆகவில்லை என்பதுதான் திரு.
பி.பி. மண்டல் அவர்களுடைய கருத்து, என்பதை நான்
உங்கள் மூலமாக வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இங்கே பத்திரிகையாளர்களுக்கு நான் விடுக்கின்ற செய்திகூட
''inside Thiru Nagaimugan, I see only a defenceless layman. You also
please go to the Central Prison and have an interview with him.''

இதைக்கூட நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புவதற்குக் காரணம் நகைமுகன் அவர்களைப் பேட்டி காண்பதற்குக் கூட இவர்களைப் போகச் சொல்ல வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு அனந்தபூர் சாகிப் தீர்மானங்களை முணு முணுக்கத் தொடங்கியிருக்கும் மான்கள் எல்லாம் உலவிக்கொண்டிருக்கிறபோது, முகன்கள் தமிழ்நாட்டில் வாடவேண்டுமா என்பதுதான் கேள்வி. இன்றைக்கு மான்கள் உலவுகிற இந்தியாவில்-இன்றைக்கு ஓப்பனாக, பகிரங்கமாக அனந்தபூர் சாகிப் தீர்மானங்களை நடைமுறைப் படுத்தவேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். அவர்களை ஆதரித்தவர்கள் எல்லாம் இன்றைக்கு எதிர்த்துக்கொண்டு இருக்கிறபோது கூட—இன்றைக்கு இப்படிப்பட்ட முகன்கள் இங்கே வாடவேண்டிய தேவையில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ஒன்றை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் தேசிய தன்னுரிமை மாநாடு—'செல்ப் டிடர்மினேசன்' பற்றி இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டில் பல மாநாடுகள் நடக்கின்றன. இன்றைக்கு அதிலே தீர்மானங்கள் இயற்றப் படுகின்றன. அது இந்திய அரசியல் சாசனத்தினுடைய வரம்புக்குள்ளே வருகிறதா, வெளியே வருகிறதா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். மேலும் 'செல்ப் டிடர்மினேசனுக்கு' இன்றைய அரசியல், சமூக, பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கு என்ன 'இன்டர்பிரட்டேசன்' மாண்புமிகு முதல்வர் அவர்கள் தருகிறார்கள்? 'செல்ப் டிடர்மினேசன் ஆப் டமில்ஸ்', இன்றைக்கு இதனைப் பரவலாகப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் தருகிற ஒரு நல்ல இன்டர்பிரடேசன் எங்களுக்கு எல்லாம் கூட வழிகாட்டியாக இருக்கும். நான் நிச்சயமாகச் சொல்கிறேன். இன்றைக்கு நீங்கள் தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவிலே இருக்கிறீர்கள். உங்களுடைய நாணயத்தை நாங்கள் சந்தேகிக்கத் தயாராக இல்லை. இன்றைக்கு இந்திய ஒருமைப்பாட்டின் மீது, இந்தியாவினுடைய அரசியல் சாசனத்தின் மீது வைத்திருக்கிற மதிப்பு, மரியாதையை இன்றைய சூழ்நிலையிலே நாங்கள் சந்தேகிக்கக் கூடத் தயாராக இல்லை. இருந்தாலும், தமிழ்நாட்டிலே இன்றைக்குப் பரவலாக "Right to self determination" வேண்டும் என்று பேசுகிறார்கள். இன்றைய அரசியல், சமூக, பொருளாதாரச் சூழ்நிலைகளில், இதனை எவ்வாறு நாங்கள்





எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கும் நீங்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தந்திருக்கிற வாய்ப்பின் மூலமாக எங்களுக்கு விளக்கத்தைத் தரவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

10-45 மணி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராஜேந்திரன் ஒரு அரிய சொற்பொழிவையே இங்கு நிகழ்த்தியிருக்கிறார். ஒரு கருத்தரங்கிற்குத் தேவையான வாதங்களை எடுத்து வைத்திருக்கிறார். அவர் குறிப்பிட்ட நகைமுகன் பற்றிய பிரச்சினை வழக்கு மன்றத்திற்கும் வர இருக்கின்ற காரணத்தால் நான் அதிலே அதிகமாக சட்ட நுணுக்கங்களில் செல்ல விரும்பவில்லை. பத்திரிகைகளிலே வந்த செய்தியை வைத்துக் கொண்டு இந்த மாமன்றத்திலே அது குறித்த பிரச்சினைகளை எழுப்பியவர்கள் யார் என்பது மாண்புமிகு தம்பி இராஜேந்திரன் அவர்களுக்கு மிக நன்றாகவே தெரியும். ஏதோ தமிழ்நாட்டிலே பிரிவினைவாதம் தலை தூக்கி நிற்பதாக அடிக்கடி காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர், இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் இந்த அவையிலே பேசியிருப்பதை அனைவரும் அறிவார்கள்.

அதுமாத்திரமல்ல. அவர் பிரிவினை வாதத்தை ஒழிப்போம் என்கின்ற தலைப்புக்களிலே கூட வெளி மேடைகளிலும், அவருடைய கட்சி மேடைகளிலும் அல்லது கட்சியினர் ஏற்பாடு செய்கின்ற மேடைகளிலும் பேசி வருகின்றார்கள். தமிழ்நாட்டிலே ஒரு பிரிவினை வாதம் நடந்து கொண்டிருக்கிறது, அதை இந்த அரசு அனுமதித்துக் கொண்டிருக்கிறது என்பது போன்ற புகார்கள் இன்று வடக்கே உள்ள மாநிலங்களிலே பரப்பப்படுகின்றன. அதைப் பரப்புகின்றவர்கள் சாதாரணமானவர்களாக இருந்தால் நான் கூட பொருட்படுத்த மாட்டேன். இந்தியாவினுடைய பிரதமராக இருந்த அன்புக்குரிய மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள்—இன்றைக்கு இந்தியாவினுடைய பிரதான எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிறார். அவர்களே கூட தமிழ்நாட்டிலே இன்றைக்கு பிரிவினைவாதம் தலைதூக்கி நிற்கிறது, பிரிவினைப் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. பிரிவினை உணர்வு கிளப்பிவிடப்பட்டிருக்கிறது என்பது போன்ற செய்திகளைச் சொல்லி வருகிறார். தமிழ்நாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1962-ஆம் ஆண்டிலேயே பிரிவினை கோஷத்தைக் கைவிட்டு, இந்திய ஒருமைப்பாடு, இந்தியாவினுடைய பாதுகாப்பு இந்தியாவின் ஒற்றுமை இவைகளிலே திராவிட முன்னேற்றக் கழகம் தன்னைஇணைத்துக் கொள்கின்றது என்று குறிப்பிட்டு அதற்கான பாராட்டுக்கள் எல்லாம் கூட அன்றைய முதலமைச்சராக இருந்த பெரியவர் பக்தவத்சலம் அவர்களால் இந்த மாமன்றத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. இருந்த போதிலும்

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 மே 12

ஏதோஒரு அரசியல் காழ்ப்புணர்வின் காரணமாக இந்த ஆயுதத்தை வைத்து இங்குள்ள மாநில அரசை ஏதாவது செய்ய முடியுமா என்று எண்ணி சில பேர் இதுபோன்ற முயற்சிகளிலே இன்றைக்கு ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கான கருவிகளாக, விடுதலைப் புலிகள் மீது இங்கே தமிழ்நாட்டிலே ஒரு சிலர் செய்கின்ற பிரச்சாரங்கள் பயன்படுகின்றன என்பதை நான் மறுக்கவில்லை; ஆனால் உண்மையிலேயே விடுதலைப் புலிகளுக்கு தமிழ்நாட்டிலே இன்றைக்கு ஆதிக்கம் இருக்கிறது என்று செய்யப்படுகின்ற பிரச்சாரம் எவ்வளவு தவறானது என்பதை நாம் மிக நன்றாக அறிவோம்.

10-50 மணி

அதைப் போலவே, பிரிவினைவாதம் இங்கே பேசப்படுகின்றது என்றால்—யாரோ ஒரு சிலர் — அந்த ஒரு சிலர் தவறாக கருதிக் கொள்ளக் கூடாது—நான் உண்மையைச் சொல்கிறேன். அவர்களை பின்பற்றுபவர்கள் எவ்வளவு பேர் என்ற கணக்கை நாம் பார்க்க வேண்டும். 'followers' எவ்வளவு பேர்? ஒரு சிலருக்கு அவர்களுடைய நிழல்கள் கூட அவர்களைத் தொடர்வது இல்லை என்பது கூட எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் சில நேரங்களில் அவர்கள் திடீரென்று இந்தப் பிரிவினைப் பேச்சைக் கட்டவிழ்த்து விடுவதும், அதன் காரணமாக இங்குள்ள அரசுக்கு ஒரு சிக்கலை ஏற்படுத்தலாம் என்று எண்ணுவதும் அதை பெரிதாக, கடுகை மலையாக ஆக்கி, டில்லியிலே உள்ள அரசிடம் திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பற்றி கோள் கூறுவதும், பத்திரிகையாளரிடத்திலே ராஜீவ் காந்தி போன்ற மிகப் பெரும் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர்களேகூட இப்படிப்பட்ட பிரச்சாரத்திலே ஈடுபடுவதும், நாம் இதுபோன்ற காரியங்களை அனுமதித்துக் கொண்டிருக்கிறோமா என்கின்ற சந்தேகம் பொதுமக்களுக்கு வருவதும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய, சிந்தித்துச செயல்பட வேண்டிய ஒன்றாக இருக்கின்ற காரணத்தாலேதான், நகைமுகன் என்ற நண்பர் பஞ்சாபிலுள்ள மானும், இலங்கையிலே ஈழத்திலே உள்ள புலிகளும் இரண்டு பேரும் சந்திக்கப் போகிறார்கள் என்ற செய்தியைச் சொல்லி, அந்தச் சந்திப்பை அவரே ஏற்பாடு செய்யப் போவதாகச் சொல்லி, அதை இந்தியாவிலே உள்ள பல பத்திரிகைகள், குறிப்பாக தமிழ்நாட்டிலுள்ள பல பத்திரிகைகளில் எல்லாம் தலையங்கங்கள் எல்லாம் கூடத் தீட்டப்பட்டு, இன்றைக்கு பத்திரிகைகளுடைய கருத்துக்களுக்கு மதிப்பு அளிக்க வேண்டும் அதையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். எவர் சொன்னார் என்பதல்ல என்ன சொன்னார் என்பதுதான் முக்கியம் என்ற வகையிலே அதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன் வந்ததே தவிர வேறல்ல. அதைத்தான் நான் இங்கே மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன்.



1990 மே 12] [டாக்டர் மு. கருணாநிதி]

பலம் வாய்ந்த இயக்கத்தைத் தன்னகத்தே வைத்துக்கொண்
டிருந்த தந்தை பெரியார் அவர்கள் அன்றும் சரி, இன்றும் சரி—
ஒரு பலம் வாய்ந்த "Followers"—உறுதி வாய்ந்த தொண்டர்கள்—
இவர்களைக் கொண்ட தந்தை பெரியார் அவர்கள் பிள்ளையார்
சிலையை உடைப்பதாக அறிவித்த அந்தக் கால கட்டத்தில்
அன்றைக்கு முதலமைச்சராக இருந்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள்,
அதிகாரிகள் எல்லாம் பெரியார் மீதும், திராவிடர் கழகத் தொண்
டர்கள் மீதும், பிள்ளையாரை உடைப்பவர்கள் மீதும் நட
வடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்ன போது, ராஜாஜி
அவர்கள் கோப்பிலே எழுதினார், "Ignore it" — அதை
அலட்சியப்படுத்துங்கள் என்று எழுதினார். அவ்வளவு
வலிவுவாய்ந்த ஒரு இயக்கத்தினுடைய செயல்களையே அலட்சியப்
படுத்த வேண்டும்; ஏனென்றால் அதை அலட்சியப்படுத்தாமல்
அவர்களைக் கைது செய்தால் அதன் காரணமாக பிள்ளையாரைப்
பற்றிய விமர்சனங்கள், இராமரைப் பற்றிய விமர்சனங்கள் எல்லாம்
வரக்கூடும். அது பெரிதாக ஆகக்கூடும் என்ற காரணத்தினால்
அதை அலட்சியப்படுத்தச் சொல்லி அன்றைக்குக் கோப்பிலே
ராஜாஜி எழுதினார். அதைப்போன்ற ஒரு முறையைத்தான்
நாமும் கடைபிடிக்க வேண்டும் என்று இருந்தாலும் கூட உள்ள
படியே சில பேருக்கு இந்த விஷயங்களை எல்லாம் பூதாகாரமாக
ஆக்கிக் காட்டி உண்மையிலேயே பிரிவினை உணர்வு தமிழகத்திலே
வரவேண்டும், இந்தியாவிலே வரவேண்டும் என்று எண்ணுகிறார்
களோ, என்னவோ எனக்குத் தெரியாது. ஏனென்றால்
பிரிவினைவாதியாக பிந்தரன்வாலேயை வளர்த்துவிட்ட
வர்கள், காஷ்மீரத்திலே பிரிவினை தோன்றுவதற்கு
காரணமாக இருந்தவர்கள் இன்றைக்கு, தமிழ்நாட்டிலே பிரி
வினைச் சக்திகளை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வளர்க்
கிறது என்று கூறுவது எவ்வளவு கடைந்தெடுத்த தவறு
என்பதை எடுத்துக் காட்டத்தான் இதையெல்லாம் நான் இங்கே
கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நம்முடைய தம்பி இராஜேந்திரன் அவர்கள் ஒன்றைச்
சொன்னார்கள். தானே சென்று மத்திய சிறையிலே நகைமுகனை
சந்தித்து அவரிடத்திலேயிருந்து விபரங்களை அறிந்து வந்ததாகச்
சொன்னார். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம், ஒரு
காங்கிரஸ் கட்சி நண்பருக்கே நகைமுகனோடு இவ்வளவு தொடர்
பும், இரக்க மனப்பான்மையும் இருக்கும்போது கழக ஆட்சியிலே
இருக்கின்ற நாங்கள் குறை சொல்லப்படுவது நியாயம்தானா?
நான் அவரைக் குறை சொல்லவில்லை. நியாயம் என்ன என்று
கேட்பதற்குச் செல்கிறார். அவர் என்ன கருத்தைச் சொல்கிறார்
என்று கேட்பதற்கு நம்முடைய இராஜேந்திரன் அவர்கள் சிறைச்
சாலைக்குச் சென்றிருக்கிறார். அதை வைத்துக் கொண்டு
இராஜேந்திரன் அவர்களுக்கும், நகைமுகனுக்கும் தொடர்பு என்று
பத்திரிகையிலே போட முடியுமா? முடியாது. எப்படி தொடர்பு
இல்லையோ, அதுபோல அவருடைய நிலை என்ன
கருத்து என்ன என்று அறியச் சென்றிருக்கிறார். அவர் சொன்ன
அந்தக் கருத்துக்கள் உண்மையாக இருக்குமேயானால் அவர்

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 மே 12

குற்றமற்றவர்தான். நான் இல்லை என்று மறுக்கவில்லை. ஆனால் அந்தக் கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட வேண்டிய இடம் சட்டமன்றமா அல்லது நீதிமன்றமா என்பது கேள்விக்குரிய பிரச்சினை. அதற்கு நான் இப்போது எந்தவிதமான முடிவுக்கும் இந்த நேரத்திலே வந்துவிட முடியாது. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நண்பர் இராஜேந்திரன் அவர்கள் சொன்ன அந்தக் கூற்று, நகைமுகன் அவர்கள் சொன்னதைப்போல் உண்மையாகவே இருக்குமானால் அதற்கும்மீறி—அப்படிப்பட்ட ஒரு எண்ணமே இல்லாமல் அவரைப் பற்றி தவறாக பத்திரிகைகள் கருத்துக்களை வெளியிட்டு இருக்கும்போது—பத்திரிகைகளிலே தவறான அடிப்படையிலே வந்த கருத்துக்களையொட்டி ஒருவரை இம்சிப்பது, துன்புறுத்துவது நியாயம் அல்ல என்று என்னுடைய மனச்சாட்சியே எனக்குச் சொல்லுகிறது. எனவே நகைமுகன் அவர்கள் சொல்லுவது—நண்பர் இராஜேந்திரன் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டுவதுபோல் உண்மையாக இருக்குமானால், அது குறித்து அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். யாரையும் வேண்டும் என்று பழி வாங்காது என்பதையும், அதே நேரத்திலே எந்தப் பிரிவினை எண்ணங்களுக்கும் தமிழ்நாட்டிலே இடம் இருக்க முடியாது. ஏதோ தமிழ்நாட்டிலே பிரிவினை எண்ணங்கள் தலைதூக்க ஆட்சி துணை போகின்றது என்று பரப்பப்படுகின்ற கருத்து, டெல்லியிலே பாராளுமன்றம் வரையிலே பரப்பப்படுகின்ற கருத்து எல்லாம் உண்மைக்கு மாறானவை; இந்த அரசுக்குத் துன்பம் தருவதற்காக செய்யப்படுகின்ற பிரச்சாரம் என்பதை எடுத்துச் சொல்லி இந்தச் செய்திகளைச் சொல்வதற்கு நம்முடைய தம்பி இராஜேந்தின் அவர்கள் எழுப்பிய இந்த 'ஸ்பெஷல் மென்ஷன்' பயன்பட்ட காரணத்தால் அவருக்கும் நன்றி கூறி அமர்கின்றேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களுக்கு முன்னால் இங்கே எங்களுடைய துணைத் தலைவர் குமரி அனந்தன் அவர்கள் இந்தப் பிரச்சினையை சபையிலே எழுப்பினார்கள். அன்றையதினம் பத்திரிகையிலே செய்தி வந்தது. டெல்லியிலே குருத்துவாராவிலே கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே மான் கலந்து கொண்டார். அதே போல் லால்டெங்கா இருந்தார். நகைமுகன் இருந்தார். நகைமுகன் தெளிவாகவே தான் வந்து விடுதலைப் புலிகளுடைய பிரதிநிதியாக அங்கே இருந்ததாக அவர் அங்கே குறிப்பிட்டு இருக்கிறார். அது மட்டுமல்ல, மான் அவர்களும், விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் அவர்களும் மதுரையிலே எப்போது சந்திக்க இருக்கிறார்கள், எந்தத் தேதியிலே சந்திக்க இருக்கிறார்கள், அந்தச் சந்திப்பிற்குத் தான் தான் ஏற்பாடு செய்திருக்கிறேன் என்று சொன்னதாகவும் பத்திரிகையிலே செய்தி வந்தது. அதுமட்டுமல்லாமல் இந்தியாவினுடைய ஒருமைப் பாட்டிற்கு எதிராக....(குறுக்கீடு).



1990 மே 12]

10-55 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு சிறிய கேள்வி. திரு. இராஜேந்திரன் அவர்கள் செய்திகளைச் சொல்லிவிட்டார். ஏற்கனவே பத்திரிகைகளில் வந்தவுடன் அதன் அடிப்படையில் செய்திகள் எல்லாம் இங்கே வந்து அரசு நடவடிக்கை எடுத்ததாகச் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) நான் பேசிக்கொண்டு இருக்கிறேன். உட்காருங்கள். அதனுடைய அடிப்படையில் நகைமுகனைப் பேட்டி கண்ட வகையில் இந்தக் கருத்துக்களுக்கு மாறுபாடான உண்மை நிலை இருக்குமானால் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று சொன்ன பிறகு இப்போது நீங்கள் என்ன புதிதாகச் சொல்லப் போகிறீர்கள்? பத்திரிகையில் வந்ததைத் திரும்பச் சொல்லப் போகிறீர்களா?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, அதற்கு மேலே எங்களுடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் இங்கே பேசியிருக்கிறார். அதன் மேலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார். முதலமைச்சர் அவர்கள் அதோடு நிறுத்தி இருந்தால் நான் நிச்சயமாக எழுந்து இருக்க மாட்டேன். வேறு தகவல்களை இங்கே சொன்னார்கள். ராஜீவ் காந்தி பேசியதாகச் சொன்னார். பிந்தரன்வாலேயை அழைத்தார். காஷ்மீரத்திற்குப் போனார். காங்கிரசுக்குப் போனார். எனவே நான் அதற்குப் பதில் சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் பிந்தரன்வாலேயைப் பற்றிச் சொன்னீர்கள். காங்கிரஸ் என்று நீங்கள் சொல்லவில்லை. திரு. ராஜீவ் காந்தி பற்றிச் சொன்னீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வார்த்தையோடு வார்த்தையாக காங்கிரசுக்குப் போனார் என்று சொன்னீர்கள். நான் போகவில்லை என்று சொன்னேன். (சிரிப்பு).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, ஆனால் நான் காங்கிரஸ் கட்சியினுடைய பிரதிநிதியாகத் தான் இங்கே பேசுகிறேன்; கொறடாவாகத் தான் இங்கே பேசுகிறேன். எனவே தாங்கள் என்னுடைய கட்சியினுடைய தலைவரைப் பற்றி பேசிய காரணத்தால் தான்—அவர் எதோ இங்கே தவறுகள் நடைபெற்றதாக சொன்னதற்கு நான் பதில் சொல்வதற்குக் கடமைப்பட்டு இருப்பதால் சொல்கிறேன், (குறுக்கீடு). நகைமுகனைப் பற்றி சொல்கிறேன். நகைமுகனைப் பற்றி சொல்ல வேண்டும். நகைமுகனை எனக்குத் தெரியாது, நான் இன்னும் பார்த்தது கூட இல்லை, நம் ஆஸ்டலுக்கு அடிக்கடி வந்து போவதாகக் கேள்விப்பட்டு இருக்கிறேனே தவிர இன்னும் நான் பார்க்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய தலைவருடைய செய்திக்கு வாருங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, அன்றையதினம் திரு. குமரி அனந்தன் அவர்கள் இங்கே எழுப்பினார்கள். 'ஒருமைப்பாட்டுக்கு எதிராக அங்கே பேசியிருக்கிறார். இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக காலிஸ்தான் அமையும், அதுபோல் தமிழர்கள் இங்கே சேர்ந்து போராட வேண்டும்' என்று நகைமுகன் சொன்னதாக இங்கே சொல்லி அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்; தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இங்கே சொன்னார். அதன் அடிப்படையில் அவர் குறித்த நடவடிக்கை எடுக்கபட்டது. நாங்கள் வரவேற்று இருக்கிறோம். அதற்கு மேலே இங்கே பிரச்சினையை எழுப்பியிருக்கிறோம். அவருடைய நண்பர் நெடுமாறன் மீது—என்னுடைய நண்பர் நெடுமாறன் மீது கூட அவரும் அதேபோல் பேசியதாக இங்கே சொன்னபோது விடுதலைப் புலிகள் இதுவரை மறுக்கவில்லை. நெடுமாறன் எங்களுக்காகப் பேச முடியாது என்று இதுவரையில் விடுதலைப் புலிகள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது உங்களுக்கு என்ன பிரச்சினை ? (குறுக்கீடு) சும்மா சொல்லிக் கொண்டே இருக்கக்கூடாது. இது வாதம் இல்லை. உறுப்பினர்களுக்கு என்ன பிரச்சினை ? (குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜேந்திரன் அவர்கள் நகைமுகனைச் சந்தித்து அவர் குற்றமற்றவர் என்ற கருத்தை இங்கே வெளியிட்டிருக்கிறார். திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் என்ன சொல்லுகிறார்? நகைமுகன் சிறையில் இருப்பது சரிதான் என்று சொல்லுகிறாரா ? இதில் எதை நான் ஆதரிப்பது என்று தெரியவில்லை. திரு. இராஜேந்திரன் அவரை விசாரித்து, வெளியில் விடவேண்டும் என்று சொல்லுகிறார்; திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள், திரு. குமரி அனந்தன் அவர்கள் இங்கே சொன்னதையே மீண்டும் வலியுறுத்திச் சொல்லுகிறார்; நான் இரண்டையும் பரிசீலிப்பதா? இரண்டு பேரும் ஒரே கருத்தைச் சொல்லுகிறீர்களா ?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, திரு. இராஜேந்திரன் அவர்கள் இங்கே பேசியது அல்லது சிறைச்சாலைக்குச் சென்று நகைமுகனைச் சந்தித்தது எதுவும் எனக்குத் தெரியாது. இரண்டாவதாக, அவர் எதைச் சொல்லியிருந்தாலும் அது அவருடைய தனிப்பட்ட கருத்தாக இருக்குமே



தவிர காங்கிரஸ் கட்சியினுடைய கருத்தாக நிச்சயமாக இருக்க முடியாது என்பதை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். நகைமுகனிடம் பேசினார்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்கள் ஒரு 'Point of order' கிளப்புகிறார். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் என்று அவரைப் பார்த்து நீங்கள் சொல்ல வேண்டாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, எனவே முகாந்திரம் இருக்கின்ற காரணத்தால்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து இருப்பதாக நான் கருதுகிறேன். முகாந்திரம் இல்லை, சட்டப்பேரவையில் ஒருவர் பேசினார் என்ற காரணத்தால் மட்டுமே நிச்சயமாக தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலே ஒருவரைச் சிறையிலே வைத்து விட முடியாது. பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. சட்டசபையிலே பிரச்சினை எழுப்பப்பட்டது. ஒருவர் வேகமாகப் பேசினார், எனவே அவரை தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலே அடைப்பது என்று சொல்லுவது நிச்சயமாக சரியாக இருக்க முடியாது. முகாந்திரம் இருந்த காரணத்தால், தடயம் இருந்த காரணத்தால், அவருடைய செய்கை தவறு என்று அறிந்த காரணத்தால், இவைகளை உணர்ந்த காரணத்தால் தான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதற்கும் மேலே புதிய தகவல்கள் வருமானால் அதை அரசாங்கம் தான் முடிவு செய்ய வேண்டுமே தவிர வேறு யாரும் இதிலே குறுக்கே வரமுடியாது. அதற்கு ராஜீவ்காந்தி மீது இங்கே பேசியிருக்கவேண்டிய அவசியம் இல்லை. நேற்றைக்கு முன்தினம் இந்தியா முழுவதும் திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய தலைமையிலே நாங்கள் உண்ணாவிரதம் இருந்தோம் என்று சொன்னால் தேசிய ஒருமைப்பாட்டை நாங்கள் வலியுறுத்துவதற்காகத் தான் நாங்கள் உண்ணாவிரதம் இருந்தோம். திரு. ராஜீவ் காந்தி அவர்கள் அவருக்குக் கிடைத்த தகவலைத் தெரிவித்து இருக்கிறார். தமிழ்நாட்டிலே பிரிவினை வாதம் தலை தூக்குகிறது என்று முதலமைச்சர் அவர்களே கூட சொன்னார்கள். இங்கே மாநாடுகள் நடைபெறுவதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையேதான் திரு. இராஜேந்திரன் அவர்கள் சொன்னார்கள். பரவலாக தமிழ் தேசிய தன்னாட்சி மாநாடுகள்— தன்னாட்சி வேண்டும், தனியாகப் பிரிந்து போகவேண்டும் என்று சொல்லுகின்ற மாநாடுகள் தமிழ்நாட்டிலே நடைபெறுவதாகச் சொல்லுவது— அது பிரிவினை வாதம் ஆகுமா, ஆகாதா என்பது ஒன்று.

இரண்டாவது, நான் மீண்டும் சொல்லுகிறேன். இங்கே விடுதலைப் புலிகள் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வந்து அவர்கள் தங்கியிருப்பதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. பல்வேறு

கட்டங்களில் நாங்கள் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறோம். விடுதலைப் புலிகள் இராமேஸ்வரத்திற்கு வந்து போன செய்திகள் வந்து இருக்கின்றன. அது மட்டும் அல்ல, அன்றையதினம்....

**11.00 மணி**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : செய்தியோடு நிறுத்திக் கொள்ளுங்கள். மீண்டும் பெரிய விவாதம் வேண்டாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, இப்போது மறுபடியும் நகைமுகன் என்ற அந்த இடத்திலிருந்து பேச்சு விடுதலைப் புலிகளை நோக்கிச் செல்கிறது. நான் அன்றைக்கே சொல்லி இருக்கிறேன். விடுதலைப் புலிகளின் கூடா ரங்கள் இங்கே இல்லை. அவர்களுடைய முகாம்கள் இங்கே இல்லை. அவர்கள் யாரும் இங்கே பயிற்சி பெறவில்லை. வேண்டு மானால் என்னோடு ஒரு குழுவினர் வரத் தயாராக இருந்தால் அழைத்துச் செல்கிறேன். பத்திரிகைக்காரர்களையும் அழைத்துச் செல்கிறேன், என் தலைமையிலே என்று குறிப்பிட்டிருக்கிறேன். அதற்குப் பிறகும் அதையே பேசிக் கொண்டிருப்பது முறையல்ல. மாண்புமிகு திரு. ராஜீவ் காந்தி தமிழ்நாட்டிலே பிரிவினை வாதம் தலைதூக்கி நிற்கிறது என்று இங்கேயுள்ள அரசைக் கண்டித்துப் பேசிய காரணத்தால்தான் நகைமுகன் பற்றிய பேச்சு வரும் போது பிரிவினைவாதம் பற்றியும் பேசவேண்டி வந்தது. பிரிவினைவாதம் பற்றி திரு. ராஜீவ் காந்தி சொன்னதற்கும் இங்கே விளக்கம் அளிக்க வேண்டிவந்தது.

**திரு. பி. வி. இராஜேந்திரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திரு. நகைமுகன் அவர்களைத் தனிப்பட்ட முறையில் சென்று சந்தித்தேன் என்று சொல்கிறார் கள். நான் தனிப்பட்ட முறையில்தான் சென்று சந்தித்தேன். அதற்கு ஒன்றும் எங்களுடைய கட்சி எங்களைக் கட்டுப்படுத்தாது. நகைமுகனைச் சந்திக்கக்கூடாது என்று யாரும் சொல்ல முடி யாது. அவர் மீது பிரைமாஃபேசி கேஸ் இருக்கிறதா, இல்லையா என்று டாக்டர் பி. பி. மண்டல் அவர்கள் ஒரு வினா எழுப்பி இருக்கிறார்கள். அது பத்திரிகையில் வந்திருக்கிறது. நான் 40-வது நாள் சென்று பார்த்தேன். ஆனால் நான் அவரை முன்னாலேயே அறிவேன். இருந்தாலும் காங்கிரஸ்காரன் என்ற முறையில் ஒரு பிரிவினைவாதியை நான் சென்று பார்க்கத் தயங்கி னேன். பார்க்கக் கூடாது என்று நினைத்தேன். ஆனால் பி.பி. மண்டல் அவர்கள்—நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களை ஏற்றுக் கொள்பவர். அவர்கள் ஒரு லெஃப்ட் பார்ட்டி. எங்க ளைப் பொறுத்தவரையில் லெஃப்ட் பார்ட்டியை நோக்கி ஒரே அப்ரோச்தான். இன்டெக்ரிட்டியைப் பொறுத்தவரையில் ஒரே அப்ரோச்தான். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள். அதைத்தான் நாங்களும் சொல்கிறோம். எனவே



நேஷனல் இன்டெக்ரிட்டி என்பதைப் பொறுத்த வரையில் நாங்கள் யாருடனும் காம்ப்ரமைஸ் பண்ணத் தயார் இல்லை. அப்படிப் பட்ட சூழ்நிலையில் உண்மையைச் சிந்திக்கவும், உண்மையைப் பார்க்கவும் மறுப்பவர்கள் காங்கிரஸ்காரனாக இருக்க முடி யாது. அந்த அளவில் ஏதோ உண்மை இருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வத்தோடு சிறைச் சாலைக்குச் சென்றேன். நான் அங்கே சென்ற பிறகு பார்த்தேன். அவர் 'டினை' பண்ணி எழுதிக் கொடுத்திருக்கிறார். அவர் சொல்கிறார்—நான் இங்கிலீஷ்லே பேசியதை பஞ்சாபியிலே சொன் னார்கள்; என்னை எல்.டி.டி.இ. என்று அவர்கள் பஞ்சாபியிலே அறிமுகப்படுத்தியிருக்கலாம்; எனக்கு என்ன என்று தெரியாது. நடந்ததே தெரியாது. நான் வந்து நார்த் அவென்யூவிலே இருந்து சென்ட்ரல் செகரட்டேரியட்டுக்குப் போகிறேன்—அவர் தமிழ்நாடு கவர்ன்மென்டின் சால்ட் கார்ப்பரேஷனிலே இன்ஜினியராக இருந்திருக்கிறார். கவர்ன்மென்ட் ஆஃப் இந்தியா, பப்ளிக் செக்டார், இந்துஸ்தான் சால்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்டில் சேம்பர் ப்ராஜக்டிலே ஒர்க்ஸ் மேனேஜராக இருந்திருக்கிறார். வேலை இல்லை. அதாவது நான் தொழில் அமைச்சரைப் பார்க்கப்போனேன். நார்த் அவென்யூவிலே இருந்தேன். அப்படிப் போனேன் என்று தான் சொல்கிறார். எனவே, என்னைப் பொறுத்தவரையில் இது ஒரு சாதாரணமாக, இன்சிடென்டலாக நடந்திருக்கிறது. அதிலே எந்த விதமான தேசவிரோத அல்லது ஒருமைப்பாட்டைக் குலைக்கிற பேச்சே இல்லை. இம்ப்பீரியலிசம் என்ற வார்த்தை கிடையாது. நான் எப்படிப் போய் மானையும், புலியையும் மதுரையிலே சந்திக்க வைப்பேன்? எனக்கும், எல்.டி.டி.இ.க்கும் சம்பந்தம் இல்லை. நான் ஒரு ரசிகர் மன்றத்தைச் சேர்ந்தவன். நான் பேசவில்லை என்று 'டினை' பண்ணுகிறார். எல்.டி.டி.இ இல்லை என்று 'டினை' பண்ணி இருக்கிறார்கள். பிறகு ஏன் ஒருவரை ஹேரஸ் பண்ணவேண்டும்? நான் எதை எல்லாம் சொன்னேனோ அதற்குப் பொறுப்பேற்கிறேன். இதிலே மாறுதல் இருந்தால் என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பில் இருந்து நிச்சயமாக விலகிவிடுவேன் என்பதை இந்த நேரத்தில் நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன். நான் வீணாக பிரிவினைவாதிகளுக்காக வாதிடமாட்டேன். நாட்டின் ஒருமைப் பாட்டைக் குலைக்கிறவர்கள் யாராக இருந்தாலும், என்னுடைய குடும்பத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் அவர்கள் துரோகிகள் தான், துரோகிகள் தான். அதில் எனக்கு எந்தவிதமான Second thought-ம் கிடையாது. I don't have any second thought இந்த வாய்ப்பினை அளித்த உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, மிகுந்த உருக்கத்தோடும், உணர்ச்சியோடும் நம்முடைய மாண்பு மிகு உறுப்பினர் திரு. இராஜேந்திரன் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்களை இந்த அரசு அலட்சியப்படுத்திவிடாது. நான் முதலிலேயே சொல்லி இருக்கிறேன். இவைகளை ஆராய்ந்து

பார்த்து நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று நான்
முதலிலேயே சொல்லியிருக்கிறேன். ''அவர் சொன்னார், இவர்
சொன்னார் என்று அறிவிழந்து தடுமாற்றம் அடைய வேண்டாம்,
எவர் சொன்ன சொல்லானாலும் அதனை உந்தன் இயல்பான
பகுத்தறிவினால் எண்ணிப்பார்ப்பாய்'' என்று கூறிய தந்தை
பெரியார் வழியில், சுயமரியாதை இயக்கத்தில் வந்த நாங்கள்
நிச்சயமாக இதையும் எண்ணிப் பார்த்துச் செயல்படுவோம்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. ஒழுங்குப் பிரச்சினை.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகளை எழுப்ப அனுமதி வழங்கும் முறை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டர். நான் நடைமுறை
பற்றி ஒருதீர்ப்பைத் தங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். நாங்கள்
பல்வேறு ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுக்கிறோம். மற்ற
விஷயங்களை நாங்கள் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரு
கிறோம். ஆனால், மென்ஷன் என்ற பெயரில் அவைகளை நீங்கள்
முடித்துவிடுகிறீர்கள். டி.வி.எஸ். நிறுவனம் தொடர்பான
உண்ணாவிரதம் பற்றிக் கூட நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம்
கொடுத்திருக்கிறோம். ஆனால், அதை மென்ஷன் என்ற முறை
யில் முடித்துவிட்டீர்கள். அதேபோன்று இராமமூர்த்தி கமிஷன்
தீர்ப்பு பற்றி விவாதிக்கவேண்டும் என்று நான் சொல்லியிருக்
கிறேன். அதையும் மென்ஷனில் முடித்து விட்டீர்கள். நடை
முறையில் இதுபோன்றுதான் நடைமுறைப்படுத்தப்படுமா என்
பதை நான் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எனக்கு மிகவும்
உதவி தருகின்ற வினா; இனியேல் முறைப்படி அறிவிப்புக்
கொடுக்காமல் அனைத்து உறுப்பினர்களுக்கும் எந்த வகையான
வாய்ப்பும் வழங்கப்பட மாட்டாது என்று சொல்லிக்கொள்கிறேன்.
அடுத்து, பேரவைக்கு மனு அளித்தல். திரு. கோ. வீரையன்.

## 5. பேரவைக்கு மனு அளித்தல்.

### சுருட்டுத் தொழிலாளர்கள் கோரிக்கைகள் குறித்து.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழ்நாடு முழுவதும் உள்ள சுருட்டுத் தொழிலாளர்
களின் கோரிக்கைகள் குறித்த மனு ஒன்றைத் தங்கள் மூலமாக
நான் பேரவைக்கு அளிக்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வீரையன் அவர்கள்
கொடுத்த மனு இந்த அவையில் பெற்றுக்கொள்ளப்பட்டு இருக்
கிறது.

11.05 மணி.

## 6. அறிவிப்புகள்.

### (அ) 1990-91 ஆம் ஆண்டிற்கான குழுக்கள் அமைப்பு.

#### (i) மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப்
பேரவையின் 261 (1) வது விதியின்கீழ், கீழ்க்கண்ட சட்டமன்றப்
பேரவை உறுப்பினர்களை 1990-91ஆம் ஆண்டிற்கான 'மனுக்கள்
குழு'விற்கு (Committee on Petitions) உறுப்பினர்களாக நான் நிய
மிக்கிறேன் :

1. திரு. தா. க. சுப்பிரமணியம்.
2. திரு. கே. வி. இராமசாமி
3. திரு. சா. கணேசன்.
4. திரு. வீ. தமிழ்மணி.
5. திரு. டி. கே. பழனிச்சாமி.
6. திரு. வ. முல்லைவேந்தன்.
7. திரு. மு. சின்னக்குழந்தை.
8. திரு. கே. ஆர். இராமசாமி.
9. திரு. கே. ஆர். சுந்தரம்.
10. திரு. டி. சி. விஜயேந்திரையா.
11. திரு. பொன். விஜயராகவன்.

பேரவையின் 261 (2)-வது விதியின்கீழ், திரு. சா. கணேசன்
அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

(ii) பேரவை நூலகக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 264 (1)வது விதியின்கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1990–91ஆம் ஆண்டிற்கான பேரவை 'நூலகக் குழு'விற்கு (Library Committee) உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:

1. திரு. அ. தங்கம்.
2. திரு. கே. ஆர். ஜி. தனபாலன்.
3. திரு. தி. ரா. மாசிலாமணி.
4. திரு. நா. இராமகிருஷ்ணன்.
5. டாக்டர் க. காஞ்சனா
6. திரு. இ. புகழேந்தி.
7. திரு. ஆ. அறிவழகன்.
8. திரு. ஆர். நடேசன்.
9. திரு. வி. இராமசாமி.

பேரவையின் 264 (3) வது விதியின் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இக்குழுவின் தலைவராக இருப்பார்.

(iii) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 268 (1)வது விதியின் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1990–91ஆம் ஆண்டிற்கான 'பேரவை முன்வைக்கப்பட்ட ஏடுகள் குழு'விற்கு (Committee on Papers Laid on the Table) உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்:

1. திரு. கே. அங்கமுத்து.
2. திரு. அ. வே. பாலசுப்பிரமணியன்.
3. திரு. எஸ். என். எம். உபயதுல்லா.
4. திரு. க. கண்ணையன்.



5. திரு. ஏ. செங்குட்டுவன்.
6. திரு. சி. சண்முகம்.
7. திரு. கே. ஏ. செங்கோட்டையன்.
8. திரு. செ. பெருமாள்.
9. திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்.
10. திரு. வெ. கோபாலகிருஷ்ணன்.
11. திரு. எம். சீரங்கன்.

பேரவையின் 268 (2)வது விதியின்கீழ் திரு. கே. ஏ. செங்கோட்டையன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

7. விதி 111-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை வினாவிற்கு அளித்த விடைக்குத் திருத்தம்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவரவர்களே, 9—4—1990 அன்று சட்டசபையில் கேள்வி எண் 9030-க்குச் சொன்ன பதில், அவை முன் தெரிவிக்கப்பட்டவை, ''இடையில் காவல் துறையினுடைய இந்த நடவடிக்கை சம்பந்தமாக மணிமேகலை கலைமன்றம் என்கிற அமைப்பின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் உத்தரவுப்படி 1988ஆம் ஆண்டு மோட்டார் வாகன வண்டிகளுடைய சட்டத்தின் அடிப்படையில் இதுபற்றி பொதுமக்களுடைய கருத்துக்கள்--மறுப்புக் கருத்துக்கள் அல்லது ஆதரவான கருத்துக்கள் கேட்கப்பட வேண்டுமென்று விளம்பரம் செய்யப்பட்டது. 16—3—1990 வரையில் காத்திருந்தும் எந்தவிதமான மறுப்புக் கருத்தும் வரவில்லை'' என்று சொன்னதற்குப் பதிலாக ''பாரிமுனையில் ஒருவழிப் பாதைத் திட்டத்தை முறைப்படி அமுல்செய்வதற்காக 1988-வது ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் பிரிவு 115-ன் கீழ் அறிக்கை ஒன்றை பொதுமக்களின் கருத்துக்கள் பெறுவதற்காக வெளியிடப்பட வேண்டுமென்று உயர்நீதிமன்றம் அண்மையில் ஆணையிட்டுள்ளது. அதன்படி வரைவு அறிக்கை வெளியிடுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த அறிக்கை வெகு விரைவில் பொதுமக்களின் கவனத்திற்காக அரசிதழ் மற்றும் தினப் பத்திரிகைகளில் வெளியிடப்படும். பொதுமக்களிடமிருந்து பெறும் ஆலோசனைகளையும் மற்ற கருத்துக்களையும் பரிசீலித்து தக்க ஆணைகள் வெளியிடும்'' என்று திருத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 8. கவன ஈர்ப்பு.

(அ) தஞ்சை மாவட்டம், உதயமார்த்தாண்டபுரத்தில் உள்ள ஏரியில் பறவைகள் சரணாலயம் அமைப்பது குறித்து.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, "தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டை அரு கில் உதயமார்த்தாண்டபுரத்தில் உள்ள ஏரியில் பறவைகளின் சரணாலயம் அமைப்பதற்கு வனத்துறையில் ஏற்கப்பட்டு சரணா லயமாக அறிவிக்கப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய அறநிலைய அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

### அறிக்கை.

தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், முத்து பேட்டை அருகில் உள்ள உதயமார்த்தாண்டபுரம் ஏரி சமுதாய காடுகள் எழுப்பும் திட்டத்தின் கீழ் சுமார் 111 ஏக்கர் பரப் பளவில் மரம் நடப்பட்டு வனத்துறையினரால் பாதுகாக்கப் பட்டு வருகிறது. அந்த ஏரியில் சமுதாயக் காடுகள் திட்டத்தின் கீழ் கருவேல் மரங்கள் நடப்பட்டு தற்பொழுது நன்கு வளர்ந் துள்ளதால், சில அபூர்வ வகைகளான பறவைகள் தற்போது அங்கு வந்து தங்க ஆரம்பித்துள்ளன. அப்பகுதியினை அதி காலை அல்லது மாலையில் பார்வையிட்டால், ஆயிரக்கணக்கான பறவைகள் பறப்பதையும், உணவெடுப்பதையும், தூங்குவதையும் காணலாம். இப்பகுதியினை தலைமை வன உயிரினக் காப் பாளர் 7-2-1990-லும் மற்றும் முதன்மை வனத்துறைத் தலைவர் 24-3-1990-லும் பார்வையிட்டு பறவைகள் சரணா லயம் என அறிவிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரைக் கலந்து ஆலோசித்து வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972 பிரிவு 18-இன் கீழ் உதயமார்த்தாண்டபுரம் ஏரியினை சரணாலயமாக அறிவிக்கை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பகுதியில் இன்றைக்கு வெளி நாடுகளிலிருந்து குறிப்பாக பாகிஸ்தான், சைனா, ஸ்ரீலங்கா, ரஷ்யா, ஆஸ்திரேலியா, போலந்து இப்படிப்பட்ட





11-10 மணி

பகுதிகளிலிருந்து எல்லாம் பறவைகள் வர ஆரம்பித்திருக் கின்றன. நான் கையிலே வைத்திருக்கக்கூடிய வளையம்கூட அந்தப் பறவைகள் ஒன்றின் காலிலே கட்டப்படும் வளையம்தான். அதிலே 'Inform environment–Tehran' என்று ஆங்கிலத்திலும் அதன்கீழே பெர்ஷியன் மொழியிலும் எழுதியிருக்கிறது. இது ஒரு பறவையின் காலிலே இருந்து கிடைத்த வளையம். B.,N.H.S.—Bombay Natural History Society-க்கு அனுப்பி யிருந்தேன். அவர்களும் லெட்டர் அனுப்பியிருக்கிறார் கள். The flamingo was ringed as juvenile on 27–8–1988 at Tendis Lake in U.S.S.R. இப்படி ரஷ்ய நாட்டில் Tendis Lake பகுதியிலே இருந்து பறவைகள் எல்லாம் இங்கே வருகின்றன. இங்கே வந்த அந்தப் பறவைகளின் வளையங்கள் எல்லாம் கூட எடுக்கப்பட்டு எல்லாம் அனுப்பப் பட்டு இருக்கிறது. இப்படிப் பல நாடுகளில் இருந்து வருகின்ற அந்தப் பறவைகள் இன்றைக்கு உதயமார்த்தாண்டபுரம் ஏரிக்கு வருகின்றன. அந்த ஏரி மிகச் சிறிய ஏரி. அதனை இன் றைக்கு சயன்டிஸ்ட்டுகள் எல்லாம் 'a mini—Bharatpur of the South in the making' என்று சொல்கிறார்கள். அப்படிப் பட்ட அந்த இடத்தை மேலும் தீவிரமாக ஒரு சரணாலயமாக அறிவிப்பதோடு மட்டுமல்லாமல் ஒரு 'பெர்ஸ்பெக்டிவ் பிளான்' —அதைச் சுற்றி வருகின்ற சாலைகள், அங்கு ஒரு கெஸ்ட் ஹவுஸ், தனியாக ஒரு ரேஞ் ஆபீசர்—இப்படியெல்லாம் அங்கே போட்டு அதனைப் பாதுகாக்க வேண்டும். இன்றைய சூழ்நிலையில் அந்தக் கிராமத்தில் திரு. எஸ். பஞ்சாபகேசன், விவேகானந்தம், யாகுப் அலி, ஐயப்பன் போன்ற இளைஞர்கள் அதற்கு ஒரு பாதுகாப்புக் குழுவை ஏற்படுத்தித்தான் காப் பாற்றிக் கொண்டு வருகிறார்கள். அந்த கிராமத்தில் சாவு ஏற்பட்டால் கூட மேலே 'வாணம்' விடுவது போன்றவற்றை எல்லாம்கூட நிறுத்தி இருக்கிறார்கள். ஒரு ஏக்கருக்கு 10 மூட்டை நெல் குறைந்தாலும் பரவாயில்லை, எங்களுக்குப் பறவைகள்தான் வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். பறவைகள் வர வேண்டும் என்று அந்தக் கிராம மக்கள் எண்ணி அந்தப் பறவைகளுக்குப் பாதுகாப்புத் தருகிறார்கள். இதனை எல்லாம் கருத்தில் கொண்டு, வெளிநாடுகளிலிருந்து வருகின்ற அந்தப் பறவைகள், அவைகளினுடைய 'migratory pattern' இவ்வளவு தூரம் வருகிற migratory pattern, அவைகளினுடைய வழித் தடங்கள் route — இவைகளை எல்லாம் ஆராய்ச்சி செய்கின்ற ஒரு முறையையும் அங்கே கொண்டு வர வேண்டும். அங்கே இருக்கின்ற திரு. நாகநாதன் என்கின்ற ஒயில்டு லைஃப் வார்டனையும் அதிலே விசேஷ அக்கறை காட்டுமாறு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லி, அதன் மீது அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது என்பதனை உங்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே வேதாரண்யம் அருகிலே கோடியக்கரை இருக்கின்றது. அங்கே மான் சரணாலயம் இருக்கின்றது. இங்கு 'மான், மான்' என்று எல்லாம் பேசப்பட்டது. நான் சொல்வது 'புள்ளி மான்'. 'பிளாக் பக்' என்று சொல்லக் கூடிய மான் சரணாலயம் கோடியக்கரையிலே இருக்கின்றது. அதுபோல அங்கே ஆயிரக்கணக்கான பறவைகளும் இருக்கின்றன. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. இராஜேந்திரன் குறிப்பிட்டது போல ரஷ்ய நாட்டிலே இருந்து பறவைகள் பறந்து வந்து கோடியக்கரைவரை வருவதாக நம்புகிறார்கள். உதயமார்த்தாண்டபுரமும் கோடியக்கரை அருகிலேதான் இருக்கின்றது. முத்துப்பேட்டை அருகிலே இருக்கின்றது. ஆகவே, அங்கேயும் அந்தப் பறவைகள் வருவதற்குரிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. உதயமார்த்தாண்டபுரம் ஏரி என்பது நல்ல பெயர். ஆகவே, ஒரு சரணாலயம் 'பேர்ட்ஸ் சாங்சுவரி' அமைப்பதற்கு வனத்துறை தீர்மானித்து இருக்கிறது.

(ஆ) பெரியார் மாவட்டத்தில் ஆழ்குழாய்க் கிணறுகளில் தண்ணீர் இல்லாததும், புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்காததும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. ஏ. செங்கோட்டையன், வி. கே. சின்னசாமி, வே. நா. சுப்பிரமணியம், வே. பெரியசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்பு கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, "பெரியார் மாவட்டத்தில் பல ஆழ்குழாய்க் கிணறுகளில் தண்ணீர் இல்லாததால், புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்காததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கு நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டை உடனடியாக சமாளிக்க மாறுபட்ட பருவ நிலையின்கீழ் திட்டமும், மாற்றுக் குழாய்த் திட்டமும் செயல்படுத்த அரசிற்கு தெரிவித்துள்ளார்.



மேலும் சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் நேரில் கண்டறிந்த நிலைமை குறித்து வறட்சிப் பணியின்கீழ் 500 புதிய ஆழ்துளைக் கிணறுகளும் 100 மாற்றுக் குழாய்க் கிணறுகளும் பெரியார் மாவட்டத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க ஆலோசனை கூறியுள்ளார்கள்.

இவற்றின்படி மாறுபட்ட பருவநிலைத் திட்டத்தின்கீழ் 500 புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கவும் மாற்றுக் குழாய்த் திட்டத்தின்கீழ் 100 புதிய குழாய்க் கிணறுகள் அமைக்கவும் வாரியத்திலிருந்து அரசிற்கு ஆணை வேண்டப்பட்டுள்ளது. இதில் உடனடியாக நிவாரணமாக 200 புதிய ஆழ்துளைக் கிணறுகள் மாறுபட்ட பருவநிலைத் திட்டத்தின் மூலமும் 100 புதிய ஆழ்துளைக் கிணறுகள் மாற்றுக் குழாய்த் திட்டத்தின் மூலமாகவும் ஆணை வழங்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. இது அரசின் ஆய்வில் உள்ளது.

மேலும் தற்போது பயனில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளை எந்தெந்த இடங்களில் சுத்தப்படுத்தப்பட வேண்டுமோ அவைகளைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக சுத்தம் செய்ய வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மற்றும் வறட்சிக் காலத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுக்க மக்கள் பிரதிநிதிகளையும் மாவட்ட ஆட்சியாளர் அவர்களையும் கலந்து திட்ட யோசனைகளை அனுப்புமாறும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் களப்பணி அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நாங்கள் படித்துப் பார்த்தோம். அந்த அறிக்கையிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், நம்முடைய மாவட்டத்தின் அமைச்சர் அவர்களும் 500 புதிய ஆழ்துளைக் கிணறுகளும், ஆழ்துளைக் கிணறுகளில் தண்ணீர் இல்லாத இடங்களில் மாற்று ஆழ்துளைக் கிணறுகள் உடனடியாக அமைக்க வேண்டும் என்று சொல்லி அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. குடிநீர் வடிகால் வாரியமும் அதே கருத்தைத்தான் சொல்லி இருக்கிறது. ஆனால் கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்பில் அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது என்றுதான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. கடுமையான வறட்சியின் காரணமாக இலட்சக்கணக்கான மக்கள் குடிநீர் இல்லாமல் அங்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே உடனடியாக இதை அரசு கருத்திலே கொண்டு மிக விரைவாக எந்தெந்தப் பகுதியிலே ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க வேண்டுமோ அங்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, வறட்சிக்காக இந்த அரசு ஒதுக்குகிற நிதியிலிருந்து இது போன்ற பணிகளை குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொள்கின்றது, அந்த மாவட்டத்துக்கு எத்தனை ஆழ்துளைக் கிணறுகள், காம்பென்சேட்டரி போர் வெல் அமைக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தான் குடிநீர் வடிகால் வாரியத்துக்குப் பரிந்துரை அனுப்புகிறார். அவைகளை அடிப்படையாகக் கொண்டு வறட்சிக்காக ஒதுக்கப்படுகிற நிதியையும் ஆதாரமாகக் கொண்டு இந்தப் பணிகளைக் குடிநீர் வடிகால் வாரியம் செய்வதற்கு முன்வருகிறது. ஆகவே அந்த அறிக்கைகள் பெற்ற உடன் இந்த அரசு அந்தப் பணிகளைத் துவங்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

11-15 மணி

திரு வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வறட்சியினுடைய அறிக்கை வந்தது என்று சொல்கிறார். நன்றி. நாங்கள் எல்லாம் எங்களுடைய மாவட்டத்தினுடைய வறட்சி குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும், வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடத்திலும் மனுக்கள் கொடுத்து இருக்கிறோம். ஆனால் அங்கே இருக்கின்ற நிலையை, வறட்சி நிவாரணம் அந்தப் பகுதிகளுக்குக் கிடைக்க வேண்டுமென்றால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற வருவாய்த் துறை அதிகாரிகள் ஐம்பது சதவீதத்திற்குக் குறைவான வருமானம் விவசாயிகளுக்குக் கிடைத்தது என்று அந்த அடங்கலிலே வைத்து இருந்தால்தான் அரசாங்கத்தினுடைய வறட்சி நிவாரணம் அவர்களுக்குக் கிடைக்கும். ஆகவே, அந்த அதிகாரிகள் செய்த மாபெரும் தவறு என்ன என்றால் நேரடியாகவே ......

11-15 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விடை சொல்லப் போவது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். நீங்கள் வருவாய்த் துறையைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அவர் பம்பாயிலே இருக்கிறார் இப்போது,

திரு. வி. கே. சின்னசாமி: முதலமைச்சர் இருக்கின்ற காரணத்தால் நான் இதைத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: : நீங்கள் கேட்பதைத் தொடர்புடைய கேள்வியாகக் கேளுங்கள். முதலமைச்சரிடத்திலே கேட்பதை யெல்லாம் அப்புறம் ஆர அமரக் கேட்போம். இப்போது தொடர்புடைய வினாவைக் கேளுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த வறட்சி நிவாரணப் பணிகளுக்கான நிதி ஆதாரம் ாண்புமிகு குடிநீர் வடிகால் வாரிய அமைச்சருக்குக் கிடைக்க



வேண்டுமென்றால், அந்த வறட்சி நிவாரணம் கிடைக்கின்ற அளவிற்கு அந்த நிலைமையை அங்கே உருவாக்க வேண்டும். ஆக, அந்தத் தவறைச் செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்னொன்று, ஆழ்குழாய்க் கிணறுகளைப் பொறுத்தமட்டில் இப்பொழுது பல ஊராட்சி மன்றங்கள் பணம் கட்டியிருக்கிறார்கள். ஆழ்குழாய்களைச் சுத்தப்படுத்த வேண்டுமென்று. அக்ரோ என்ஜினியரிங்குக்கு 1,800 ரூபாய் பணம்—பவானிசாகர் ஊராட்சி ஒன்றியத்திலே காலாக்குடி என்ற கிராமத்தில் குழாய் பதித்து விட்ட காரணத்தால், சுத்தப்படுத்துவதற்கு 1,800 ரூபாய் பணம் கட்டி இரண்டு மாதங்களாகியும் அந்த ஈரோட்டிலே இருக்கின்ற அக்ரோ என்ஜினியரிங் கார்ப்பரேஷனிலே இருக்கின்ற வண்டிகள் வந்து இன்னமும் அதைச் சுத்தப்படுத்தவில்லை. ஆகவே, இதுபோன்ற பணிகள் தடைப்படுவதை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். இப்பொழுது ஒரு வாரமாகக் குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய இயக்குநர் பல்வேறு பகுதிகளுக்கு நேரடியாகவே சென்று பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். ஆங்காங்கே இந்தப் பணிகள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன. அதுவும் குறிப்பாகக் குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய செலவிலேயே பழுதுபட்டுக் கிடக்கின்ற சில ஆழ்குழாய்க் கிணறுகளைச் சரி செய்ய வேண்டுமென்று ஆணையிடப்பட்டு அந்தப் பணிகள் இப்பொழுது முழு வேகத்துடன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் இதுபோன்ற பல்வேறு பகுதிகளிலே ஆழ் துளைக் கிணறுகள் சரி செய்யப்பட முடியாத நிலையிலே இருக்கிற பகுதிகளிலேதான் காம்பன்சேட்டரி போர் வெல்ஸ் அமைக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அவைகளை அமைப்பதற்கு நிதி நிலையும் தேவைப்படுகிற காரணத்தினால், அதற்கான திட்டங்களை அரசு பரிசீலித்து வருகிறது. நிச்சயமாக எந்த அளவிற்கு விரைவிலே அவைகளை நடைமுறைப்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு விரைவிலே நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முயற்சிகளை மேற் கொள்ளும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திலே எல்லாப் பகுதிகளிலும் கடந்த நான்கைந்து ஆண்டுகளாகச் சரியான முறையிலே மழையில்லாத காரணத்தினாலே கிணறுகளிலே தண்ணீர் இல்லாத நிலையையெல்லாம் மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சரிடத்திலே நாங்கள் நேரிலேயே சொன்னோம். அவர்களும்

**விரைந்து** செய்து கொண்டிருக்கிறார்கள். இருப்பினும் இன்னும் எங்கள் அந்தியூர் தொகுதியைப் பொறுத்தவரையில் மாத்தூர், வேம்பட்டி, வெள்ளி திருப்பூர், சின்னத்தம்பிபாளையம் போன்ற பகுதிகள் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல், நீண்ட நெடுந் தூரம் சென்று மக்கள் தண்ணீரை ஆங்காங்கே உள்ள கிணறுகளில்—விவசாயக் கிணறுகளில் எடுத்து வருகிறார்கள். நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கேட்ட பொழுது இன்னும் பணம் வரவில்லை, விரைவிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: :** அங்கே கேட்டதெல்லாம் இருக்கட்டும்; இங்கே இவரிடத்திலே என்ன கேட்கிறீர்கள்?

**திரு. வே. பெரியசாமி :** நாங்கள் மாண்புமிகு அமைச்சரிடத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம் விரைந்து, வேகமான முறையில், போர்க்கால நடவடிக்கை போன்று நீங்கள் எடுக்கின்ற நடவடிக்கை எங்களுக்குக் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: :** அவரும் அன்புடன் கேட்டுக் கொண்டார்; ஆவன செய்வார்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) 1990 ஆம் ஆண்டு பொது வாழ்வினர் நேர்மைப் பாதுகாப்பு மன்றச் சட்ட முன்வடிவின் ஆய்வைத் தள்ளிவைத்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வாழ்வினர் நேர்மைப் பாதுகாப்பு மன்றச் சட்ட முன்வடிவை...

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு தலைவரவர்களே, நேற்றைக்கு இருக்கிற நிகழ்ச்சி நிரலிலே இது இல்லை. இன்றைக்குத் திடீரென்று இதைச் சேர்க்க வேண்டிய அவசியம் எப்படி வந்தது என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், திடீரென்று காலையிலே பார்த்தால் (குறுக்கீடு) இல்லை. இது ஒரு முக்கியமான மசோதா. இந்தச் சட்ட முன்வடிவு முக்கியமான சட்ட முன்வடிவு. இதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டும்; படிக்க வேண்டும். அதற்குப் பல்வேறு நிலைகள் இருக்கின்றன. திடீரென்று எடுத்து விவாதிக்க வேண்டுமென்று சொன்னால் அவ்வளவு நல்லது அல்ல. எனவே, தயவு செய்து ஒரு அவகாசம் கொடுத்து, அதை விவாதிப்பதுதான் நல்லது என்ற முறையில் இதை ஒத்தி வைத்து அடுத்த நிலைக்கு நீங்கள் செல்ல வேண்டுமென்று பணிவோடு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது முக்கியமான மசோதா. நாங்கள் இந்த நோக்கத்தை நிச்சயமாக வரவேற்கிறோம். ஏற்கெனவே 1974ஆம் ஆண்டு மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த நேரத்திலே ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. பிறகு எம்.ஜி.ஆர். அவர்கள் 1977-லே ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அந்த இரண்டு சட்டங்களிலேயும் குறைகள் இருப்பதாகக் கூறித்தான் இப்பொழுது வேறு புதிய சட்டமாகக் கொண்டு வருகிறீர்கள். இதிலேயும் தவறு வந்திவிடக் கூடாது. ஆய்வு செய்வதற்கு நேரம் எங்களுக்கு வேண்டும். எனவே, இந்தச் சட்டத்தை—நேற்றைய தினம் அந்த நிகழ்ச்சி நிரலிலே கிடையாது, திடீரென்று காலையிலே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால், இது அவசரக் கோலமாகத்தான் இருக்குமே தவிர சரியாக இருக்க முடியாது. சட்ட விதிகள்—அவை விதிகளின்படியும் கூட நிகழ்ச்சி நிரலிலே இல்லாத மசோதாவை இன்றைய தினம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்து, இந்த மசோதா இன்று வேண்டாம்; பிறிதொரு முறை எடுத்துக்கொள்ளலாம் என்று கூறி இந்த மசோதாவை இப்பொழுது எடுத்துக்கொள்ள வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

11-20 மணி

**திரு. எம். அப்துல் லத்தீப்:** தலைவர் அவர்களே, இந்த மசோதாவினுடைய நகல்கள் ஏற்கெனவே உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நேற்றைய தினம் தொலை பேசி வாயிலாக எல்லோருக்கும், அதிலும் குறிப்பாக முதல் வரிசையில் இருப்பவர்களுக்கு நம்முடைய செயலகம் தகவல் கொடுத்திருக்கிறது. ஆகவே, செயலகத்தின்மீது குற்றம் சொல்வது முறையல்ல. முறையாக அவர்கள் பொறுப்பெடுத்துக்கொண்டு, இதை எல்லா உறுப்பினர்களுக்கும் தெரிவிக்க வேண்டுமென்று கட்சித் தலைவர்களை ஒவ்வொருவராக அழைத்து கேட்டுக் கொண்டார்கள். இருந்தாலும், இதுகுறித்து அவர்கள் செய்த முறையீட்டைப் பற்றி முடிவு செய்யவேண்டியவர்கள் தாங்கள்தான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி என்ன கருதுகிறார்களோ, அதை நாங்களும் ஒப்புக்கொள்கிறோம். முறையாக தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. தகவல் இல்லையென்பது சரியல்ல.

**திரு. கோ. வீரையன்:** தலைவர் அவர்களே, இந்தத் தகவல் கிடைத்ததைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு.அப்துல் லத்தீப் அவர்கள் சொன்னதையே நான் கூற விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சி நிரல் குறிப்பில் கொடுக்கப்படாவிட்டாலும், இரவு முழுவதும் நம்முடைய அவைச் செயலாளர் அவர்கள் தொடர்பு கொண்டு அனைத்து உறுப்பினர்களிடமும் இன்று இது எடுத்துக்கொள்ளப்படும் என்று தகவல் சொல்லி இருக்கிறார்கள். இருந்தாலும் நான் உங்கள் மூலமாக நம்முடைய

மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, இது மிகவும் முக்கியமான சட்டம். தமிழ்நாட்டில் பொது வாழ்வினர் நேர்மை, தூய்மையாகப் பாதுகாக்கப்பட வேண்டியது, குறை பாடுகள் வராமல் தவிர்க்கக் கூடிய வகையில், அப்படி வந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு முக்கியமான சட்டமாக இருப்பதால், ஆர அமர, பொறுமையாக இதனைப் படித்து, அதுபற்றி முழுமையாகப் பேச வேண்டியிருக்கிறது. எனவே, இப்போது பூராவும் சட்டத்தைப் படித்து கருத்துக் களைச் சொல்ல முடியவில்லை. திடீரென்று அப்படிச் சொல்ல முடியாது. ஒருவரோடு ஒருவர் பேசி, கட்சி மட்டத்தில் நாங் களும் விவாதித்து இதுபற்றி சொல்ல வேண்டிய அவசியம் இருக் கிறது. ஆகவே, இதற்குக் கொஞ்சம் அவகாசம் வேண்டும். எனவே, அடுத்த கூட்டத்தில் இந்த மசோதாவை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்று எங்கள் கட்சியின் சார்பில் உங்கள் மூலமாக மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான மசோதாவாகும். இந்த மசோதா சட்டமாக்கப்பட வேண்டியது அவசியமும் ஆகும். எங்களுக்கு இது நேற்றைக்குத் தான் கிடைத்தது. முழுமையாகப் படித்து, முழு விவரங்களை யும் தெரிந்துகொள்ள முடியவில்லை. இருந்தாலும் கூட இதை செலக்ட் கமிட்டிக்கு விட்டு, முழுமையாக இதைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளித்து, நிறைவேற்றினால் சரியாக இருக்கும் என்பதை என்னுடைய கருத்தாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோ. வீரையன்:** தலைவர் அவர்களே, செலக்ட் கமிட்டிக்கு விடுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அடுத்த கூட்டத்தில் எடுத்துக்கொள்ளலாம் என்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்:** தலைவர் அவர்களே, இந்த பில் இன்றைக்கு வருகிறது என்று செக்ரட்டரி அவர்கள் நேற்றைக்கே அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அறிவிப்பு கொடுக்கவில்லை என்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. நேற்று இந்த பில்லினுடைய பாம்லெட்ஸ் எல்லாம் எங்களுக்கு வந்துவிட்டன. இருந்தாலும் இது முக்கியமான மசோதா. பொது வாழ்வில் ஈடுபடக்கூடியவர்கள் நல்லவர்களா, கெட்டவர்களா என்று அறியக்கூடிய மசோதா என்பதால், இந்த மசோதா பற்றி அறிந்து, ஆய்ந்து நல்லபடியாக விவாதம் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இதை செலக்ட் கமிட்டிக்கு விடுவதையும் நான் விரும்புகிறேன். இதில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவுரையையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.



**திரு. பி. எச். பாண்டியன்:** தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவின் உட் பிரிவுகளை நான் ஏற்றுக் கொள்கிறேன். என்னைப் பொறுத்த வரையில் சட்டசபையின் மாண்போ, தேர்ந் தெடுக்கப்பட்ட ஆட்சியின் ஒரு அதிகாரமும் குறைந்து விடுமோ என்ற ஐயப்பாடு என்னுடைய உள்ளத்தில் எழுகிறது. காரணம்—solmond என்று சொல்கிற சட்ட விஞ்ஞானி If a determinate human superior நீங்கள்-not in the habit of obedience to a like superior-இன்னொருவருக்குப் பணியாமல் receives habitual obedience from the bulk of the society சமுதாயத்தின் மரியாதை பெறும்போது—is sovereign of that society. ஆகவே, இந்த அவையின் மாண்பும் sovereignty அமைச்சரவை "sovereignty" குறைந்து விடுமோ என்று எண்ணுகிறேன். ஜப்பான் நாட்டில் எல்லாம் தேர்தல் வழக்குகளைக் கூட......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கருத்தை நான் வரவேற்கிறேன். இதையெல்லாம் சட்ட முன்வடிவு எடுக்கும்போது பேசினால் வலிமையாக இருக்கும். இப்போது, இதை எடுத்துக் கொள்ளலாமா, வேண்டாமா என்பது பற்றி மட்டும் சொல்லுங்கள்.

**திரு. பி. எச். பாண்டியன்:** தலைவர் அவர்களே, கருத்தை ஏற்றுக் கொள்கிறேன் என்று சொல்லி விட்டேன். தேர்தல் வழக்குகளைக்கூட பாராளுமன்றத்தில் ஜப்பான் நாட்டில் விவாதம் செய்கிறார்கள். ஆகவே, இந்த அவையினுடைய மாண்பு குறைந்துவிடக்கூடாது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மக்களாட்சியின் தத்துவம் குறைந்து விடக் கூடாது என்பதை அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய வேண்டும். சட்ட அமைச்சர் அவர்கள் இதற்கு வேறு வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

'11.25 மணி

**திரு. பொன். விஜயராகவன்:** தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான மசோதா. பல்வேறு மாநிலங்களில் கூட இந்த மசோதா கொண்டு வரப்பட்டு செயல்முறைப்படுத்தப்பட் டிருக்கிறது. இவைகளிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரியங்கள் எப்படி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என் பதைப் பற்றி விளக்கமாக, விவரமாகத் தெரிந்து கொள்ளக் கூடிய அவசியம் ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே இதற்கு கொஞ்ச கால அவகாசம் கொடுத்து, இந்த மன்றத்திலே கொண்டு வந்து விவாதிப்பது முறை என்று கேட்டுக்கொண்டு, அதோடு இன்னும்

விரிவாக இதை ஆய்வு செய்வதற்கு ஒரு செலக்ட் கமிட்டிக்குக் கூட இதைவிட்டு, அதற்குப் பின்னாலே இதை மன்றத்திலே கொண்டு வரலாம். அதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா பற்றி நேற்று ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆக, சட்டமன்றச் செயலாளர் அவர்கள் நேரடியாகத் தொடர்பு கொண்டு, இந்த மசோதா பற்றி சொல்லியிருக்கிறார்கள். இந்த மசோதாவினுடைய ஷரத்துக்கள் ஏறக்குறைய அத்தனை மூத்த சட்டப் பேரவைக் கட்சித் தலைவர்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை எடுத்துக் கொள்ளலாமா, இல்லையா என்பதைப் பற்றிச் சொல்லுங்கள்.

திரு. பி. என். வல்லரசு: நன்றாக அறிவார்கள் என்ற கருத்தில், இதில் ஏன் தயங்குகிறார்கள் என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். அவர்கள் தயங்குவது, தயங்காதது இருக்கட்டும்.

திரு. பி. என். வல்லரசு : எனவே தலைவர்கள் வேண்டிக்கொண்ட காரணத்தால், இதற்கு கால அவகாசம் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்

திரு. எம். அப்துல் லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இத்தகைய சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பிறகு, கூட்டுக் குழுவிற்கு, ஆய்வுக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். இருந்தாலும் எல்லா உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் கூட எதிர்பார்த்தேன், இது ஆய்வுக் குழுவிற்குத்தான் விடப்படும் என்று. எனவேதான் இதை இன்றைக்கு எடுத்துக்கொண்டு, ஆய்வுக் குழுவிற்கு விடப்பட வேண்டுமா, அல்லது அடுத்த கட்டத்தில் இதை எடுத்துக் கொண்டு ஆய்வுக் குழுவிற்கு விடப்பட வேண்டுமா என்பதை முடிவு செய்ய வேண்டும். எனவே ஆய்வுக் குழுவிற்கு விடப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்தி ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு நேற்றைய தினம் அவையிலே அறிமுகப்படுத்தப்பட்டு, இன்று விவாதிக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளோடு கொண்டு வரப்பட்டது என்றாலும் கூட, நேற்றைக்கு அனுப்பப்பட்ட பணிப் பட்டியலில், அஜெண்டாவில் இதைச் சேர்க்காததற்குக் காரணம், கவர்னருடைய ஆணை எதிர்பார்க்கப்பட்டதால், தாமதம் ஏற்பட்டது.



ஆனாலும் அந்தத் தாமதத்தை எதிர்க்கட்சியிலே உள்ள எல்லாத் தலைவர்களுக்கும் நம்முடைய அவையினுடைய செயலாளர் அவர்கள் நேற்று இரவே எடுத்துச் சொல்லி, இணைப்புப் பட்டியலாக அது இன்று காலையிலே இணைக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு கட்சித் தலைவர்கள் அனைவருமே, இதை விவாதிப்பதற்கு போதிய அவகாசம் இல்லை என்று கருதுகிற காரணத்தால், இதனை அடுத்தக் கூட்டத் தொடருக்கு ஒத்தி வைப்பதிலே எந்த விதமான மறுப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள்பேசும்போது இது ஏற்கெனவே 1973-லே கொண்டு வரப்பட்டது; அதற்கு அடுத்து எம்.ஜி.ஆர். ஆட்சியிலே அன்று கொண்டு வரப்பட்டது என்று எல்லாம் சொன்னார்கள். ஒருவேளை அது சரியான தகவலாக இல்லாமல் போய்விட்டால் என்ன செய்வது என்பதற்காக நான் சொல்ல விரும்புகிறேன். முதன்முதலாக கழகஆட்சியிலேதான் முதலமைச்சரையும் உள்ளிட்ட ஒரு விசாரணை நடத்தலாம் என்கிற சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டது. இராஜஸ்தான் போன்ற மாநிலங்களிலே சட்டம் கொண்டுவரப்பட்டு இருந்தாலும் கூட, அங்கே எல்லாம் முதலமைச்சரை அவர்கள் இணைக்கவில்லை. மறுபடியும் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அந்தச் சட்டத்தையே எடுத்துவிட்டார்கள், நீக்கிவிட்டார்கள். சட்டமே செயல்படவில்லை. எனவேதான் இப்போது புதிய சட்டம் கொண்டுவருகிறோம். அதுவும் இப்போது பாராளுமன்றத்திலே கொண்டுவருகிற ''லோக்பால்'' சட்டத்தைப் போலக் கொண்டு வரப்படும் என்று கவர்னர் உரையிலே அறிவித்து—பிறகு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்து—அதே ரீதியில் இந்தச் சட்டம் இப்போது கொண்டுவரப்பட்டு இருக்கிறது. நான் மேலும் இதை விளக்க விரும்பவில்லை. ஏனென்றால், முழு விவாதமும் இன்னொரு நாளைக்கு வரவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் மற்றத் தலைவர்களும் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிற காரணத்தால், இன்னொரு நாளைக்கு இதை எடுத்துக்கொள்ளலாம் என்று அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களுடைய கருத்தையும் நான் உங்களுக்குப் பரிந்துரை செய்கிறேன். தங்களுடைய ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களும் எடுத்துக் காட்டிய கருத்தின் அடிப்படையிலும், அவர்கள் விரும்பிய கால அவகாசம் இருந்தால், அதில் இன்னும் முழுமையாக ஈடுபட்டுத் தங்களுடைய கருத்துக்களைச் சொல்ல முடியும் என்ற நியாயமான உணர்வின் அடிப்படையிலும் இதை முன்மொழிகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருத்தின்படியும், இந்தச் சட்ட முன்வடிவு அடுத்தக் கூட்டத் தொடருக்குத் தள்ளிவைக்கப்படுகிறது.

## 9. அரசினர் தனித் தீர்மானம்.

### பணியிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் பேரவைச் செயலாளர் திரு. சி. கு. இராமசாமி அவர்களுக்குப் பாராட்டுதல்கள்.

***மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தச் சட்டப் பேரவையினுடைய
செயலாளராக பல ஆண்டுக்காலமாகத் தொடர்ந்து இந்தச் செய
லகத்திலே பணியாற்றி, ஓய்வு பெற இருக்கிற திரு. சி. கு. இராம
சாமி அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்கிற வகையில், நான்
கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் செயலாளராக 1985
ஆம் ஆண்டு முதல் பணியாற்றி, 31-5-1990ஆம் நாள் ஓய்வு
பெறவிருக்கும் திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்., அவர்கள்
சட்டமன்றப் பேரவை-மேலவை ஆகிய இரு அவைகளிலும் 1955
முதல் 1990ஆம் ஆண்டு வரை 35 ஆண்டுக்காலம் ஆற்றியுள்ள
சிறந்த பணிகள், எந்த நேரத்திலும் தயக்கமின்றி உடனடியாக
மேலான பரிந்துரை அளிக்கும் திறன், சட்டமன்ற விதிகள் பற்றி
யும், சட்டமன்ற-பாராளுமன்ற மரபுகள் பற்றியும் தெளிவாகவும்,
திட்பமாகவும் அறிந்து வைத்து, அவ்வப்போது எடுத்துக்காட்டும்
நுண்ணிய அறிவாற்றல், உறுப்பினர்கள் தங்கள் கடமைகளைச்
சட்டமன்றப் பேரவையிலும் சரி, மேலவையிலும் சரி, அவற்றின்
பல்வேறு குழுக்களிலும் சரி, செவ்வனே நிறைவேற்ற அவர்
நல்கிய உதவி ஆகியவற்றைப் போற்றிப் புகழ்ந்து பாராட்டுவ
தோடு, இப்பேரவை பெரிதும் விரும்பி நல்கும் பாராட்டுதல்களை
அவருக்குத் தெரிவிக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களைக் கேட்டுக் கொள்கிறது''.

*11-30 மணி.*

இந்தத் தீர்மானத்தை நான் இங்கே முன்மொழிந்து இருக்
கிறேன். திரு. சி. கு. இராமசாமி அவர்கள் சுதந்திரத்திற்குப்
பின்னால் 1952ஆம் ஆண்டு முதல் தடவை சட்டமன்றத் தேர்தல்
நடைபெற்று, இங்கே சட்டமன்றம் உருவான அந்தக் காலக்
கட்டத்தில் இந்தச் செயலகத்திலே பணியிலே சேர்ந்தவர்.
ஒரு பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில், பெரியார் மாவட்டத்திலே
பிறந்து, உயர்நிலைப் பள்ளியிலே கோபிச்செட்டிப்பாளையத்திலே
படித்து, திருச்சி நேஷனல் கல்லூரியிலேயும், மதுரை அமெரிக்கன்
கல்லூரியிலேயும் படித்துப் பட்டம் பெற்றவர். சென்னை சட்
டக் கல்லூரியிலே சட்டப்படிப்புப் படித்தவர். உதவி வழக்
குரைஞராக உயர்நீதிமன்றத்திலே, உச்ச நீதிமன்ற முன்னாள்
நீதிபதி திரு. கைலாசம் அவர்களிடத்திலே பயிற்சி பெற்றவர்.
இந்தச் செயலகத்திலே அவர்சேர்ந்தபோது முதன் முதலாக சட்ட
மன்ற மரபுகளுக்கு எல்லாம் ஒரு பெரிய ஆலோசகராக விளங்கும்
தகுதி வாய்ந்தவராக இருந்த. ஆர். வி. கிருஷ்ணய்யர் அவர்கள்





இந்தச் சட்டப்பேரவையினுடையச் செயலாளராக ஏறத்தாழ 70
வயதில் அவர்கள் பணியாற்றினார்கள். அதற்குப் பின்னர் அவ
ரைத் தொடர்ந்து இந்தச் சட்டமன்றத்தினுடைய செயலராக
திரு. அனுமந்தப்பா, திரு. சி. டி. நடராஜன், அதற்குப் பின்னர்
திரு. கி. மு. அழகர்சாமி அவர்கள் எல்லாம் பணியாற்றிய காலத்
தில் இந்தச் செயலகத்திலே தமக்குக் கிடைத்த பொறுப்பை
ஏற்று மிகவும் கண்ணியமாக, மற்றவர்கள் எல்லாம் எந்த வகை
யிலேயும் கருத்து மாறுபாடுகள் கொள்வதற்கு இடமில்லாத அள
விற்குச் சிறந்த முறையில் பணியாற்றியிருக்கிறார்கள். ஒரு வகை
யில் தமிழகத்தினுடைய சட்டமன்றப் பேரவையினுடைய ஒன்பது
காலக்கட்ட மன்றத்திலேயும் அவர்கள் பணியாற்றுகிற அந்த
வாய்ப்பைப் பெற்றவர். எனவே, அப்படிப்பட்ட திரு. இராம
சாமி அவர்கள் இந்த மாமன்றத்திற்கு ஆற்றிய பணிகளை
அவர்கள் ஓய்வு பெறுகின்ற நேரத்தில் நாம் எல்லாம் நினை
விலேகொள்வது இயல்பாகவே அமைகின்ற ஒரு கடமையாகும்.

சட்டப் பேரவையினுடைய தலைவர் என்னதான் சட்டப்
பேரவையில் தட்பவெட்ப நிலைகள் மாறினாலும் அந்தச் சூழ்
நிலையிலேயும் அவர் தன்னுடைய தெளிவான கருத்துக்களால்
எந்த குழப்பத்திற்கும் இடம் தராமல் அவருடைய கடமையை
ஆற்ற வேண்டும்.

''உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு''

என்ற வள்ளுவருடைய வாக்கு, எவர்க்கும் இயல்பாக அமைய
வேண்டியது என்று சொன்னாலும்கூட, சட்டப் பேரவையினு
டைய செயலாளருடைய மனப்பான்மையில் அது சிறப்பாக இடம்
பெறவேண்டும்.

*11-35 மணி.*

உதாரணத்திற்குச் சொல்வதாக இருந்தால், ஒரு கடுமையான
வாக்குவாதம் நடைபெறுகின்றபோது ஏற்படுகின்ற உணர்ச்சி
களில் அவரும்கூட ஓரளவிற்கு அந்த உணர்ச்சியை உணர்ந்து,
அந்த உணர்விலே வருத்தமோ, மகிழ்ச்சியோ இவைகளில் கலந்து
கொள்ளலாம். ஆனால் அதனை வெளியிட்டுவிடக் கூடாது.
வருத்தப்பட்டாலும் சரி, மகிழ்ச்சி அடைந்தாலும் சரி, அவை
களை வெளியிலே பிரதிபலிக்கக்கூடாது. அறிவினுடைய பயனை
மட்டும்தான் இந்த அவைக்கு அளிக்க வேண்டிய கடமையுடை
யவராக மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு என்று சொன்ன
அந்த இலக்கணத்திற்கேற்ப அந்தப் பணியை அந்தப் பொறுப்
பிலே உள்ளவர்கள் நிறைவேற்ற வேண்டும். ஒரு வகையிலே
சொல்வதாக இருந்தால், பேரவைத் தலைவருக்கு உறுதுணையாக
இருந்து செயல்படுகிற பெரிய பொறுப்பு அந்தப் பொறுப்பு.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற இந்த இயற்கையான அரசியலின் நிலை காரணமாகக் கருத்து வேறுபாடுகள் அவ்வப்போது எழுந்தாலும்கூட, அப்படிப்பட்ட நேரத்தில் பேரவையினுடைய தலைவர் நடுநிலையாக நின்று நியாயம் வழங்குவதற்கு, நடுநிலை எது என்று, தராசிலே உள்ள முள் காட்டுவது போல, காட்டுகிற பொறுப்பு பேரவையினுடைய செயலாளருக்கு உண்டு. அந்த வகையில் இந்தப் பேரவையினுடைய செயலாளராக இதற்கு முன்னால் விளங்கியவர்கள் ஒரு நல்ல மரபை நிலைநாட்டியிருக்கிறார்கள். அந்த மரபை திரு. சி. கு. இராமசாமி அவர்கள் மிக நல்ல முறையிலே காப்பாற்றி, அவர் ஏற்றிருந்த பொறுப்புக்குப் பெருமையை சேர்த்திருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட அவரது பணியை இந்தநேரத்திலே நான் பாராட்டுவதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அவர் 1955–லே இங்கே வந்தார். நான் 1957–லே சட்டப்பேரவைக்கு உறுப்பினராக வந்து எதிர்க்கட்சியிலே இருந்தேன். இடையிலே ஒரு 5, 6 ஆண்டுக்காலம் தவிர பெரும்பாலும் இந்த அவையுடன் தொடர்புடையவனாக இருந்துள்ளேன். நாடாளுமன்றத்திற்குப் போன காரணத்தினால் 4 ஆண்டுகள் நான் இந்த அவையிலே இல்லாத நிலைமை ஏற்பட்டது. மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் என்னிடத்திலே வைத்த அன்பு காரணமாக ஓராண்டுக்காலம் நான் இந்தச்சட்டமன்றப் பணி செய்யாமல் வேறு நல்ல கடமைகளைச் செய்து கொண்டிருந்தேன் (சிரிப்பு). எனவே, அப்படிப்பட்ட அந்தக் காலக்கட்டத்தைத் தவிர, மற்ற காலமெல்லாம் தொடர்பு கொண்டவன் என்னும் முறையில் இந்தப் பேரவையினுடைய செயலகம் மிகச் சிறப்பாக இயங்குவதற்கு உரிய துணையாக விளங்கியவர் என்பதை நான் அறிந்திருக்கிறேன். அந்த முறையில் நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிரியாது விடைதரும் நோக்கில் பிரியா விடை என்று சொல்வார்களே, அப்படிப்பட்ட விடையைத்தான் நாம் அவர்களுக்கு வழங்குகிறோம் என்னும் கருத்துடன் அவரை நான் இன்று மன நிறைவோடு பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடையச் செயலாளர் அவர்கள் ஓய்வு பெறுகிற வயதைப் பெற்றிருக்கிறார் என்பது இங்கே அறிவித்ததற்குப் பின்னாலேதான் தெரிந்து கொள்கிற நிலைமை இருக்கிறது. ஆனால், அவருடைய தோற்றத்தைப் பார்க்கிற நேரத்தில் இன்னும் எப்படியும் ஒரு 5, 6 ஆண்டுக் காலம் பணியாற்றுவார் என்றுதான் கருதியிருந்தேன். ஒரு வேளை வயதைத் தவறாகக் கொடுத்துவிட்டாரோ என்னவோ. (சிரிப்பு) ஆனாலும், அவருடைய இளமையைப் பார்க்கிற நேரத்தில் இவ்வளவு இளமையில் அவர் ஓய்வு பெறுகிற வயதைப் பெற்று விட்டாரா என்ற ஒரு சந்தேகம் எனக்கிருக்கிறது. என்றாலும், சட்டப்பேரவையைப் பொறுத்தவரையிலும் 70 வயதிலேயிருந்த திரு. கிருஷ்ணய்யரும்





பணியாற்றி, அவரிடத்திலே பணியைத் தெரிந்து கொண்டவர்
என்ற நிலையில், இப்படி சட்டமன்றம் போன்ற சில பணி
களுக்குப் பணியாற்றக் கூடிய வாய்ப்பு இருக்கின்ற திரு. இராம
சாமி அவர்களைப் போன்றவர்களை நாம் பயன்படுத்திக் கொள்
வது நிச்சயமாக தேவையான ஒன்றாகும். உதாரணமாக, நீதி
மன்றத்திலேயிருக்கிற நீதிபதி அவர்களுடைய வயதையும், அதே
போல தேர்வாணைக் குழுவிலே இருக்கின்றவர்களுடைய வயது
நிலையும் அவர்களுக்குத் தரப்படுகிற அந்தச் சலுகைகள் சட்ட
மன்றத் துறையிலே பணியாற்றுகிற இப்படிப்பட்ட திறமை
வாய்ந்த திரு. இராமசாமி போன்றவர்களுக்குத்தந்து நாம் நிச்சய
மாக அவர்களையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதை,
அரசு கவனிக்க வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே குறிப்
பிட்டுத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே நம்மு
டையச் செயலாளர் அவர்களைப் பொறுத்தவரையிலும் நீண்ட
நாட்களாகப் பணியாற்றுகின்றவர்கள் என்று தெரிந்துகொள்கிற
நேரத்திலே எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. அவரை முதன் முதலாக
நான் பார்த்த நேரத்திலே மேலவையிலே செயலாளராக இருந்த
நேரத்தில் செயலாளர் என்ற பெயர் போட்டிருக்கிற இடத்தில்
திரு. சி. கு. இராமசாமி என்று அழகான தமிழில், ''ராமசாமி''
என்ற சொல்லோடு, ''இராமசாமி'' என்று போட்டிருந்த அந்த
''இ''யன்னாவைப் பார்த்ததற்குப்பின்னால் அவர்களுடைய தமிழ்
உணர்வைத் தெரிந்து கொண்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன்.
ஏனென்றால், அதிகாரத்திலே உள்ளவர்களிடத்திலே, பொதுவாக
படித்தவர்களிடத்திலே தமிழ் உணர்வு இல்லாத காலத்தில் அவர்
தமிழ் உணர்வோடு தன்னுடைய பெயர் முழுமையான தமிழ்ப்
பெயராக இருக்க வேண்டுமென்று இராமசாமி என்று அந்தப்
பெயரை அவர் அறிவித்த அந்த அறிவிப்பை நான் பார்த்த நேரத்
தில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். அப்படிப்பட்ட தமிழ்
உணர்வு உள்ளவர்களை நாம் பயன்படுத்திக் கொள்வது மிகுந்த
அவசியமான ஒன்று.

11-40 மணி.

அவரைப் பொறுத்தவரையிலும் 9 சட்டமன்றங்களைக் கண்ட
வர் என்ற வகையிலும் மேலவைப் பணியில் அவர் சிறந்து விளங்
கினார் என்பதையும் பார்க்கின்ற நேரத்தில் நிச்சயமாக அவருக்கு
ஒரு மிகப் பெரிய புகழும் பெருமையும் இருக்கிறது என்பதை
தான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் மூதறிஞர்
இராஜாஜி அவர்களிலிருந்து, காமராஜர் அவர்களும், பேரறிஞர்
அண்ணா அவர்களும், கலைஞர் அவர்களும், எம்.ஜி.ஆர். அவர்
களும் முதலமைச்சராக இருந்த காலங்களில் அவர் பணியாற்றி
னார் என்ற அந்தப்பெருமை இருக்கிறதே, அது ஒரு சாதாரணப்
பெருமை அல்ல. அந்தக் காலங்களில் இருக்கின்ற சட்டமன்றங்
கள் முழுவதுமாக அவர் தெரிந்தவர். சட்டமன்றங்களிலே எப்
படிப்பட்ட நிலைகளிலே பணியாற்றிய உறுப்பினர்கள் எப்படி

இருந்தார்கள் என்பதையும் அவர் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கின்றவர். இப்படிப்பட்டவருடைய அறிவு, புத்தகமாக வருமேயானால், என்னைப் போன்றவர்கள் சட்டமன்றத்தைப் பற்றி தெரிந்துகொள்வதற்கும், அந்தப் பெரியவர்கள் எப்படி நடந்துகொண்டார்கள் என்று அறிந்துகொள்வதற்கும், உறுப்பினர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று தெரிந்து கொள்வதற்கும், அவர் பணியாற்றிய நிலைகளை எல்லாம் புத்தகமாக எழுதினால் இன்றைக்கு மிகப் பெரிய மரியாதையும், மிகப் பெரிய பெருமையும் பெறும் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நான் இன்னொன்றையும் தெரிவித்தாக வேண்டும். பொதுவாக ஆளும் கட்சிக்குத் துணையாக இருக்க வேண்டும் என்பது ஒரு மரபு, என்றாலும் அதற்காக எதிர்க்கட்சியையும் அலட்சியப்படுத்திடவேண்டும் என்ற நிலையைச் செயலாளர் அவர்கள் என்றைக்கும் எடுத்ததில்லை. ஆளும் கட்சி கேட்கின்ற யோசனைகளைச் சொல்லிவிட்டு எதிர்க்கட்சியிலே இருக்கின்ற நாங்கள் கேட்கின்ற யோசனைக்கு எங்களுக்கும் யோசனையைச் சொல்லி, இரண்டு பேரையும் சமப்படுத்தி, ஒன்றாக இணைத்து, இந்த மன்றத்தை நடத்துவதிலே அவர் எடுத்துக்கொண்டிருக்கிற முறைகள் இருக்கிறதே, நிச்சயமாகப் பாராட்ட வேண்டியவை. ஒலிபெருக்கி அவர் முன்னால் இருந்தாலும் கூட பேசாமலே உங்கள் மூலமாக அவர் பேசி பல்வேறு நிலைகளை இந்தச் சபையிலே உருவாக்கியிருக்கிறார். இப்படிப்பட்ட பெருமையுடைய அவரை நாம் பாராட்டியாக வேண்டும். அதைவிட எனக்கு இருக்கின்ற மனநிறைவு, மகிழ்ச்சி என்னவென்றால் பொதுவாக இதற்கு முன்னாலே வேறு செயலாளர்களை நான் பார்த்திருக்கிறேன். உறுப்பினர்களுக்குச் சம்பள உயர்வு, சில உரிமைகள் வழங்க வேண்டும் என்று வருகின்ற நேரத்தில் அவர்கள் நிதித் துறையுடன் துணையாக இருப்பார்களே தவிர எங்களுக்குத் துணையாக இருக்க மாட்டார்கள். ஆனால், இன்றைக்கு மிகப் பெரிய பெருமையை இந்த வரலாற்றுக் காலத்திலேயே சம்பளம் அதிகமான அளவிற்குக் கிடைக்கின்ற ஒரு பெரிய பெருமையை முதல்வர் அவர்களிடத்திலே இந்தச் சட்டமன்றம் பெற்றிருக்கிறது என்று சொன்னால், அதற்கு இடையூறு இல்லாமல் துணையாக இருந்த நம்முடைய செயலாளரை நாம் எவ்வளவுதான் பாராட்டினாலும் நிச்சயமாகத் தகும். ஏனென்றால், இதிலே மற்ற செயலாளர்கள் நான்பார்த்த வரையில் கொஞ்சம் இடையூறாக இருந்து இருப்பார்களோ என்ற சந்தேகம் எனக்கு இருந்தது. ஆனால், திரு. இராமசாமி அவர்கள் மிகுந்த சிரமம் எடுத்து உறுப்பினர்களுடைய நலனிலும், அலுவலர்களுடைய நலனிலும், பணியாளர்களுடைய நலனிலும், அவர் மிகுந்த அக்கறை கொண்டு பணியாற்றி இருக்கிறார். அவர் பணி மேலும் சிறக்க வேண்டும். அவர் சமுதாயத்திற்கு மேலும் பயன்பட வேண்டும் என்று



மனதார நெஞ்சார அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பில் அவரைப் பாராட்டி அமர்கிறேன்.

திரு. எஸ். ஆர். **பாலசுப்பிரமணியம்** : பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவரவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை காங்கிரஸ் கட்சியின் சார்பில் நானும் ஆதரிக்கிறேன். இங்கே இந்த மாத இறுதியில் நம்முடைய பேரவைச் செயலாளர் ஓய்வு பெற இருக்கிறார்கள். சாதாரண எழுத்தராக சட்டமன்றச் செயலகத்திலே நுழைந்து 35 ஆண்டுக் காலம் இன்றைய தினம் தன்னுடைய செயல் சிறப்பால், திறமையால், செயலாளராக உயர்ந்திருக்கிறார். அவரைப் பொறுத்தவரையில் எங்களுடைய கோவை மாவட்டத்திலே பிறந்தவர். அதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் பெரியார் மாவட்டம் என்று மட்டும் அவை முன்னவர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அவர் பிறக்கும்போது கோவை மாவட்டத்திலேதான் பிறந்தார். பணிபுரிந்த 35 ஆண்டுகளில், காமராஜர், பக்தவச்சலம், அண்ணா எம்.ஜி.ஆர். கலைஞர் என்று 7 முதல்வர்களை அவர் சந்தித்து இருக்கிறார். அவர் பணியாற்றிய காலத்தில் அநேகமாக ஒன்பது சட்டப் பேரவைகளில் பணியாற்றியதாக இங்கே சொன்னார்கள். முதல் முறையாக 1952-லே தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் சட்டமன்றத்திலிருந்து இன்றுவரை ஒன்பது சட்டமன்றங்களிலேயும் அவர் பணியாற்றியிருக்கிறார். நல்ல அனுபவம் பெற்றிருக்கிறார். நல்ல அனுபவம் பெற்ற சட்டப் பேரவைச் செயலாளர்களிடத்திலே பயிற்சி பெற்றிருக்கிறார். திருவாளர்கள் அனுமந்தப்பா, சி.டி. நடராஜன், அழகர்சாமி போன்றவர்களிடத்திலே நல்ல பயிற்சி பெற்றிருக்கிறார். இந்தப் பணியைப் பொறுத்த வரையில் மற்ற அரசுப் பணிகளைப் போல் அவ்வளவு சுலபமான பணி அல்ல. மற்ற அரசுப் பணிகள் என்றால் காலையிலே 10 மணிக்கு வரலாம். மாலை 5 மணிக்குப் போய்விடலாம்.

**11-45 மணி.**

ஆனால் சட்டப் பேரவைச் செயலாளர், சட்டப் பேரவைச் செயலகம் என்று சொன்னால், காலையிலே 8 மணிக்கு வர வேண்டும். இரவு 7 மணிக்கும் போகலாம், 8 மணிக்குப்போகலாம். எத்தனை மணிக்குப் போகமுடியும் என்று சொல்ல முடியாது. குடும்பத்திலே கவனம் செலுத்த முடியாது என்ற நிலைமை இருந்தாலும்கூட, கொஞ்சம் கூட சலிப்பு இல்லாமல் இந்தச் சட்டப்பேரவையிலே 35 ஆண்டுக் காலம் பணியாற்றி இருக்கிறார் என்றால், நிச்சயமாக நாம் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

சட்டப்பேரவையிலே நடைபெறுகின்ற விவாதங்களிலே நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. அந்தக்காலத்திலே நடைபெற்ற விவாதங்களுக்கும், இந்தக் காலத்திலே

நடைபெறுகின்ற விவாதங்களுக்கும் பெருத்த வேறுபாடு இருக்
கிறது என்பதை அனைவரும் அறிவார்கள். அப்போதெல்லாம்
பேசினால், இந்த அவையிலே பேசினால், பக்கத்து அவையிலே
என்ன நடைபெறுகிறது என்று யாருக்கும் தெரியாது. அந்த
அளவிற்கு விவாதங்கள் நடைபெற்றன. அந்தக் காலத்திலே
விவாதங்கள் எப்படி நடைபெறும் என்று அண்ணா அவர்கள்
சொல்வார்கள். ஓர் அவையிலே நடைபெறுகின்ற விவாதம்,
அடுத்த அவைக்குக் கேட்காது. அந்த அளவிற்கு அமைதியாகப்
பேசுவார்கள். ஆனால், இன்றையதினம் எவ்வளவு சூடாக
விவாதங்கள் நடைபெறுகின்றன? சுவையான விவாதங்கள்
தான். சுவையான விவாதங்கள் என்றாலும்கூட, சூடான விவா
தங்கள் நடைபெறுகின்ற காலத்தில் நிச்சயமாக பேரவைத்
தலைவருக்கு எவ்வளவு வேலை இருக்குமோ, எவ்வளவு டென்
ஷன் வருகிறதோ, அதே அளவிற்கு செயலாளருக்கும் வரும்.
அவர்தான் பேரவைத் தலைவருக்கு அவ்வப்போது விதிகளைச்
சுட்டிக்காட்டி, எல்லாம் செய்ய வேண்டிய கடமை அவருக்கு
உண்டு. அந்தக் கடமையை முடிந்த வரையில் சிறப்பாகச் செய்
திருக்கிறார் என்றே நான் கருதுகிறேன். எனவே, எங்களுடைய
காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் அவருக்குப் பாராட்டு
தெரிவித்துக் கொள்கிறேன். அவர் பெற்ற அனுபவம் வீணாகிப்
போய்விடக்கூடாது. ஏனென்றால், மனித சமுதாயத்தினுடைய
வளர்ச்சி எதிலே இருக்கிறது என்றால், ஒவ்வொருவருடைய
அனுபவம்அடுத்த தலைமுறைக்கு, அடுத்தவர்களுக்குப் பயன்பெற
வேண்டும். அதேபோல, இவருடைய அனுபவம் முழுக்க, முழுக்க
பயன் பெற வேண்டும். அந்த வகையிலே அவர் மேலும்,
மேலும் பல சிறப்புக்களைப் பெற்று வாழ வேண்டும் என்று
வாழ்த்தி, பாராட்டைத் தெரிவித்து முடிக்கிறேன், வணக்கம்.

**திரு. கோ. வீரையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்
மொழிந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை மார்க்சிஸ்டு
கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நானும் வழிமொழிந்து,
இன்றைக்கு நம்முடைய அவையின் செயலாளராகப் பணியாற்றி,
இந்தத் துறையிலே, இந்த அவையிலே ஏறத்தாழ 35 ஆண்டுகள்
பணியாற்றி, வருகிற 31-ஆம் தேதியோடு அந்தப் பணியை
நிறைவு செய்ய இருக்கிறார்கள். இந்த நேரத்திலே நான்
மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது, ஒரு வகை
யிலே அவர்களும் ஒரு விவசாயக் குடும்பத்திலே பிறந்து, இன்
றைக்கு இந்த அவையினுடைய செயலாளராக உயர்ந்திருக்கிறார்
கள் என்ற முறையில், நானும் ஒரு விவசாயக் குடும்பத்தைச்
சேர்ந்தவன் என்ற முறையிலும், அதேபோல், அவரும் ஒரு பிற்
பட்ட வகுப்பைச் சேர்ந்தவர், நானும் ஒரு பிற்பட்ட வகுப்பைச்
சேர்ந்தவன் என்ற முறையிலும் நிச்சயமாக நான் இதிலே
பெருமைப்படுகிறேன்.





அவர்கள் இங்கே பணியாற்றிய காலம், எனக்கு முன்னாலே
நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும்,
காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும்
குறிப்பிட்டதைப் போல, மூதறிஞர் இராஜாஜி அவர்கள் முதல
மைச்சராக இருந்து, காமராஜர் அவர்கள் முதலமைச்சராக
இருந்து, அதே போல பெரியவர் பக்தவச்சலம் அவர்கள் முதல
மைச்சராக இருந்து, அண்ணா அவர்கள் முதலமைச்சராக
இருந்து, கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்து, அதற்குப்
பிறகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்து, இப்
போது கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிற காலம்
வரைக்கும், முதல் சட்டமன்றம் அமைக்கப்பட்ட அந்தக் காலத்தி
லிருந்து இந்த ஒன்பதாவது சட்டமன்றக் காலம் வரைக்கும்
அவர்கள் பணியாற்றியிருக்கிறார்கள்.

இந்த மன்றத்திலே—அப்படிப்பட்ட பெரியவர்கள் எல்லாம்,
முதலமைச்சராக இருந்து பணியாற்றிய இந்தச் சட்டமன்றத்தில்,
எங்களுடைய மதிப்பிற்குரிய, எங்களுடைய கட்சியின் பொதுச்
செயலாளராக இருக்கக்கூடிய ஈ.எம்.எஸ். அவர்கள் பணியாற்றிய
இந்த அவையில், அதேபோல் மறைந்த எங்களுடைய தலைவர்
பி. இராமமூர்த்தி அவர்கள், ராஜாஜி முதலமைச்சராக இருந்த
போது, எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, ஆளுங்கட்சியும்,
எதிர்க் கட்சியும் எப்படிப் பணியாற்ற வேண்டும் என்ற இலக்
கணத்தை இந்த அவையிலே படைத்த காலத்திலே அவர்கள்
பணியாற்றத் துவங்கி, இன்றையதினம் அவர்கள் ஓய்வு பெற
இருக்கிறார்கள். அவர்கள் பெற்றிருக்கக்கூடிய அந்த அனுப
பவங்கள் என்பது, நிச்சயமாக அவர்கள் செய்திருக்கக்கூடிய
உதவிகள் என்பது, மற்றவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள்,
அதைப்போல, இங்கே இந்த அவையிலே தென்றல் வீசியதும்
உண்டு. புயல் அல்ல, சூறாவளி அடித்ததும் கூட உண்டு,
அப்போதெல்லாம் தென்றல் அடிக்கும்போதும் அல்லது சூறா
வளி வீசும்போதும்கூட, நம்முடைய அவையின் செயலாளர்
அவர்கள், நான் சில நேரத்திலே கருதிக்கொள்வதுண்டு,
இந்தக் கட்டிடத்தில் இருக்கக்கூடிய நிழற்படங்களை நாம் பார்த்
தால்கூட, அவை நம்மைப் பார்ப்பதைப்போல் ஒரு தோற்றம்
நமக்கிருக்கும். அல்லது சில சிற்பங்களைப் பார்த்தால்கூட அவை
அசைவதைப் போல் நம்முடைய கண்ணுக்கு ஒரு தோற்றம்
தெரியும். ஆனால் நம்முடைய செயலாளர் அவர்களை எந்த
நேரத்திலே பார்த்தாலும் எந்தவிதமான அசைவுமற்று ஒரு
நிலையிலே இருக்கக்கூடிய ஒரு செயலாளரை நாம் பெற்று,
எவ்வளவு தென்றல் அடித்தாலும், புயல் வீசினாலும், நிலை
குலையாது நின்று இந்த அவையையும், அவையிலே என்ன
உணர்ச்சிவசப்பட்டாலும் அல்லது அவைத்தலைவரே கூட,—நம்மு
டைய மாண்புமிகு முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர்
அவர்கள் இங்கே இருக்கிறார்கள்.

11-50 மணி

அவர்கள் இந்த அவையில் தலைவராக இருந்து நடத்திய அனுபவம் இருக்கிறது. அப்படி அவைத் தலைவர்கள் கூட உணர்ச்சிவசப்படக்கூடிய அந்த நிலையிலும், அவை உறுப்பினர்கள் அல்லது அமைச்சர்கள் உணர்ச்சி வசப்படக்கூடிய நேரத்திலும் அவர்கள் அத்தனை பேரையும் இந்த அவையினுடைய விதிகளுக்குள் கொண்டு வந்து நிறுத்தக்கூடிய அந்த மகத்தான காரியத்தை அவர்கள் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த முறையில் அவர்கள் காட்டியிருக்கக்கூடிய அந்த முறை மட்டும் அல்லாமல் நிச்சமாக 35 ஆண்டுக்கால அனுபவத்தில் நான் பார்க்கிறேன், இந்த அவையினுடைய விதிகளைப் பற்றி, எந்த நேரத்திலும் மேற்கோள் எடுத்து...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருமதி. ரமணி நல்லதம்பி அவர்கள் விதிகளை இன்றைக்காவது கடைப்பிடித்தால் நன்றாக இருக்கும்.

**திரு. கோ. வீரையன் :** அந்த விதிகளை அவர்கள் எடுத்து அந்த விதி என்ன சொல்கிறது, அதற்கு மாற்று என்ன ? அந்த விதிகளுடைய எண் என்ன என்பதை எல்லாம் கண்டுபிடித்து, அதை எடுத்து அவைத் தலைவருக்குப் புரட்டிக் காட்டி, அந்த முறையில் பதில் அளியுங்கள் என்று சொல்லி கிட்டத்தட்ட இந் அவையினுடைய விதிகள், அதேபோல் அரசியல் சட்ட விதிகள் அவ்வளவையும் புத்தகமாக இருந்தாலும், அந்த அரசியல் சட்டத்தினுடைய விதிகளையும், அவையினுடைய விதிகளையும் அறிந்தவராக நம்முடைய செயலாளர் திரு. இராமசாமி அவர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் பார்க்கிறேன். அந்த முறையில் அவர்கள் மனப்பாடமாக வைத்து இருக்கும் நிலையில் அவர்கள் இருந்து,இந்த அவை சிறப்பாக நடைபெற நல்ல பல முடிவுகளை எடுக்க, சில வரலாற்று முடிவுகளை அவையில் எடுப்பதற்குப் பெருமளவு அவர்கள் உதவி செய்திருக்கிறார்கள். அவர் பெற்ற அனுபவங்கள், காட்டிய வழி, அவர் கடைப்பிடித்த அந்த நடைமுறைகள் எதிர்காலத் தலைமுறைக்கு சிறந்த ஒரு பொக்கிஷமாக இருக்கும். அந்த முறையில் அவர்கள் பணியாற்றிய காலத்திலே சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்கள் என்பதோடு, என்னுடைய வேண்டுகோளை நான் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல் இந்த 35 ஆண்டுக்கால அனுபவங்களை, மேலவையிலும், இந்த அவையிலும் சிறப்பாக இருந்து பணியாற்றிய கால அனுபவங்களை எல்லாம் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிடுவது என்பது இன்றைய உறுப்பினர்களுக்கும், எதிர்காலத்தில் வரக்கூடிய அடுத்த தலைமுறையினருக்கும் இந்த அவையில் பணியாற்றுவதற்கு உதவியாக இருக்கும். அந்த முறையில் அந்தப் பொறுப்பை அவர்கள் நிறைவேற்ற வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த



நேரத்தில் சொல்லி அவருடைய காலத்திலே இந்தப் பதவிக்கு பெருமை சேர்த்து இந்தப் பதவியினுடைய சிறப்பை உயர்த்தி இருக்கக்கூடிய நம்முடைய அன்பிற்குரிய அவையினுடைய செயலாளர் அவர்கள் இன்றைக்கு ஓய்வு பெறுகிறார்கள் என்று சொல்லுகிறபோது நிச்சயமாக என்னால் நம்பமுடியவில்லை. ஓய்வைப் பெறக்கூடிய வயதை அவர் அடைந்து விட்டாரா என்ற, ஐயப்பாடு தான். ஏன் என்று சொன்னால் நிச்சயமாக ஒரு வகையில் அவர் பிறந்த ஆண்டில் நானும் பிறந்தேன் என்ற முறையில் என்னுடைய தலையையும்,அவருடைய தலையையும் சமயத்திலே பார்க்கும்போது இன்னும் 10 ஆண்டுக்காலம் பணியாற்றலாம் என்ற அளவுக்கு அவர் இளமையான முறையில் இருக்கக்கூடிய நம்முடைய செயலாளர் அவர்கள் பணிக் காலத்திலே காட்டியிருக்கக்கூடிய, செயலாற்றி இருக்கக்கூடிய அந்த சிறப்பு மிக்க அனுபவங்கள் அடுத்து வருபவர்களுக்கும் பயன்படும் முறையில் நம்முடைய மாண்புமிகு முன்னவர் அவர்கள் முன்மொழிந்த அந்தத் தனித் தீர்மானத்தை நான் வழிமொழிந்து, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் அவர் எல்லா வளத்தோடும் பல ஆண்டுகள் வாழ வேண்டும் என்று வாழ்த்தி, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானத்தோடு எங்களுடைய வாழ்த்தையும் நான் இணைத்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவைச் செயலாளர் திரு. இராமசாமி அவர்கள் ஓய்வு பெறுவதற்கு மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற இந்தத் தீர்மானத்தோடு என்னுடைய வாழ்த்தையும் கருத்தையும் இணைத்துக்கொள்கிறேன்.

சாதாரணமாக செயலாளர் அவர்களுடைய பணியும், சட்டப் பேரவைத் தலைவருடைய பணியும் ஒருங்கிணைந்து செயல்படக் கூடிய ஒரு பணி ஆகும். நான் திரு. இராமசாமி அவர்களைக் கடந்த 13 ஆண்டுக் காலமாக அறிவேன். 1980 ஆம் ஆண்டிலிருந்து நான் துணைத் தலைவராக இருந்த காலத்திருந்து 1985 ஆம் ஆண்டிலிருந்து 1988 ஆம் ஆண்டுவரை தலைவராக இருந்த காலத்திலும் நான் அவரோடு நெருங்கிப் பழகியவன். திரு. இராமசாமி அவர்கள் அமைதியானவர் ; திரு. இராமசாமி அவர்கள் எளிதில் எதையும் பேசிவிடவும் மாட்டார், யாரிடமும் கோபப்படவும் மாட்டார் ; எல்லாத் தரப்பினரையும் திருப்திபடுத்தக்கூடிய அளவுக்கு அவரைச் சந்திக்க வரக்கூடியவர்களை எல்லாம் அதாவது சட்டப்பேரவை உறுப்பினர்களோடு நன்கு அளவளாவி அவர்களுக்குத் தேவையானவைகளை, அவர்கள் கேட்டவைகளை முக மலர்ச்சியோடு செய்பவர் திரு. இராமசாமி அவர்கள்.

D 143985
V211,31'N90
N90·34·2

11-55 மணி

காரணம், இந்தப் பணியில்தான், சட்டப் பேரவை உறுப்பினர்கள் வெளியூரிலிருந்து வந்த உடனேயே தங்களுக்கு ரூம் வேண்டுமென்று செயலாளருடன் தொடர்பு கொள்வார்கள். அவ்வாறு செயலாளரைச் சந்திக்க முடியவில்லை என்றால்தான், உடனே துணைத் தலைவர், இல்லாவிட்டால் தலைவர் ஆகியவர்களைச் சந்திப்பார்கள். ஆகவே, வெளியிலே இருந்து வரக்கூடிய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களானாலும், இப்பொழுது இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களானாலும், தொடர்பு கொள்ளப்பட வேண்டியவர் முதலில் சட்டப் பேரவை செயலாளர். அப்படி ஒரு அமைதியான செயலாளர், கடந்த ஐந்தாண்டுக் காலமாக நம்முடைய சட்டப் பேரவைக்குக் கிடைத்ததற்காக நாம் உண்மையிலேயே மகிழ்ச்சியடைய வேண்டும்.

மற்றொன்று, சட்டப்பேரவைச் செயலகத்தின் செயல்பாட்டையும் கவனித்து, அதே சமயத்தில், சட்டப் பேரவையில் செலவினங்களைக் குறைக்கக் கூடியவர். இந்தச் செயலகம் அதிகமாக செலவழிக்கக்கூடாது என்று கணக்குப் பார்த்து, செலவழிக்கக் கூடியவர். நான் ஒரு நிகழ்ச்சியைச் சொல்லியாக வேண்டும். திரு. இராமசாமி அவர்கள் ஒருமுறை என்னோடு டெல்லி வந்திருந்தார்கள், சட்டப்பேரவைத் தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக. மாநாடு முடிந்தவுடன், நாங்கள் எல்லோரும் ஆக்ராவிற்குச் செல்லும்போது, காரில் செல்வதற்காக ஏற்பாடு செய்திருந்தது. எப்படி வருவீர்கள் என்று அவரிடம் கேட்டேன் ; அவரும் ஒரு காரில் வருவார் என்று நான் நினைத்தேன். இல்லை, நான் பஸ்சில் ஏறி நாளைக்கு வருகிறேன் என்று சொன்னார். ஏனென்று கேட்டேன். அவரும், அவருடைய குடும்பத்தாரும் வந்திருந்தார்கள். செயலாளர் என்ற முறையில். அவருக்கு அனுமதி உண்டு; ஆனால், அரசாங்க செலவினம் அதிகமாக ஆகிவிடக்கூடாது என்று அவர் பஸ்சில் வருவதாகச் சொன்னார். நான் உடனே சொன்னேன், திரு. இராமசாமி அவர்களே, நீங்களும் என்னுடைய காரில் வரவேண்டுமென்று அவரைக் கட்டாயப்படுத்தி, தாஜ்மகாலுக்கு அழைத்துச் சென்று திரும்பி வந்தோம். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் ஒரு செயலாளர், அவருக்கு அதிகாரம் தன்னுடைய கையில் இருக்கிறது. அதுவும் முழு அதிகாரமும் நம்முடைய சட்டப் பேரவையைப் பொறுத்தவரையில், தன்னிச்சையாகச் செயல்படுகிற காரணத்தினால், அவர் எடுத்துக்கொள்ளலாம்; அது மட்டுமல்ல ; அவர் அலுவல் காரணமாக டெல்லிக்குச் சென்ற போதிலும், அரசாங்கத்தின் பணத்தை தன்னுடைய சொந்தக் குடும்பப் பணமாக எண்ணிச் செயல்பட்டவர். இதை நான் கண்கூடாகப் பார்த்ததினால், உண்மையிலே இதை நினைவூட்ட வேண்டும் என்பதற்காகச் சொன்னேன். ஒவ்வொரு அதிகாரியும் இப்படி நம்முடைய இராமசாமி அவர்கள் அரசாங்கப் பணத்தை எண்ணிப் பார்ப்பது போல, எண்ணிப் பார்ப்பார்களேயானால், நாடு ஒரு நல்ல நிலையை அடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மற்றொன்று, இதை நான் உண்மையிலேயே சொல்லியாக வேண்டும். நான் சட்டப் பேரவைத் தலைவராக இருந்தபோது, சில நேரங்களில் நானே உணர்ச்சி வயப்படுவதுண்டு. அவர் என்னிடம் வந்து, அமைதியாக இருங்கள் என்று என்னைப் பார்த்து, ஒரு சகோதரன் போல, அன்றைக்கு அவர் சொன்னதை நான் மறக்க முடியாது. என்னுடைய அறைக்கு வருவார்; கொஞ்சம் அமைதியாக இருங்கள் என்பார் ; பத்து நிமிடம் கழித்து வருகிறேன் என்பார் ; இப்படி நல்ல முறையில் ஆலோசனைகளை எல்லாம் வழங்கியவர்.

மற்றொன்று, தேர்தல் அதிகாரியாகப் பணியாற்றுவது உண்மையிலேயே ஒரு பெரிய பொறுப்பு — சட்டப் பேரவைச் செயலாளராக இருந்து. ஆளுங்கட்சிக்குச் சாதகமாக இருந்துவிடக் கூடாது. நேர்மையாக நடக்க வேண்டும். அப்படி நேர்மையாக நடந்தவர் திரு. இராமசாமி அவர்கள். ஒன்றைச் சொல்லியாக வேண்டும். ஒருமுறை, ஒரே ஒரு வாக்குச் சீட்டு, அன்றைக்கு அவருடைய முடிவை மாற்றியிருந்தால் ஒரு தேர்தலினுடைய நிலைமையே மாறியிருக்கும். அதாவது மாநிலங்களவைத்தேர்தல். அன்றைக்குக் காலையிலிருந்து— நான் உண்மையைச் சொல்ல வேண்டும்—மாலை வரை, அவர் யாரையும் பார்க்கவில்லை. தேர்தல் முடிந்த பிறகு வருகிறார். அங்கு வாக்கு போடப் போகும்போது கூட, முதல் வாக்கை நான் வழக்கமாகப் போடுவது உண்டு. அவர் அதிகாரி என்பதால், அதற்குரிய வகையில் அமர்ந்து இருப்பார்; சபாநாயகர் வந்துவிட்டாரே, எழுந்து நின்று, இப்படிச் செய்யலாம்; அப்படிச் செய்யலாம் என்று சொல்ல மாட்டார். தேர்தல் அதிகாரி என்ற முறையில். தன்னிச்சையாக செயல்பட்ட திரு. இராமசாமி அவர்களை நான் பாரட்டியாக வேண்டும். காரணம், சில நேரங்களில் ஆட்சி இருக்கிறது ; அதிகாரம் இருக்கிறது என்று தன்னுடைய முடிவைச் சிலபேர் மாற்றுவார்கள். அப்படிப்பட்டவர் அல்ல அவர். மனதில் சரி என்று தோன்றியதை நினைத்து, கடைசி வரை அப்படியே நின்றவர், நம்முடைய சட்டப் பேரவைச் செயலாளர் அப்பேர்ப்பட்ட செயலாளரின் பணிகளை, அனுபவங்களை நாம் உண்மையிலேயே நம்முடைய நாட்டிற்கு எதற்காகவாவது பயன்படுத்த வேண்டும்.

ஒரு முறை நானும் நம்முடைய இராமசாமி அவர்களும் பாட்னாவில் நடைபெற்ற சட்டப் பேரவைத் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டபோது, அங்கே சட்டப் பேரவைச் செயலாளர் முதல் நாளன்று, நம்முடைய இராமசாமி அவர்கள் அமர்ந்திருப்பதைப் போன்ற அந்த இடத்தில் அமர்ந்து சட்டப்

பேரவை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். ஆனால் மறுநாள் அவரைக் காணோம். ஏனென்று கேட்டால், உயர்நீதிமன்ற நீதிபதியாக அன்றைக்கு நியமிக்கப்பட்டார் அந்தச் சட்டப் பேரவைச் செயலாளர். ஆனால் நம்முடைய நாட்டில் சட்டப் பேரவைச் செயலாளர், அவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் அந்தப் பணியோடு நின்று விடுகிறார். இந்தப் பதவி சட்ட அறிவைப் பெற்றிருக்கக் கூடிய பதவி; சட்ட அறிவைத் தெரிந்து கொண்டு, இன்னும் முன்னேற்றக்கூடிய இடம், நம்முடைய சட்டப் பேரவை. அப்படியெல்லாம் தன்னுடைய ஆற்றலை வளர்த்து, தன்னுடைய அனுபவத்தைப் புத்தக வடிவமாகக் கொடுக்க வேண்டுமென்று உறுப்பினர்களெல்லாம் கேட்டிருந்தார்கள். அவர், மேலவைச் செயலாளராக இருந்தபோது, ஒரு புத்தகத்தை எழுதினார். 'விட் அண்டு உற்யூமர்' என்று. மேலவையில் நடைபெற்ற மகிழ்ச்சிகரமான சம்பவங்களை குறித்து அதில் எழுதியிருக்கிறார். அப்படியெல்லாம் அவர் செய்த சேவையோடு, இனி மேலும் தொடர்ந்து சேவை செய்ய வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, அரசாங்கம் அவருடைய அனுபவத்தையும், அறிவையும் பயன்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இந்த நேரத்தில் வைக்கிறேன்.

12-00 மணி

காரணம் இந்தமாதிரியான அதிகாரிகள் கிடைப்பது அரிது. தன்னிச்சையாகச் செயல்படக் கூடிய அதிகாரிகள் கிடைப்பது அரிது. அதிகாரத்தை மீறிச் செயல்படக் கூடிய அதிகாரிகள் கிடைப்பது அரிது. நல்ல எண்ணத்தோடு செயல்படக் கூடிய அதிகாரிகள் கிடைப்பது அரிது. காலத்தை எண்ணாமல் என்றைக்கும் ஒன்று போல் இருப்போம் என்று செயல்படக் கூடிய அதிகாரிகள் கிடைப்பது அரிது. பல அதிகாரிகள் ஆளுகின்ற நேரத்திலே சில நேரங்களில் கூட இருப்பார்கள். அந்தக் காலத்திற்குப் பிறகு விலகி விடுவார்கள். ஆனால் திரு. இராமசாமி அவர்கள் அப்படிப்பட்டவர் அல்ல. நான் சட்டப் பேரவைத் தலைவராக, நம்முடைய சட்டமன்றம் கலைக்கப்பட்ட பிறகு பணியாற்றும்போதுகூட அவர் தொடர்புகொண்டு ஒத்துழைப்பு கொடுத்தவர் என்று உணர்ந்த காரணத்தால் சொல்கிறேன். நம்முடைய இராமசாமி அவர்களை இங்கே பாராட்டுவதற்குக் காரணமே அதுபோல் எல்லா அதிகாரிகளும் இனிமேல் செயல்படவேண்டும். அந்த எண்ணத்தை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். முதலமைச்சருக்கு இந்த அனுபவம் கொஞ்சம் அதிகமாகவே இருக்கலாம். காரணம் ஆளுகின்றபோது பல்வேறு அதிகாரிகள் இருப்பார்கள். ஆலோசனை சொல்வார்கள். ஆனால் நிலைமை மாறிய பிறகு அந்த அதிகாரிகளே சென்று விடுவார்கள். வேறுவிதமாகப் பேசுவார்கள்.



ஆனால் இவர் புறம்பேசியதை யாரும் இங்கே பார்த்ததே கிடையாது. புறம் பேசியதே கிடையாது. முன்னுக்கு நேரே பேசுவார். இப்படிப்பட்ட குணாதிசயங்களைக் கொண்ட திரு. இராமசாமி அவர்கள் ஓய்வு பெறுகின்றார்கள். எல்லாச் செல்வங்களையும் குறைவு இல்லாமல் பெற்று வாழ்நாளில் நல்ல முறையில் வாழவேண்டுமென்று அவருடன் நெருங்கிப் பழகிய காரணத்தால், அவரை உணர்ந்த காரணத்தால் நான் இங்கே வாழ்த்தி, முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் என்ற முறையில் அமைகின்றேன், நன்றி, வணக்கம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நேரம் கடந்து விட்டது என்பது வாட்சைப் பார்த்தாலே தெரிகிறது. அவரை ஆசிர்வாதம் பண்ணவேண்டும். எல்லோரும் பண்ணவேண்டியதுதான். அவர் ஓய்வு பெறுகிறார். அவரைப் பாரட்ட வேண்டும், விருந்து வைக்கவேண்டும், இன்றுதான் கடைசி நாள். பண்ணித்தான் ஆகவேண்டும். அது நம்முடைய கடமையாகப் போய்விட்டது. ஆகையால் செயலாளர் திரு. இராமசாமி அவர்கள் இந்த 31 ஆம் தேதியன்று செயலாளர் பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார். அவரைப் பற்றி எல்லோரும் நல்லவிதமாக நிறைய விவரங்களை எல்லாம் சொல்லிவிட்டார்கள். நானும் மறுபடியும் அவரைப் பற்றிச் சொல்வதற்கு, அவருக்கு கையிருக்கிறது. கால் இருக்கிறது என்று சொல்ல வேண்டிய பொறுப்பு இல்லை. அந்தக் காலத்தில் சென்னை ராஜதானி என்று, ஆந்திரா, தமிழ்நாடு, சவுத் கனரா, நார்த் மலபார் என்று எல்லாம் இருந்தபோது ஆர். வி. கிருஷ்ண ஐயர் என்பவர் செயலாளராக இருந்தார். அவர் வெகுநாட்கள் அந்தப் பதவியில் இருந்து பாடுபட்டு சட்டத்திருத்தங்களின் நுணுக்கங்களை அறிந்தவர் என்று பெயர் வாங்கியவர், ஏனென்றால் ராஜாஜி காலத்தில் இருந்தவர். அவருக்கு அடுத்தாற்போல் நடுவிலே இருந்து பணியாற்றியவர் அழகர்சாமி. நம்மோடு பழக்கம் உள்ளவர்தான். நல்லமுறையில்தான் செயல்பட்டார்கள். அவர்களை ஒருவரும் குறை சொல்லவில்லை. இவரோடு மேலவையிலேயும் பழகியிருக்கிறேன். இந்த அவையிலேயும் பழகியிருக்கிறேன். நல்ல பொறுப்பை வகித்தவர். சட்டசபைத் தலைவரும் ஒன்றுதான். அவைத் தலைவரும் ஒன்றுதான், சீஃப் மினிஸ்டர் கலைஞர் அவர்களுடைய பொறுப்பிலேயும் ஒருங்கிணைந்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களோடும் இருந்து எல்லாவற்றிலும் பொறுப்பை ஒருங்கிணைத்து வகிக்க வேண்டிய ஒரே பொறுப்பு. எந்த விதமான வித்தியாசமும் இல்லாமல் அவர் அந்தப் பொறுப்பை நல்லபடியாக வகித்து வந்திருக்கிறார். அவருடைய அந்த உழைப்பானது நமக்கு மட்டுமல்ல, சட்டமன்றத்திற்கு வருங்காலத்திலே பயன்படக்கூடிய வகையில் அமையவேண்டும். அவர் பெரியார் மாவட்டத்தில் பிறந்திருக்கிறார். அதுவும் நமக்கு உகந்ததாக

இருக்கின்றது. நம்முடைய கல்லூரியில் வாசித்திருக்கிறார். நேஷனல் கல்லூரியில். இப்போதுதான் நான் அந்த காலேஜுக்கேத் தலைவராக இருக்கிறேன். வெகுநாட்களாக இருந்திருக்கிறேன். நம்முடைய கல்லூரியில் பயின்ற மாணவர் இந்த அளவில் பெயர் வாங்குகிறார் என்றால் எனக்கு ஒரு சந்தோஷம் இல்லையா? அப்படிப்பட்ட திரு. இராமசாமியின் சேவையினை எல்லோரும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். நோயற்ற வாழ்வோடு அவர் 100 வயது இருக்க வேண்டுமென்று பிரார்த்தனை பண்ணலாம். இருந்தாலும் நல்லபடியாக வாழ வேண்டும். எல்லோருக்கும் பயன்படக்கூடிய அளவில் 'கன்சல்டன்ட்' மாதிரி அவருடைய உழைப்பை நாம் வெளியிலே இருந்தாலும், அவருடைய ஆலோசனைகளை வாங்கி, எல்லா எம்.எல்.ஏ.க்களும் நல்லபடி பயன்படுத்தும் அளவில் செயல்படுவதற்கு எல்லாம் வல்ல இறைவன் அரங்கநாதன் அவருக்கு தீர்க்காயுசையும் திடகாத்திர சரீரத்தையும் நோயற்ற வாழ்வையும் கொடுக்கும்படியாக வாழ்த்தி விடைபெறுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்-தலைமை)

12-05 மணி

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, 35 ஆண்டுகளாக சட்டமன்றப் பணிகள் சிறந்திடவும் சட்டப்படி இந்த அவையினுடைய நடவடிக்கைகள் நடந்திடவும் பணி செய்து இந்த மாத இறுதியில் ஓய்வு பெற இருக்கின்ற நம்முடைய செயலாளர் திரு. சி. கே. இராமசாமி அவர்களைப் பாரட்டி அவர்களுடைய நீண்டகால சேவைகளுக்கு அங்கீகாரம் அளித்திடும் வகையில் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இருப்பது மிகவும் பாராட்டுக்குரியதும், ஏற்புடையதும் ஆகும் என்ற வகையில் அவை முன்னவர் அவர்களின் இந்தத் தீர்மானத்தை நானும் வழிமொழிந்து இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாக என்னுடைய பாராட்டுதல்களை, நம்முடைய மதிப்பையும் மரியாதையையும் பாராட்டுதலையும் பெற்றிருக்கக்கூடிய திரு. இராமசாமி அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு முந்தி நான் சட்டமன்றத்திற்கு வந்தபோது திரு. இராமசாமி அவர்கள் சார்புச் செயலாளராக இங்கே பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். பிறகு துணைச் செயலாளராக அவர் உயர்வு பெற்றார். அன்றைக்கு முதன்முதலாக நாங்கள் சட்டமன்றத்தில் காலடி எடுத்து வைத்தபோது எங்களைப் போன்றவர்களை எல்லாம் நல்ல உற்சாகமூட்டக்கூடியவர்களாக, ஒரு வழிகாட்டக்கூடிய அதிகாரியாகத் திகழ்ந்தார்கள் என்றால் அது மிகையாகாது.





நாங்கள் எல்லாம் சட்டமன்றக் குழுக்கூட்டங்களில் பங்கெடுத்துக்கொள்ளச் செல்லும்போது அது சென்னையாக இருந்தாலும், வெளியூராக இருந்தாலும் திரு. இராமசாமி அவர்கள் அந்தக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டு குழுவினுடைய நடவடிக்கைகளைச் செம்மைப்படுத்துவதற்கும், சமன் நிலையிலே அந்தக் குழுக்களின் நடவடிக்கைகள் நடைபெறுவதற்கும், மிகவும் உதவிகரமாக இருந்திருக்கிறார்கள். 1955-லே இருந்து இங்கே அவர்கள் பணியாற்றி இருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய காலத்திலிருந்து இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்றம் பெற்றிருக்கின்ற இந்தக் காலம் வரையில் பல முதலமைச்சர்களையும் பல அமைச்சர்களையும், பல உறுப்பினர்களையும் அவர்கள் நேரடியாகக் கண்டு இருக்கிறார்கள். அவர்கள் எதிர்க்கட்சி, ஆளும் கட்சி ஆகிய இரண்டுக்கும் இடையே சம நோக்குடையவர்களாக சமதூரத்தைப் பேணக்கூடியவர்களாக, அதே நேரத்தில் சம நிலையில் அனைவரையும் அணுகக்கூடியவர்களாக பணியாற்றி வந்திருக்கிறார்கள் என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும்.

அவர்களிடத்திலே இருக்கிற ஒரு உயர்ந்த பண்பாடு தெளிவு, ஆனால் அதேநேரத்தில் பணிவு என்ற அடிப்படையில் எத்தகைய ஒரு உணர்ச்சி மேலோங்கக்கூடிய சூழ்நிலை அவையில் ஏற்பட்டாலும் அல்லது உறுப்பினர்கள் கொஞ்சம் வேகம் அடைந்து அவரிடத்திலே பேசினாலும் அவர்கள் எப்போதுமே நிதானம் இழக்காமல் நிதானத்துடனேயே பேசுகிற விவேகத்தை வைத்திருந்தார்கள். அப்படிப்பட்ட ஒரு அணுகுமுறையை வைத்துக்கொள்கிற ஒரு சிறப்புக்குரிய அதிகாரி என்பதை நான் நினைவுகூரவேண்டும். அப்படிப்பட்ட சிறப்புக்குரிய அவர் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் இருந்து, ஒரு பிற்பட்ட இடத்தில் இருந்து வந்து, உயர் கல்வியைக் கற்று அந்தக் கல்வியின் மூலம் வக்கீல் தொழிலைச் செய்து அதிகமான பணத்தை ஈட்டவேண்டும் என்று அதற்குப் பயன்படுத்தாமல்—அதாவது சட்டங்களின் நுணுக்கங்களை எடுத்துச் சொல்கிற அந்தத் தொழிலை விட்டுவிட்டு, சட்டங்களை உருவாக்குகிற ஒரு இடத்திற்கே வந்து வரலாற்றுச் சிறப்பு மிக்க பல சட்டங்களை உருவாக்கக்கூடிய ஒரு காலகட்டத்தில் அவர்கள் இந்த அவையில் பணியாற்றி இருக்கிறார்கள் என்பது அவர்களுக்கு மனநிறைவு தரும் என்பதில் எனக்கு ஐயமில்லை. எனவே அவர்கள் இன்றைக்கு விடைபெற்றுச் செல்லக்கூடிய இந்த நேரத்தில் அவர்களுடைய பயிற்சியை, பக்குவத்தை அனுபவத்தை நல்ல திரட்சியை நாடு தொடர்ந்து பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் அரசு சிந்திக்க வேண்டும் என்று இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் எடுத்துச்சொன்ன கருத்துக்களை நானும் நினைவுகூர்கிறேன்.

நம்முடைய நிர்வாக முறை எப்படி இருக்கிறது என்று சொன்னால் எவ்வளவுக்கெவ்வளவு அனுபவம் அதிகமாகு ஆகிறதோ, எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான தெளிவு ஏற்படுகிறதோ, அதாவது பழுத்த பழம் என்று சொல்லக்கூடியமுதிர்ச்சி, மேல்நிலை எப்போது அடைகிறதோ அப்போதுதான் அவர்கள் எல்லாம் வேலையில் இருந்து விலகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அது உலக நியதி. பெரியவர்கள் எல்லாம் இளைஞர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும் என்ற வகையில் இத்தகைய அமைப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் ஓய்வு பெறக்கூடியவர்கள்தான் மிகுந்த பக்குவம் பெற்றிருப்பவர்களாகவும் பொறுப்பை உணர்த்திருப்பவர்களாகவும், கடமையைச் செய்ய வேண்டுமென்ற ஒரு நல்ல தெளிவு உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

12-10 மணி

எனவே திரு. இராமசாமி அவர்கள் அவருடைய அனுபவங்களை எல்லாம் நூல் வடிவமாக அமைத்துத் தந்து வருங்காலத்தில் அது பயன்படக்கூடிய அளவிற்கு அவர் எழுதத் தொடங்க வேண்டுமென்ற கருத்தை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்த அளவிற்கு சட்டமன்ற நடவடிக்கைகளைத் தொகுத்து, துணுக்குகளாக இந்தச் சட்டமன்றத்தில் நடந்த சுவாரஸ்யமான நிகழ்ச்சிகளை அவர்கள் நூல்களாக ஏற்கனவே வடித்துத் தந்திருக்கிறார்கள். இப்போதும் அதை சிறுசிறு நூல்களாக பல நூல்களை அவரே வெளியிட்டு இந்த அலுவலகத்திலே இன்றைக்கும் இருக்கிறது. மற்றவர்களுக்கும் கிடைக்கக்கூடிய அளவிற்கு அது இன்றைக்கு பயன்பட்டு வருகிறது என்பதில் எனக்கு மன நிறைவு இருக்கிறது. இருந்தாலும், அவர்கள் தொகுப்புகள் இனிமேல் வருங்காலத்தில் பயன்படக்கூடிய அளவிற்கு அதுவும் புதியதாக பொறுப்பேற்றுக் கொள்ளக்கூடிய உறுப்பினர்கள் சட்டமன்ற நடவடிக்கைகளில் எப்படி கலந்து கொள்ளவேண்டுமென்ற விவரங்கள், இந்தச் சட்டமன்றத்திலே நாம் கையாள்கிற பல்வேறு நடைமுறைகள்—அந்த நடைமுறைகளை எல்லாம் நாம் எப்படி மிகத் தெளிவாகவும், அதே நேரத்தில் செம்மையாகவும் கடைப்பிடிக்க வேண்டுமென்ற விவரங்களை எல்லாம் சட்டமன்ற விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு, இந்தச் சட்டமன்றத்திலே நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் அவர்கள் அடிப்படையாகக்கொண்டு அவர்கள் எழுத வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதோடு, மிகவும் விவேகமாக, தெளிவாக நல்லவகையில் எல்லோருக்கும் பொதுவான முறையில் பணியாற்றி ஓய்வு பெறக் கூடிய திருமிகு. இராமசாமி அவர்களை, எல்லோரும் பாராட்டிப் பேசியதைப் போல் நானும் பாராட்டுகிறேன், அவர் நீண்டகாலம் வாழ்ந்து சமுதாயத்திற்கு அதுவும் குறிப்பாகச் சட்டத்துறையில் பணியாற்றக் கூடியவர்கள், அதுவும் சட்டங்களை உருவாக்கக்கூடியவர்களுக்கு ஒரு நல்ல ஒளி விளக்காக அவர் திகழவேண்டும்.



அவர்களுக்கு இறைவன் எல்லாவிதமான நற்பாக்கியங்களையும் வழங்க வேண்டுமென்று தீட்சதர் அவர்கள் வேண்டிக் கொண்டதை நான் வழிமொழிந்து, என்னுடைய பாராட்டுதலை திரு. இராமசாமி அவர்களுக்குத் தெரிவித்து, அமைகின்றேன்.

திரு சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற பாராட்டுத்தீர்மானத்தை வழி மொழிந்து ஒரு சில கருத்துக்களை சுருக்கமாகச் சொல்ல முன்வருகின்றேன்.

நம்முடைய மதிப்புமிகு சகோதரர் இராமசாமி அவர்கள் ஒரு கிராமத்திலே பிறந்தவர். அது மட்டுமல்ல, ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். நானும் 1967 ஆம் ஆண்டு முதல் இந்தச் சட்டமன்றத்திற்கு வருகின்ற காலத்தில் அவர் அப்போது இங்கே அசிஸ்டெண்ட் ஆக இருந்து 1968 வது ஆண்டு இங்கே ஒரு சார்புச் செயலாளராகவும், அதற்குப்பின்னால் 1972 ஆம் ஆண்டு முதல் துணைச் செயலாளராகவும் பணியாற்றி வந்திருக்கிறார்கள். ஆனால் என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் செயலாளரை அணுகுவதைவிடச் சார்புச் செயலாளராக இருந்த இராமசாமி அவர்களைத்தான் அணுகுவது வழக்கம். காரணம் என்னவென்று சொன்னால், அவரிடத்திலே பழகுவதில் எங்களுக்கு எல்லாம் ஒரு அலாதியான பிரியம். ஒரு அன்னியோன்னியம். விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் என்பதனால் மட்டுமல்ல, அவரிடத்திலே கோபம் என்பதை நாம் பார்க்க முடியாது.

''இனிய உளவாக இன்னாத கூறல்,
கனியிருப்பக் காய்கவர்ந்தற்று''.

என்று சொல்கிற மாதிரி எப்போதும் அவர் கடுமையாகச் சொல்லியதே கிடையாது. அது மட்டுமல்ல, சொல்ல வேண்டியதை மட்டும் சொல்வாரே தவிர, சொல்லக்கூடாத வார்த்தைகளைப் பேசியதே கிடையாது. அப்படிப்பட்ட ஒரு நல்ல பண்புள்ளவர் இராமசாமி அவர்கள். நாம் இந்தத் தீர்மானத்தின் நிகழச்சி நிரலைப் பார்க்கும்போதுதான் அவர் இப்போது ரிடையர் ஆகிறது தெரிந்தது. அவர் இன்னும் 10 வருஷங்கள் கழித்து ரிடையர் ஆவார் என்று நினைத்தேன். அவர் தோற்றத்தைப் பார்த்தால் அவருக்கு 58 வயதாகிறது. என்பதை என்னால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

அதுமட்டுமல்ல, பல்வேறு காலங்களில் தொடர்ந்து 1967-ஆம் ஆண்டு முதல் சட்டமன்றத்தில் இருக்கின்ற காலத்திலிருந்து, இடையிலே சட்டமன்றம் இல்லாத காலத்திலேகூட அடிக்கடி அவருடன் தொடர்புகொண்டு பல்வேறு விஷயங்களை விவாதித்திருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்த குழுக்கள் எல்லாம் வெளி மாலநிலங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. அதிலே மிகச் சாதுர்யமாக அங்கே போகக் கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம், ரூம் ஏற்பாடுகள் எல்லாவற்றையும் மிகச் சிறப்பாக எல்லோருடைய முகமும் கோணாமல் அறிந்து ஒரு பண்போடு எல்லோருக்கும் எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொடுத்துவிட்டுத்தான். அவர் அவருடைய ரூமிற்குப் போகக் கூடிய நிலைமை ஏற்படும். அப்படிப்பட்ட நல்லமுறையில் பணியாற்றக் கூடிய செயலாளர் அவர்கள. ஆகவே எல்லா விதமான காரியங்களுக்கும் அவரிடம் ஆலோசனை கேட்கக் கூடிய நேரத்தில், நல்ல சிறப்பான ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய பல எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம் சொன்னார்கள். இன்னும் எஞ்சியிருக்கக் கூடிய 2, 3 ஆண்டுகளுக்கு அவரிடம் பழகக் கூடிய ஒரு நிலைமை இல்லாமல், அவர் ரிடையர் ஆவதை நினைக்கும்போது எனக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும், கூட வயது 58 ஆனவுடன் ரிடையர் ஆகிறார். இருந்தாலும் கூட, மேலும் மேலும் நல்ல ஒரு சிறப்பான பொறுப்புகள் பின்னாலும் கிடைத்து சிறப்பான வாழ்க்கை அவருக்கு அமைய வேண்டுமென்றும், எல்லா நலன்களும் அவருக்குக் கிடைக்க வேண்டுமென்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பாராட்டை நான் தெரிவித்து அமர்கிறேன்.

12-15 மணி

திரு. **ஜி. ஜி.** குருமூர்த்தி ; மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையின்முன் இருக்கக் கூடிய பாராட்டுத் தீர்மானத்தை வழி மொழிந்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இங்கே ஓய்வு பெறக் கூடிய திரு. இராமசாமி அவர்கள் எங்கள் தொகுதியைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்ட பாராட்டுதல்களை எல்லாம் பார்த்து நான பெருமைப்படுகிறேன். அவர்கள் ஒரு விவசாயக் குடும்பத்திலே இருந்து வந்தவர்கள். 1955-லே எங்கள் பகுதியிலே உள்ள விவசாயக் குடும்பங்களிலே இருந்து அதிகமாகப் படித்து, சென்னையிலே வந்து பதவி ஏற்பது என்பது குறைவாக இருந்தது. நான் 1957-ல் சட்டமன்ற உறுப்பினராக வந்தபோது, சென்னைக்குப் புதிது. அதிகமாக சென்னைக்கு வந்தது கூடகிடையாது. என்னைப் போன்ற எங்கள் மாவட்டத்திலிருந்து வந்த அங்கத்தினர்களுக்கு எல்லாம் இந்த சட்டசபை நிகழ்ச்சி பற்றியும், மற்ற விவரங்களையும எடுத்துச் சொல்லி, அவர்கள எங்களுக்குப் பெருந்துணையாக இருந்து வந்தார்கள. அதிலே எனக்குப் பெருமை உண்டு. அவர்கள் ஒரு வழி காட்டியாக இருந்தார்கள். மற்ற தலைவர்கள் எல்லாம் சொல்லிவிட்டார்கள. நான் அதிகமாக நேரத்தை வீணாக்கவில்லை. கடமை உணர்வோடு, தனக்குத் கொடுத்திருக்கும் பணியை, நேர்மையாகச் செய்து, உயர்ந்த பதவியை அடைந்திருக்கிறார்கள் என்பதற்கு அவர்கள் ஒரு எடுத்துக் காட்டு.





அரசாங்க உத்யோகஸ்தர்களுக்கு மட்டுமல்ல. நம்மைப் போன்ற அரசியல்வாதிகளுக்கு இது ஒரு எடுத்துக் காட்டு. இப்போது நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது, சுலபமாக வந்துவிட வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. அதற்கு மாறாக தன்னுடைய கடமை உணர்வோடு பணியாற்றி, உயர்ந்த பதவிக்கு வந்ததற்கு பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் சொன்ன மாதிரி, அவர்கள் பல சூழ்நிலைகளிலும் தன்னுடைய நிலைமையிலே இருந்து, தன்னுடைய கடமையிலே இருந்து அவர் தவறவில்லை என்பது நமக்குத் தெரிகிறது. அந்த முறையிலே அவருக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மாதிரி, நீண்ட நாள் உத்தியோகத்தில் இருந்தாலும், அவர் நடுநிலைமை தவறாதவர் என்பதில் ஐயப்பாடு இல்லை. எனக்கு ஒரு சந்தேகம் மட்டும்தான் இருக்கிறது. பல தரப்பட்ட சபாநாயகர்கள் அல்லது பல கட்சித் தலைவர்களோடு இருந்து, வெற்றிகரமாகத் தன்னுடைய பணியை முடித்தவர்கள், ஓய்வு பெற்றதற்குப் பின் விவசாயத்திற்குத்தான் போவார்கள் என்று கருதுகிறேன். அதில் அவர் வெற்றி அடைவாரா என்ற சந்தேகம்தான் எனக்கு இருக்கிறது. இருப்பினும் அவருக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்து, நீண்ட காலம் நோயற்ற வாழ்வோடு இருக்க வேண்டுமென்று வாழ்த்தி, என் வார்த்தைகளை முடிக்கிறேன்.

திரு. பி. என். **வல்லரசு** ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த 35 வருடங்களாக சட்டசபைத் துறையில் பணியாற்றி, ஓய்வு பெறுகின்ற நமது பெருமதிப்பிற்குரிய சட்டசபைச் செயலாளர் அவர்கள் அடக்கமானவர்கள், அன்பானவர்கள், எளிமையானவர்கள், சட்டசபை உறுப்பினர்கள் அணுக எளிதானவர்கள். என்னைப் போன்ற புதிய சட்டசபை உறுப்பினர்கள் சட்டசபை நடவடிக்கைகளில் எப்படிப் பங்கு கொளள வேண்டுமென்ற செயல்களை அன்போடு, இனிமையாக எடுத்துச் சொல்லும் செயலாளர் அவர்கள் இன்றையதினம் ஓய்வு பெறுவது கண்டு, மிகவும் வேதனையாக இருக்கிறது. இன்றைய தினம் சட்டசபையில் புதிய சட்டசபை உறுப்பினர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று அறிய நாங்கள் அவரை அணுகுகிறபோது, அவர்கள் பல்வேறு யோசனைகளை, அறிவுரைகளை அளித்திருக்கிறார்கள். சட்டசபை உறுப்பினர்களுடைய சம்பளம் உயர்த்தப் பட வேண்டுமென்ற, நிலையில், நான் அவரிடம் கேட்டபோது, பல்வேறு மாநிலச் சட்டமன்றங்களுடைய சம்பளப் பட்டியலை உடனுக்குடன் கொடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் நலம் பெற வேண்டுமென்ற நல்ல எண்ணம் படைக்கு செயலாளரை நான் மறக்க முடியாது. அந்த அளவு ஒரு **ஆற்றல் மிக்க செயலாளர் அவர்கள் இன்றையதினம் ஓய்வு பெறு**

கிறார்கள். சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில் சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களோடு சட்டசபைச் செயலாளர் இணைந்து செயல்படுவது, இரண்டு தண்டவாளங்கள் போலிருக்கிறது என்றால் அது மிகையாகாது. அந்த அளவுக்கு சட்டசபைத் தலைவரோடு இணைந்து செயல்பட்ட ஒரு ஆற்றல் மிக்க செயலாளராகிய நமது மதிப்புமிக்க திரு.இராமசாமி அவர்கள் ஓய்வு பெறுகிறார்கள்.

அவர்கள் அனுபவம் இந்த நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் தேவை என்பதைவிட, என்னைப் போன்ற புதிய சட்டசபை உறுப்பினர்களுக்கு அது தேவைப்படுவதால், அவருடைய சட்டமன்ற அனுபவங்களை எல்லாம் புத்தகமாக வெளியிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு, அவர் நீடூழிக் காலம் வாழ வேண்டுமென்று, நலம் பெற்று வாழ வேண்டுமென்று வாழ்த்தி, விடைபெறுகிறேன்.

12-20 மணி

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் பேராசிரியர் அவர்களால் முன் மொழியப்பெற்று, எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் கட்சிகளின் தலைவர்களால் வழிமொழியப்பெற்றுள்ள பாராட்டு, வாழ்த்துத் தீர்மானத்தின் மீது சில கருத்துகளை நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். நம்முடைய அன்புக்கும், பாசத்துக்கும் உரிய செயலாளர் திரு. இராமசாமி அவர்கள் ஓய்வு பெற்று நம்மிடமிருந்து பிரிந்து செல்லுகிறார் என்பது போன்ற உணர்வுகளை இங்கே சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். அவர்களுடைய அடக்கம், பண்பு, எளிமை, எல்லோரிடமும் பழகுகின்ற இனிய இயல்பு இவைகளை எல்லாம் இன்று நேற்று அல்ல, பல ஆண்டுக் காலமாக நான் இந்த அவையில் இருந்தவாறே உணர்ந்து இருக்கின்றேன். அவருடைய 35 ஆண்டுக் காலப் பணியில் ஒரு இரண்டு ஆண்டுக்காலம் தவிர 33 ஆண்டுக்காலம் அவரை அருகில் இருந்து பார்க்கின்ற அந்த வாய்ப்பை இந்த அவையில் இருந்து நான் பெற்றவன். அவருடைய நேர்மையும், நாணயமும் என்றைக்குமே கேள்விக்குறியாக ஆனவைகள் அல்ல என்பதை எல்லாத் தலைவர்களுமே இங்கு திட்டவட்டமாகத் தெளிவாக எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். அதிலேயும் குறிப்பாக இந்த அவையிலே சரித்திரம் படைத்த சபாநாயகராக இருந்த நமது திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தன்பால் செயலாளராக திரு. இராமசாமி அவர்கள் பணியாற்றிய நேரத்தில் எப்படியெல்லாம் பொறுமையைத் தனக்குப் போதித்தார் என்று இங்கே எடுத்துக் காட்டினார். இப்போதுதான் நமக்கே கூட அந்த உண்மை எல்லாம் தெரிந்தது. ஆத்திரவயப்பட்ட திரு. பாண்டியன் அவர்கள் சில நேரங்களிலே அமைதி கண்டதற்குக் காரணமே





நம்முடைய செயலாளர் இராமசாமி அவர்கள் தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை உணர முடிகிறது. எதிர்க் கட்சித் தலைவர் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல் அவர் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்கின்ற பாகுபாடு கருதாமல், ஆளும் கட்சி உறுப்பினர்கள், ஆளும் கட்சி அல்லாத கட்சிகளின் உறுப்பினர்கள் என்கின்ற வேற்றுமை பாராட்டாமல், தன்னுடைய பணியினை ஏற்று நடத்தி இருக்கின்றார். இங்கே அமர்ந்து இருக்கின்ற அ.தி.மு.க. நண்பர்களுக்கும், தி.மு.க. நண்பர்களுக்கும், காங்கிரஸ் கட்சி நண்பர்களுக்கும் இந்த அவையிலே ஆளும் கட்சியாக இருந்தும் பழக்கம் உண்டு; எதிர்க்கட்சியாக இருந்தும் பழக்கம் உண்டு. வேறு கட்சிகளிலே உள்ளவர்கள் கூட, இன்றைக்கு ஜனதா தளத்திலே உள்ளவர்கள் கூட அன்றைக்கு ஆளும் கட்சியாக இருந்து இருக்கிறார்கள். எனவே ஜனநாயகத்திலே ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்பவைகள் மாறி மாறி வந்தால்தான் உண்மையான ஜனநாயகத்தினுடைய இலக்கணமே போற்றப்படுவதாகப் பொருள் என்ற அந்த நிலையை உணர்ந்து, அதற்கேற்ப அவர்கள் எந்தவிதமான மாறுபாடும், வேறுபாடும் காட்டாமல் இரு தரப்பினரையும் சம நிலையிலே நடத்தி வந்து இருக்கின்றார்கள்.

நண்பர் திரு. பி.எச். பாண்டியன் ஒன்றை எடுத்துக் காட்டினார், மாநிலங்களவைத் தேர்தலில் அவர் எப்படி நடந்து கொண்டார் என்று. நாங்கள் எல்லாம் வெளியிலே இருந்து அந்தச் செய்திகளைக் கேள்விப்பட்டபோது, அவருடைய தராசு போன்ற அந்த நியாயத்தையும், அவர் அன்றைக்குக் கடைப்பிடித்த நேர்மையையும், எது வரினும், எவ்வளவு சுடு கணை வரினும், அதைப்பற்றிக் கவலைப்படாமல் நியாயத்தை நிலை நாட்டிய அந்த நிகழ்ச்சியும் எங்களுடைய நெஞ்சங்களில் எல்லாம் என்றென்றைக்கும் பசுமையாக இருக்கக்கூடியவைகளாகும்.

12-25 மணி

இந்த மாமன்றத்திலே அவர்கள் பல்வேறு பேரவைத் தலைவர்களோடு பழகியிருக்கின்றார்கள்; பல்வேறு அமைச்சர்களோடு பழகியிருக்கின்றார்கள்; பல்வேறு கட்சி சார்புடைய நண்பர்களோடு அவர்கள் பழகியிருக்கின்றார்கள். யாரும் ஒரு குறையாவது அவரைப் பற்றிச் சொல்லவியலாத அளவிற்கு—இது சம்பிரதாயத்திற்காக, அல்ல —பாராட்டுகின்ற நேரத்தில் குறைகளைச் சொல்லக் கூடாது என்பதற்காக அல்ல; உண்மையிலேயே மிகத் தெளிவாக அனைவரும் அவருடைய அருமை பெருமைகளை இங்கே எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள்.

ஒரு விவசாயக் குடும்பத்திலே பிறந்து இன்றைக்கு நாம் அனைவரும் பாராட்டுகின்ற அளவிற்கு உயர்ந்து நிற்கின்ற அவர், எதிர்க்கட்சித் தலைவர் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல, மற்றத் தலைவர்களெல்லாம் தொடர்ந்து சொன்னதைப் போல,

தோற்றத்திலே அவர் வயதானவர் என்று யாராலும் கூற இயலாத அளவிற்கு, அத்தகைய பொலிவு கொண்டவர். இருந்தாலும் ஒரு மனிதனுடைய அவயவங்கள் வயதின் காரணமாகத் தளர்ந்து போகிற நேரத்தில்தான் அனுபவங்கள் விறுவிறுப்பு அடைகின்றன, பழுத்துக் குலுங்குகின்றன. அந்த அனுபவங்கள் வயதாக வயதாகக் கிடைத்து, ஆனால் பெற்ற அனுபவங்களை மற்றவர்களுக்குத் தருவதற்கேற்ப அதற்குப் பிறகு அவர்களுடைய வயது ஆயுட்காலம் குறைந்துவிடுகின்ற காரணத்தால் அவைகளை நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதையும் நம்மால் உணர முடிகின்றது.

இருந்தாலும் கூட, அனுபவங்கள் மனிதன் போய்விட்ட பிறகு அவனை விட்டுச் சென்று விடுகிற நிழலைப் போல அகன்று விடாமல் ஒரு மனிதனுடைய வாழ்க்கைக்குப் பிறகும்கூட அந்த அனுபவங்கள் நிலைத்து நிற்க அந்த மனிதன் தனக்குப் பின்னால் எச்சத்தை திருவள்ளுவர் கூறினாரே ''எச்சத்தால் காணப்படும்'' என்று, அது பிள்ளைகளால் அல்ல; அவர்கள் விட்டுப் போகின்ற செயல்பாடுகள், கொள்கைகள், குணநலன்கள், பண்பாடுகள், இவைகளின் மூலம் காணலாம் என்பதற்கேற்ப அனைவரும் எடுத்துக் காட்டியதைப் போல இந்த அனுபவங்களையெல்லாம் அவர் நல்ல நூல்களாக வெளியிட வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்காலத்திலே பயன்படக்கூடிய வகையிலே அவைகளெல்லாம் அமைந்திட வேண்டும்.

சில நண்பர்கள் இங்கே பேசும்போது, அவர்களை இந்த அரசு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். நல்லவைகள் எங்கு இருக்கின்றன என்று தேடிச் செல்லுகின்ற இந்த அரசு, அவைகள் அருகே இருந்தால் நிச்சயமாக விட்டு விடாது என்பதை மாத்திரம் எடுத்துக் கூறி, அவரைப் பாராட்டி, வாழ்த்தி, இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு பெருமக்களே, இன்று நம்முடைய பேரவை முன்னவரவர்கள் ஒரு தீர்மானத்தை முன் மொழிந்து, அனைத்துக் கட்சியினரும் பாராட்டி, நம்முடைய முதல்வர் அவர்களால மகுடம் சூட்டப்பட்ட நம்முடைய மதிப்புமிகு செயலாளர் இராமசாமி அவர்களைப்பற்றிப் பேரவைத் தலைவர் என்ற முறையில் என்னுடைய கருத்துக்களையும் இணைப்பது பொருத்தமாக இருக்கும். எனினும், நேரத்தின் அருமை கருதி நான் இரண்டொரு சொற்களை மட்டும் அவருக்காக நான் பாராட்டாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாகவே, சட்ட நுட்பம் படைத்தவர்கள் அல்லது ஏதேனும் ஒரு நூலைப்பற்றிய முழு அறிவு படைத்தவர்கள், அவற்றைத் தக்க நேரத்தில் கண்டறிந்து எடுத்துச் சொல்வதின் வாயிலாகத் தான் அவர்கள் மலர்ந்த மணம் வீசுகின்ற மலராகக்காட்சி



யளிப்பார்கள்; இல்லாவிட்டால் வெறும் சட்ட நுட்பம் மட்டும் தனக்குத் தெரியும், ஆனால் தக்க நேரத்தில் என்னால் உதவ முடியவில்லையே என்ற ஆதங்கம் அவருக்கு ஏற்பட்டாலும் சரி; அல்லது பேரவைத் தலைவருக்குத் தேவைப்படுகிறபோது அந்தக் கருத்துக்கள் எனக்கு வந்து சேராவிட்டாலும் சரி ''இணரூழ்த்தும் நாறா மலராகத்'' தான் அவர்கள் காட்சியளிப்பார்கள். ஆனால் நம்முடைய சி. கு. இராமசாமி அவர்கள் சட்டப்பேரவைத் தலைவராக நான் நேரடியாகப் பொறுப்பேற்ற காலத்தில்—காரணம், சட்டமன்ற உறுப்பினர் என்றுகூட உட்காராமல் நேரடியாக சட்டப் பேரவைத் தலைவராக வந்த காலத்தில், இருக்கின்ற 292 விதிகளைப் படித்து அவற்றைப் பயன்டுத்துகிற காலகட்டத்தில் எல்லாம் ''Kaul and Shakdhar'' எழுதிய நூலில் இருந்தும் ''May'' எழுதிய நூலில் இருந்தும் எடுத்துக்காட்டுகளை உடனடியாக எனக்கு எடுத்துக்காட்டி என்னுடைய தீர்ப்போடு அதை இணைத்துக் கொள்கிற வாய்ப்புகளை, அரிய சூழ்நிலையில் உருவாக்கிய ஆற்றல் படைத்த மாமனிதர் திரு. இராமசாமி என்று நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்,

அதே நேரத்தில் தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் இங்கு நிறைவேற்றப்பட்டு, அதற்கு 19 அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு, இன்று நூற்றுக்கு நூறு இல்லாவிட்டாலும், பெரும்பகுதிக்குத் தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்கிறது என்றாலும், சட்டமன்றத் துறை, அது விதி விலக்குப்பெற்ற துறைபோலக் காட்சியளித்தது. நான் வந்த பிறகு, எனக்கு இருந்த தமிழ்ப்பற்று காரணமாக, நான் சார்ந்திருக்கிற துறையில் முழுமையாக இதை ஆட்சிமொழி ஆக்க வேண்டும் என்று நான் செயல்படுத்த முனைந்தபோது, அதை முழுக்கச் செயல்படுத்திக் காட்டிய பெருமை திரு, இராமசாமி அவர்களுக்கு உண்டு.

அதன்வழி பார்த்தால் இன்று என்னுடைய சட்டமன்றத் துறையில் 382 பேர் பணியாற்றுகிறார்கள். அத்தனைபேருக்கும் வருகைப் பதிவேடு தமிழில் பேணப்படுகிறது; அவர்களுடைய மடல்கள் அனைத்தும் தமிழில் தரப்படுகின்றன; கையொப்பங்கள் அனைத்தும் தமிழில் இடப்படுகின்றன; அத்தனை அறிக்கைகளுமே தமிழிலேயே வருகின்றன என்ற பெருமையை, எண்ணத்தைத் தமிழ்க்குடிமகன் தந்தாலும் அதைச் செயல்படுத்திய பெருமை திரு. சி.கு. இராமசாமி அவர்களுக்கும் என்னுடைய அலுவலர்களுக்கும் உண்டு.

12-30 மணி

முதல்முறையாக நான் வெளிநாடுகளுக்குச் செல்கிற அந்த வாய்ப்பிலே, அவரும் சேர்ந்து வருகிற வாய்ப்புக் கிடைத்தது. எனவே, வெளிநாடுகளுக்குச் செல்கிறபோதெல்லாம் அங்கே செயலாளர் என்ற முறையில் வந்தாலும், நாங்கள் சகோதரர்கள் என்ற முறையிலே, எனக்குப் பல்வேறு தமிழ் மாமன்றங்களில் கிடைத்த வரவேற்புகளில் எல்லாம் அவருக்கும் பங்களிக்கப்பட்

டது. அவரும் ஒரு தமிழ் நெஞ்சர், தமிழ் உணர்வு படைத்தவர் என்ற பெருமைக்குரியவராக இருந்து பல்வேறு அரங்குகளில் பேசுகிற வாய்ப்பை அவர் பெற்றபோது, உள்ளபடியே அவருடைய தமிழ் நெஞ்சைப் புலப்படுத்துவதற்கான வாய்ப்பு அங்கே உருவானது என்பதைக் கண்டு மகிழ்ந்து இருக்கிறேன்.

அடுத்து சொல்ல வேண்டுமென்று சொன்னால், சட்டப் பேரவைத் தலைவருக்கும் செயலாளருக்கும் நிறைய இரகசியங்கள் உண்டு. அவை எந்தக்காலத்திலும் வெளிப்படுத்த முடியாதவை. அப்படிப்பட்ட நிலையில் மற்றவர்கள் மறைமுகங்களை காக்கிறார்களோ, காக்கவில்லையோ, நம்முடைய சி.கு. இராமசாமி அவர்கள் அதிலே மிக அழுத்தமானவர் என்பதை நம்முடைய பி. எச். பாண்டியன் அவர்களும் ஒப்புக்கொள்வார். நானும் ஒப்புக்கொள்ள வேண்டும். ஏனென்றால், இரண்டு பேரும் ஒப்புக்கொள்வதுதான் ரொம்பவும் சிறப்பு. (சிரிப்பு). காரணம், அவருடைய காலக் கட்டத்தில் நடந்த எந்த செய்தியையும் இராமசாமி அவர்கள், என்னிடத்தில் சொன்னதில்லை— கூட, நடந்தது என்பாரே தவிர, —நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், அதற்குள்ளே என்ன நடந்தது என்று அவர் சொல்லமாட்டார். அந்தவகையில் நான் அவரைப் பாராட்டுகிறேன். அதைப்போலவே என்னுடைய காலத்தில் என்ன நடந்தது என்று அவர் அடுத்த காலத்தில் சொல்ல மாட்டார்கள் என்ற உறுதியும் அதிலே அடங்கி இருக்கிறது என்பதற்காக அதைச் சொன்னேன்.

அவருடைய தலையைப் பார்த்தால், அவருடைய தோற்றத்தைப் பார்த்தால், மிகவும் இளமையாக இருக்கிறார் என்று எல்லோரும் அவரைப் பாராட்டினார்கள். இந்தப் பாராட்டுக் கண்டிப்பாக அவருடைய வீட்டிலே உள்ளவர்களுடைய காதில் போய்ச் சேரும். அதிலே அவர்கள் பெருமைப்படுவார்கள். 100 வயதானாலும் தன்னுடைய கணவன் இளமையாகவே இருக்கிறார் என்று பாராட்டப்படுவது தான் ஒரு துணைவியாருக்கு மிகப் பெரிய பெருமையைத் தரும். எனவே, அது இராமசாமி அவர்களுக்கு மட்டும் பெருமை அல்ல, வீட்டிலே இருப்பவர்களுக்கும் ரொம்பவும் பெருமை என்றே கருதுகிறேன். அதேநேரத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, ஒரு வருடைய பட்ட அறிவு, அவருடைய ஆழ்ந்த அனுபவம், ஒரு காலக்கட்டத்தில் செயலாற்றிய தால் அவருக்குக் கிடைத்த கருத்துக் கருவூலம், ஆற்றல் கருவூலம் என்பது தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும் என்ற வகையிலும், நம்முடைய சி. கு. இராமசாமி அவர்கள், நம்முடைய பி.எச். பாண்டியன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல நிறையநூல்களை ஏற்கெனவே தந்திருக்கிறார்கள். எனவே, மீண்டும் இந்த சட்டமன்ற நூல



கத்திற்கு வந்து, அலுவலகத்திற்கு வந்து, உட்கார்ந்து, இங்கேயிருந்து இன்னும் என்னென்ன கருத்துக்களைத் தமிழ் மக்களுக்குத் தொகுத்துத் தரவேண்டுமோ அந்தப் பணிகளை அவர்கள் செய்ய வேண்டுமென்று நான் விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் இந்தச் சட்டப்பேரவைத் தலைவர் பதவி என்பது—நம்முடைய எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் நன்றாகச் சொன்னார்கள்—ஒரு பரபரப்பு மிகுந்த பதவி, ''Tension'' உள்ள பதவி. கீழே இருப்பது குளிர்ச்சியாக இருக்கிறதா, மேலே இருப்பது குளிர்ச்சியாக இருக்கிறதா என்றால், இருந்து பார்க்கிறபோதுதான் தெரியும் என்பதை அனைவரும் உணர்வார்கள். அப்படிப்பட்ட கட்டங்களில் எல்லாம் நாங்கள் வேகப்படுகிறபோதுகூட அவற்றைத் தணித்து, தக்கவாறு அதற்குத் துணை செய்து, அந்த வேகம் தணிந்தும், அதே நேரத்தில் நிலைமைகள் முற்றிலும் கனிந்தும் போகக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிய ஆற்றல் பெற்ற செயலாளர் என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவருக்கு முன்னுள்ள ஒலிவாங்கியை அவர் ஒரு காலத்திலும் பயன்படுத்தவில்லை என்பதால் வருங்காலத்தில் வருகிற செயலாளர்கள் கூட அந்த ஒலி வாங்கியை அது வீணாக இருக்கிறது என்று எடுத்துவிடலாம், ஆனாலும், அவர் பேச்சாளர் என்ற முறையில் இங்கே இல்லை, செயலாளராக இருக்கிறார். அதனால் தான் முற்றிலும் செயல் வடிவமாக இருக்கிறார் என்பதற்காகத்தான்—அந்த ஒலிவாங்கி எனக்குத் தெரிந்து கடந்த 15 மாதங்களில் இந்த அவையில் பயன்படுத்தப்படவில்லை என்பதற்கு அது ஒரு எடுத்துக்காட்டு என்றும் கருதுகிறேன்.

கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லிப் பாராட்ட வேண்டும். எந்த நிலையிலும் நிலை குலையாத ஒரு மனிதர். இந்த அவையில் அமளிகள் நடந்திருக்கின்றன, ஆரவாரங்கள் எழுந்து இருக்கின்றன. பரபரப்புக்கள் சூழ்ந்து இருக்கின்றன, எனினும், எந்தப் பரபரப்பையும் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு பேரவைத் தலைவருக்கு, பேரவை முன்னவருக்கு, முதலமைச்சருக்கு மற்ற அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு இருந்தாலும் கூட, இத்தனைக்கும் இடையிலும் நிலை குலையாமல், கட்டுக்குலையாமல், எந்தவகையான நெகிழ்ச்சிக்கும் ஆளாகாமல், எப்போதும் அப்படியே இருந்தபடி, இருந்த நிலையிலிருந்து செயலாற்றக்கூடிய சிறப்புப் படைத்த அவர் இந்த நேரத்தில் ஓய்வு பெறுவது என்பது, தனிப்பட்ட முறையில் எனக்கு ஓர் இழப்பு என்றே நான் கருதுகிறேன். நான் இந்தப் பதவியில் இருக்கிற காலம் வரைக்கும் அவரும் இருந்து, இந்தப் பணியைத் தொடர்ந்து செய்ய இயலாமை சட்டத்தின் வடிவில் அமைந்து இருந்தாலும்— ''The old order changeth, yielding place to new'' என்ற Tennyson வரியிலும்—

''பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல காலவகை யினானே''

என்ற இலக்கண வகையிலும் அமைதிகொண்டு, அவரை நெஞ்சார, மனமாரப் பாராட்டி அமைகிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் ; தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். ''அனுபவம் என்பது தலை வழுக்கையாகிவிட்ட பிறகு ஒருவன் கையில் கிடைக்கிற சீப்பு'' என்று சொல்வார்கள. அவருடைய அனுபவத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்காக இதனைச் சொல்கிறேன். எங்களுக்கெல்லாம் அவரின் அனுபவம் பிரயோஜனமாக இருக்க வேண்டும். ரொம்பவும் அனுபவம் பெற்றவர்கள் என்று எல்லாத் தலைவர்களும் சொல்லி இருக்கிறார்கள். நாடாளுமன்றத்திலே கூட-Institute of Constitutional studies ond Parliamentary studies என்ற அமைப்பு இருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில் இங்கே இருக்கிற (சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் an Institute for Constitutional Studies and Parliamentary studies என்பதை சென்னையில் அவருடைய தலைமையில் இந்த அரசு துவக்கினால் நன்றாக இருக்கும். அதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவை முன்னுள்ள கேள்வி ; ''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் செயலாளராக 1985ஆம் ஆண்டு முதல் பணியாற்றி 31—5—1990ஆம் நாள் ஓய்வுபெறவிருக்கும் திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்., அவர்கள் சட்டமன்றப் பேரவை—மேலவை ஆகிய இரு அவைகளிலும 1955 முதல் 1990ஆம் ஆண்டு வரை 35 ஆண்டுக் காலம் ஆற்றியுள்ள சிறந்த பணிகள், எந்த நேரத்திலும் தயக்கமின்றி உடனடியாக மேலான பரிந்துரை அளிக்கும் திறன், சட்டமன்ற விதிகள் பற்றியும், சட்டமன்ற-பாராளுமன்ற மரபுகள் பற்றியும் தெளிவாகவும், திட்பமாகவும், அறிந்து வைத்து அவ்வப்போது எடுத்துக்காட்டும் நுண்ணிய அறிவாற்றல், உறுப்பினர்கள் தங்கள கடமைகளைச் சட்டமன்றப் பேரவையிலும் சரி, மேலவையிலும் சரி, அவற்றின் பல்வேறு குழுக்களிலும் சரி, செவ்வனே நிறைவேற்ற அவர் நல்கிய உதவி ஆகியவற்றைப் போற்றிப் புகழ்ந்து பாராட்டுவதோடு, இப் பேரவை பெரிதும் விரும்பி நல்கும் பாராட்டுதல்களை அவருக்குத் தெரிவிக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறது''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி).



12-35 மணி

**10. மின்வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகள், துணை நிதிநிலை அறிக்கைகள் மற்றும் திருத்திய மதிப்பீடுகள் மீதான விவாதம்—தொடர்ச்சி.**

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு மின் வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்லரும் தொழில்செய்து பசியினால் வாடும் மக்கள் தொல்லைகள் தீர, துயரங்கள் நீங்க, வேளாண்மைத் தொழிலும், ஆலைத் தொழிலும் பெருகிட வேண்டும், இந்தத் தொழில்கள் பல்கிப் பெருகிட வேண்டும் என்றால், எல்லாவற்றுக்கும் அடிப்படையான மின்சாரம் தங்கு தடையின்றி தேவைக்கேற்ற அளவிலே கிடைத்திட வேண்டும். தேவையான அளவிற்கு மின்சாரத்தைப் பெருக்குவதற்காக, கடும் அனலில், குளிர் புனலில் சிறு அணுவில், கதிர் ஒளியில், காற்றசைவில், கடல் அலையில் உற்பத்தியாகி, உலகை அமைக்கும் பெரும் சக்தியாக உள்ள மின் சக்தியைப் பெருக்குவதற்காக கலைஞர் அரசு அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்த முனைந்துள்ளது. அந்த முயற்சியின் விளைவாக, 1990-91ஆம் ஆண்டுக்கு, மின்சாரத் துறைக்கு 455 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதை வரவேற்று மனதாரப் பாராட்டுகிறேன்.

வட சென்னை அனல் மின் திட்ட விரிவாக்கம், தூத்துக்குடி அனல் மின் நிலைய விரிவாக்கம், ஜப்பான் உதவியுடன் ஒருங்கிணைந்த எரிவாயு மின் உற்பத்தித் திட்டம், காவிரிப் படுகையில் உள்ள எரிவாயுவைப் பயன்படுத்தி மின் உற்பத்திச் செய்யும் திட்டம் ஆகிய பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத்தை எடுத்துச் செல்லவும், வினியோகம் செய்யவும், நடப்பாண்டில், 155 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து 40 ஆயிரம் விவசாய விசையேற்றங்களுக்கும், 40 ஆயிரம் குடிசை வீடுகளுக்கும் இலவச மின்சார இணைப்பு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதற்கு நமது அரசையும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னால், கடந்த 5 ஆண்டுகளாக இருந்துவந்த மின்சார வெட்டு இப்போது நீக்கப்பட்டு விட்டது. இன்னும் உயர் மின் அழுத்தம் தேவை உள்ள தொழிற்சாலைகளுக்கு மட்டும் 10 சதவீதம் மின்வெட்டு இருக்கிறது. அதுவும் இந்த ஆட்சியில் தீவிர முயற்சியின் காரணமாக விரைவில் நீக்கப்பட்டுவிடும் என்று நம்புகிறேன்.

1989ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 45.5 மில்லியன் யூனிட் மின்சாரம் மட்டுமே விநியோகம் செய்ய முடிந்தது. ஆனால், இவ்வாண்டு, நாள்தோறும் சராசரியாக 60.5 மில்லியன் யூனிட் மின்சாரம் வழங்கப்படுவதைப் பாராட்டுகிறேன்.

அதேபோல் சென்ற ஆண்டில் வேளாண்மைப் பணிகளுக்கும் ஊரகத் தொழில்களுக்கும் நாள் ஒன்றுக்கு 10 மணி நேரம் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது நாள் ஒன்றுக்கு 14 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுவது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். விவசாயிகளின் நலன் கருதி அரசு மூலமாக ஆழ் துளைக் கிணறு போடுவதற்கு போர் மெசின்கள் மூலமாகக் குறைந்த செலவில் போட்டுக் கொடுக்க தாலுக்காவிற்கு 5 போர் மெசின்கள் வீதம் வழங்கிடச் செய்தால் விவசாயிகள் பலன் அடைய ஏதுவாக இருக்கும். சிறு விவசாயிகள் போர் போட்டுக் கொள்ள ஏதுவாக இருக்கும். விவசாயக் கிணறு வெட்டும்போது மெசின் அமைத்து, மண் வாரி எடுப்பதற்கு பம்ப்செட் சர்வீசிலிருந்து மின் இணைப்பு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வீடு கட்டவோ, பம்ப்செட் இணைப்புக்கோ, உரிமை வந்த பிறகு கூட, கம்பம் இல்லை, ஒயர் இல்லை, மீட்டர் இல்லை, ஆள் இல்லை என்று சொல்லி காலம் கடத்துவது பொது மக்களுக்கு மிகவும் சிரமாக உள்ளது. எனவே, அப்படிப்பட்ட சிரமம் எதுவும் இல்லாமல், மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

விவசாயிகள் அறுவடை செய்த விளைச்சலை கட்டு அடிக்க மெசின் அமைத்து, விவசாயிகள் பயன் பெற எந்த நேரத்திலும் மின்சாரத்தைப் பயன்படுத்த தடை இருக்கக் கூடாது. அப்படி இருந்தால்தான் விவசாயிகள் அறுவடை செய்த விளைச்சலைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும்.

விவசாயிகளுக்கு பம்ப்செட் மின் இணைப்பு சம்பந்தமாகப் பெயர் மாற்றம் செய்ய அந்த சர்வீஸ் யார் பெயரில் உள்ளது, அதன் உரிமையாளர் இவர்தானா என்பதை அந்த ஊரில் உள்ள வி.ஏ.ஓ., மணியக்காரர், ஊராட்சி மன்றத் தலைவர், ஊராட்சியில் உள்ள மிக முக்கியமான நபர்கள், வாக்காளர்கள் பட்டியல், குடும்பக் கார்டு ஆகியவற்றை வைத்து பெயர் மாற்றம் செய்து தந்தால், பொதுமக்களுக்கு மிகவும் ஏதுவாக இருக்கும்.

விவசாயிகள் புதிதாக மின் இணைப்பு கேட்டு மனுச் செய்தால் முன்பாக்கியிருக்கிறதா என்று எழுதி வாங்கிக்கொண்டு வர வேண்டும் என்று சொல்கிறார்கள். அலுவலகத்திற்குச் சென்று கேட்டால், 10 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்ட வேண்டியுள்ளது, பாக்கி என்று கூறுகிறார்கள். ஆனால், மின் கட்டணம் கட்டவில்லை என்றால், மின் இணைப்பை உடனடியாகத் துண்



டித்து விடுகிறார்கள். அப்படி இருக்க முன் பாக்கி எப்படி வரும்? எனவே, இதையெல்லாம் மறு பரிசீலனை செய்து, அரசு நல்ல மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

12-40 மணி

30—3—1990-க்குள் விவசாயிகள் தங்களுடைய மின் கட்டண பாக்கியை, அபராதத் தொகையைச் செலுத்தினால், அவர்களுக்கு மின்சாரம் வழங்கப்படும் என்று அரசு ஏற்கெனவே அறிவித்து இருந்தது. அதை மேலும் 6 மாத காலத்திற்கு பாக்கி தொகையை கட்டுவதற்கு அவகாசம் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதைப்போன்று நிலக்கரிக்குப் பதிலாக எரிவாயுவைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்தை விரைந்து விரிவுபடுத்த வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் நரிமணத்தில் கிடைக்கின்ற எரிவாயுவும், பிற இடங்களில் கிடைப்பதும், பம்பாய் மாநிலத்தில் வீணாவதைப் போல் வீணாகிவிடாமல் அதை முழுமையாக பயன்படுத்தி மின்சார உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி பல்வேறு வகைளில் மின் உற்பத்தியை பெருக்க முயற்சிகளில் ஈடுபடும்போது சென்னையைப் போன்ற பெரிய நகரங்களில் பல்வேறு இடங்களில் ''அன்டர் கேபிள்'' மூலமாக மின்சாரம் விநியோகம் செய்யப்பட்டாலும், சில இடங்களில் இன்னும் தொங்கு கம்பிகள் மூலமாகத்தான் விநியோகம் செய்யப்படுகிறது. எனது தொகுதியிலும் மற்றும் சைதாப்பேட்டை தாடண்டர் நகர் அரசு அலுவலர்கள் குடியிருப்பிலும் தொங்கு கம்பி மூலமாகத்தான் மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. அதைப்போன்று பல்வேறு குடியிருப்புப் பகுதிகள் இருக்கின்றன. மக்கள் நெரிசலான இடங்களில் கம்பிகள் அறுந்து விழுந்து உயிர்ச்சேதங்கள் ஏற்படுகின்றன. ஆயிரக்கணக்கான வீடுகளுக்கு...... (மணியடிக்கப்பெற்றது). எப்பொழுதோ வாய்ப்பு கிடைக்கிறது. இன்னும் இரண்டு மணித் துளிகள்தான் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டும். நிறையப் பேசலாம். அதிலே எனக்கு மகிழ்ச்சிதான். இன்றைக்கு நான் அனுமதி கொடுப்பேன். ஆனால் 16 பேர், பெயர் கொடுத்திருக்கிறார்கள். அதிலே 8 பேரைத்தான் அனுமதித்திருக்கிறேன். ஒவ்வொருவரும் 7, 8 மணித் துளிகளிலே முடித்தால் நன்றாகயிருக்கும். இதற்குப் பின்னாலே கால் மணி நேரத்திற்கு அறிவிப்பு வேறு இருக்கிறது. அதை உறுப்பினர்கள் மறந்து விடக் கூடாது.

திரு. சா. கணேசன்: சென்னைப் பெருநகர் பகுதி முழுவதிலும் அமைப்பு மற்றும் பகிர்வு அமைப்பினை மேம்படுத்த தமிழ்நாடு 10 ஆண்டிற்கான பெரும் திட்டத்தை 172 கோடி ரூபாய் செலவில் தயாரித்து திட்டக் குழுவின் ஒப்புதலையும் பெற்று ஆசிய நாடுகள் முன்னேற வங்கி நிதியுதவி கோரி திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஐந்து ஆண்டுக் காலத்தில் நிறைவேறுமென்று அமைச்சர் அறிவித்திருக்கிறார்கள். இது நகர மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சென்னை நகர மக்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது தொகுதியில் சில பகுதிகளில் வீடுகளுக்கு வழங்கும் மின்சாரம் அவ்வப்போது தடங்கல் ஏற்பட்டு பொது மக்கள் பாதிப்புக்குள்ளாகி அவதிப்படுகிறார்கள். எனவே, சீராக தொடர்ந்து வீடுகளுக்கு மின்சாரம் வழங்கக் கூடிய தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். மின்சார வாரியம் சீராக மின்சாரம் வழங்க மேற்கு மாம்பலத்தில் துணை மின் நிலையம் அமைக்க முன் வந்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

இறந்து போன தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு வேலை கொடுப்பதில் கழக அரசுதான் முனைப்பாக சென்ற ஆண்டு 500 பேருக்கு வேலை வழங்கியிருக்கிறது. இன்னும் சிலருக்கு வழங்கப்பட வேண்டியிருக்கிறது. ஆகவே, அதைப் பரிசீலித்து அவர்களுக்கும் உடனடியாக வழங்கிட கேட்டுக் கொள்கிறேன். இறந்து போன ஊழியர்களின் வாரிசுகளுக்கு வேலை கொடுப்பதில் உள்ள அரசு ஆணையில் சில மாற்றங்கள் தேவை. உதாரணமாக ஒரு குடும்பத்தில் வெற்றிலை பாக்கு கடை வைத்து சிறிய வருமானம் வருகிறதென்றாலும் கூட அவர்களுக்குப் போதிய வருமானம் உள்ளது என்றும் காரணம் காட்டி வேலை வாய்ப்பு தருவதில்லை. ஆகவே, இந்த அரசு அந்த அரசு ஆணையை, மாற்றியமைத்து எந்த ஊழியரும் பணியில் இருக்கும்போது இறந்தால் அவரது வாரிசுக்கு எந்தவித நிபந்தனையும் இன்றி பணி வழங்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன். வாரியத்தை முறைப்படுத்தி பொது மக்களுக்கு இன்னும் சிறப்பான முறையில் செயல்பட வேண்டுமென்று வகைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை]

சமீபத்தில் 1–12–1988 ஆம் தேதி முதல் மின் வாரியத் தொழிலாளர்களுக்கு ஊதியத்தை கழக அரசு பொறுப்பேற்றவுடன் 1989 ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே தொழிலாளர்களுக்கு வழங்கியதற்கு நான் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். விநியோகத் திட்டங்கள், தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு பணிகள் வேலைப் பளுவுக்கு ஏற்ப வழங்க வேண்டும். மின் இணைப்பு அதிகமாக வருகின்ற நேரங்களில் சற்று வாய்ப்பு



கள் கொடுப்பதற்கு வழி வகைகள் இருக்கின்றன. 20 ஆண்டுகள் கூட பதவி உயர்வு பெற இயலாமல் இருக்கிற சூழ்நிலையிருக்கிறது. கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் கூட பதவி உயர்வு இல்லாமல், 'பேசின் பிரிட்ஜ்', காடம்பாறை மின் திட்டம், மேட்டூர் மின் திட்டம், குந்தா மின் திட்டம் உற்பத்தி நிலையம் ஆகிய இடங்களில் சுமார் 15 ஆயிரம் தொழிலாளர்கள் பதவி உயர்வு இல்லாமல் பணியாற்றுகின்றார்கள். இதை உடனடியாக பரிசீலனை செய்து அவர்களுக்கு பதவி உயர்வு வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பதவி உயர்வு பெறாமல் நீண்ட நெடுங்காலமாக பணியாற்றுவது அந்தத் தொழிலாளர்களுக்கு மனக்குறையாக இருக்கிறது. அதைக் கழக அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

பொது மக்களுக்கு சேவை செய்து வரும் இந்த பொது நிறுவனம் நஷ்டத்தில் நடந்து வருகிறது. இந்த நஷ்டத்தை மாநில மத்திய அரசுகள் ஈடு கட்ட வேண்டும். மின் வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பி.எப். பணத்தைத் திரும்பப் பெறுவதில் முறையாகக் குறித்தக் காலத்தில் கிடைப்பதில்லை. அதேபோல் அவர்கள் செலவு செய்து கொண்டிருக்கிற மருத்துவத் தொகையை ஈடுகட்டுகிற பட்டியல் கூட முறையாக அனுமதிக்கப்பட்டு வழங்கப்படுவது கிடையாது. இதற்கு நிதிப் பற்றாக்குறை காரணம் என்றே சொல்லப்படுகிறது. எனவே, தொழிலாளர்கள் மாதந்தோறும் அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போல மருத்துவப் படியினை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இதனை மின்சார வாரியம் பரிசீலித்து தொழிலாளர்களுக்கு ஆவன செய்ய வேண்டும். மின்சார வாரியத்தில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு மின் சாதனங்கள் முறையாக வழங்க வேண்டும். கிட்டத்தட்ட 75 ஆயிரம் தொழிலாளர்கள் ஸ்தலத்திலேயே பணி புரிகிறார்கள். மின் விபத்துகளிலிருந்து அவர்களைக் காக்கக் கூடிய சாதனங்கள் அவர்களுக்கு அதிக அளவில் விநியோகிக்க வேண்டும்

12 45 மணி

அப்படி மின்சார கம்பத்திலே ஏறி பணியாற்றும் ஊழியர்களுக்கு கையுறை போன்ற சாதனங்கள் வழங்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் விபத்து இல்லாமல் அவர்களால் பணியாற்ற முடியும். வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் நீண்ட காலம் 30 அல்லது 35 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெறுகின்ற போது அவர்களது மகன் அல்லது மகளுக்கு வாரியத்திலே பணியாற்றுகின்ற வாய்ப்பு தருவதில்லை. அதுமட்டுமல்லாமல் வாரியத்தில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக இண்டர்வ்யூ வந்தால் கூட அந்த பணியாளர் குழந்தைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவது கிடையாது. ஆகவே மின்சார வாரியத்தில் சில சதவிகித இடமாவது ஒதுக்கி பணியாளர்களுடைய வாரிசுகள் அங்கு பணி புரிய வசதிகள் செய்து தர வேண்டும். வாரிசுகளுக்கு வேலை வழங்கும் முறையானது

இரயில்வே, தபால் தந்தி போன்ற துறைகளில் இருந்து வருகிறது. அதனை இந்தக் கழக அரசு பரிசீலித்து மின் வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் மின் வாரியத்தில் வேலை கிடைத்திட ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை இத்துடன் முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. சி. கோவிந்தராஜன்; பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை 3 ஆண்டுகளாக விவாதிக்கப்படுவதே இல்லை. இப்போதும் இதற்காக ஒதுக்கப்பட்டு இருக்கக்கூடிய நேரம் மிகவும் குறைவாக இருக்கிறது. இதற்கு காரணம் போகிற போக்கில் விவாதம் பண்ணக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறதே தவிர, இதுகுறித்து எல்லா சட்ட மன்ற உறுப்பினர்களும் தங்களுடைய முழு கருத்துக்களைச் சொல்லக் கூடிய அளவிற்கு இன்றைக்கு இல்லை. அதற்குக் காரணம் இந்த நிதிநிலை அறிக்கையை சட்டமன்ற உறுப்பினர்கள் ஒட்டளித்து நிறைவேற்றித் தர வேண்டும் என்ற நிலை இல்லை. அந்தக் காரணத்தினால் தான் இதை சட்டமன்றத்தில் வைக்கலாம்; வைக்காமலும் போகலாம் என்ற ஒரு சூழ்நிலையில் கடந்த 3 ஆண்டுக் காலமாக இருந்து கொண்டு இருக்கிறது. இந்த ஆண்டிலும் இந்த நிலைதான் இருக்கிறது. இதற்குக் காரணம் எலக்ட்ரிசிட்டி சப்ளை ஆக்ட்டில் செக்ஷன் 61ல் அவர்கள் வைக்கக்கூடிய இந்த அறிக்கையை "such statement shall be open to discussion therein but shall not be subject to vote" என்று இருக்கிறது. அதுமட்டுமல்ல, அந்த செக்ஷன் 61-ல் 5-வது உட்பிரிவில் "Such statement are to be laid before the state Legislatures for discussion but the elected representatives of the people cannot vote on them in all such financial matters" என்று இருக்கக்கூடிய காரணத்தினாலும், இது ஓட்டெடுப்பு இல்லாமல் நடைபெறக் கூடிய காரணத்தினாலும் இந்த அலட்சிய போக்கு வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். இந்த நாட்டில் இயற்றப்பட்ட எத்தனையோ சட்டங்களைத் திருத்தியிருக்கிறார்கள், மக்களுடைய நிலைமைக்குத் தகுந்த மாதிரியும், அவ்வப்போது ஏற்படக்கூடிய நிலைமைக்குத் தகுந்த மாதிரியும். ஆனால் இந்தச் சட்டத்தை மட்டும் திருத்த முடியாதா? இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் கூட 64 தடவைக்கு மேல் திருத்தப்பட்டு இருக்கிறது. இது திருத்தப்படாத காரணத்தினால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ட்ரான்ஸ்போர்ட் மற்ற எல்லா மானியங்களைக் குறித்தும் விவாதித்து ஓட்டு எடுக்கிறோம். இதை மட்டும் விவாதிப்பதோடு சரி, ஒட்டு எடுக்க முடியாது என்ற நிலைமை இருக்கிறது. எல்லாவற்றையும் விட இதில் தான் அரசு அதிக உதவி செய்கிறது. மானியம் கொடுக்கிறது. இந்த ஆண்டு வரை பார்த்தால், இது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 1957-லிருந்து 4,000 கோடி ரூபாய்க்கு மேல் கடன் கொடுத்திருக்கிறது. இப்படி இருந்தும் இதுகுறித்து இந்த





அரசுக்கு எந்தவிதமான கண்ட்ரோலும் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தை முழுமையாக சொல்லி ஓட்டளிக்க வேண்டிய அவசியமும் இல்லை என்பது அந்தச் சட்டத்தில் கூறப்பட்டு இருக்கின்ற காரணத்தினால் இந்த நிலைமை நீடிக்கிறது. இதனால் என்ன விளைவு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் மின்சார வாரியத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள் மனோபாவம், போக்கு, விசித்திரமாகவும், மோசமாகவும் இருக்கிறது. சில சமயங்களிலே வாரியத் தலைவர், அந்தத் துறையினுடைய அமைச்சரைக் கூட மதிக்காத சூழ்நிலை இருந்து இருக்கிறது. இதுதான் அதற்கு அடிப்படையான காரணம் என்று நான் கருதுகிறேன். இதனால் எப்படிப்பட்ட நிலைமை வந்திருக்கிறது? அது குறித்து கண்ட்ரோலர் மற்றும் ஆடிட்டர் சுட்டிக் காட்டியிருப்பதை—நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் காஞ்சனா அவர்கள் பேசினார்கள். இங்கே பொது நிறுவனங்களின் குழு கூட ஒரு ஸ்டிரிக்சர்ஸ்பாஸ் பண்ணியிருக்கிறது இந்த நிர்வாகத்தைக் குறித்து. "The Committee cannot help expressing the feeling that the Tamil Nadu Electricity Board has not been taking seriously either the Audit objection or the queries of the committee The Board's replies have been evasive misleading and contradictory, indicative of the total indifference bordering on nonchelant attitude. Even when serious matters involving huge sums of expenditure have been pointed out, the Board has not cared to fix responsibility and take action against the officials concerned. Though this warrants some stern steps the committee does not wish to take such recourse. Suffice for the committee to record here that the Government should take appropriate action." என்று அந்தக் கமிட்டி அரசை நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறது. "The Committee wants to state that expeditions action should be taken by the Government on all recommendation in this Report" இதை எதற்காக நான் இங்கே குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் மின்சார வாரியத்தினுடைய அதிகாரிகள் "they think that they are above the Government" அப்படிப்பட்ட போக்கு இருப்பதினால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த எலக்ட்ரிசிடி சப்ளை சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது இந்த அரசு வந்த பிறகு, சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மின்சார வெட்டு அறவே எடுக்கப்பட்டிருக்கிறது. அநேகமாக, விவசாயிகளுக்கு மின் இணைப்பு என்பதும் ஓரளவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆனால் போதுமானதாக இல்லை. 13 இலட்சம் பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் 3 இலட்சம் பேர்கள் பாக்கி. ஆனால், 40,000 இணைப்பு தான் ஓராண்டுக்குக் கொடுக்கப்

படும் என்று சொன்னால், அது 7 ஆண்டுகளுக்கு மேலாகும். இருந்தாலும் கூட ஏற்கெனவே இருந்த நிலைமை இன்றைக்கு ஓரளவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். அப்பொழுது எல்லாம் விவசாயிகளுக்குத் தண்ணீர் விடுவது என்று சொன்னால், மின்சாரம் எப்பொழுது வரும், எப்பொழுது போகும், என்ன செய்வது என்றெல்லாம் விவசாயிகள் சிந்தித்து உண்டு. கடந்த பட்ஜெட் கூட்டத்திலே கூட, இப்போது மாண்புமிகு உணவுத் துறை அமைச்சராக இருப்பவர் இதுபற்றி பேசி இருக்கிறார்கள். (மணியடிக்கப் பெற்றது) நான் இப்பொழுது தான் ஆரம்பித்தேன். என்றாலும், மற்ற அனைத்தையும் விட்டு விட்டு, இரண்டே இரண்டு மட்டும் சொல்கிறேன்.

12.50 மணி

ஏற்கெனவே, 7-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பல திட்டங்களை மின் சக்தியை அதிகப்படுத்துவதற்காக எடுத்தார்கள். அவற்றிற்கு மத்திய அரசு அனுமதி இல்லாத காரணத்தால், கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன என்று அன்றைய அமைச்சரே குறிப்பிட்டிருக்கிறார்கள். எட்டாவது திட்டத்திலே, பல திட்டங்கள், வட சென்னை அனல் மின் நிலையத் திட்டம், தூத்துக்குடி அனல் மின் நிலையத் திட்டம், பேசின் பிரிட்ஜ் கேஸ் டர்பைன், நரிமணம் எரிவாயு, காவிரிப் படுகை கேஸ், காற்றாலைகள் மூலம் மின்சாரம், இவற்றையெல்லாம், இன்றைக்கு இருக்கக்கூடிய மாறிய சூழ்நிலையில் உடனடியாக நிறைவேற்றினால் தான் நமக்கு தேவைப்படக் கூடிய மின் சக்தியின் அளவை ஓரளவு நிறைவு செய்ய முடியும். இன்றைக்குத் தேவைப்படுவது 5,139 மெகாவாட். ஆனால், கிடைப்பது அந்த அளவுக்கு இல்லை. அதிலேகூட லைன் லாஸ் என்று ஏராளமான மில்லியன் யூனிட்டுகள் போய்க் கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் நீங்கள் தடுத்து நிறுத்தக் கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சமயத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஆனால் கிடைக்கக்கூடிய மின்சாரத்தையும் விநியோகிப்பதில் அநேக சிக்கல்கள் ஏற்படுகின்றன. டிரான்ஸ்பார்மர்கள் எரிந்து விடுகின்றன. அவைகளை அவ்வப்போது பராமரிப்பு சரியான முறையில் செய்வதில்லை; அடிக்கடி மின்சார வோல்ட்டேஜ் டிராப் ஏற்படுகிறது. அவற்றுக்கெல்லாம் தொழிலாளர்கள் காரணம் என்று அவர்கள் மீது பழி சுமத்துவதால் பலன் இல்லை. பல ஆண்டுகளாக, 25,000 அடிமட்ட தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நிரந்தர வேலைகளைச் செய்கிறார்கள். உற்பத்தித்திறன் அதிகப்பட்டிருக்கிறது. விற்பனை அதிகப்பட்டிருக்கிறது, கிராமங்களுக்கெல்லாம் மின் இணைப்பு 20, 25 ஆண்டுக் காலமாக அதிகப்பட்டிருக்கிறது. ஆனால், தொழிலாளர்களுடைய எண்ணிக்கை அதிகப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால், நிரந்தரமற்ற தொழிலாளிகள் பற்றி நான் திரும்பத் திரும்பச் சொல்ல



வேண்டியது அவசியம் என்றே கருதுகிறேன். நிரந்தரமான தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய மரத்தை நடுவது, கம்பிகளை இழுப்பது, எல்லாவிதமான அனல் மின் நிலையங்களிலிருந்தும் கரிகளை வாரிக் கொட்டுவது, இப்படி தினசரி நடக்கக்கூடிய வேலைகளில்—'பெரனியல் ஒர்க்சில்'— எல்லாம் இந்த 25,000 கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். எனவேதான், அவர்களைப் பூராவும் நிரந்தரப்படுத்தக் கூடிய ஒரு நடவடிக்கையை இந்தச் சமயத்திலே எடுக்க வேண்டும் என்று நான் தெளிவாகக் கூற விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட்டைப் பார்க்கும் போது, பற்றாக்குறை ரூ. 375.97 கோடி இருப்பதை சமாளிப்பதற்காக இங்கே ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறீர்கள்.

"This will have to be met by mobilisation of additional resources by sariff revision and by increased assistance from the Government." மேற்கொண்டு கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிலைமை இருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது. எனவே, கட்டணத்தை உயர்த்தவேண்டுமென்றால், நிதானமாகச் செய்யுங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: நீங்கள் படித்த பகுதியைத் தான் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை கூட எடுத்துப் போட்டு மின்சார வாரியம் வரியை உயர்த்தும் போல் இருக்கிறதே என்று எழுதியிருக்கிறார்கள். இது இந்த வரியை உயர்த்துவதற்கு முன்னால் தயாரிக்கப்பட்ட ஒன்று. ஆகவே, வரியை நாங்கள் மீண்டும் உயர்த்தப் போகிறோம் என்று பயப்படத் தேவையில்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : நன்றி. ஏன் என்றால், கட்டணத்தை உயர்த்தக் கூடிய நிலைமை ஏற்படுமானால் (மணியடிக்கப் பெற்றது) மின்சாரத்தைத் தங்கு தடையின்றி நீங்கள் கொடுப்பீர்களானால் நாங்கள் கட்டணத்தை உயர்த்திக் கொடுப்பதற்குக் கூடத் தயார் என்று அண்மையில் நடைபெற்ற தொழிலதிபர்கள் கூட்டத்தில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிர்பந்தச் சூழ்நிலை ஏற்படுமானால் மட்டும் அதை நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

12.55 மணி

மின்வாரியத்தில் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவரையில் எல்லாமே 'கான்ட்ராக்ட்' தான். ஆண்டு முழுவதும் வேலை இருக்கிறது. ஆனால் எல்லாமே 'கான்ட்ராக்ட்' தான் 'வாட்ச்மென்' வண்டி ஓட்டுநர், வாகனங்கள் ஓட்டுநர், எல்லோருமே 'கான்ட்

ராக்ட்' தான். 4 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை வேலை
செய்திருந்தாலும் கூட கான்ட்ராக்ட் முறையிலேதான் இன்றைக்
கும் வேலை செய்கிறார்கள். அவர்களை எல்லாம் நிரந்தரமாக்க
வேண்டும். 31—7—1989-ல் நடைபெற்ற ஊதிய ஒப்பந்தத்தில்
எல்லாச் சங்கங்களைச் சேர்ந்தவர்களிடமும் அவர்களை நிரந்
தரப்படுத்தி விடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது இது
வரையில் நடக்கவில்லை. அதற்கான நடவடிக்கை எடுக்க
வேண்டும்.

அடுத்து, தொழிலாளர் கோரிக்கைகளைப் பற்றி ஏற்கெனவே
பலர் பேசியிருக்கிறார்கள். அவர்களுக்கு இலவச மின்சாரம்
வழங்கப்பட வேண்டும்; வாரிசுதாரர்களுக்கு அவர்கள் ஓய்வு
பெற்ற ஒரு மாதத்திற்குள் வேலை கொடுக்க வேண்டும். கான்ட்
ராக்ட் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த நீதிமன்றத்திற்குச்
சென்றிருக்கக்கூடிய வழக்குகளைக் காட்டி தாமதப் படுத்துகிறார்
கள். நேற்றைக்குக் கூட அமைச்சரவர்கள் இங்கே சொன்னார்கள்,
நிரந்தரமாக்காததினால் அவர்களை நிரந்தரமாக்க வேண்டு
மென்று கோரி நீதிமன்றத்திற்குப் போனார்களே தவிர வேறு
பிரச்சினைக்கு அல்ல. ஆகவே, நீதிமன்ற வழக்கைக் காட்டி
அவர்களை நிரந்தரப்படுத்தாமல் இருப்பது எந்தவகையிலும்
நியாயம் இல்லை. தொழிற்சங்க உரிமைகளை ஏற்கெனவே
இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு கொடுத்திருந்தது.
அதாவது, காம்பிளக்சிற்கு உள்ளே, கேன்டீன் போன்ற இடங்
களில் கூட்டங்கள் நடத்துவதற்கு உதவி செய்திருக்கிறது. இப்படிப்
பட்ட உரிமைகளை நீங்கள் மீண்டும் வழங்க வேண்டுமென்று
கேட்டு, நேரம் இல்லாத காரணத்தால் முடித்துக்கொள்ள விரும்பு
கிறேன். அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்தது போல என்று
நான் ஆரம்பத்திலே குறிப்பிட்டமாதிரி இருக்கின்ற காரணத்தால்
நீங்கள் இந்தச் சட்டத்தை திருத்தி, சட்டமன்றத்தில்
ஓட்டளிக்கக் கூடிய வகையில் இருந்தால்தான் நிச்சயமாக இந்த
விவாதம் செழுமையாக இருக்கும்; கருத்துக்களைத் தெளிவாக
எடுத்துச் சொல்லமுடியும்.; அதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டு
மென்று கேட்டு, அமர்கிறேன்.

திரு. பொன் விஜயராகவன் : மாண்புமிகு தலைவர் அவர்
களே, 1988-89, 1989-90 மற்றும் 1990-91 ஆகிய ஆண்டுகளுக்
கான மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கைமீது
ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய சட்டமன்ற உறுப்பினர் கூட
2 ஆண்டுகளுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை இன்னும் சொல்லப்
போனால் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை விவாதிக்கப்படக் கூடிய
மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு
இந்தச் சந்தர்ப்பம், நேரம் மிகக் குறைவு என்று சொன்
னார்கள். ஆகவே, நேரத்தின் அவசியம் கருதி சுருக்கமாக சில
கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



பல ஆண்டுகளாக இந்த மின்சார வாரியத்தினுடைய பல
பிரச்சினைகளை இந்த அளவில் விவாதிக்க முடியாமல் போயிருக்
கிறது என்று நான் இங்கே கூறுவதற்குக் காரணம் இது ஒரு மிக
முக்கியமான பிரச்சினை. நேற்றைக்குக் கூட இதை வேடிக்கை
யாகவோ அல்லது இதன் அவசியத்தைக் கருதியோ சொன்னதை
நான் கேட்டேன். ''சம்சாரம் இல்லை என்று சொன்னாலும்
இன்றைக்கு மின்சாரம் இல்லாமல் இருக்காமல் இருக்கமுடியாது''
என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த
பிரச்சினையை இந்த மன்றத்தில் விவாதிக்காமல் ஒத்திப்
போடுவது வருத்தத்திற்குரியது என்று சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியின்போது இந்த மின்சார
வாரியத்திற்கு 'பவர் கமிட்டி' என்ற அளவுக்கு சட்டமன்ற
உறுப்பினர்களைக் கொண்டு அமைச்சருடைய தலைமையில் ஒரு
கமிட்டி போடப்பட்டது. அந்தக் கமிட்டியைப் போட்டாலாவது
ஓரளவுக்கு இதைப்போன்று அவசரக்கோலத்தில் அள்ளித்
தெளிக்க வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு. இந்தப்
பிரச்சினைகளை அந்தக் கமிட்டியிலே சொல்லி, விவாதிக்க
வாய்ப்பு இருக்கும். ஆகவே, அந்தக் கமிட்டியை உடனடியாக
நிறுவுவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

இந்த ஆண்டு மின்வெட்டு வராது என்று இங்கே உறுதி
அளித்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.
தமிழ்நாடு ஒன்றுதான் எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கி
யிருக்கிறது என்று நாம் இன்றைக்குப் பெருமையோடு சொல்
கிறோம். கிராமம் என்று சொல்லும்போது எல்லா கிராமங்
களிலும் இன்றைக்கு நிலைமை எப்படி இருக்கிறது? மின்சாரம்
என்பது பெயரளவிற்கு வருகிறதே தவிர மண்ணெண்ணெய்
விளக்கைவிட மிகவும் மோசமாக எரிகிற நிலைதான் இருக்கிறது.
அந்த அளவுக்கு 'வோல்டேஜ் டிராப்' தமிழ் நாட்டில் இருக்கிறது
என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மிகப் பெரிய தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வழங்கும்
போது 'வோல்டேஜ் டிராப்' இருந்தால் அவைகளுக்கு எந்த
அளவுக்கு 'சப் ஸ்டேஷன்கள்' அமைத்து, வோல்டேஜை இம்புரூவ்
பண்ணிக்கொடுக்கிறோமோ, அந்த அளவுக்கு கிராமங்களில்
இருக்கிற விவசாயிகளுக்குக் கொடுப்பதில்லை. அதனால் விவ
சாயப் பம்புசெட்டுகளுக்கு காயில் தீய்ந்து, அவர்கள் மிகப்பெரும்
இழப்புக்கு ஆளாகிறார்கள். ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு
எல்லாக் கிராமங்களிலும் இருக்கக்கூடிய விவசாயப் பம்புசெட்டு
களுக்கு 'வோல்டேஜ் டிராப்' இல்லாத வகையில்; வோல்டேஜ்
குறைவு ஏற்படுவதைத் தடுக்கின்ற வகையில் அதிகமான சப்-
ஸ்டேஷன்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கி
றேன்.

சாதாரணமாக 'எலெக்ட்ரிசிட்டி கன்ஸ்யூமர்ஸ்' நிலையிலே
கூட பார்க்கும்போது பல கிராமங்களில் இன்றைக்கு விளக்கு
எரிவதற்குக் கூட வழியில்லாமல் 'வோல்டேஜ் டிராப்' மிக
மோசமாக இருக்கிறது. உதாரணமாக, கன்னியாகுமரி மாவட்
டத்தில் விளவங்கோடு தாலுக்கா, கல்குளம் தாலுக்கா ஆகிய பகுதி
களிலே இந்த நிலைமை இருக்கிறது. மூஞ்சிறை, பார்தீபபுரம்,
புதுக்கடை, பைங்குளம், தேங்காய்ப்பட்டணம், கீழ்க்குளம்,
மிடாலம், இணையம் போன்ற பல்வேறு கிராமப்பகுதிகளிலே
பார்த்தால் 'வோல்டேஜ் டிராப்'பின் காரணமாக அங்கே விளக்கு
கள் ஒழுங்காக எரிவதில்லை என்பதை அங்கே இருக்கக்கூடிய
மக்கள் குறைபாடாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

13-00 மணி

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் :** (திரு. பெ. சு. திருவேங்
கடம்) : பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்
பெறுகிறது.

**திரு. பொன். விஜயராகவன் :** ஏற்கெனவே, சேரமங்கலம் என்
கின்ற இடத்தில் அனுமதிக்கப்பட்ட அந்த சப்-ஸ்டேஷனுடைய
வேலை இன்னும் துவக்கப்படவில்லை. புதுக்கடை என்ற இடத்
தில் இன்னொரு சப்-ஸ்டேஷன் தேவைப்படுகிறது. அப்படி
இருக்குமேயானால், அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய 'வோல்
டேஜ் டிராப்பை' நாம் சரி செய்ய முடியும் என்ற அளவிலே
சொல்கிறார்கள். அதேபோல், பவானி தாலுக்காவிலே இருக்கக்
கூடிய 'வோல்டேஜ்' டிராப்பை சரி செய்கின்ற அளவிலே சப்-
ஸ்டேஷன்கள் அமைக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில்
நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

இன்றைக்கு விவசாயிகளுக்கான மின் இணைப்புக்கு ஏறத்தாழ
4,70,000 அப்ளிகேஷன்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள்.
4,70,000 அப்ளிகேஷன்கள் இருக்குமானால், அவைகளுக்கு ஒரு
வருடத்தில் 40,000 என்கின்ற வகையில் மின்சாரம் வழங்கப்
படும் என்று சொன்னால், ஏறத்தாழ 9, 10 ஆண்டுக் காலம்,
இப்போதிருக்கக்கூடிய அப்ளிகேஷன்ஸையே நாம் எக்ஸ்படைட்
பண்ணுவதற்கு காலம் ஆகும் என்பதை உணர வேண்டும்.
ஆகவே குறைந்த பட்சம் ஒரு கம்பம் என்கின்ற அளவில் இருக்க
கூடிய அளவில் மிக எளிதாக அவர்களுக்கு மின்சாரம் வழங்கப்
படும் என்ற அளவில் இருக்கக்கூடியவர்களுக்காவது, விவசாயி
களுக்கு விரைந்து மின்சாரம் வழங்குவதற்கான முயற்சியை மின்
சார வாரியம் மேற்கொள்ளவேண்டும் என்று நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.



இன்றைக்கு ஒரு ஹார்ஸ்-பவருக்கு 75 ரூபாய் என்பதை
ரூ. 50 என்ற அளவிற்குக் குறைத்திருக்கிறார்கள். பாராட்டு
கிறேன். ஆனால், இந்த நிலைமைகள் எல்லா சப்-சாயில்
வாட்டர் இருக்கக்கூடிய இடங்களிலே, தண்ணீர் இருக்கக்கூடிய
இடங்களிலே, இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு பொருந்துகின்ற
அளவிற்கு வறட்சிப் பகுதியான இடங்களிலே இருக்கக்கூடிய
விவசாயிகளுக்கு இது பொருந்துவதில்லை. ஆகவே, அவர்களுக்
கென்று தனியாக, பிரத்தியேகமான சலுகைகள் ஏதாவது இந்த
அரசு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்று, அப்படி நிலத்தடி நீர் இல்லாத இடங்களிலே
போர்வெல் போடுகிறார்கள். போர்வெல் போடுகிறபோது,
கம்ப்ரசர்கள் மூலமாக, சேஞ்ச்-ஓவர் ஸ்விட்ச் என்கின்ற சிஸ்டத்
தின் அடிப்படையில் மின்சாரத்தை அவர்கள் எடுக்கிறார்கள்.
அதற்கு இரட்டிப்புக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அந்த
இரட்டிப்புக் கட்டணத்தை உடனடியாகக் குறைத்து, ஒரு கட்ட
ணம் தான் வசூலிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே
சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு நம்முடைய தேவை, 1994-95இல் ஏறத்தாழ
5,792 மெகாவாட் மின்சாரம் தேவை என்று குறிப்பிட்டிருக்கிறார்
கள். ஆனால், இன்றைக்கு 3,000 மெகாவாட் மின்சாரத்திற்
கான வாய்ப்புகள்தான் இருக்கின்றன என்பதையும் சொன்
னார்கள். ஏறத்தாழ 3,000 மெகாவாட் மின்சாரத்தை நாம்
உற்பத்தி செய்யவேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆகவே,
குறைந்தபட்சம் இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய எல்லாவித
மான புனல் நீர் மின்சாரத்தை எடுப்பதற்கான வாய்ப்புகளை
நாம் பயன்படுத்தியாக வேண்டும். அந்தவகையில், கன்னியா
குமரி மாவட்டத்திலிருக்கக்கூடிய பரளியாறு புனல் நீர் மின்
திட்டம், பேச்சிப்பாறை புனல் நீர் மின் திட்டம், பெருஞ்சாணி
புனல் நீர் மின் திட்டம், சிற்றாறு புனல் திட்டம் ஆகிய திட்டங்கள்
உடனடியாக மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெற்று
துவக்கப்படவேண்டும் என்று நான் சுட்டிக் காட்டக் கடமைப்
பட்டிருக்கின்றேன்.

காற்றாலைகள் மூலமாக ஏராளமான மின்சாரம் இன்னும் நாம்
உற்பத்தி செய்யமுடியும் என்று வல்லுநர்கள் குறிப்பிடுகிறார்கள்.
குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஆரல்
வாய்மொழி பகுதியில் வருடத்திற்கு ஒன்பது மாதமும்
காற்றாலைகள் மூலம் மின்சாரம் கிடைப்பதற்கான வாய்ப்பு
பல இடங்களிலே இருக்கிறது. அவைகளையெல்லாம் ஆய்வுக்கு
எடுத்துக்கொண்டு, ஏற்படக்கூடிய அந்தத் தேவையைப்
பூர்த்தி செய்கின்ற வகையில் மின்சாரத்தை, காற்றாலைகள்

மூலமாக, (மணியடிக்கப்பெற்றது)——ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்——மற்றும் புனல் மின் திட்டம் மூலமாக நாம் எடுத்து செயல்படுத்தவேண்டும். ஜெயங்கொண்டம், நரிமணம் போன்ற பகுதிகளிலே இருக்கக்கூடிய அந்தத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து விரைவிலே பெற்று இந்தத் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில் மின்சார வாரியம் சிறப்பாகச் செயல்படவேண்டும் என்று கேட்டு, அளித்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார பட்ஜெட்டில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க முற்படுகின்றேன். இது மானியக் கோரிக்கை அல்ல. மின்சார இலாக்காவிற்கு நாம் வெட்டுத் தீர்மானம் கொடுத்து விவாதிக்கக்கூடிய விவாதம் அல்ல. அமைச்சரும் மானியக் கோரிக்கையை வைத்து இங்கே மானியமாக இத்தனை கோடி ரூபாய் எங்களுக்கு வேண்டும் என்று கேட்கக்கூடிய வேண்டுகோள் அல்ல இந்த விவாதம். வாக்கெடுப்பு விடப்படாத இந்த விவாதத்தில் நான் இங்கே பேச ஆசைப்படுகிறேன். காரணம். இன்றைக்கு மின்சாரம் எல்லாக் கிராமத்திலும் ஓரளவுக்கு, விளக்கில்லாமல், வெளிச்சம் இல்லாமல், விளக்கு எரியாமல் இருக்கக்கூடிய ஒட்டுமொத்த வேண்டுகோளைத் தெரிவிப்பதற்காகத்தான் நான் என்னுடைய கருத்துக்களை இங்கே தெரிவிக்க ஆசைப்படுகின்றேன்.

13-05 மணி

மின்சார இலாக்காவுக்கு இத்தனை கோடி ரூபாய் வேண்டும் என்று கேட்பதற்குக்கூட, விவாதிப்பதற்குக்கூட, மானியத்தை கேட்க முடியாத அளவுக்குக் கூட இந்த விவாதம் அமைகின்ற காரணத்தால் அரசுக்கு அதிகாரம் இல்லையோ என்ற அளவுக்கு அந்த போர்டு இன்றைக்கு செயல்படக்கூடிய கட்டாயத்தில் இருந்து கொண்டிருக்கிறது. To generate power, we have no power. To distribute power, we have no power—money power. To collect power, we have no power—by way of money. அந்த பவருக்குக் கொடுக்க வேண்டிய கட்டணத்திற்குக்கூட நீதிமன்றத்திற்குப் போய் தடை வாங்கி விடுகிறார்கள்.

சுமார் 50 கோடி ரூபாய்க்கு மேல் இங்கே மின் கட்டண பாக்கி இருக்கும் என்று எண்ணுகிறேன். ஒரு சாதாரண மனிதன் ஒரு மாதம் மின் கட்டணத்தை கட்டத் தவறினால், 50 ரூபாய் கட்டத் தவறினால் உடனே மின் இணைப்பு துண்டித்து விடுகிறார்கள்.

அதேபோல் ஒரு விவசாயி 5 எச்.பி. மோட்டார் வைத்துள்ள விவசாயி ஒரு எச்.பி.-க்கு 25 ரூபாய் 50 ரூபாய் என்று எண்ணுகிறேன். 250 ரூபாயில் 125 ரூபாய் முதலில் கட்டிவிட்டு 6 மாதம் கழித்து அடுத்த தவணை கட்டமுடியவில்லை



என்றால், கட்டவில்லை என்றால் அந்த விவசாயியின் பம்புசெட்டின் மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது. இது ஏழைக்கு. யாருக்கு? விவசாயி, நம்மை எல்லாம் தேர்ந்தெடுத்த ஏழைக்கு உடனே மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது. அதேபோல் நடுத்தர மக்கள் வீடுகளின் மின் கட்டணத்தை கட்டத் தவறினால் உடனே மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது. ஆனால் பல கோடி ரூபாய் மின் கட்டண பாக்கிக்கு இன்றைக்கு நீதிமன்றங்களில் தடை உத்தரவு பெற்று சில பெரியவர்கள் இருப்பதாகச் சென்ற ஆண்டே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இந்த அவையில் தெரிவித்தார்கள்.

ஒரு மில் தொழிலாளி மின்சாரக் கட்டணத்தை கட்டாவிட்டால் மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது, அதே மில் முதலாளி மின் கட்டணம் எதுவும் கட்டவில்லை என்றால்கூட அங்கே மின்சாரம் தொடர்ந்து வழங்கிக் கொண்டே இருக்கிறோம் முதலாளிகளுக்கு. அது தொழிலாளிக்கு அல்ல. தொழிலாளி வேண்டுமானால் வேலை பார்க்கலாம். ஆனால் மின் கட்டணத்தை கட்ட வேண்டியது முதலாளியின் பொறுப்பு. ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுவது, இங்கே அரசு கடன் கொடுக்கவில்லை என்றால் திவால் ஆகக் கூடிய அளவுக்கு மின்சார வாரியம் இருக்கும்போது இந்த 50, 55 கோடி ரூபாயை உடனே வசூல் செய்வதற்கு சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய எம்.எல்.ஏ.-க்களை, அதாவது சட்டம் படித்த எம்.எல்.ஏ.-க்களை வழக்கறிஞராக உள்ள எம்.எல்.ஏ.-க்களை ஜூன் மாதம் 11 ஆம் தேதி சென்னை தலைமை நீதிபதியினுடைய நீதிமன்றத்தில் காலை 10-30 மணிக்குப்போய் இந்த அவையினுடைய எண்ணம் இப்படி, இங்கே பல்வேறு பெரிய பெரிய முதலாளிகள் மின் கட்டணத்தைக் கட்டாமல் பல கோடி ரூபாய் பாக்கியாக வைத்திருக்கிறார்கள். எங்களுக்கு வாங்கித் தாருங்கள் என்று கேட்க வேண்டும் என்ற என்னுடைய ஆசையை நான் இங்கே முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே இன்றைக்கு இருக்கக் கூடிய பற்றாக்குறையினால் தான் நம்முடைய பேரூராட்சிகளில் மின் விளக்குகள் எரியவில்லை. இந்த பெரிய பெரிய முதலைகள் கட்டத் தவறிய காரணத்தால்தான் சிறிய சிறிய கிராமங்களில் இன்றைக்கு விளக்கு எரிக்கிற மக்கள் எல்லாம் இருட்டில் அல்லலுக்குள்ளாகி இருக்கிறார்கள். நானே என்னுடைய தொகுயில் சுற்றிப் பார்க்கச்சென்றபோது எல்லா நகர பஞ்சாயத்திலும் இதே குறைபாடுதான். விளக்கு எரியவில்லை. தேர்தல் காலத்திலேகூட வாக்குகள் இதனால் பாதிக்கப்பட்டன. எங்களுக்கு விளக்கு எரியவில்லை. சொல்லி சொல்லிப் பார்த்தோம். எங்களுக்கு விளக்கு எரியவில்லை. இப்படி பணம் கட்டாமல் இருக்கக்கூடியவர்களில் நடவடிக்கையினால்தான் ஏழை எளியமக்கள் இன்றைக்கு இருட்டில் சூழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

நான் உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் ஊராட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். இன்றைக்கு மின்சார வாரியமே நேரடியாக–பராமரிப்பை நேரடியாக–விளக்குகளுக்கு பல்பு மற்ற செலவு, கம்பங்கள் எல்லாவற்றையும் நேரடியாக அந்த செலவிலே போடுவீர்களானால் நிதிப் பற்றாக்குறை இருக்கக்கூடிய பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இருட்டில் தடுமாறமாட்டார்கள்.

13-10 மணி

கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர், சேரன்மாதேவி, பத்தமடை, மேலச்செவல், கோபாலசமுத்திரம் போன்ற பகுதிகளில் – அந்த கிராமங்களில், நகரங்களிலெல்லாம் இன்றைக்கு மக்கள் இருட்டில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். வெள்ளம் வந்துவிட்டால், புயல் வந்துவிட்டால், உடனே கம்பங்கள் உடைந்து சாய்ந்து விடுகின்றன. சாய்ந்தக் கம்பத்தை நிமிர்த்துவதற்குக் கூட, சில பஞ்சாயத்துக்களில் பணம் கிடையாது. ஆகவே, நான் இங்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லிக் கொள்கிறேன். ஏழைகளுக்கு மின் கட்டணத்தை இன்னும் குறையுங்கள், பணக்காரர்களுக்கு இன்னும் மின் கட்டணத்தை அதிகமாக உயர்த்துங்கள். வருமான வரியில் எப்படி ஒரு ஸ்லாப் வைத்திருக்கிறார்களோ—அதாவது இரண்டு லட்சம் ரூபாய் வருமானம் வந்துவிட்டால், 'ஸ்லாப்' ஏறிவிடுகிற மாதிரி 60 சதவிகிதம், 70 சதவிகிதம் என்று விடுகிற மாதிரி, அவர்களுக்கு விதியுங்கள்; சாதாரண மக்களுக்குக் குறையுங்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொரு வேண்டுகோள், இன்று காலையில்கூட இங்கே விவாதிக்கப்பட்டது. மின் கம்பங்கள் விழுந்து, அதனால் மறைந்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று இங்கே தெரிவிக்கப்பட்டது. சேரன்மாதேவியில், ராமையாப் பிள்ளை என்பவர், மே மாதம் 1-ஆம் தேதி, தன்னுடைய வீட்டு வாசலில் பக்கத்தில் இருந்தபோது, ஒரு மின்சாரக் கம்பி அறுந்து விழுந்து அதை அவர் மிதித்த காரணத்தினால், அவர் அந்த இடத்திலேயே இறந்து விட்டார். ஆகவே, மின்சார வாரியம் அதற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வழக்கு மன்றத்திற்குச் சென்றால் இருபதாண்டு காலம் ஆகும். முதலில், "without projudice to the filing of the case" அவர்களுக்குப் பத்தாயிரம், இருபதாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவருக்கு 5 குழந்தைகள் இருக்கின்றன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று கடைசியாக, கூடங்குளம் அணு மின் நிலையத்தைப் பற்றி பல பேர் பேசியிருக்கிறார்கள். இதனால் அணு மின் சக்தியை உற்பத்தி செய்ய முடியும் என்று சொன்னார்கள். 75 சதவிகிதம் அதில் உற்பத்தியாகக் கூடிய மின்சாரத்தைக் கேட்



டிருக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள்கூட சொன்னார். அங்கே அதிக அளவிற்கு ஆபத்து இருக்கிறது என்ற காரணத்தையும் சிலர் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், ஆபத்து, அதிகமாக இருக்கிற காரணத்தினால், ஆபத்து என்றைக்காவது இருக்கும் என்ற காரணத்தினால், அந்த மின் நிலையத்தை கூடங்குளத்தில் அமைப்பதை நிறுத்துங்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வேறு யாராவது ஆதரித்தால் அவர்களுடைய பகுதியில் அதைத் தொடங்குங்கள். என்னுடைய, பகுதி மக்களுக்கு ஆபத்து வரக்கூடாது என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பகுதி வெட்டவெளியாக இருக்கிறது என்று பல பேர் சொல்லலாம். சாதாரண சாமானிய மக்கள் இந்தக் கூடங்குளம் அணு மின்நிலையத்தினால் பாதிக்கப் படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு முறை, இரண்டாண்டு காலத்திற்கு முன்பு, மத்திய அமைச்சர் பெர்னாண்டஸ் அவர்கள் என்னோடுமதுரையிலிருந்து சென்னைக்கு விமானத்தில் வந்து கொண்டிருந்தார்கள். அப்போது அவர் சொன்னார். அதை எதிர்ப்பதாகச் சொன்னார். இன்றைக்கு அவர் நிலை என்ன என்பது எனக்குத் தெரியாது. ஆகையால் அப்போதெல்லாம் எதிர்த்தவர்கள், இன்றைக்கு மௌனமாக இருக்கிறார்கள். எனவே, கூடங்குளம் அணு மின் நிலையம், குறிப்பாக, நெல்லை மாவட்டத்திற்கு ஆபத்தான நிலையம். அதை வேறு பகுதியில் வேண்டுமானால் கொண்டுபோய் மக்கள் வசிக்காத பகுதியில்கொண்டுபோய் நிறைவேற்றுங்கள் என்பதைத் தெரிவித்து, மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன்.

அடுத்து சட்டப் பேரவை கூடுவதற்கு முன்பு, பணக்காரர்களிடமிருந்து மின் கட்டணப் பாக்கியை வசூல் செய்து, இந்த அவையில் தெரிவியுங்கள். இன்றைக்கு மின் கட்டணப் பாக்கியைக் கட்டக்கூடிய அவர்களின் பெயர்களை அவையில் அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தெரிய வேண்டாமா? அப்படிப்பட்ட பெரிய மனிதர்கள் யார் என்று தெரிய வேண்டாமா? 50 கோடி ரூபாய்க்கு மேல் மின் கட்டணப் பாக்கியைக் கட்டத் தவறியவர்கள் பெயர்களை, இந்த அவையில் தெரிவிக்க வேண்டுமென்றும், அதை வசூலிக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். இதில் தயவு தாட்சண்யம் காட்டக் கூடாது. இதில் கொஞ்சம் எளிதாக இருக்கக் கூடாது. சட்டத்தை வேகமாக முடுக்கிவிட வேண்டும். ஜப்தி செய்யுங்கள். எது இருந்தாலும் ஜப்தி செய்யுங்கள். அப்பொழுதுதான் அவர்கள் கட்ட வருவார்கள் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

13–15 மணி

**திரு. என். கணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் பேசி முடிக்கும்போது எல்லோருக்கும் மின்சாரத்தில் பிரச்சினை இருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்

திரு. சா. கணேசன் அவர்கள் சென்னை மாநகரத்தின் சார்பில் பேசுகிற போது சென்னை மாநகரத்தைப் பற்றி சிறப்பாகப் பேசுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். அவர்கள் அமைச்சர் அவர்களிடத்திலே சிறப்பான திட்டங்களை சென்னை மாநகரத்திற்காக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வார்கள் என்று கூட நான் எதிர்பார்த்தேன். சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில் சிறப்பான திட்டங்களை அமைச்சர் அறிவிக்க வேண்டும்; செயல்படுத்த வேண்டும். அதே நேரத்தில் நாங்கள் எல்லாம் வழக்கறிஞர்கள், உயர் நீதிமன்றத்தில் பணியாற்றுகிறோம். ஒரு நாளைக்கு இரண்டு முறைகள் மின்சார இணைப்பு பழுதடைந்து இருட்டாகிவிடுகிறது. நீதி கிடைக்க வேண்டிய இடத்திலே வெளிச்சம் கிடைக்க வேண்டும். ஆனால் நீதிமன்றத்தில் இருட்டு ஆகிவிடுகிறது. ஆகவே அநீதி கிடைத்துவிடுகிறது. அதைப் போக்குவதற்கு நீதிமன்றத்தில் வெளிச்சத்தைத் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் ஒரு இருட்டறை. வழக்கறிஞர்கள்தான் அங்கே ஒளியேற்ற வேண்டும்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே நிதிநிலையைப் பொறுத்த வரையில் மூன்று ஆண்டுகளுக்கானவற்றை விவாதத்திற்கு வைத்திருக்கிறார்கள். குறிப்பாக மின் வெட்டு இல்லை என்று சொன்னாலும் கூட நாங்கள் பேசுவதில் வெட்டு இருக்கிறது. குறித்த காலத்தில் ஒரு சில விவரங்களை மட்டும் சொல்லி என்னுடைய வார்த்தைகளை நான் முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். குறிப்பாக நீர் மின்சாரம் மேற்கே தயாரிக்கப்பட்டு பல பகுதிகளுக்கு வினியோகிக்கப்படுகிறது. அனல் மின்சாரம் கிழக்கே தயாரிக்கப்பட்டு பல இடங்களுக்கு வினியோகிக்கப்படுகிறது. இந்த வினியோகத்தைப் பொறுத்தவரையிலே நீண்ட நாட்களுக்கு முன்னாலே அந்தந்தப் பகுதியிலே ஏற்பாடு செய்யப்பட்ட நிலையை வைத்துச் செய்வதால் இன்றைய தினம் செலவினங்கள் அதிகமாக ஆகக்கூடிய அளவில் இருப்பதை நான் பார்க்கிறபோது இதனால் மின் இழப்பு அதிகமாக இருக்கிறது. வேண்டாத சாமான்களை எல்லாம் வாங்கிக் குவித்து வைத்திருக்கிறார்கள். சாமான்கள் அவ்வப்போது வேண்டும் என்கிறபோது மட்டும் தேவையான அளவுக்கு சாமான்களை மட்டும் வாங்கி வைக்கக் கூடிய அளவுக்கு இருக்க வேண்டும். அதற்காக ஒரு 'இன்டர்னல் ஆடிட்' வைக்கப்பட்டிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.





குறிப்பாக நம்முடைய இந்த மீட்டர்களை எல்லாம் பம்ப் செட்களிலே இருந்து கழற்றினார்கள். இலட்சக்கணக்கான மீட்டர்கள் இன்றைய தினம் அந்த இலாக்காவில் இருக்கிறது. அந்த மீட்டர்களை ஏன் கழற்றினார்கள்? எதற்காக கழற்றினார்கள்? கழற்றிய மீட்டர்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன, அவற்றை விற்று அந்தத் தொகையை நம்முடைய இலாக்காவிலே சேர்த்து விட்டார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்து கண்டக்டர்களை எல்லாம் போடுகிறபோது சீராகப் போடாததால் மின்னிழப்பு ஏற்படுகிறது. கிராமப் புறங்களுக்கு மின்சாரம் சரியாகப் போகாததற்குக் காரணமே கண்டக்டர் ஈவன்-ஆக இல்லாததால்தான். அதனால்தான் அங்கே விளக்குகள் சரியாக எரியவில்லை. குறிப்பாக இந்த ஆண்டு மின்சாரத் தட்டுப்பாடு இல்லை என்றாலும் விவசாயத்திற்குப் போதுமான அளவுக்கு அளிக்க வேண்டும். இப்போது 6 மணி நேரம் 4 மணி நேரம் என்று அளிப்பதை 8 மணி நேரம், 10 மணி நேரம் என்று ஆக்க முடியுமா என்று நீங்கள் பார்க்க வேண்டும். இப்போது மழை பெய்யத் தொடங்கி இருக்கிறது. உங்களுக்கு மின்சார வெட்டு வராது. அமைச்சர் அவர்களுக்கு ஒரு நல்ல எதிர்காலம் இருப்பதன் காரணத்தால் அவர்கள் கஷ்டப்படாமல் விவசாயத்திற்கு இந்த ஆண்டு தாராளமாக மின்சார வினியோகத்தை அளிக்க வேண்டும் என்று நான் இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக ஆறுகளையும், நீர்த் தேக்கங்களையும் நம்பி விவசாயம் செய்யக்கூடிய நிலை போய் கிணற்று விவசாயத்தை நம்பி இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், கிணற்றின் மூலம் விவசாயம் செய்பவர்களுக்கு தட்டுப்பாடு இல்லாமல் நீங்கள் மின்சாரத்தை வினியோகிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். 10 ஆண்டு காலமாக மின் உற்பத்தியில் நாம் அக்கறை காட்டவில்லை. பல திட்டங்களை மத்திய அரசுக்கு அனுப்பி இருந்தாலும் கூட அங்கே இருந்து அனுமதி பெற்று உடனடியாக மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்குரிய முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்று தெரிய வருகிறது. புதிய அரசு வந்ததற்குப் பிறகும், அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகும் மின் உற்பத்தியில் தனிக் கவனம் காட்டப்பட்டு பொதுவாக பல இடங்களில் மின் உற்பத்தி பெருக வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கடலூரில் ஜயன்ட் ஊற்பத்தி என்ற அளவுக்கு, மின்சாரம் அதிக அளவில் உற்பத்தி செய்வதற்காக ஒரு பெரிய அனல் மின் நிலையத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக 8 கோடி ரூபாய் செலவில் ஏற்பாடாகி இருக்கிறது என்று சொன்னார்கள். அது எந்த அளவில் இருக்கிறது, எப்படி இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

முன்பெல்லாம் நாம் நீர்த் தேக்கங்களை நம்பி, நீர் மின் சாரத்தை நம்பி இருக்க வேண்டிய அவசியம் இருந்தது. ஆனால் இப்போது அனல் மின்சாரத்தை நம்பித்தான் நாம் இருக்கவேண்டி இருக்கிறது. பொதுவாக ஜெயங்கொண்டத்திலேயும், நெய்வேலி யிலேயும் நிலக்கரி கிடைப்பதன் காரணத்தால் அந்த நிலக்கரி யைப் பயன்படுத்தி கடலூரில் ஒரு பெரிய அனல் மின் நிலை யத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று புவனகிரியில், நரிமணத்தில் எண்ணெய், காஸ் ஆகியவை கிடைக்கின்றது. அவற்றைப் பயன்படுத்தி ஆங்காங்கு மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டும்; அதற்கு இந்த ஆண்டே முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். முயற்சி எடுத்து இருக்கிறீர்கள். ஆனால் தொடர்ந்து அந்த முயற்சியில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். இங்கே எனக்கு முன்னால் பேசிய முன்னாள் சபாநாயகர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அணுமின் நிலையத்திலே அக்கறை காட்ட வேண்டிய அவசியமே இல்லை என்று நான் கூறுகிறேன். குறிப்பாக பல கோடி ரூபாய் செலவிட்டு 20 ஆண்டுகளுக்கு மேல் காத்திருந்து சில பேருக்கு வேலை வாய்ப்பு என்று மட்டுமே ஏற்படுமே தவிர நமக்கு மின்சாரம் நேரடியாக வந்து சேராது. அப்படியே வந்து சேர்ந்தாலும் கூட அது தொடர்ந்து நமக்குக் கிடைக்கும் என்ற உறுதியான நிலை இல்லை. ஆகவே இப்போது இருக்கின்ற அனல் மின்சாரத்தை அதிகப் படுத்துவதுடன், இங்கே இருக்கிற எண்ணெய் வளங்களையும், காஸ் வளத்தையும் பயன்படுத்தி அதிலே இருந்து மின்சாரம் தயாரிக்கிற வகையில் நிலையங்களை ஏற்படுத்துவது குறித்து நாம் கவனம் அதிகமாகக் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிகநிதி அதிலே ஒதுக்கித் தர வேண்டுமென்று இந்தச் சமயத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

13.20 மணி

என்னுடைய பகுதியிலே நீங்கள் பார்ப்பீர்களேயானால், ஏற்கெனவே அந்த மின் இணைப்பு ஈரோட்டிலே இருந்து வந்து கொண்டிருந்தது. இப்போது கூட அப்படித்தான் ஈரோட்டில் ஏதாவது தடை ஏற்பட்டால், ஆத்தூர் தாலுக்கா, கள்ளக் குறிச்சி தாலுக்கா, விருத்தாசலம் தாலுக்கா வரையில் தொடர்ந்து மின்சாரம் இராது. ஒரு பகுதியில் இந்த நிலை. இன்னொரு பக்கத்திலே, திருச்சியோடு இணைக்கப்பட்டிருக் கிறது. அதனாலே குறிஞ்சிப்பாடி, வடலூர், விருத்தாசலம், நெய்வேலி பக்கத்தில் உள்ள பகுதிகளில், அரியலூரில் ஏதாவது ஏற்பட்டு விட்டால், மின்சாரம் தொடர்ந்து கிடைக்காத சூழ்நிலை இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் பல இடங்களில்



கொடுத்து வைத்தவர்கள் இருக்கிறார்கள். அதாவது, நகரத்தை ஒட்டி இருக்கின்ற விவசாயிகள் முழு நேரமும் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். 75 ரூபாயிலிருந்து 50 ரூபாயாக ஒரு குதிரைச் சக்திக்கு என்று குறைக்கப்பட்டது அவர்களுக்கு மிகுந்த வரவேற்கத்தக்கதாக இருக்கிறது. மற்ற கிராமப் புறங்களில் இருக்கின்றவர்களைப் பொறுத்தவரையில், கிணற்றில் தண்ணீர் இல்லை. தண்ணீர் வரும்போதுகூட, அவர்கள் விரும்பும்போது அந்த மின்சாரம் கிடைப்பதில்லை. பகல் நேரத்திலே வராது, இரவு நேரத்திலும் வராது. எப்போது வருமென்று சொல்ல முடியாது. (மணி அடிக்கப் பெற்றது) தொடர்ந்து எந்தெந்தக் காலத்தில் மின்சாரம் வருமென்று சொல்ல முடியாத சூழ்நிலை இருப்பது தவிர்க்கப்பட வேண்டும். குறிப்பாக நகரங்களை ஒட்டி இருக்கின்ற அந்த விவசாயிகளுக்குக் கிடைப்பதைப் போல, ரூரல் பகுதிகளில் இருக்கும் விவசாயிகளுக்கும் மின்சாரம் கிடைக்க ஏற்பாடுகளைச் செய்வதற்கு முயற்சிகளை எடுக்க முடியுமா என்று அரசு எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, செலவினங்கள் அதிகமாக ஏற்படுகிறது. வேண்டாத பண்டங்களை வாங்கி வைக்கிறார்கள். அதைக் கட்டுப்படுத்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். தொடர்ந்து சொல்லுகிறோம் டிரான்ஸ்மிஷனிலே அதிக லாஸ் வருகிறதென்று. 11 சதவீதத் திலிருந்தது, 15 சதவீதமாக வந்தது, 16 சதவீதமாக வந்தது, இப்போது 19 சதவிகிதம் டிரான்ஸ்மிஷன் லாஸ் இருக்கிறது. அதைக் குறைக்க என்ன ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதைப்போல கிராமங்களிலே இருக்கிற விவசாயிகளுக்கு மட்டுமல்ல, நகரங்களிலே உள்ள சாதாரண மக்களுக்கு மின் இணைப்பு கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. (மணி அடிக்கப் பெற்றது) இங்கே வா, அங்கே வா, அவர்களைக் கேளுங்கள், இவர்களைக் கேளுங்கள் என்று சொல்லு கிறார்கள். அந்த நிலை மாற வேண்டும். அவர்களுக்கு மின் இணைப்பு விரைந்து கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நெய்வேலியை ஒட்டி யுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் கீழ் மட்டத்திற்குப் போய் விட்டது. 200 அடிக்குக் கீழே இருக்கிறது. ''போர்'' போட் டால்தான் தண்ணீர் எடுக்க முடியும். அதற்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவாகிறது. அந்த போர்களுக்கு தனிக் கவனம் செலுத்தி, முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத் தில் சொல்லிக்கொள்கிறேன். ஏராளமான பல்க் கன்ஸ்யூமர்ஸ் பணம் கட்டாமல், கால தாமதமாக்கி, கோர்ட்டுக்கு எல்லாம் போயிருக்கிறார்கள். அவர்களிடம் மின் திருட்டு அதிகமாக இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். எந்த அளவுக்கு மின் திருட்டு இருக்கிறதென்பதை எல்லாம் விளக்குவதற்கு நேரமில்லை.

பல கோணங்களிலே அவர்கள் செய்யக் கூடிய நிலை இருக்கிறது. சில இடங்களில் மீட்டர்களை நிறுத்த ஒன்றை வைத்திருக்கிறார்கள். அதை மீட்டர் மேலே வைத்தால், மீட்டர் ஓடாது. அதை எடுத்து விட்டால் மீட்டர் ஓடும். மீட்டரிலே கூட கோளாறு செய்யும் அளவுக்கு இருக்கிறது. பல்க் கன்ஸ்யூமர்ஸ் பணம் கட்டாமல் இருந்தாலும், தொடர்ந்து மின்சாரம் அளித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பாக்கியை, நிலுவையை வசூலிக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? பல கோடி ரூபாய் நிலுவையாக இருக்கிறது. அவற்றை வசூலிக்க தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, மின் இணைப்பு கோருகிறவர்களுக்கு காலதாமதமாக்காமல் மின் இணைப்பு அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, என் வார்த்தைகளை முடிக்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையிலே விவாதத்திலே இருக்கும் மின்சார நிதிநிலை அறிக்கையின் மீது சுருக்கமாக, நேரம் இல்லாத காரணத்தால், ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். ஏற்கெனவே என்ன விலை கொடுத்தாவது மின்சாரத்தை நாம் உற்பத்தி செய்ய வேண்டுமென்று, வாங்க வேண்டுமென்று, மாமேதை லெனின் சொன்னதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இன்றைக்கு எல்லாவிதமான தொழில்களுக்கும் மின்சாரம் மிக மிக அவசியமாக இருக்கிறது. இப்போதிருக்கிற உற்பத்தித் தேவையிலே 50 சதவிகிதம்தான் உற்பத்தியாகிறது. அதிகமான உற்பத்திக்கு எந்தெந்த வழிகளில் மின்சார உற்பத்தியைப் பெருக்கலாம் என்பதைப் பற்றி எல்லாம் மின்சார வாரியம் வேண்டிய ஆலோசனைகளைச் செய்து, திட்டமிட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு வேண்டிய உதவிகளை அரசு செய்ய வேண்டும்.

இப்போது புதிதாக வடசென்னையிலே மின் நிலையம் தொடங்க ஏற்பாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏற்கெனவே நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் 1–7–1989-ல் அடிக்கல் நாட்டினார்கள். அதனுடைய வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டும். அதுமட்டுமல்ல. இன்றைக்கு பொதுப் பணித்துறை அமைச்சரவர்களும், மின்சாரத்துறை அமைச்சரவர்களும் ஒருவராகவே இருப்பதால், இந்தப் பணிகளை எல்லாம் வேகப்படுத்தி, மின் உற்பத்தியை—தமிழ்நாட்டு தொழில் வளர்ச்சிக்கோ, விவசாயப் பெருக்கத்திற்கோ தேவையான மின் உற்பத்தியை—பெருக்க வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



13–25 மணி

சமீப காலமாக நம்முடைய மின்வாரியம் எந்தவிதமான வெட்டும் இல்லாமல் மின்சாரத்தை ஓரளவு சீராகக் கொடுத்துக் கொண்டு வரக் கூடிய அந்த ஏற்பாட்டுக்காக அந்த வாரியத்தைச் சேர்ந்த அத்தனை பேருக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதே நேரத்தில் இன்றைக்கு நாம் மின்சாரத்தை பல்வேறு தொழில்களுக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டியது இருப்பது மட்டுமல்லாமல், விவசாயத்துக்கு இன்றைக்கு 4·7 இலட்சம், ஏறக்குறைய 5 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் பெறுவதற்காக மனுச் செய்து விட்டு நிலுவையில் 'காத்துக் கொண்டு இருப்போர் பட்டியலில், இருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு வேறு தொழில்கள் என்று சொன்னால் அவைகளை ஜெனரேட்டர் வைத்து நடத்திக் கொள்ளலாம். ஆனால் விவசாயத்திற்கு அப்படிச் செய்ய முடியாது. எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்ன மாதிரி வருடத்துக்கு 40 ஆயிரம் மனுக்கள் வருகிறது என்றால், அவர்கள் 10 வருடங்களுக்குக் காத்து இருக்க வேண்டும். ஆகவே விவசாயத்துக்கு மின்சாரத்தை துரிதமாக முன்னுரிமை அடிப்படையிலே கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நெய்வேலியிலே புதிதாக மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. நெய்வேலியில் கிடைக்கிற பழுப்பு நிலக்கரி மூலம் மின்சாரத்தை உற்பத்தி பண்ணும்போது அதில் நமக்கு எவ்வளவு பங்கு, மத்திய சர்க்காருக்கு எவ்வளவு பங்கு என்பதை முன்கூட்டியே நாம் நிர்ணயம் செய்து கொள்வது சரியாக இருக்கும்.

நமக்கு சிங்கரேணியிலிருந்து வரக்கூடிய நிலக்கரிக்கும், ஒரிசாவிலிருந்து இப்போது வரக்கூடிய நிலக்கரிக்கும் ஏறக்குறைய ஒரு டன்னுக்கு 300 ரூபாய் அதிகமாவதாகச் சொல்லப்படுகிறது. அதனால் நம்முடைய மின் வாரியத்துக்கு நஷ்டம் ஏற்படுகிறது. சிங்கரேணியிலிருந்து வரக்கூடிய நிலக்கரியை அதிகம் பெற முடியுமா என்பதைப் பற்றி நாம் தீவிரமாக முயற்சி செய்ய வேண்டும். இப்போது அங்கே அதிகமாக நிலக்கரி கிடைக்காமல், ஒரிசாவிலிருந்து அல்லது வேறு மாநிலத்திலிருந்து வரக்கூடிய காரணத்தால் நிலக்கரிக்கு ஒரு டன்னுக்கு 300 ரூபாய் அதிகமான செலவு ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது.

நெய்வேலியில் எடுக்கிற நிலக்கரிக்கு ராயல்டி பெறுகிறோம். ராயல்டியை நாம் பெறுவதோடு மட்டுமல்லாமல் வருடா வருடம் மின்சாரமும் நமக்குக் கிடைக்கிறது. அவர்கள் நமக்குக் கொடுக்கக்கூடிய மின்சாரத்துக்கு ஒரு ரேட் நிர்ணயம் செய்கிறார்கள். வருடா வருடம் அந்த ரேட் உயர்ந்து கொண்டு போவதாகச் சொல்லப்படுகிறது. எனவே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இந்த ரேட்டை 10 ஆண்டு காலத்துக்கு—ராயல்டி வராவிட்டாலும் பரவாயில்லை 10 ஆண்டு காலத்துக்கு—இந்த ரேட்டில் இந்த விகிதத்தில் தமிழ்நாட்டுக்கு மின்சாரத்தை அவர்கள் கொடுக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரிடம் ஒரு ஒப்பந்தந்தை நாம் செய்து கொள்வது சரியாக இருக்குமா என்பதைப் பற்றி நம்முடைய மின்வாரியம் ஆலோசனை செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு மின்சாரத்தைப் பல்வேறு விதத்தில் காற்றாடி மூலமாக, சூரிய ஒளி மூலமாக எடுக்க முடியும் என்றெல்லாம் சொன்னார்கள். அதற்கு எங்கெங்கு வாய்ப்பு இருக்கிறதோ அங்கேயெல்லாம் அந்தமாதிரி மின் உற்பத்திக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்தில் பல்வேறு ஆலோசனைகளைச் சொல்வதற்கு, முன்பு ஆலோசனைக் குழு இருந்தது. அப்போது அதிலே கூட நானும் உறுப்பினராக இருந்து இருக்கிறேன். இப்போதும் அந்த ஆலோசனைக் குழு இருக்கிறதா என்று தெரியவில்லை. ஏனென்றால் மின்சார வாரிய பட்ஜெட் அரசு பட்ஜெட் மாதிரி விவாதிப்பதற்கு மிகப் பெரியதாக இருக்கிறது. எனவே, அங்கு ஒரு ஆலோசனைக் குழு போட்டு, அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பேசின் பிரிட்ஜ். இப்போது நிலக்கரியிலிருந்து மின்சாரம் உற்பத்தி பண்ணுவதற்குப் பதிலாக கேஸ் மூலம் உற்பத்தி பண்ணலாம் என்று சொல்லப்படுகிறது. அப்படி அதை கேஸ் மூலமாக உற்பத்தி செய்யும் காலத்தில் பேசின் பிரிட்ஜில் உள்ள இடம்—நிலக்கரி கொட்டக்கூடிய இடம்—காலி ஆகும்; அந்த இடத்தை வேறு உபயோகத்திற்காகப் பயன்படுத்தலாம். அந்த இடத்திலே நம்முடைய தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க முடியும் அல்லது மின்வாரிய அலுவலகங்கள் தேவையானால் கட்ட ஏற்பாடு செய்யலாம் என்ற யோசனையையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிற ஒரு புதிய சட்டத்தின் மூலமாக பெண்களுக்கு 30 சதவீத வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று சொல



லப்பட்டு இருக்கிறது. இன்றைக்கு மின்வாரியத்தில் வாரிசுகளுக்கு வேலை என்ற அடிப்படையில் பணியாற்றக்கூடியவர்கள் ஏறக்குறைய 800 பேர் பெண்களாக இருக்கிறார்கள். இன்னும் வாரிசுக்கு வேலை வேண்டும் என்றும், எங்கள் கணவர் இறந்து விட்டார், எனவே, தங்களுக்கு வேலை வேண்டும் என்றும் கேட்டு வேலை இல்லாத பெண்கள் மனுச் செய்து இருக்கிறார்கள். அவர்களுக்கும் வேலை வாய்ப்புத் தர வேண்டும். சென்ற ஆண்டு சுமார் 400 பேர்களுக்கு வேலை தரப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அது பல்வேறு ஆண்களுக்கும், நிலம் கொடுத்தவர்களுக்கும், மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது.)

சென்ற ஆண்டு ஐ.டி.ஐ. படித்தவர்களுக்கு எல்லாம் வேலை கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. அது இன்று வரை கொடுக்கப்படவில்லை. அதற்கு என்ன செய்ய இருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

கடந்த காலத்தில் மின்வாரியத்தில் 90 ஆயிரம் பேர் வேலை பார்த்தார்கள். கன்சூமர் 30 இலட்சம் பேர் இருந்தார்கள். கன்சூமர்கள் இரண்டு மடங்கு உயர்ந்த பிறகு கூட அதே பணியாளர்கள் தான் இன்றைக்கும் இருக்கிறார்கள். எனவே, பணியாளர்களையும் அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்வாரியத்தில் கான்ட்ராக்ட் தொழிலாளர்கள் ஏறக்குறைய 15 ஆயிரம் பேர் வேலை செய்கிறார்கள். அவர்கள் அதிக நாட்களாக டெம்பரவரியாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வயது வரம்பு, கல்வித் தகுதி, இவைகளையெல்லாம் பாராமல் அவர்களுடைய அனுபவங்களையெல்லாம் ஒரு படிப்பாகக் கருதிக் கொண்டு அவர்களுக்கும் நிரந்தரமான வேலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

13-30 மணி

ஆங்கிலேயர் காலத்திலே கையெழுத்துப் போடத் தெரிந்தால் போதும். அவர் ஹெல்ப்பராக ஆகலாம்; ஒயர்மேனாகலாம்; லயன்மேன் ஆகலாம். அதற்குப் பிறகு என்ன செய்தார்கள் என்றால் காங்கிரஸ் ஆட்சியிலே 4ஆவது வகுப்பு வரைக்கும் படித்திருக்க வேண்டுமென்று கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே மாற்றம் இல்லை. அ.தி.மு.க. காலத்தில் ஐ.டி.ஐ. தகுதி பெற்றிருக்க வேண்டும்; வாரிசு என்று சொன்னால் 4ஆவது வகுப்பு படித்திருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இப்பொழுது வாரிசுக்குக் கூட எட்டாவது வகுப்பு படித்திருக்க வேண்டுமென்று

சொல்லுகின்ற நிலை வந்திருக்கிறது. வாரிசுதாரர்களுக்கு அந்த கன்டிஷன்களையெல்லாம் போடாமல் வேலை கொடுப்பதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

வருமானத்தைப் பெருக்கக்கூடிய முறையிலே ஸ்லாப் சிஸ்டத்திலே ரேட்டைக் கூட்ட வேண்டும். இன்றைக்குப் பார்த்தீர்கள் என்றால் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை இப்பொழுதுபில் தயார் செய்கிறார்கள். 500 யூனிட்டுக்கு மேலே உபயோகிக்கக்கூடிய ஏர் கண்டிஷன் வைத்திருக்கக்கூடிய இம்மாதிரி வசதி படைத்தவர்கள் எல்லாம் அதிகமாக ரேட்டைக் கொடுக்கலாம். தப்பு இல்லை. ஆகவே, அவர்களுக்கு இன்றைக்கு ஒரு யூனிட்டுக்கு இரண்டு ரூபாயாவது—இன்றைக்கு உற்பத்திச் செலவே ஒரு ரூபாய் 30 பைசா. நீங்கள் மலிவான ரேட்டிலே கொடுப்பது நியாயம் இல்லை. நான் கடந்த காலத்திலே இந்த அவையிலேயே பேசியிருக்கிறேன். மின்சாரத்தை உபயோகிப்பவர்களுக்குச் சாதாரணமாக 50 யூனிட்டுக்கு ஒரு ரேட்; 100 யூனிட்டுக்கு ஒரு ரேட்; 100-க்கு மேலே போகப் போக ஸ்லாப் சிஸ்டத்திலே அதிகமாக 500 யூனிட்டுக்கு மேலே உபயோகிக்கக்கூடியவர்களுக்கு கூடுதல் ரேட்—கூடுதல் கட்டணங்கள் விதிக்கப்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் ஒவ்வொரு வருஷமும் 400 கோடி, 300 கோடி பற்றாக்குறையாக இருக்கக்கூடிய நிலையைப் போக்குவதற்கு இதுதான் சரியான வழியாக இருக்கும். அந்த முறையிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

லைன் லாஸ் என்பது மட்டுமல்ல; மின்சாரத் திருட்டும் இன்றைக்குப் பல்வேறு இடங்களிலே நடந்துகொண்டு வருகின்றன. சாதாரண ஆட்கள் திருடுவது இல்லை. ஆகவே, மின்சாரத் திருட்டைக் கண்டுபிடித்து, அந்தத் திருட்டைப் போக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசனக் காலனிகளுக்கெல்லாம் இப்பொழுது கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் மணி அவர்கள்கூடச் சொன்னார்கள். அரிசனக் காலனிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். பலயிடங்களில் இன்றைக்குக் காலனி கட்டப்பட்ட இடங்களுக்கு லைன்கள் போடப்படாமலும், அந்த இடங்களிலே தெரு லைன்கள் போடப்படாமலும் இருக்கின்றது. சிலயிடங்களில் போடுகிறார்கள். முன்னுரிமை கொடுத்து, காலனி என்று சொன்னால், தாழ்த்தப்பட்டவர்களுடைய காலனிகளுக்கு முன்னுரிமை கொடுத்து வீடுகளுக்கு ஒரு லைட்டும்—இனாம் லைட்டும்—தெரு லைட்டும் போடப்பட வேண்டும் என்ற உத்தரவை மாண்புமிகு அமைச்சரவர்கள் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



விவசாயிகளின் பிரச்சினை சம்பந்தமாக கடைசியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த காலத்திலே பல்வேறு போராட்டங்களின் காரமணாகப் பல்வேறு கட்டணங்கள் பாக்கி இருக்கின்றன. எங்கள் பக்கத்திலே பல்வேறு கட்டணங்கள் பாக்கி இருந்ததன் காரணமாக, புது கனெக்ஷன் கொடுக்காமல் இருந்தது. பிறகு, மாண்புமிகு அமைச்சரவர்களும், சேர்மன் அவர்களும், எல்லோரிடத்திலும் சொன்னதற்குப் பிறகு இப்பொழுதுதான் புதியதாக அந்த இடத்திற்கு புதிய இணைப்புகளெல்லாம் வழங்கப்பட்டு வருகின்றன. ஆகவே, கடந்த காலப் பாக்கிகளிலே—ரசீது வைத்து இருக்கிறார்கள்; அதைக்கொண்டுபோய்க்காட்டினால் பாக்கி இல்லை என்று சொல்கிறார்கள். இல்லை என்றால் பாக்கியிருக்கிறது என்று சொல்கிறார்கள். ரசீதைக் கொண்டு போய்க் காட்டினால் ஒப்புக்கொள்கிறார்கள். கணக்குகள் சரியாகப் பலயிடங்களிலே இல்லாததன் காரணமாகப் பல்வேறு குழப்படிகள் இருக்கின்றன. ஆகவே, பழைய பாக்கிகளைப் பூராவும் விவசாயிகளுக்கு இருக்கிற பாக்கிகளை எல்லாம் ரத்து செய்து விட்டு, புதிதாக நீங்கள் போட்ட ஏ.சி., டி.சி., 50 ரூபாய் என்று சொல்லக்கூடிய அந்தக் கட்டணத்தை கட்டாயம் வசூல் செய்து பழைய பாக்கிகளை ரத்து செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிதாக இன்றைக்கு மின்சாரம் கேட்கக் கூடிய விவசாயிகளுக்கு, விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்க வேண்டும்.

எங்களுடைய புளியங்குளம் என்ற கிராமத்திலே ஒரு பெட்டிஷன் வந்து இருக்கிறது. அந்தக் கிராமத்திலே ஏற்கெனவே 40 விவசாயப் பம்பு செட்டுகள் ஓடாமல், விவசாயப் பயிர்கள் எல்லாம் நாசமாகிவிட்டன. மேலிருந்து உத்தரவு வந்திருக்கிறது; உங்கள் பக்கத்திலே பாக்கியிருப்பதன் காரணமாக அவைகளை நாங்கள் சீர் செய்ய முடியாது என்று அவர்கள் சொன்னதாகவும், ஆகவே, இதையெல்லாம் நீங்கள் அமைச்சரிடத்திலே சொல்லி, சீராக, உடனடியாக அதை ரிப்பேர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருப்பதாகவும் ஒரு பெட்டிஷன் வந்திருக்கிறது. பாக்கியிருப்பதற்காகச் செய்யாமல் இருக்கிறது.

ஒரு சில இடங்களிலே சீனியாரிட்டி அடிப்படையிலே போடுவதாக இருந்து, பிறகு அந்த சீனியாரிட்டியை நீக்கிவிட்டு போகிற வழியிலே இருக்கிற பம்புகளுக்குக் கொடுக்கலாம் என்று உத்தரவை மாற்றியதன் காரணமாகப் பலயிடங்களிலே தாமதம் ஆகிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆகவே, சீனியாரிட்டி அடிப்படையில்—கொடுத்த மனுவின் சீனியாரிட்டி அடிப்படையிலே துரிதமாக இன்றைக்கு நிலுவையிலே இருக்கிற 4,70,000 விவசாயப் பம்பு செட்டுகளுக்கு

நான்கைந்து ஆண்டுக்குள்ளாகவாவது மின்னிணைப்பு கொடுத்து விவசாய அபிவிருத்திக்கும், உற்பத்திப் பெருக்கத்திற்கும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன், வணக்கம்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, மின்சார மானியத்தினுடைய நிதிநிலை அறிக்கையின் மீது காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக என்னுடைய கருத் துக்களைக்கூற விழைகின்றேன். மாண்புமிகு மின்துறை அமைச் சரவர்கள் தன்னுடைய அறிக்கையிலே இந்த ஆண்டு மின் வெட்டு வராமலேயே சமாளித்து விட்டோம் என்று அறிவித் திருக்கின்றார்கள். ஆனால் அதேநேரத்திலே முன்பு இந்த அவையிலேயே மின்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு ஆற்காடு வீராசாமி அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலேயே மின் துறையினுடைய நிலைமையைப்பற்றிப் பேசுகிற நேரத்தில், தமிழகத்தினுடைய மின்சாரத்தேவை 4,000 மெகா வாட் என்றும் மின்சார உற்பத்தி 2,800 மெகா வாட் என்றும் 1,200 மெகா வாட் என்றும், பற்றாக்குறை என்றும் தன்னுடைய அறிக்கையில் குறி பிட்டார்கள்.

13-35 மணி

நமது மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு மின் வெட்டு வரவில்லையென்று பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார்கள். கடந்த ஆண்டு கல்பாக்கத்திலும், நெய்வேலி அனல் மின் நிலையத்திலும் அடிக்கடி பழுது ஏற்பட்ட காரணத் தால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக அடிக்கடி மின்வெட்டு வர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதை வைத்துக்கொண்டு, ஏதோ இந்த ஆண்டிலே மின் உற் பத்தியை பெருக்கி விட்டோம் என்று நாம் கருதிவிட முடியாது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் பல தொழிற்சாலைகள் மின் சப்ளை முறையாக கிடைக்காத காரணத்தால் இன்றைக்கு இயங்காமல் இருந்து கொண்டிருக்கின்றன. அதைப்போல பல்லா யிரக்கணக்கான தொழிற்சாலைகள் மின் இணைப்பு கொடுக்க முடியாததன் காரணமாக ஆரம்பிக்க முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில் அனல் மின் நிலையங்கள் இயங்குவதற்கு கிட்டத்தட்ட வருடத்திற்கு 6½ லட்சம் டன் நிலக்கரி தேவைப்படுகிறது. இப்போது தமிழகத்தினுடைய மின் வாரியம் ஒரிசாவிலிருந்தும், பீகாரி லிருந்தும் நிலக்கரியை இறக்குமதி செய்து கொண்டிருக்கிறது. தேசிய முன்னணியின் அரசு மாநிலத்தின் நிர்வாகத்தில் அதிக அக்கறை காட்டுகிறது என்று நம்முடைய தமிழக முதலமைச்சர் அடிக்கடி சொல்கிற காரணத்தால், தமிழகத்தின் முதல்வர் அவர்களின் முழுமையான செல்வாக்கைப் பயன்படுத்தி, போக்கு வரத்து செலவில் கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் மிச்சப்படுத்து



கிறவகையில், ஆந்திரப் பிரதேசத்தில் இருக்கிற சிங்கரேணியி லிருந்து நிலக்கரியை மேட்டூர், எண்ணூர் ஆகிய மின் நிலையங் களுக்கு இறக்குமதி செய்வதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது மின்வாரியம் ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 25 ஆண்டுக்காலத்தில் ட்ரான்ஸ் பார்மருடைய எண்ணிக்கை சுமார் 20,000-லிருந்து 70,000-ஆக உயர்ந்திருக்கிறது. அதைப்போல மின் கம்பியின் நீளம் கிட்டத் தட்ட இரண்டு மடங்காக உயர்ந்து இருக்கிறது. மின் உற்பத்தி கிட்டத்தட்ட 3 மடங்கு உயர்ந்து இருக்கிறது. 1966 ஆம் ஆண்டு மின் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை 65,000 ஆக இருந்தது. இப்போது 1989 ஆம் ஆண்டு முடிய மின் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை 95,000 ஆகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, எந்த அளவிற்கு நாம் மின் உற்பத்தியைச் செய்தாலும் கூட, மின்சாரத்தை தங்குதடையின்றி விநியோகம் செய்வதற்கு போதுமான ஊழியர்கள் தேவைப்படுகிறது. ஆகவே மின் வாரியத்தில் உடனடியான தேவையான ஊழியர்களை நியமிப் பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் இருக்கிற கிராமப்புறங்களில் ட்ரான்ஸ்பார்மர் கெபாசிட்டிக்கு அதிகமாக மின் இணைப்புகள் கொடுக்கப்படுகிற காரணத்தால் 'வோல்ட்டேஜ் ட்ராப்' ஏற்படுகிறது. இதன் காரணமாக கிராமங்களில் தெரு விளக்குகள் எரிவதில்லை. வீடுகளில் விளக்குகள் எரிவதில்லை. அதைப்போல மோட்டார் கள் ஓடுவது கிடையாது. இதற்கெல்லாம் காரணம் 'வோல்ட் டேஜ் ட்ராப்' இங்கே அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, மின்சார இணைப்புகளுக்குத் தகுந்தவாறு ட்ரான்ஸ் பார்மருடைய கெபாசிட்டியை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல ட்ரான்ஸ்பார்மர்களை அடிக்கடி பராமரிக்க வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் இருக்கிற கிராமங்களில், ஊராட்சி மன்றங்களின் மூலமாக சால்வன்சி எடுத்து கொடுத்தும் கூட தெரு விளக்குகள் அமைக்கப்படுவது கிடையாது. கிராமங்களில் தெரு விளக்குகள் ஏன் அமைக்கப்படவில்லை என்று மின் வாரியத்தில் கேட்கிற போது, எங்களிடத்தில் மின் கம்பங்கள் இருப்பு இல்லையென்று சொல்கிறார்கள். ஆகவே, மின்வாரியத்திற்குத் தேவையான மின் கம்பங்களை உங்களுடைய கட்டுமானக் கழகத்தின் மூலமாகவோ அல்லது கான்ட்ராக்ட் மூலமாகவோ உடனடியாக தயாரித்து, தெரு விளக்கு இல்லாத கிராமமே இல்லையென்று சொல்கிற அளவிற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

13-40 மணி

கிராமப்புறங்களில் விவசாயிகளுடைய பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படுகின்ற நேரத்தில் சிங்கிள் போல் சிஸ்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக பல பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்புகளைக் கொடுக்க முடியவில்லை. ஆகவே கடந்த ஆண்டு எந்தெந்த பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வேண்டும் என்று, கடந்த ஆண்டு முடிய, யார் எல்லாம் விண்ணப்பித்து இருக்கிறார்களோ, அவர்களுக்கு எல்லாம் உடனடியாக மின் இணைப்புக் கொடுப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் மீது நமது மின் வாரியம் போட்டு இருக்கிற பல்வேறு வழக்குகளை உடனடியாக வாபஸ் வாங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ‘ பி ’ லைசென்ஸ் எடுத்து தனியாக கான்ட்ராக்ட் செய்கின்றவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ‘ பி’ லைசென்ஸ் பெற்று, வயரிங் வேலை செய்கின்ற வயர்மேன்களுக்கும், அவர்களுடைய உதவியாளர்களுக்கும் அவர்கள் வேலை செய்கின்ற நேரத்தில் இறந்துவிட்டால் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்படுகின்ற வகையிலே, அரசு மற்ற தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுகின்ற நஷ்டயீட்டைப் போல, இந்தத் தொழிலாளர்களுக்கும் நஷ்டயீட்டை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி அனல்மின் நிலையத்தைப் பொறுத்தவரையில், அங்கே ‘பர்ஸ்ட் எய்ட் சென்டர்’ கிடையாது. அதே போன்று குடியிருப்புப் பகுதியிலே மருத்துவ வசதி கிடையாது. யாராவது ஒருவர் திடீரென்று விபத்துக்குள்ளாகி விட்டால், அவர்களைக் கொண்டு செல்வதற்கு ஆம்புலன்ஸ் வண்டியும் கிடையாது. இப்படிப்பட்ட நிலை அந்த அனல் மின் நிலையத்திலே இருந்து கொண்டிருக்கிறது.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலே பெரும்பாலும் கான்ட்ராக்ட் தொழிலாளர்கள்தான் வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அதிகமாக ஊழல் நடப்பதற்கு ஏதுவாக இருக்கிறது. ஆகவே அவர்களை எல்லாம், அந்த கான்ட்ராக்ட் தொழிலாளர்களை எல்லாம் உடனடியாக நிரந்தரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த மார்ச் மாதம் 5ஆம் தேதியன்று, தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலே நான்காவது யூனிட் கட்டுமானப் பணியிலே ஒரு விபத்து நடைபெற்றது. அந்த விபத்திலே கிட்டத்தட்ட 6 தொழிலாளர்கள் பாதிப்புக்குள்ளாகி, இரண்டு



தொழிலாளர்கள் மரணம் அடைந்திருக்கிறார்கள். அந்த விபத்துக்குள்ளான 6 தொழிலாளர்களில், 5 தொழிலாளர்கள் 17 வயதுக்குட்பட்ட தொழிலாளர்கள். அதே நேரத்தில் அந்த விபத்து எப்படி நடைபெற்றது என்றால், அங்கே முறையாக இணைக்கின்ற கர்டர்களை ஒழுங்காக வெல்டிங் செய்யாததன் காரணமாக, தரம் குறைந்த வெல்டிங் ராட்களைப் பயன்படுத்தியதன் காரணமாக அந்த விபத்து ஏற்பட்டு இருக்கிறது. அதிகாரிகளும், கான்ட்ராக்ட்காரர்களும் ஒருவருக்கொருவர் உடந்தையாக இருக்கிற காரணத்தால், அதிகாரிகளுடைய நேர்மையற்ற குணத்தின் காரணமாகவும், அதிகாரிகளுடைய மெத்தனத்தின் காரணமாகவும் அந்த விபத்து ஏற்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக அந்தக் குழந்தைகளுக்கு கிடைக்கவேண்டிய ஆயுள்காப்பீட்டுக் கழகத்தின் மூலமாக கிடைக்கவேண்டிய ஈட்டுத் தொகையைக் கூட அவர்கள் பெற முடியாமல் போய்விட்டது. ஆகவே அரசு உடனடியாக தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலே ஏற்பட்ட அந்த விபத்திற்குக் காரணமாக இருந்த அதிகாரிகள், கான்ட்ராக்டர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்துறை மானியத்தின் மீது ஓரிரு கருத்துக்களை வழங்குகின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்தமைக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, ஓரிரு கருத்துக்களை உங்கள் மத்தியிலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மின்துறையைப் பொறுத்த வரையிலும், நாட்டிலேயிருக்கிற மக்களுடைய நலனைப் பேணிக் காக்கின்ற வகையில், தொழிற்சாலைகளாக இருந்தாலும், வேளாண்மைத் துறையாக இருந்தாலும், இந்த இரண்டு துறைகளுக்கும் தேவையானது, மிக முக்கியமானது இந்த மின்துறை என்பதை நாம் ஒப்புக் கொண்டு இருக்கிறோம்.

மாண்புமிகு தமிழகத்தின் முதல்வர், 1971-ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெற்ற மின்துறை நிகழ்ச்சி ஒன்றில் ஒரு கருத்தைச் சொல்கிறபோது—1971ஆம் ஆண்டு அவர்கள் அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டார்கள்— அப்படிக் கலந்து கொள்கிறபோது, 1972-ஆம் ஆண்டுக்குள் அத்தனை கிராமங்களுக்கும், அத்தனை இல்லங்களுக்கும், தமிழ் நாட்டில் இருக்கிற அனைவருக்கும், மின்னொளி பெற்றுத் தருவதற்கு இந்த அரசு முடிந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கும் என்று சொன்ன அந்தக் குறிப்பினை ஒரு கவிதையாகக் கூட நம்முடைய பொன்னுசாமி அவர்கள் நேற்றைய தினம் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகவே அந்த அளவிற்கு 1972

ஆம் ஆண்டு அது முடிந்து இருக்கிறதா என்றால் கிடையாது 1990 ஆம் ஆண்டாவது முடிவுற்று இருக்கிறாதா என்றால் கிடையாது. ஆனால் மக்களுக்கு மின் தேவை என்பது, நம்முடைய கிராமங்கள் வளர்ந்துகொண்டிருக்கிற நேரத்தில்.......

13-45 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தை, கொஞ்சம் தவறான முறையில், அவர்களுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொண்டு பேசுகிறார். அவர் குறிப்பிட்ட அந்தக் கூட்டம் மாண்புமிகு முன்னாள் முதல் அமைச்சர் அந்நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொருளாளர் எம்.ஜி. ஆர். அவர்களுடைய முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியாகும். அதற்கு முன்பு நான் இந்த அவையில் தமிழ்நாட்டிலே உள்ள எல்லா கிராமங்களுக்கும், 5 ஆண்டு காலத்திற்குள் மின் இணைப்புத் தரப்படும், மின் இணைப்பு இல்லாத கிராமங்களே இல்லையென்ற அளவிற்கு செய்யப்படும் என்று நான் அன்றைக்குச் சொன்னேன். அதற்கேற்ப முதல் மாவட்டமாக அப்பொழுதிருந்த செங்கற்பட்டு மாவட்டத்திற்கு முழுமையாக மின் இணைப்பு எல்லா கிராமங்களுக்கும் தரப்பட்டு அதனுடைய நிறைவு விழா அன்றைக்கு நடைபெற்றது. அதில் நானும் கலந்து கொண்டேன். அருமை நண்பர் எம். ஜி. ஆர். அவர்களும் கலந்துகொண்டார்கள். அதற்குப் பிறகு தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டமாக, கழக ஆட்சி 1976ஆம் ஆண்டு கலைக்கப்படுகிற நேரத்தில் தமிழ்நாடு முழுவதும் 500 கிராமங்களைத் தவிர மற்ற எல்லா கிராமங்களுக்கும், 20 ஆயிரம் ஆதிதிராவிடர் காலனியிலே, எல்லா காலனிகளுக்கும் மின் இணைப்பு, மின் விளக்குகளுக்காகத் தரப்பட்டு முடிந்துவிட்டது. எனவே, முழுமையாக முடியவில்லை, இன்னும் நிறையப் பாக்கியிருக்கிறது என்பதெல்லாம் ஒரு அங்கலாய்ப்பே தவிர வேறல்ல. இன்னும் நிறைய பாக்கியிருக்கிறது. நான் அப்பொழுது சொன்ன குறிக்கோள் கிராமங்கள், அந்த கிராமங்கள் அனைத்தும் முடிந்துவிட்டன.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். இன்றைக்கும் அது கொள்கைக் குறிப்பிலே இருக்கிறது. 197 கிராமங்கள் குடியிருப்புகள் இன்றும் மின் இணைப்பு வசதியில்லாமல் இருக்கிறது என்ற புள்ளி விவரத்தை நீங்கள் தந்திருக்கிறீர்கள். ஆகவே, அந்தக் கருத்தினை அடிப்படையிலேகொண்டுதான் நான் இந்த கருத்தைச் சொன்னேனே தவிர வேறு ஒன்றுமில்லை. அதே போல் மின் துறையைப் பொறுத்தவரையிலும் மாண்புமிகு மறைந்த தமிழகத்தின் முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் பல்வேறு திட்டத்தை



அன்றைக்கு நிறைவேற்றித் தந்தார்கள். அதற்குக் காரணம் தமிழ்நாட்டிலே மின் பற்றாக்குறை இருக்கக் கூடாது என்கிற அடிப்படையில் வேகமாக விரைவாக, நிறைவேற்றி அதற்கு ஒரு அமைச்சரை நிறுவுகிற காலத்தில், நீண்டநெடுங்காலம் அந்த அமைச்சர் அந்தத் துறையிலே இருந்து பணியாற்றி அந்த வாரியத்தினுடையத் தலைவராக இருக்கின்றவர்கள், நீண்டநெடுங்காலமாக தன்னுடைய அந்தப் பணியை ஆற்றுகிறபோது, மின் துறையைப் பொறுத்தவரையிலும், அதிலே ஏற்படுகிற இடர்பாடுகள் நீங்கவும், அதிலே போடப்படுகிற பல்வேறு திட்டங்கள் துரிதமாக அந்த மக்களுக்கு கிடைக்கவும் வேண்டும் என்கிற நல்லெண்ணத்தோடு அன்றைக்கு அந்தப் பணியைச் செய்தார்கள். ஆனால் நாம் இன்றைக்குப் பார்க்கிறோம். போன ஆண்டு மின் துறை அமைச்சராக ஒருவர் இங்கே இருந்தார்கள். இந்த ஆண்டு மின் துறை அமைச்சராக வேறொருவர் பொறுப்பேற்று இருக்கிறார்கள். ஆகவே இந்த நிலை ஏற்படுகிறபோது இன்று பணிகளில் தேக்கம் ஏற்படுவதோடு மக்களுக்கு சென்றடைய வேண்டிய மின்சாரம் தேவையான அளவிற்கு செல்லாமல், அவர்களுடைய தேவையை பூர்த்தி செய்கின்ற நிலைக்கு மாறான நிலை இன்றைக்கு ஏற்படுகின்றது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல் விவசாயத் துறையிலே நீங்கள் இன்றைக்கு மின் இணைப்பு வழங்கிக் கொண்டிருக்கிற நேரத்தில் அதிலே பல்வேறு சட்டங்களை வகுத்து, விவசாயிகளுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்குவதில்லை என்று விவசாய பெருங்குடி மக்கள் இன்றைக்கு பேசிக் கொண்டிருக்கிற நிலையை நாம் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கிறோம். ஒரு விவசாயி தன்னுடைய கிணற்றிலே மின்சார மோட்டாரை வைத்துக் கொண்டிருக்கிற நேரத்தில் அந்தக் கிணற்றிலே தண்ணீர் இல்லையென்று சொன்னால், ஒரு ஆழ் துளைக் குழாயை, 'கம்பிரஸர்', போன்றவற்றை அந்தக் கிணற்றிலே பொருத்துகிற நேரத்தில், அந்த மோட்டாருக்கு அவர்கள் இரண்டு 'ஸ்விட்சுகளைப்' போட்டு அங்கே மின்சாரத்தை 'சப்ளை' செய்கிறார்கள். 'சப்ளை' செய்கிறபோது இரண்டுக்கும் மின்சாரக் கட்டணத்தை வசூல் செய்கிற ஒரு நிலைமை இன்றைக்கு நிலவிக் கொண்டிருக்கிறது. அதைக் குறிப்பிலே எடுத்துக் கொண்டு நீண்ட நெடுங்காலமாக இந்த நிலையிருந்து கொண்டிருப்பதால் இதைத் தவிர்க்கும் வகையில் ஒரு 'ஸ்விட்சை'— 'சேன்ச் ஓவர் ஸ்விட்சைப்' போடுகிறபோது ஒரு மோட்டார் ஓடும் அல்லது அந்த 'கம்பிரஸர்' பொருத்தப்பட்டிருக்கிற அந்த மோட்டார் ஓடும். அந்த நேரத்தில் இரண்டுக்கும் மின்சாரக் கட்டணத்தை வசூல் செய்வது எப்படி நியாயமாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோலத்தான் ஒரு விவசாயினுடைய கிணற்றிலே இருக்கிற தண்ணீர் தீர்ந்துவிடுகிற நேரத்தில் பக்கத்திலே இருக்கின்ற ஒரு இடத்தில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கிறார்கள். அதற்கு பல தடைகள், இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. அந்த 'டிரான்ஸ்பார்மரில்' சர்வீஸ் இருக்கப்பட வேண்டும் அல்லது அந்த கிராமத்திலே அந்த சர்வீஸ் இருக்க வேண்டும் என்ற நிலையிருக்கின்ற நேரத்தில் அந்த விவசாயி தன்னுடைய கிணற்றிலே இருக்கின்ற மோட்டாரைக் கூட வேறு இடத்திற்கு மாற்ற முடியாமல் வறண்டு கிடக்கின்ற கிணற்றிலேயே அந்த மோட்டாரை வைத்துக் கொண்டு தன்னுடைய விவசாயத்தைச் செய்ய முடியாத ஒரு சூழ்நிலையிருக்கிறது. அதைக் கருத்திற் கொண்டு, அந்த 'டிரான்ஸ்பார்மரில்' சர்வீஸ் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அல்லது அந்த கிராமத்திலே சர்வீஸ் இருக்கிறதோ இல்லையோ அந்த விவசாயி தன்னுடைய சர்வீஸை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று கருதுகிறபோது, அதற்கு வேண்டிய தொகையை அந்த விவசாயி கட்டுகிறேன் என்று சொன்னாலும் கூட மின்சாரத் துறை அதற்குத் தடை ஏற்படுத்தி, சட்டச் சிக்கலின் காரணமாகத் தருவதற்கு மறுக்கிறார்கள். ஆகவே, விவசாயிகள் பெரும் கஷ்டத்திற்கு ஆளாகிற நிலைமையை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

13-50 மணி

நீண்ட நெடுங்காலமாக பயிராக இருக்கின்ற தென்னை மரங்கள் பல்வேறு பழ மரங்கள் எல்லாம் அங்கே விவசாயிகள் தங்களுடைய விளை நிலங்களிலே பயிர் செய்கின்றபோது தண்ணீர் இல்லாமல் அது வறண்ட நிலையிலே இருக்கின்ற ஒரு சூழ்நிலையும் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் விவசாயிகளுக்கு மின்சார சப்ளையை பகல் நேரங்களிலே 6 மணி நேரம் தான் இன்றைக்கு நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். 6 மணி நேரம் கொடுக்கின்றபோது அந்த விவசாயிகளுடைய கூலித் தொழிலாளிகளுக்கு 8 மணி நேரம் வேலை வாய்ப்பை நாம் அளிக்கலாம். தங்களுடைய பணிகளைச் செய்கின்ற விவசாயத் தொழிலாளிக்கு கால நேரம் 8 மணி நேரம். ஆனால் இங்கிருந்து அரசாங்கத்தால் கொடுக்கப்படுகின்ற, மின் வாரியத்தின் மூலமாக கொடுக்கப்படுகின்ற மின்சாரம் பகலிலே 6 மணி நேரம் அந்த விவசாயிகள் தங்களுடைய மின்சாரத்தை 6 மணி நேரம் பயன்படுத்துகின்றபோது 2 மணி நேரம் அந்தப் பணியாளர்களை எந்தப் பணியிலே வேலையிலே, அவர்களை அமர்த்த முடியும் என்பதையும் இந்த அரசு சிந்திக்க வேண்டும். அதே நேரத்தில் பல்வேறு தொழிற்சாலையை நடத்துகின்றவர்கள் கோடிக்கணக்கான ரூபாயை இன்றைக்கு அரசிற்கு கட்டவேண்டிய மின் தொகையைக் கூட கட்டாத இந்த நேரத்தில் அதற்கு அரசாங்கம் உடனடியாக



நடவடிக்கை எடுத்து மின்சாரத் துறையைச் சார்ந்தவர்கள் அந்த மின் துண்டிப்பை ஏற்படுத்துகிறார்களா என்றால் இல்லை. ஆனால் ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தில் தங்களுக்குக் கட்ட வேண்டிய 25 ரூபாய் அல்லது 75 ரூபாய், 100 ரூபாய், 200 ரூபாய் இருக்கிறது என்று சொன்னால், அந்த மின் கட்டணத்தைக் கட்டவில்லை என்றால் உடனடியாக அந்த மின்சாரத்தை துண்டிக்கிறார்கள். ஆனால் கோடிக்கணக்கான ரூபாயை முதலாகக் கொண்டு நடத்துகின்ற தொழிலுக்கு மின்சாரக் கட்டணத்தை பாக்கி வைத்திருக்கும் முதலாளிகள் மீது இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? மின்சாரத்தை உடனடியாக அவர்களுக்குத் தடை செய்து, அந்தப் பணத்தைக் கட்டியதற்குப் பிறகு அவர்களுக்கு மின்சாரம் வழங்குகின்ற நிலையை இந்த அரசாங்கம் விரைவாக செயல்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட நிலையில் எத்தனை தொழிற்சாலைகள்—இன்றைக்கு வரையிலும் கோடிக்கணக்கான ரூபாயைக் கட்டாமல் இருக்கின்ற தொழிற்சாலைகள் எவ்வளவு இருக்கின்றன என்ற புள்ளிவிவரத்தை அமைச்சர் அவர்கள் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே போலத்தான் மின்சாரத்துறையில் பல்வேறு இடர்பாடுகள் இன்றைக்கு இருந்துக்கொண்டிருக்கின்றன. ஒரு வீட்டை வைத்துக்கொண்டு இருப்பவன் ஒரு வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டுமென்று சொன்னால், அந்த மின் இணைப்பு பெறுகின்ற போது அன்றைய ஆட்சிக் காலங்களிலே புரட்சித் தலைவருடைய ஆட்சிக் காலங்களில் 2 பேர்கள் மனுச் செய்தால் ஒரு கம்பம் அல்லது 2 கம்பங்கள் அதற்குத் தேவையான உபபொருட்கள் கம்பிகள், மீட்டர்கள் பொருத்தப்பட வேண்டும் என்று சொன்னால் அனைத்தும் இலவசமாக அவர்கள் அன்றைக்கு செய்து தந்தார்கள். ஆனால் மின் துறையில் இன்றைக்கு நாம் பார்க்கிறோம். மின் துறையைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு ஒரு கம்பம் போட்டாலும் சரி அல்லது 2 கம்பங்கள் போட்டாலும் சரி 10 விண்ணப்பங்கள் இங்கே கொடுத்தாலும்கூட அந்த 10 விண்ணப்பங்களையும் பெற்றுக் கொண்டு அதற்குள்ள தொகையை 10 விண்ணப்பங்களுடைய வீடுகளில் யார் மின் இணைப்பு வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்களோ அவர்கள் கட்டுவதற்குத் தயாராக இருந்தால் தான் அந்த மின் இணைப்பு கொடுக்கப்படும் என்ற நிலை இன்றைக்கு நிலவிக்கொண்டிருக்கிறது. புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே தான் குடிசைகளுக்கெல்லாம் மின் ஒளி வழங்க வேண்டுமென்று ஒரு திட்டத்தை வகுத்துத் தந்தார்கள். அன்றைக்கு எல்லாம் மின் ஒளி கொடுக்கின்ற நேரத்தில் கிராமத்திலே, ஊராட்சி மன்றங்களிலே இருக்கின்ற பல்வேறு குடிசைகளுக்கு எல்லாம் வழங்கினார்கள். பேரூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படவில்லை. அதே போல நகராட்சியிலே இருக்கின்ற இடங்களுக்கு எல்லாம் அன்றைக்கு படிப்படியாக அந்தத் திட்டங்

களை அமல்படுத்துகிறேன் என்று சொல்கிற போது ஒரு ஆண்டுக்கு 50,000 குடிசைகளுக்கு மின் ஒளி வழங்குகின்ற நேரத்தில் மேலும் தொடர்ச்சியாக பேரூராட்சிகள், நகராட்சிகளுக்கும் அந்த மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுகின்ற போது அந்தத் திட்டங்களை வெகு வேகமாக விரைவாக நிறைவேற்றி விவசாயிகளுடைய குறையைத் தீர்க்கின்ற வகையில் செய்ய வேண்டும். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு புதிதாக மின் சாரத் துறையில் புதிய தெரு விளக்குகள் போடவேண்டுமென்று சொன்னால் அங்கிருந்து அதற்குத் தேவையான உப பொருட்கள் அனுப்பப்படுவது இல்லை. உப பொருட்கள் இல்லாத காரணத்தால், மெட்டீரியல்ஸ் இல்லாத காரணத்தால் அங்கே 1-4-1990-ம் ஆண்டு வரையிலும் அவர்கள் ஊராட்சி மன்றத்திலோ, நகராட்சி மன்றங்களிலோ வீதி விளக்குகளை புதியதாக அமைக்க வேண்டும் என்று சொல்கின்றபோது அதை அமைக்கின்ற நேரத்தில் அந்த மெட்டீரியல்ஸை கூட அவர்கள் வாங்கி வைத்தாலும் குழல் விளக்குகள், அதற்குத் தேவையான உப பொருள்களை வாங்கி வைத்தாலும் அதைப் பொருத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. மின்சார வாரியத்திலிருந்து ஆணை பிறப்பிக்காத காரணத்தால் இந்த நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறேன்.

மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் பல்வேறு இடர்பாடுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. மதுரை மாநகராட்சியில் இன்றைக்கு மின் கட்டண பாக்கிக்காக வட்டி விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் இன்றைக்குத் தடை வாங்கியிருக்கிறார்கள். ஆனால் மின்சாரத் துறை அந்த வட்டியை ரத்து செய்துவிட்டு அவர்களுக்கு மின் இணைப்பைத் தரவேண்டும் என்று சொல்கின்ற போது அதை கெடுபிடியாக வசூல் செய்கின்ற போது மின் இணைப்பையே துண்டிக்கின்ற ஒரு நிலைமை இருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரியார் மாவட்டம், திருச்சி, சேலம் போன்ற பகுதிகளில் விவசாயத்திற்குத் தேவையான மின் இணைப்பு வேண்டும் என்று கேட்டு 1982-வது ஆண்டு மனு போட்டவர்களுக்கு இன்று வரையிலும் மின் இணைப்புத் தரப்படவில்லை. கிணறு வெட்டியிருக்கிறார்கள். ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து இருக்கிறார்கள். ஆகவே இந்த 3 மாவட்டங்களையும் கருத்திலே கொண்டு உடனடியாக 1982-ஆவது ஆண்டு இருக்கின்ற விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்து வேறு மாவட்டங்களில் இருப்பதைப் போல 1986-ஆவது ஆண்டு வரையிலும் உடனடியாக மின்



இணைப்பு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு இங்கே பேரவைத் தலைவர் தலையை அசைத்துக்கொண்டே இருக்கின்ற காரணத்தினாலே உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

13-55 மணி

**மாண்புமிகு திரு. துரைமுருகன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் துறை கொள்கைக் குறிப்பின் மீது சுமார் 12 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மின் துறை எப்படியாகிவிட்டது என்பதற்கு, இன்றைக்கு நடக்கிற இந்த விவாதமே ஒரு எடுத்துக்காட்டு. பசி இருந்தால்தான் சாப்பாட்டைப் பற்றி ஞாபகம்வரும். செலவு இருந்தால்தான் பணததைப் பற்றி ஞாபகம் வரும். மின் வெட்டு இருந்திருக்குமானால் இந்த நேரம் இதைப் பேசவேண்டும் அதைப்பேச வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களே துடித்திருப்பார்கள். மின் வெட்டே இல்லை. காரணம் (குறுக்கீடு) (சிரிப்பு) பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நீங்கள் மட்டும் சிரித்தால் போதுமா ? எங்களுக்குச் சொல்லிவிட்டுச் சிரியுங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்** : பேச்சிலும் மின் வெட்டு இல்லை என்கிறார் முதல்வர் அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னார்கள்—ஜோடி இல்லாத மாடப்புறா, சேடி இல்லாத ராஜகுமாரியைக் காணமுடியாது என்றார்கள். தமிழ்நாட்டில் மின் வெட்டு இல்லாத கோடையைக் காண முடியாது. கோடை வந்தால் மின் வெட்டு இருக்கும். ஆனால், மின்வெட்டே இல்லாத ஒரு ஆண்டை சிருஷ்டித்துக் காட்டிய பெருமை நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்குத் தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி).

1985-லே ஆரம்பித்த மின்வெட்டு இடைவிடாமல் 1986-லே வெட்டு, 1987-லே வெட்டு, 1988-லும் வெட்டு, 1989-லே நாங்கள் வந்த நேரம் வெட்டு. 1990-லே வெட்டு இல்லை. ஆகையினாலே 'ஊனமுற்றோர் ஆண்டு', 'இளைஞர் ஆண்டு', 'மகளிர் ஆண்டு' என்றெல்லாம் கொண்டாடுவதைப் போல, தமிழ்நாட்டில் மின்வெட்டே இல்லாத ஆண்டு இந்த 1990 என்று கொண்டாட வேண்டிய நிலையை உருவாக்கி வைத்திருப்பவர் நம்முடைய முதல்வர் என்பதிலே நாம் பெருமைப்படவேண்டும். இடீரென்று யாராவது எழுந்து கேட்பார்கள். இது எப்படி,

அப்படிச் சொல்லிவிட்டீர்கள், '10 சதவிதம் எச்.டி.யிலே 'ஆன் டிமாண்ட்கால்'-லே ஒரு வெட்டு இருக்கிறதே', என்று கேட்கலாம். வைத்திருக்கிறோம். அதைக் கூட வேண்டுமானாலும் நாங்கள் எடுத்துவிடத் தயார். ஆனாலும் ஒரு திருஷ்டிப் பரிகாரமாக, திருஷ்டி வந்துவிடக் கூடாதே என்பதற்காக. ஏனென்று கேட்டால் நாட்டிலே அப்படிபபட்ட நிலைமைகள். எனவே, அதற்கு ஒரு திருஷ்டிப் பரிகாரமாகத் தான் நாங்கள் அதை வைத்து இருக்கிறோம். (குறுக்கீடு) திருஷ்டிப் பரிகாரம் உங்களுக்குத் தான். எங்களுக்காக இல்லை. நீங்கள் கொஞ்சம் நினைத்துப் பார்க்கவேண்டும். இது மின் வெட்டு இல்லாத ஆண்டு என்று சாதாரணமாகச் சொல்லிவிடலாம். அந்த நிலைக்கு வருவதற்கு எவ்வளவு முயற்சிகளை இந்த அரசு, இதனுடைய முதல்வர் எடுத்திருப்பார் என்பதை எண்ணிப் பார்த்தால்தான் நாம் கடந்து வந்த பாதை, நாம் சந்தித்த எதிர்ப்புகள் எவ்வளவு என்று தெரியும்.

1985-லே இருந்து இருக்கிறது. சென்ற ஆண்டு—சொல்கிறேன்—1989 ஆம் ஆண்டு மின் சக்தி வெட்டு 60 சதவீதம். இந்த ஆண்டு இல்லை. சென்ற ஆண்டு விவசாயத்திற்கு பகலிலே 4 மணி நேரம், இரவில் 4 மணி நேரம். இன்றைய கழக அரசில் பகலில் 6 மணி நேரம். இரவில் 8 மணி நேரம். நகர்ப்புற மின் துண்டிப்பு சென்ற ஆண்டு நாள் ஒன்றுக்கு 3 மணி நேரம். இந்த ஆண்டு மின் துண்டிப்பே இல்லை. நாள் ஒன்றிற்குப் பயன்படுத்துகிற மின்சார சக்தியினுடைய அளவு, சென்ற ஆண்டு 45.5 மில்லியன் யூனிட்டுகள். ஆனால் இந்த ஆண்டு 60.5 மில்லியன் யூனிட்டுகள். மின் உச்சத் தேவை சென்ற ஆண்டு 2,500 மெகாவாட். இந்த ஆண்டு 3,000 மெகாவாட். ஆக, ஒரே ஆண்டில் 60 சதவீதம் மின் வெட்டைத் தாண்டி, இன்றைக்கு இந்த மாநிலத்தைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார் முதல்வர் என்று சொன்னால் இதற்காக எடுத்துக்கொண்ட முயற்சி கொஞ்ச நஞ்சமல்ல. நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். தென்னகத்தில் இருக்கிற ஆந்திரா. அங்கிருந்துதான் சிங்கரேணியிலிருந்து நமக்குக் கரியே கிடைக்கிறது. நம்மிடத்திலே ஒரு கிலோ கரி கிடையாது. ஆட்டுக்கறியைத் தவிர. ஆனால் இன்றைக்கு ஆந்திர மாநிலத்திலே என்ன நிலைமை தெரியுமா ?

14-00 மணி

நேற்றைக்கு நான் புள்ளிவிவரத்தை வாங்கிப் பார்த்தேன். அங்கே எனர்ஜி கட் 80 சதவீதம் ஆந்திராவில்; டிமாண்டு கட் ‥ சதவீதம். கர்நாடகத்தில் 50 சதவீதம் எனர்ஜி கட்; டிமாண்டு கட் 20 சதவீதம். அதேபோல் கேரளாவிலும் 'அன்டிக்ளார்டு மின்வெட்டு'. ஆகவே இவ்வளவு பெரிய சோதனைகளை கடந்து வந்து இருக்கிறோம். ஆனால் நீங்கள் நினைக்கலாம், இவைகள்



எல்லாம் திடீர் என்று ஏதோ ஒரு நாளைக்கு ஒரு அதிசயம் நடந்துவிட்டதாக இல்லை. அதிசயமே நடக்கிறது நாட்டில். காரணம் கத்திரியிலேயும் கன மழை பொழிவது கலைஞருடைய ஆட்சியில் தான். வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. சென்ற ஆண்டு நமக்கு இருந்த சோதனை கொஞ்ச நஞ்சமல்ல. 60 சதவீதம் மின் வெட்டு இருந்தது.

எண்ணூரில் 3 யூனிட்டுகள் பழுதடைந்து விட்டன. எண்ணூரில் அனல் மின் நிலையத்திலே 110 மெகா வாட் திறன் கொண்ட ஐந்தாவது பிரிவு ஜெனரேட்டர் பழுதடைந்துவிட்டது. கல்பாக்கம் அணு மின் நிலையத்திலே 355 மெகா வாட் பிரிவுகள் இரண்டும் பழுதடைந்து விட்டன. திருப்பெரும்புதூர் மின் நிலையத்திலே 135 எம்.வீ.ஏ. மின் மாற்றி பழுதடைந்துவிட்டது. நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையத்திலே உற்பத்தி சீராக இல்லாமல் சீர்குலைந்து போய் விட்டது. ராமகுண்டம் அனல் மின் நிலையத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு மின் சக்தி கொண்டு வருகிற 400 கிலோ வோல்ட் டவர்கள் சூழல் காற்றால் கீழே விழுந்துவிட்டன. ஆகவே, எண்ணூரில் யூனிட்டு வேலை செய்யவில்லை; கல்பாக்கத்தில் வேலை செய்யவில்லை; நெய்வேலியும் கைவிட்டுவிட்டது; திருப்பெரும்புதூர் நிலையமும் பழுதடைந்து விட்டது; ராமகுண்டத்திலிருந்து மின்சாரம் வருகிற அந்தக் கம்பங்களும் சாய்ந்து விட்டன. இவ்வளவு பெரிய நிலையில் 60 சதவீதம் மின் வெட்டு.

மாண்புமிகு கலைஞர் அவர்கள் அபிமன்யூ என்ற ஒரு படத்தில் எழுதினார். அதிலே ஒரு வசனம் வரும். அபிமன்யூ களத்திலே நிற்பான், சக்கர வியூகம் வகுத்து அவனை கௌரவர்கள் கீழே தள்ளப் பார்க்கிறார்கள், குதிரைப் படைகள் பொடிப்பட்டு; வேழப்படைகள் பொடிப்பட்டு; வேல்படைகள் முறிப்பட்டு நிற்கிறான அபிமன்யூ. எல்லாம் முடிந்துவிட்ட நேரத்தில் அபிமன்யூ ஒரு கேள்வியைக் கேட்டான்; உடைந்த வாளேனும் ஒன்று கொடுங்கள் ன் என்று சூழ்ந்து நிற்கிற படையை சுக்குநூறாக ஆக்கிக் காட்டுகிறே ற அத்தனையும் அபிமன்யூ கர்ஜிப்பான். அப்படி தான் சூழ்ந்து இருக்கி ஓடாத பழுது அடைந்துவிட்டது, கலைஞர் கேட்கிறார்தை யூனிட் ஏதேனும் ஒன்று கொடுங்கள் நான் மின்சார த்ன் உற்பத்தி செய்து காட்டுகிறேன் என்று கேட்டு இன்றைக்கு மி சா வெட்டு இல்லாமலே செய்து இருக்கிற பெருமை கழக அரசைச் ரும். அந்த அரசிடம் தான் இன்றைக்கு அது இல்லை, இது இல்லை, என்று எல்லாம் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிற ர்கள்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் சொன்னார், கம்பரசர்களைப் போடுகிறார்கள், ஆனால் அதன் மோட்டாருக்கு ஒரு வரியைப் போடுகிறீர்கள், ஏற்கனவே இருக்கிற மோட்டாருக்கு வரி போடுகிறீர்களே நியா

யம்தானா என்றார். நாங்களா போட்டோம்? நீங்கள் போட்டு
வைத்தீர்கள். இன்றைக்கு நான் அந்தச் சட்டத்தை தூள் ஆக்கப்
போகிறேன் என்னுடைய அறிவிப்பில் என்பதை நான் உங்களுக்கு
தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மின்சாரத்திலே
என்றைக்கும் இல்லாத நிலையில் இன்றைக்கு மின் வெட்டு
இல்லாமலே செய்து விட்டார். ஆனால் என்றைக்கும் மின்
வெட்டு இல்லாமல் இருக்க வேண்டுமானால் மின் உற்பத்தி
செய்வதில் நாம் கவனம் செலுத்தவேண்டும். அந்த தொலை
நோக்குப் பார்வைவேண்டும். அந்தப் பார்வை இருக்கிற
காரணத்தால் தான் மாண்புமிகு கலைஞர் அவர்கள் அதற்கான
திட்டங்களை வகுத்து இருக்கிறார்கள். இந்த அரசு அதில்
எவ்வளவு முனைப்பாக இருக்கிறது என்பதற்கு ஒரு உதார
ணத்தைச் சொல்கிறேன். எட்டாவது ஐந்தாண்டு திட்டக்
காலத்திலே வட சென்னையில் ஒரு புது அனல் மின் நிலையம்
நிறுவ மத்திய திட்டக் குழு 1986-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்
அனுமதி அளித்தது. நீங்கள் இந்த ஆண்டை கோடிட்டுக்
கொள்ளவேண்டும். 1986-ஆம் ஆண்டு அனுமதி அளிக்கிறது;
வட சென்னையில் அனல் மின் நிலையம் விரிவாக்கத்திற்கு. இந்த
நிலையத்தை நிறுவ செங்கை-அண்ணா மாவட்டத்திலுள்ள
எண்ணூர், மற்றும் புழுதிவாக்கம் ஆகிய கிராமங்களில் 2,180
ஏக்கர் நிலம் தேவைப்பட்டது. நிலத்தை கையகப்படுத்த அரசு
எடுத்த நடவடிக்கைகளுக்கு வழக்கமாக நிலச் சொந்தக்காரர்
கள் நீதிமன்றத்திற்குப் போவது போல் போனார்கள். அப்
போது இருந்த ஆட்சியும் அதை விட்டுவிட்டது. ஆனால்
மாண்புமிகு கலைஞர் அவர்கள் பொறுப்பு ஏற்ற பிறகு,
பொறுப்பு ஏற்ற சில நாட்களிலே—வழக்கு இருக்கிறது—
அதற்குரிய, நிலத்திற்குரியவர்களை அழைத்துப் பேசி அந்த
நிலங்களை கையகப்படுத்துவதற்கு வேண்டிய வழிமுறைகளைக்
கண்டு அவர்களாகவே வழக்கை வாபஸ் பெற்றார்கள்.

**14-05 மணி**

நிலம் அரசுக்குச் சொந்தமாகி விட்டது. 1—7—1989 அன்று
இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. வெங்கட்ராமன் அவர்கள்
அடிக்கல் நாட்டினார்கள். எனவே, இதை முன்னாலேயே
செய்திருக்க வேண்டாமா? மத்திய திட்டக் குழு எப்போது
அனுமதி அளித்தது? 1986-இல். 1987, 1988 போய்,
கலைஞர் அவர்கள் வரவேண்டும்; அதற்குப் பிறகுதான்
இதற்கு ஒரு முடிவு கிடைக்கும் என்று எதிர்பார்த்திருக்கிறார்கள்;
நான் கேட்கிறேன். நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன இது
வரையிலே? அதுமட்டுமல்ல. இதோடு நின்றுவிட முடியாது.





1990-91 ஆம் ஆண்டு மட்டுமல்ல, அதைத் தொடர்ந்து, அடுத்த
ஆண்டு, அதற்கு அடுத்த ஆண்டு மின் வெட்டு இல்லாமல்
இருக்க வேண்டும். அதற்காக நாம் இன்றைக்கு பல திட்டங்களை
வகுக்கிறோம். 1990-91 ஆவது ஆண்டு மின்வெட்டு இல்லாமல்
இருக்கவேண்டுமானால் நமக்கு 21,979 மில்லியன் யூனிட்டுகள்
தேவை. இதற்கு நாம் சில வழிமுறைகளைக் கண்டாகவேண்டும்.
நீர் மின் நிலையத்திலிருந்து 3,800 மில்லியன் யூனிட். அனல் மின்
நிலையத்திலிருந்து 10,275 மில்லியன் யூனிட். காற்றலையிலிருந்து
20 மில்லியன் யூனிட். மத்திய அரசிடமிருந்து வாங்குவது
6,994 மில்லியன் யூனிட். மொத்தம் 21,089 மில்லியன் யூனிட்
நாம் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறோம். பற்றாக்குறை
மிகவும் குறைவுதான். அதை சமாளிக்கக்கூடிய வழிவகை ஏற்
பட்டிருக்கிறது. ஆனால், அடுத்த ஆண்டு சமாளித்து விட்டால்
மட்டும்போதாது, அடுத்தடுத்து சமாளிக்க வேண்டிய நிலையிலே
இருக்கிறோம். அவைகளுக்கெல்லாம் எட்டாவது திட்ட இறுதி
காலத்தில், மின்சார நிலைமை கீழ்க்கண்டவாறு இருக்குமென்று
நாம் கருதுகிறோம். அதையடுத்து, 9-வது திட்ட காலத்திலே
அதனுடைய வளர்ச்சிகள் பெருகவேண்டும் என்பதற்காகத்தான்
தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் விரிவாக்கம் 420
மெகாவாட்; வடசென்னை அனல் மின் நிலையம் 630 மெகா
வாட்; நரிமணத்தில் எரிவாயு சுழலி திட்டம் 10 மெகாவாட்;
பேசின் பாலம் எரிவாயு சுழலி திட்டம் 120 மெகா வாட்;
கீழ் பவானி நுண்புனல் திட்டம் 2 மெகா வாட்; பூனாட்சி நுண்
புனல் திட்டம் 2 மெகா வாட்; மரவகண்ட நுண்புனல்
திட்டம் 0.75 மெகா வாட்; காற்றலை மூலம் 100 மெகா
வாட்; காவிரிப் படுகை எரிவாயு சுழலி 300 மெகா வாட்; மத்திய
அரசிடமிருந்து நமக்குக் கிடைக்க வேண்டியது 700 மெகா வாட்;
என்று இவையெல்லாம் தொலை நோக்கோடு கணக்குப் போட்டு
இதை நாம் செய்துகொண்டிருக்கிறோம். ஆனால், இருக்கிற
நிலைமை என்னவென்று கேட்டால், தமிழ்நாட்டிலே புனல் மின்
சாரத்தைப் பொறுத்த வரையில், நாம் எல்லா இடங்களிலும்
எடுத்து விட்டோம். இருக்கக் கூடியது ஒன்று. அனல் மின்சாரம்
தான் இப்போது; அனல் மின்சாரத்திற்கு அதிகமாகத்
தேவைப்படுவது கரி. ஆனால் நம்முடைய நாட்டில் கரி இல்லை.
மத்திய அரசு சிங்கரேணியிலிருந்து கரியை எடுத்துக் கொள்ளுங்கள்
என்று நமக்கு ஆணையிட்டார்கள், அந்தக் கரியை நாம் எடுத்து
வருவதற்கு, சிங்கரேணியிலிருந்து மேட்டூருக்கு ரயில் மூலமாக
அதைக் கொண்டுவர வேண்டும். அதற்கு ரூ. 738 செலவாகிறது.
ஆனால் இன்றைக்குஅங்கே கரி இல்லையென்று சொல்லி விட்டு
டால்சார் லெஜுகூரா, மொகம்மா, ஜாரியா, ராணிகஞ்ச் இங்கே
யெல்லாம் போய் — இவையெல்லாம் மனிதர்கள் பெயர்கள்
அல்ல இடங்களின் பெயர்—கரிகளை எடுத்து வர வேண்டும்
என்கிறார்கள். அங்கே போய், நாம் அதிக விலை கொடுத்து
வாங்குகிறோம். சிங்கரேணியிலிருந்து ஒரு டன், மேட்டூர் போய்

சேர ரூ. 738 ஆகிறது. ஆனால் இவர்கள் குறிப்பிடுகிற இடத்திலே இருந்து நாம் கரியை எடுத்துப் போக வேண்டுமானால், ஒரு டன் கரி அந்த இடங்களிலிருந்து, மேட்டூர் போய்ச் சேர்வதற்கு, ரு 1,025-க்கு மேல் ஆகிறது. எனவே, அதிலே நமக்கு இழப்பு ரூ. 100 கோடி ஆகிறது. இதைக் கூட கலைஞர் அவர்கள் பரவாயில்லை. எப்படியும் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டுமென்று எண்ணத்தில் தாங்கிக் கொண்டார்கள். ஆனால், அதையடுத்து, இரண்டாவது கஷ்டம் என்னவென்றால், அங்கே 'ஆல்-இண்டியா'-விலோ, விசாகப்பட்டிணத்திலோ, மற்றும் இருக்கிற துறைமுகத்திலோ இருந்து வருகிற கரி, சென்னை துறைமுகத்திற்கு வரவேண்டும். சென்னை துறைமுகத்திலே நமக்கு இரண்டு 'பிளாட் பாரங்கள்' கொடுத்து இருக்கிறார்கள். அதிலே கரியை இறக்கி நாம் இங்கிருந்து மேட்டூருக்கு எடுத்துச்செல்ல வேண்டும். அங்கு சுரங்கத்திலே இருந்து, ரயிலிலே வந்து, ஆல்-இந்தியா துறைமுகத்திலே கப்பலிலே ஏற்றி, சென்னை துறைமுகத்திலே இறக்கி, மீண்டும் ரயிலிலே ஏற்றி மேட்டூருக்குப் போக வேண்டும். இந்தியாவிலேயே, ரயில், கப்பல் மீண்டும் ரயில் ஆக இப்படி பயணத்தை அந்த கரி மேற்கொள்வது தமிழ் நாட்டிற்காகத் தான். ஆனால், நாம் இப்போது என்ன சொல்கிறோம் என்றால், இந்த இடத்திலே போதவில்லை 3-வது பெர்த் தேவை என்று கேட்டால், மத்திய அரசினர் சொல்கிறார்கள், இங்கே அல்ல, நீங்கள் கொச்சியிலே கொண்டு போய் இறக்குங்கள் என்கிறார்கள். சென்னைத் துறைமுகத்திலே இறக்கி, நேராக மேட்டூருக்குக் கொண்டு போகவேண்டிய கரியை, சென்னை துறைமுகத்தைத் தாண்டி, இலங்கையைச் சுற்றிக் கொண்டு, கொச்சிக்குப் போய் நிறுத்தி, கொச்சியிலே இருந்து மேட்டூருக்குக் கொண்டுபோக வேண்டும் என்பது, மூக்கைத் தொடுவதற்கு பதிலாக, சுற்றி இப்படி தொடுவதற்கு சமம். அதற்கும் கலைஞர் அவர்கள் உடனடியாக ஒரு கடிதத்தை எழுதி சென்னைக்கு மூன்றாவது பர்த் தரவேண்டும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். அதே நேரத்திலே சிங்கரேணியிலிருந்து தான் கரி தேவை. அதைத்தான் மத்திய அரசு ஒத்துக்கொண்டிருக்கிறது என்பதை முதல்வர் அவர்களும் கடிதம் மூலமாக தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் பல்வேறு திட்டங்கள் பலவற்றை எடுத்துச் சொல்லவேண்டும் என்றாலும் நேரம் இல்லாத காரணத்தால்.. ......

14-10 மணி.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் புனல் மின்சாரத்தைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய அனைத்தையும் எடுத்து விட்டோம் என்று சொன்னார்கள். அந்தத் தகவல் குறித்து எனக்கு சற்று விளக்கம் சொல்வார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன், ஏற்கனவே நாம் ஹோர்னஸ் பண்ணி





இருக்கக் கூடிய பவர் 1700 மெகா வாட் இருக்கலாம். 1500 என்று ஒரு இடத்திலே குறிப்பு இருக்கிறது. 1,900 என்று இன்னொரு இடத்திலே குறிப்பு இருக்கிறது. இதில் எது சரி என்று தெரியவில்லை. சாங்ஷன்ட் ஸ்கீம்ஸ் 220 மெகாவாட் என்று இருக்கிறது. இன்டர் ஸ்டேட் ஸ்கீம் 890 மெகாவாட் என்று இருக்கிறது. அதில் ஒகேனக்கல் மட்டும் 420 மெகாவாட். பாண்டியாறு—புன்னம்புழா மட்டும் 150 மெகாவாட். இன்னும் நாம் எடுக்கலாம், சாங்சுவரி ஏரியா ஸ்கீம்ஸ்......

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, காவிரியைப் பொறுத்த வரையில் கர்நாடக மாநிலத்திற்கும் நமக்கும் தகராறு இருக்கிற காரணத்தால் கர்நாடகமும் மின்சாரத்தை எடுக்க முடியவில்லை. அவர்கள் நம்மைக் கேட்கிறார்கள். நாம் அவர்களைக் கேட்கிறோம், இரண்டும் நிற்கிறது. பாண்டியாறு, புன்னம்புழா இன்னும் கருவாகி, உருவாகி வரவில்லை. நாம் பிறகு எடுத்துக் கொள்ளலாம்.

இப்போது நான் சில சலுகைகளைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயத்திற்காக மின்னிணைப்பு கேட்டு, நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் எண்ணிக்கை 4,75,000 ஆகும். ஒரு பம்பு செட்டுக்கு மின்னிணைப்பு கொடுக்க வாரியத்திற்கு சராசரியாக செலவு 36,000 ரூபாய். இந்த 4,75,000 விண்ணப்பங்களுக்கு உடனடியாக மின்னிணைப்பு தர வேண்டும் என்றால் அதற்கு சுமார் 1,500 கோடி ரூபாய் வாரியத்திற்குத் தேவை. வாரியம் இப்போது ஏற்கனவே கிட்டத்தட்ட 1,000 கோடி ரூபாய் நட்டத்தில் போய்க் கொண்டு இருப்பதை நீங்கள் பார்க்கலாம். எனவே ஆண்டுதோறும் நிலைமைக்கேற்ப சுமார் 40,000 பம்புசெட்டுகளுக்கு மின்னிணைப்பு கொடுக்கிற காரியத்தை வாரியம் தொடர்ந்து செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து வேளாண்மை இணைப்புகளுக்கு கூடுதல் மின் சுமை அனுமதி, 31—3—1990-ஆம் ஆண்டு நிலவரப்படி, தற்போது இயக்கத்தில் உள்ள வேளாண்மை பம்ப்செட்டு இணைப்புகளில் கூடுதல் சுமை நிறுவ, 10,268 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. இவற்றில் 5,000 விண்ணப்பங்களுக்கு மின்னிணைப்பு இவ்வாண்டில் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

துண்டிக்கப்பட்ட விவசாய மின்னிணைப்புகளுக்கு மீண்டும் இணைப்பு வழங்குதல் ; மின் கட்டணம் செலுத்தாமைக்காக மின்னிணைப்புகளுக்காக மின்சக்தி வழங்கும் கம்பங்களும் கம்பிகளும் அகற்றப்பட வேண்டும் என்று மின்வாரியத்தின் விதிமுறை இருக்கிறது. இவர்களுக்கு மறுபடியும் மின்னிணைப்பு தேவை என்றால் புதிதாக மனு போட்டுத்தான் மின்னிணைப்பு பெற வேண்டும். விவசாய பம்ப்செட்டுகளுக்கு புதிய மின்னிணைப்பு

தர காலதாமதம் ஏற்படுவதால் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்ட
விவசாயிகள் பல சிரமங்களுக்கு உள்ளாகிறார்கள் என்று முறை
யிடப்பட்டது. இதை ஏற்று 1—4—1979-க்குப் பிறகு மின்
னிணைப்பு துண்டிக்கப்பட்டவிவசாயிகளுக்கு அவர்கள் 31-3-1990-
க்குள் நிலுவைத் தொகை முழுவதையும் செலுத்தி வாரியத்திடம்
விண்ணப்பித்தால் அவர்களுக்கு மீண்டும் மின்னிணைப்பு சிறப்பு
முன்னுரிமை மூலம் வழங்கப்படும். இந்தச் சலுகை 30—9—1990
வரை நீட்டிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி.)

விவசாய மின்னிணைப்புகளைப் பொறுத்தவரையில் இட
மாற்றம். விவசாயிகள் தங்கள் மின்னிணைப்பை தங்கள் நிலத்
திற்குள் உள்ள ஒரு கிணற்றிலிருந்து மற்றொரு கிணற்றுக்கு
வாரியத்தின் முன்னனுமதி இல்லாமல் உரிமை பெற்ற மின்
ஒப்பந்தக்காரர்களின் உதவி கொண்டு அவர்களே மாற்றிக்
கொள்ளலாம். இதில் முக்கியமாக கருதப்பட வேண்டியது ஒன்று.
பொது வழியை கடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
பதவியில் இருக்கும்போது இறந்தவர்களின் குடும்பங்களுக்கு
நிதி உதவி, 20,000-லிருந்து 40,000-க்கு உயர்வு. தற்போது
மின் வாரியத் தொழிலாளர்களுக்கு குடும்பநல நிதித் திட்டம்
ஒன்று அமலில் உள்ளது. இந்தத் திட்டப்படி ஒவ்வொரு
மாதமும் தொழிலாளர்களிடமிருந்து ரூபாய் 10 பிடித்தம்
செய்து பணியில் இருக்கும்போது இறந்த தொழிலாளர்களின்
குடும்பங்களுக்கு 20,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இந்த
ரூபாய் 20,000 என்பது 40,000 ரூபாயாக உயர்த்தப்படும்.
இந்தத் திட்டத்திற்கு தொழிலாளர்களிடமிருந்து ஒவ்வொரு
மாதமும் ரூபாய் 10 என்பதற்கு பதிலாக 20 ரூபாய் பிடித்தம்
செய்யப்படும். இந்த புதிய திட்டம் 1—7—1989 முதல் அமல்
படுத்தப்படும்.

14—15 மணி

குடிசைகளுக்கு மின் இணைப்பு.—குடிசைகளுக்கு மின்சார
இலவசமாக வழங்கப்படுவதை மாண்புமிகு உறுப்பினர்கள்
நன்கு அறிவீர்கள். இதுவரையில் 8.87 இலட்சம் குடிசைகளுக்கு
மின் இணைப்பு தரப்பட்டிருக்கிறது. இதற்காக 9.37 கோடி
ரூபாய் வாரியத்தின் வருவாயில் இழப்பு ஏற்பட்டிருக்கிறது.
சென்ற ஆண்டு 40,000 குடிசைகளுக்கு மின் இணைப்பு தரப்
பட்டது. இதற்கு 4 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது.
இந்த ஆண்டு, 1990—91-ல் இந்த இலக்கைக் கொஞ்சம்
அதிகரித்து, 45,000 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்
படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பம்பு செட்டை தயார் நிலைக்குக் கொண்டு வரும் காலக்கெடுவை
நீட்டிக்கும் முழு அதிகாரம்—வேளாண்மை பம்பு
செட்டுகளுக்கு விண்ணப்பம் செய்துள்ள விவசாயிகளுக்கு
அவர்கள் முறை வரும்போது, பம்பு செட்டைத் தயார்



நிலையில் வைக்கும்படி 90 நாள் அறிக்கை தரப்படுகிறது. இந்தக் காலக் கெடுவிற்குள் விண்ணப்பதாரர் பம்பு செட்டை ஆயத்த நிலைக்குக் கொண்டு வந்து, வாரிய அலுவலகத்தில் பதிவு செய்யாவிட்டால், விண்ணப்பம் ரத்து செய்யப்படும். அந்தக் காலக் கெடுவை மேலும் 90 நாட்கள்வரை நீட்டிக்க தலைமைப் பொறியாளர்களுக்கு அதிகாரம் இருந்தது. அதற்கு மேலும் நீட்டிக்க தலைமைப் பொறியாளர்களுக்கு அதிகாரம் இல்லை. வாரியத் தலைவரின் ஒப்புதல் தேவை. இவை எல்லா வற்றையும் மாற்றிவிட்டு, இப்போது அவர்களுக்கு மேலும் கால நீட்டிப்பைத் தருவதற்கு தலைமைப் பொறியாளருக்கே முழு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அவர் நிலைமைக்கேற்ப எவ்வளவு வேண்டுமானாலும் காலக்கெடு கொடுக்கலாம்.

தெரு விளக்குகள். இனிமேல் ஒரு தெரு விளக்கு போட வாரியத்திற்குச் சராசரியாக ரூபாய் 2,000 செலவாகிறது. தெரு விளக்குகளுக்கு மின்சாரம் வழங்க வாரியத்திற்கு ஆகும் செலவு ரூ. 1.30 (ஒரு யூனிட்டுக்கு). ஆனால் மின் கட்டணம் வசூலிப்பதோ ஒரு யூனிட்டுக்கு 75 பைசாதான். தெரு விளக்கு கேட்டு வாரியத்திற்கு வந்திருக்கிற விண்ணப் பங்கள் 1,70,368. இதில் செக்யூரிட்டி டெப்பாசிட் கட்டப் பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 88,699. சென்ற ஆண்டு 20,000 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு கொடுக் கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 30,000 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு தரப்படுமென்பதை நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

குடிநீர்த் தொட்டிகள். சராசரியாக ஒரு குடிநீர்த் தொட் டிக்கு மின்சாரம் இணைப்பு வழங்க ஆகும் செலவு ரூ. 35,000. இந்தச் செலவு முழுவதையும் வாரியம் தற்போது ஏற்றுக் கொள்கிறது. நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் எண் ணிக்கை 1,102. இவை முழுவதற்கும் மின் இணைப்பு வழங் வேண்டுமானால் வாரியத்திற்கு 3.86 கோடி ரூபாய் தேவை, ஆனால் 125 மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்குத்தான் இதுவரையிலே டெபாசிட் தொகையை குடிநீர் வடிகால் வாரியம் கட்டியிருக்கிறது. எனவே அவைகளுக்கு நாங்கள் இன்னும் 2 மாதங்களில் கொடுத்து விடுவோம். இன்னும் 977 குடிநீர்த் தொட்டிகளுக்கான மின் இணைப்புகளுக்கு டெபாசிட் தொகை கட்டவில்லை. குடிநீர்த் தொட்டிகளுக்கு மின் இணைப்பு தருவதில் இந்த அரசு கொஞ்சம்கூட சுணக்கம் காட்டியதில்லை. 1986—87-ல் 1,204 குடிநீர் மேல்தேக்கத் தொட்டிகளுக்குத்தான் மின் இணைப்பு கொடுத்திருக்கிறார்கள். 1987—88-ல் 1,554 குடிநீர்த் தொட்டிகளுக்குத்தான் மின்

இணைப்பு கொடுத்திருக்கிறார்கள். 1988–89-ல் 1,919 குடிநீர்த் தொட்டிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சென்ற ஆண்டு, கலைஞருடைய ஆட்சியில், அதாவது 1989–90-ல் 2,468 குடிநீர்த் தொட்டிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மட்டும் வாரியத்திற்கு ஆகும் செலவு ரூபாய் 6 கோடியாகும்.

இதே போன்று நம்முடைய திரு. செங்கோட்டையன் அவர்கள்கூடப் பேசினார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் நேற்றே என்னுடைய கவனத்திற்கு இந்தச் செய்தியைக் கொண்டு வந்தார்கள். அதாவது, ஒரே சமயத்திலே 2 மீட்டர்களையும் ஓட்டக்கூடாது, என்ற நிபந்தனையின் பேரில், ஒரு சமயத்தில் ஒரு மீட்டரை மட்டும் ஓட்டக்கூடிய வகையிலேதான் இரு வழி ஸ்விட்ச் வைத்து மின்சாரம் வழங்கப்படுகிறது. எனவே இரட்டை கட்டணமாக மின் கட்டணம் வசூலிப்பதை விடுத்து, ஏர் கம்ப்ரசர் வைப்பதற்கு துறையின் அனுமதி பெற்றால் மட்டும் போதும், ஒரு மீட்டருக்கு மட்டும் கட்டணம் வசூலித்தால் போதுமென்ற கோரிக்கை நேற்றே மாண்புமிகு அமைச்சரவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு திரு. செங்கோட்டையன் அவர்களும் என்னிடம் இதைத் தெரிவித்தார்கள். பரவாயில்லை. அவர்கள் ஆட்சியிலே விவசாயிகள்மீது போடப்பட்ட இந்தச் சுமையை கலைஞருடைய ஆட்சி நீக்கும். எனவே ஒரே ஒரு மீட்டருக்கு மட்டும் கட்டணம் கட்டினால் போதுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகுஉறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களை எல்லாம் அரசு கவனத்திலே கொள்ளும்.

14-20 மணி

அடுத்த ஆண்டு இவைகளில் எல்லாம் ஏதாவது குறை இருக்குமானால் அவைகளை நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு முயற்சிகளை எடுத்துக் கொள்ளும். இது ஒரு மின்சார வாரியம் அது ஒரு பெரிய உலகம். எனவே நான் அதை உணர்கிறேன்; இன்னும் அதிகமாக அதில் கவனம் செலுத்தி நீங்கள் முழுவதும் பாராட்டக்கூடிய அளவுக்கு குறையே இல்லாமல் மின்சார இலாக்கா இயங்குகிறது என்று பொன்னுசாமி உட்பட பாராட்டுகிற அளவுக்கு அடுத்த ஆண்டு உங்களிடம் நீண்ட நேரம் பேசுகிற வாய்ப்பு எனக்குக் கிடைக்கும் என்ற காரணத்தால் இந்த மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையை நீங்களும் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.



## 6. அறிவிப்புகள்

### (இ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்ற 9-வது பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடர் 18–1–1990 ஆம் நாளன்று தொடங்கி 27–1–1990 வரையிலும், நான்காவது கூட்டத் தொடர் 17–3–1990 அன்று தொடங்கி இன்று (12–5–1990) வரையிலும் நடைபெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| பேரவை கூடிய மொத்த நாட்கள் | .. | 48 |
| மாலையிலும் பேரவை கூடியுள்ள நாட்கள் | .. | 9 |
| அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம் | ... | 245 மணி 54 மணித் துளிகள். |

18–1–1990 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றினார்கள்.

| | | |
|---|---|---|
| ஆளுநர் உரை மீது விவாதம் நடைபெற்ற நாட்கள் | | 6 |
| பங்கு கொண்ட உறுப்பினர்கள் | ... | 41 |

1990–91 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை 17–3–1990 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக்குப் படைத்தார்கள்.

நிதி அலுவல்கள் :

| | | |
|---|---|---|
| வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள். | | 7 |
| பங்குகொண்ட உறுப்பினர்கள் | .. | 58 |
| மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள். | | 24 |
| உறுப்பினர்கள் ஆற்றிய உரைகள் | .. | 321 |
| கொடுக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் | .. | 2,479 |
| அவைமுன் வைக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் | | 2,322 |
| விவாதித்து நிறைவேற்றப்பட்ட மானியக் கோரிக்கைகள். | | 59 |

அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொதுப் பொருள்களைக் குறித்து "தகவல் கோரல்" என்ற முறையி[illegible] "Zero hour" என்று வகையிலே சொல்லப்படுகிற, நேரம் இல்லாத நேரத்தில்—நேரம் கெட்ட நேரத்தில் அல்ல (சிரிப்பு) நேரம் இல்லாத நேரத்தில்—உறுப்பினர்களுக்கு 111 தடவைகள் அனுமதிகள் வழங்கப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுவரை நடந்த எந்த சட்டமன்றப் பேரவைக் கூட்டத்திலும் இந்த அளவிற்கு வாய்ப்புகள் வழங்கப்படவில்லை என்பதையும் அழுத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

**வினாக்கள் — விடைகள் :**

| | |
|---|---|
| குறுகிய கால வினாக்கள் ... | 6 |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 608 |
| உடுக்குறியிடாத வினாக்கள் | 850 |
| துணை வினாக்கள் ... | 2,167 |

**கவன ஈர்ப்புகள் :**

| | |
|---|---|
| அனுமதிக்கப்பெற்றவை ... | 185 |
| அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்றவை ... | 65 |

**ஒத்திவைப்புத் தீர்மானங்கள் :**

| | |
|---|---|
| அவையில் எடுத்துக் கொண்டு இசைவு மறுக்கப் பெற்றவை. | 10 |

**உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள் :**

| | |
|---|---|
| அவையில் எழுப்பப்பெற்றவை — | 3 |
| இசைவு மறுக்கப்பெற்றவை ... | 4 |

உரிமைக் குழுவிற்கு எவையும் அனுப்பப் பெறவில்லை.

**அரசினர் சட்ட முன்வடிவுகள் :**

| | |
|---|---|
| அறிமுகம் செய்யப்பெற்றவை — | 35 |
| நிறைவேற்றப்பெற்றவை — | 33 |





**அரசினர் தனித் தீர்மானங்கள் :**

| | |
|---|---|
| வரப்பெற்றவை | 4 |
| நிறைவேற்றப்பெற்றவை | 4 |

**பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள்** — 78

**பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் :**

| | |
|---|---|
| (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும் | 187 |
| (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள். | 233 |

**பார்வையாளர்கள் :**

பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பெற்ற—

| | |
|---|---|
| ஆண்கள் | 22,922 பேர் |
| பெண்கள் | 2,288 பேர் |

தலைவர் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள் 16,064 பேர்.

இதுவரையில் பேரவை நிகழ்ச்சிகளைக் காண வருகை தந்தோருடைய மொத்த எண்ணிக்கை-41,274 பேர்.

**நூலகம் :**

சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர்— 863 பேர்.

வழங்கப்பெற்ற நூல்கள்— 728.

**நடவடிக்கைக் குறிப்புகள் :**

தட்டச்சு செய்யப் பெற்ற மொத்த பக்கங்கள் — 11,049

எல்லா நாட்களும் அவைக்கு வந்திருந்த உறுப்பினர்கள் — 20

அவர்களின் பெயர்களை வேகமாகப் படிக்கிறேன். அப்போது தான் அவர்களுக்கு மதிப்பாக இருக்கும் ; மற்றவர்களுக்கும் வழிகாட்டுதலாக இருக்கும்.

1. திரு. எம். அண்ணாமலை
2. திரு. ச. அழகுவேலு
3. திரு. வ. அன்பழகன்
4. திரு. வி.கே. இராசு
5. திரு. இளம்வழுதி
6. திரு. எஸ். குணசேகரன்
7. திரு. வெ. கோவிந்தன்
8. திரு. சி. சண்முகம்
9. டாக்டர் த. சாந்தகுமாரி
10. திரு. கே. சுந்தர்
11. திரு. பொ. நடராசன்
12. திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்
13. திரு. கே. பிச்சாண்டி
14. திரு. கோ. பூவராகன்
15. திரு. எம். முத்தையா
16. திரு. கே. ரவி அருணன்
17. திரு. உ.ரா. வரதராசன்
18. திரு. பெ. வெங்கடாசலம்
19. திரு. ஆர்.எஸ். ஸ்ரீதர்
20. திரு. மு.க. ஸ்டாலின்

ஒரு நாள் மட்டும் வராதவர்கள் :

1. திரு. என். கணபதி
2. திரு. சி. கோவிந்தராஜன்
3. திரு. செ. இராமலிங்கம்
4. திரு. வ. முல்லைவேந்தன்
5. திரு. வீ. தமிழ்மணி





சட்டமன்றப் பணிகளைத் தொடர்ந்து இடையறாது, இடைவிடாது நாள்தோறும் ஆற்றி வருகின்ற அருமைக்குரிய தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களையும், பெருமைக்குரிய பேரவை முன்னவர் அவர்களையும், ஏனைய அமைச்சர் பெருமக்களையும், எதிர்க் கட்சித் தலைவரையும் நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

14-25 மணி

உரிய நேரத்தில் அலுவல்களைச் சீரிய முறையில் நிறைவேற்றுவதற்கு எனக்கு உறுதுணையாக இருந்த பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி அவர்களுக்கும், மாற்றுத் தலைவர்களான திரு. சா. கணேசன், டாக்டர் க. காஞ்சனா, திருவாளர்கள் வே. தங்கபாண்டியன், கே. அர்ஜுனன், எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், கோ. பூவராகன், அ. லெ. சுப்பிரமணியன், பெ. சு. திருவேங்கடம், இரா. மோகன். கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், குமரி அனந்தன், உ. ரா. வரதராசன் ஆகியோருக்கும் என் நன்றி உரித்தாகுக.

அவையின் செவ்வியை மனதிலிறுத்தி சிறப்பான முறையில் ஒத்துழைப்பு நல்கிய அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும், துணைத் தலைவர்களுக்கும், கட்சிகளின் கொறடாக்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவையில் கட்டற்ற பேச்சுரிமை இருந்தாலும் கண்ணியம் என்ற கட்டுப்பாட்டுக்குள் நின்று கடமையாற்றிய உறுப்பினர் பெருமக்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது நல ஆர்வத்துடன், பேரவை நடவடிக்கைகளை நன்முறையில் மக்களுக்கு விரைந்து எடுத்துச் செல்லும் செய்தி இதழ்கள், தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றின் செய்தியாளர்களுக்கும் எனது இதயப்பூர்வமான பாராட்டுக்கள்.

இந்த அவையினுடைய அலுவல்கள் செம்மையாக நிறைவேறிட மிகப் பெருமிதமான ஈடுபாட்டுடன் எனக்குத் துணை நின்ற பேரவைச் செயலாளர் திரு. சி. கு. இராமசாமி அவர்களுக்கும், பேரவையின் ஏனைய அலுவலர்களுக்கும், பாதுகாப்பு அலுவலர்களுக்கும் நம் பேரவையின் வாயிலாக நெஞ்சம் நிறைந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் தந்த வாய்ப்புகளை ஏந்தி மன்றத்தில் இடம்பெற்ற பல்லோர், முக்கியம் என்று உணர்ந்ததெல்லாம் பேச முறையான வாய்ப்பளித்தோம் என்ற எக்களிப்பில் நான் மகிழச் செய்த எல்லோருக்கும் நன்றி.

இந்தமன்றில் தக்கதொருநேரம் நிலைச்செய்த
சான்றோர்க்கு என் வணக்கம் சொன்னேன்.

இந்தமன்றில் எடுத்துவைத்த வாதம்
இடையிடையே வாய்விச்சில் மோதல்,

செந்தமிழர் நலிவெல்லாம் தீர
தேர்ந்தெடுத்த எத்தனையோ திட்டம்

எந்தஒரு குடிமகனும் நாட்டை
ஏமாற்றத் தடைவிதிக்கும் சட்டம்

தந்தோர்க்கு நன்றிசொல்ல வேண்டும்
வரும்நாளில் சந்திப்போம் மீண்டும் !

## 11. அரசினர் தீர்மானம்.

### பேரவையை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைத்தல்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"பேரவை விதி 25 (1)-இன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இக்கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது. வணக்கம்.

பின்னர் 14-27 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல், பேரவை ஒத்திவைக்கப்பெற்றது.



143986

## 12. பேரவையில் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

100. 1964 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றங்கள் (மருத்துவ கவனிப்பு மற்றும் சிகிச்சை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத் துறையின் 28—8—1989 ஆம் நாளிட்ட 1431 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

101. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு சாராவிகள் (மொத்த விற்பனைக்கு வழங்குதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 31—3—1989 ஆம் நாளிட்ட 454 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

102. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும் [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

182. தமிழ்நாடு மின் வாரியத்தின் 1988-89, 1989-90 மற்றும் 1990-91 ஆகிய ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கைகளைக் குறித்துத் தமிழ்நாடு சட்டப் பேரவையில் விவாதத்தைத் தொடங்கி வைத்து மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.

183. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (பத்தாவது பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை).

184. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (பதினொன்றாவது பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை).

185. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (பன்னிரெண்டாவது பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை).

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore. Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, ...
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tin... Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madr...
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egm... Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbato...
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi... palli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathippagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sar...

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthagchalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director Stationery and Printing Madras.

©